# அ. சிதம்பரநாதச் செட்டியார்

ந. வேலுசாமி

இந்திய இலக்கியச் சிற்பிகள்



அ. சிதம்பரநாதச் செட்டியார்

உள் அட்டையில் காணும் சிற்பக் காட்சியில் பகவான் புத்தரின் அன்னை மாயாதேவி கண்ட கனவின் பலனை மன்னர் சுத்தோதனருக்கு நிமித்திகர் மூவர் விளக்குகின்றனர் அவர்களுக்குக் கீழே அமர்ந்து அந்த விளக்கத்தை எழுதுகிறார் ஓர் எழுத்தர். எழுதும் கலையைச் சித்திரிக்கும் முதல் இந்தியச் சிற்பம் இதுவாகவே இருக்கலாம்.

நாகார்ஜுன மலைச்சிற்பம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு.( பட உதவி: நேஷனல் மியூசியம், புது தில்லி)

இந்திய இலக்கியச் சிற்பிகள்

# அ. சிதம்பரநாதச் செட்டியார்

ந. வேலுசாமி


சாகித்திய அகாதெமி

*A. Chidhambaranatha Chettiar*: Monograph by N. Velusamy. Sahitya Akademi, New Delhi,2005, Rs.25

© சாகித்திய அகாதெமி
முதல் பதிப்பு: 2005

ISBN 81-260-1722-8

**சாகித்திய அகாதெமி**

இரவீந்திர பவன், 35, பெரோஸ்ஷா சாலை,
புது தில்லி 110001

விற்பனை
*'ஸ்வாதி' மந்திர் சாலை, புது தில்லி 110 001.*

மத்தியக் கல்லூரி வளாகம், பல்கலைக்கழக நூலகக்
கட்டடம், டாக்டர் அம்பேத்கார் வீதி, பெங்களூர் 560 001.

குணா பில்டிங்ஸ், 443, அண்ணாசாலை, தேனாம்பேட்டை,
சென்னை 600 018.

ஜீவன் தாரா பில்டிங், நான்காவது மாடி,
டைமண்ட் ஹார்பர் சாலை, கல்கத்தா 700 053

172, மும்பய் மராத்தி கிரந்த சங்கிரகாலய சாலை,
தாதர், மும்பய் 400 014

விலை 25.

அச்சு: சிக்மா கிராபிக்ஸ், செ - 5.

# பொருளடக்கம்


| | |
|---|---|
| தோரணவாயில் | 7 |
| 1 பிறப்பும், கல்வியும், பதவிகளும் | 13 |
| 2.புரிந்த தொண்டுகள் | 24 |
| 3.படைத்த நூல்கள் | 33 |
| 4.சென்ற நாடுகள் | 43 |
| 5.முதல் தமிழ்ப் பேராசிரியர் | 56 |
| 6.தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினர் | 66 |
| 7.தமிழாசிரியர் தலைவர் | 79 |
| 8.செந்தமிழ்க் காவலர் | 89 |
| 9.பல்கலைக்குரிசில் | 99 |
| 10.பொன்னுறு நறுமேனி நீரில் மிதந்ததோ | 110 |
| கடைக்காப்பு | 119 |
| பின்னிணைப்பு | 122 |
| வாழ்க்கைக் குறிப்புகள் | 131 |
| எழுதிய நூல்கள் | 132 |

# ANNAMALAI UNIVERSITY

## Faculty of Arts

*A. Chidambaranatha Chettiar having been Certified by duly appointed examiners to be qualified to receive the Degree of Doctor of Philosophy, the Senate of the Annamalai University hereby makes known that A Chidambaranatha Chettiar has been admitted to the said Degree of Doctor of Philosophy.*

*Given under the seal of the Annamalai University.*

*Annamalainagar,*
*9th day of December 1942.*

M. Ruthnaswamy
*Vice-Chancellor.*

தமிழில் ஆய்வுநெறிமுறைகளின்படி ஆராய்ச்சி செய்து பி.எச்.டி
பட்டம் பெற்ற முதல் பேராசிரியர் அ சிதம்பரநாதச் செட்டியார்.

# தோரணவாயில்

முதலில் கொஞ்சம் என்னை மறந்தேன் அ சிதம்பரநாதச் செட்டியார் அவர்களைப் பற்றி நூல் எழுத வேண்டும் என்ற செய்தியைத் தாங்கி, சாகித்திய அகாதெமியிலிருந்து வந்த முடங்கலைப் பார்த்துத்தான் மெய்ம்மறந்து போனேன் எனினும் இந்த இன்ப உணர்ச்சியில் மறவாமல் அந்த நிறுவனத்திற்கு என் பணிவான நன்றியை முதற்கண் காணிக்கை யாக்குகின்றேன்

அ சிம்பரநாதனாரைப் பற்றிச் சாகித்திய அகாதெமி மூலம் எழுத நீண்ட நாட்களாகவே முயற்சி செய்து வந்ததன் பலன் இப்போது கிட்டியது.

'இந்நூலை எவ்வளவு சிறப்பாக, எழுத முடியுமோ அவ்வளவு சிறப்பாக எழுத வேண்டும்' என்ற உறுதியை எடுத்துக் கொண்டேன்.

என் வாழ்க்கையில் நேரும் சிக்கலாக இருந்தாலும், இலக்கியச் சிக்கலாக இருந்தாலும் அதில் தெளிவும் நம்பிக்கையும் பெற நான் ஓடுவது கோவை - வெள்ளக்கிணறு - ஞானமணிப் பண்ணையை நோக்கித்தான

ஆம்! அங்குதான் என்போன்ற பலருக்கு அருமருந்தாக விளங்கிவரும் கல்லூரிக் கல்வி முன்னாள் இயக்குநர் பேராசிரியப் பெருந்தகை டாக்டர் கா மீனாட்சி சுந்தரனார் அவர்கள் வீற்றிருக்கின்றார்கள்

அவர்களிடத்தில் இதை நான் கூறியதும் சுருங்கக் கூறின், என்னைவிட அவர்கள் மகிழ்ந்தார்கள் எனச் சொல்ல வேண்டும்

அப்படி ஒரு புளகாங்கிதம், அப்படி ஒரு மகிழ்ச்சி! நெகிழ்ச்சி! காரணம், அ சிதம்பரநாதனார் அவருடைய ஆசான், அவருடைய எம் லிட் , ஆய்வு வழிகாட்டி.

அவருடைய மாணவனாகிய நான அவருடைய ஆசிரியரைப் பற்றி எழுதப்போகிறேன் என்றதும் அவருக்கு அப்படிப்பட்ட ஓர் நிறைவு.

உடனே என்னை ஆற்றுப்படுத்த அணியமாகிவிட்டார். யார் யாரிடம் சென்றால் என்னென்ன தரவுகள், தகவல்கள் கிடைக்கும என்று தெரிவிக்க என் பேராசிரியர் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பதுகளுக்கே ஒரு சில மணித்துளிகள் சென்று வந்தார்!

சந்திக்க வேண்டியவர்களைப பற்றி எல்லாம் கூறிவிட்டு, அ. சிதம்பரநாதர் அவர்களையும், அவரது இல்லத்தரசி திருமதி

பெரியநாயகி அம்மையார் அவர்களைப் பற்றியும் குறிப்பாக அவரது ஓவியத் திறமைகளைப் பற்றியும் மெய்ம்மறந்து கூறினார்

அடேயப்பா! குருபக்தியை எழுத்துக்கு எழுத்து அப்போதுதான், என் பேராசிரியப் பெருந்தகை வழியாக நேரில் கண்டேன்!

என் பேராசிரியர் அவர்களிடம் வாழ்த்துப் பெற்ற பிறகு வழக்கம் போல் களப்பணி ஆய்வை மேற்கொள்ளலானேன். நவம்பர் 2003இல் பணியைத் தொடங்கினேன்

பெரும்பாலும் சனி, ஞாயிறு நாட்களாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டேன். இடையிடையே தற்செயல் விடுப்பும் எடுத்துக் கொண்டேன்

முதலில் நான் சென்ற இடம் அண்ணாமலை நகர். முதல் தமிழ்ப் பல்கலைக்கழகம் என்றும், நான்காவது தமிழ்ச் சங்கம் என்றும் பெயர் பெற்ற தலம் அன்றோ சிதம்பரம் - அண்ணாமலைப் பல்கலைக்கழகம்! என் மகன் அருள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் படித்துக் கொண்டிருந்தது, போக்கு வரத்து மற்றும் தங்குவதற்கு ஒருவாய்ப்பாக எனக்கு அமைந்தது

பல்கலைக்கழக நூலகத்திற்குச் சென்று நூலகர் டாக்டர். எம் சூர்யா அவர்களிடம் என் நோக்கத்தைத் தெரிவித்தேன். அவர் எனக்கு உதவ, திருமதி பானுமதி, திரு. கலியபெருமாள், திரு சம்பந்தம், உதவியாளர் திருமதி ராஜி போன்றவர்களிடம் தெரிவிக்க, அவர்களும் நான் கேட்டவற்றை அன்புடன் வழங்கினார்கள்.

அண்ணாமலை அரசர் மணிவிழா மலர், முத்தையவேள் மணிவிழா மலர், அண்ணாமலைப் பல்கலைக்கழக வெள்ளி விழா மலர், ராணி மெய்யம்மை ஆச்சி நினைவு மலர் ஆகியவற்றையெல்லாம் கண்ணுற்று, அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டேன்.

அடுத்த கட்டமாக, ஓய்வு பெற்ற மொழியியல் பேராசிரியர் செ.வை சண்முகம் அவர்களைக் கண்டேன் அவர் தன்னிடமிருந்து இரு அரிய நூல்களைக் கொடுத்து, தம் பேராசிரியர்களின் சிறப்புக்களையெல்லாம் நெகிழ்ச்சியோடு குறிப்பிட்டார் (யார் யார் எல்லாம் அ சிதம்பரநாதனாருக்கு மாணவர்களோ, அவர்கள் எல்லாம் டாக்டர் கா மீனாட்சி சுந்தரனார் அவர்களுக்கும் மாணாக்கர்கள் என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்க செய்தியாகும்) அவர் மேலும் சில பேர்களை நான் கட்டாயம் காண வேண்டும் என அன்புடன் வழியனுப்பி வைத்தார்.

அதற்கடுத்து ஓய்வுபெற்ற பேராசிரியர் சாரங்கபாணி அவர்களைக் கண்டேன். அவரும் அ சிதம்பரநாதனார் பற்றி வரலாறாக எழுதாமல இலக்கியமாக வரைய வேண்டும் என்று குறிப்பிட்டுவிட்டு, அவர்தம்

தோற்றப் பொலிவை மெய்மறந்து கூறினார் சீவகசிந்தாமணியின் துணை கொண்டு-

''உருவின் மிக்கதோர் உடம்பது
பெறுதலும் அரிதே''

என்பதற்கு இலக்கணமாகத் திகழ்ந்த அ சிதம்பரநாதனார் தந்தை பெரியாரிடம் ஈடுபாடுமிக்கவர் என்று குறிப்பிட்டார். அவரது பேச்சும் எழுத்தும் ஒரே நடையில் அமைந்திருக்கும் என்ற உயர் கருத்தை, சாரங்கபாணி அவர்கள் குறிப்பிடார்.

இவ்வாறு அவர் கருத்துக்களையெல்லாம் நான் உள் வாங்கிக் கொண்டிருந்தபோது வேதியியல் பேராசிரியர் தா.சாமிநாதன் என்பவர் வருகைதந்தார் பேராசிரியர் அவர்கள் என்னை அவருக்கு அறிமுகப்படுத்தியதோடு என் முயற்சியைப் பற்றியும் எடுத்துரைத்தார். அவ்வளவுதான்! திரு தா சாமிநாதன் நாற்பதாண்டுகளுக்குப் பின்னோக்கிச் சென்றுவிட்டார் - மாணவப் பருவத்திற்கு.

தனக்கு முதல்வராகவும், விடுதிக் காப்பாளராகவும் திகழ்ந்த அ சிதம்பரநாதரைப் பற்றிச் சொல்லத் தொடங்கிவிட்டார்

'நான் ஊர் செல்ல அப்போது என்னிடம் பணம் இருக்காது. எங்கள் விடுதிக் காப்பாளர், ஐயா தான் கொடுத்தனுப்புவார்.'

'அவர் முகத்தில் புன்முறுவலைத் தவிர வேறு எதையும் பார்க்க முடியாது '

'சிரிப்பின் செல்வர் சிதம்பரநாதர்'

என்றெல்லாம் கூறிவிட்டு, என் நோக்கத்தைப் போற்றி வாழ்த்தினார்.

அதேசமயம் பேராசிரியர் பழ. முத்துவீரப்பன் அங்கே வந்தார் அவரும் தன் பங்குக்கு என் முயற்சி வெற்றியடைய விழைவைத் தெரிவித்தார்

அவர்கள் சிதம்பரநாதனாரைப் பற்றிக் கூறுவதை நாளெல்லாம் கேட்டுக் கொண்டே இருக்கலாம் போல் இருந்தது. ஆனால்-

நான் என் நிகழ்முறைப்படி பணியாற்ற வேண்டியவனாய் இருக்கிறேனே!

அவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு பேராசிரியர் செ.வை. சண்முகம் அவர்கள் தெரிவித்தபடி, சிதம்பரத்தில் உள்ள கனகசபை நகர் ஆறாவது குறுக்குச் சந்தினை நோக்கிச் சென்றேன்.

அங்குதான், முதுபெரும்புலவர் த.முருகேசன் அவர்கள் இல்லம் உள்ளது அ.சிதம்பரநாதர் சட்ட மேலவை உறுப்பினர் தேர்தலில் வெற்றிபெற மிகவும் உழைத்தவர் முருகேசம் பிள்ளை என்ற முதியவர் முருகேசனார்

பாவம்! அப்போதுதான் உணவருந்தி, கண்ணயர்ந்திருந்தார். அவர் தானாக விழிக்கும்வரை, அவரது குடும்பத்தினரிடம் அளவளாவிக் கொண்டிருந்தேன் - குடும்பத்தினர் அவரை எழுப்புவதாகச் சொன்னார்கள். நான் வேண்டவே வேண்டாம் என அன்புடன் தடுத்து விட்டேன்.

அவர் துயிலெழுந்ததும் என்னை அறிமுகப்படுத்திக் கொண்டு என் நோக்கத்தைச் சொன்னேன் அந்தப் பட்டறிவுப் பழம் அ சிதம்பரநாதனாருடன் இருந்த நட்பைப் பற்றி நினைவுகூர்ந்து மழலைமொழியில் கூறியது என்னை மெய்சிலிர்க்க வைத்தது. சில நிமிடங்களில் என்னைப் புரிந்து கொண்டு தன் கெழுதகை அன்பைச் சொரிந்து வாழ்த்தினார்.

அன்று, மாலையும் இரவும் சந்திக்கும் நேரத்தில் என் மகனோடு, சிதம்பரத்தின் இன்னொரு பகுதியான வாகீச நகருக்குச் சென்றேன். வாசலுக்கு வந்து வரவேற்றார் 'பண்பாட்டுச் செல்வர்' பேராசிரியர் செ. வைத்தியலிங்கம் அவர்கள். என் பேராசிரியர், முதலில் நான் காண வேண்டியவர் இவரே என்று என்னிடம் வற்புறுத்தியிருந்தார்.

அப்பூதியடிகள் தன் குமாரர்களுக்கு மூத்த திருநாவுக்கரசு, இளைய திருநாவுக்கரசு என்று பெயர் சூட்டியதுபோல், வ சுப மாணிக்கனாரின் மாணவர், நாராயணன் என்பார் தம் மக்களுக்கு மூத்த மாணிக்கம், இளைய மாணிக்கம் என்று பெயர் வைத்ததுபோல், செ. வைத்தியலிங்கனாரும் தன் மகனுக்குச் சிதம்பரநாதன் என்றே பெயர் சூட்டியுள்ளதிலிருந்து தன் ஆசிரியர்பால் இவர் பூண்ட பக்தி புலப்படும். ஆசிரியரைப் பற்றி அரிய தகவல்கள் கூறியதோடு, அனைத்து உதவிகளும் செய்வதாகக் கூறி வழியனுப்பி வைத்தார்

சொன்னவாறே, அஞ்சலில், நூல்களையும், செய்திகளையும் அனுப்பி உதவினார்.

இவரைப் போலவே, மரியாதைக்குரிய அ.சிதம்பரநாதரின் இளவல் அ. சபாபதி அவர்களும் பல விவரங்களை, கட்டுரைகளை, புகைப்படங்களை அனுப்பி உதவியதோடு, அவரது உறவினர் திரு.மா முருகேசன் என்பாரையும் தகவல்கள அனுப்ப ஏற்பாடு செய்தார்.

அடுத்து என் பயணம் மதுரை அ சிதம்பரநாதனார் முதல்வராகப் பணியாற்றிய தியாகராசர் கல்லூரி. டாக்டர் இரா. மோகன் அவர்கள் வழியாக அக்கல்லூரி முதல்வர் டாக்டர் மு அருணகிரி அவர்களோடு தொடர்புகொண்டு இசைவுபெற்று அங்குச் சென்றேன். அன்று பார்த்து அவருக்குப் பல்கலைக் கழகம் செல்ல வேண்டிய நிலை. இருப்பினும் என்னை ஏமாற்றாமல் பேராசிரியர் நா பாலுசாமி அவர்களை என்னோடு

அளவளாக ஏற்பாடு செய்திருந்தார் நான் ஊர் திரும்பும்முன் வந்தேவிட்டார், தமிழ்ப் பேராசிரியராகிய முதல்வர். இருவரும் அரிய தகவல்களையும் குறிப்புக்களையும் தந்தனர். கல்லூரி நூலகத்தையும் கண்டு, நன்றியோடு திரும்பினேன். எதிரே இருந்த நல்ல படித்துறையுள்ள அந்தப் பெரிய தெப்பக்குளம் நீரற்று வறண்ட பாலைவனமாக இருந்தது. அந்தக் காட்சி என் நெஞ்சைப் பிசைந்தது....

அ. சிதம்பரநாதரின் பிறப்பிடமான குடந்தையை நோக்கி என் பயணம் அடுத்ததாக அமைந்தது. உடன் வர என் மனைவி சரோஜா வேலுசாமியும் ஆவல் தெரிவித்தார். அவ்வளவு ஈடுபாடு, சான்றோர் இருப்பிடத்தைக் காண்பதற்கு!

நேராக, அவர் கல்லூரிக் கல்விபெற்ற கும்பகோணம் அரசினர் கல்லூரிக்குச் சென்றோம். அதில் தமிழ்த்துறைக்குச் சென்று இருந்த சில பேராசிரியர்களோடு அளவளாவினேன். அது விடுமுறைக் காலமாதலால் அதிகப் பயனை அங்குப் பெறமுடியவில்லை

பிறகு, பிறந்த இடத்தைத் தரிசிக்க, கும்பகோணம் பேட்டை நாணயக்காரத்தெருவைக் கடந்து நெல்லுக்கட்டைத் தெருவுக்குச் சென்றோம். அங்குதான் அவர் பிறந்த வீடு (ஆனால் இப்போது இல்லை) இருந்த இடத்தை வணங்கிவிட்டு, நாணயக்காரத் தெருவில் உள்ள 'சிவகுருநாதன் செந்தமிழ் நூல் நிலைய'த்தைப் பார்த்தவிட்டு, அ சிதம்பரநாதனாரின் உறவினர்களாகிய திரு சொக்கலிங்கம், திரு. கோடிலிங்கம் போன்றவர்களோடு உரையாடிவிட்டு விடைபெற்றோம்.

களப்பணியில் இறுதியாகச் சென்னை அமைந்தது. முதற்பயணத்தில் பேராசிரியர் எம். ஜெ. இரபிசிங் அவர்களைச் சந்தித்தேன். அன்புடன் உபசரித்து தம்மிடமிருந்த நூலைத் தந்து, தகவல் பலவற்றையும் தந்தார் அவரின் அன்புமழையும், வெளியில் பெய்த அடைமழையும் போட்டியிட்டன.

இரண்டாவது பயணத்தில் சென்னை ஸ்டெல்லா மேட்டிட்டியுனா ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியின் தமிழ்த்துறைத் தலைவராக இருந்து ஓய்வுபெற்ற பேராசிரியர் புளோரா முறையிஸ் என்ற புளோரம்மாள் அவர்களை என் நண்பர் டாக்டர் எஸ் ஆராவமுதன் அவர்களோடு சென்று கண்டேன் என் ஆசிரியர் குறிப்பாகவும் சிறப்பாகவும் காண வேண்டியவர் இவர் என்று சொல்லி இருந்தார். பட்டறிவின் மொத்தமாகத் திகழ்ந்த அம்மையார் அவர்கள், அ சிதம்பரநாதர் அவர்களைப்பற்றியும், அவரது துணைவியார் பெரியநாயகி அம்மையாரைப் பற்றியும், டாக்டர் கா. மீனாட்சி சுந்தரனார் அவர்களைப் பற்றியும் நினைவு கூர்ந்து, நினைவு கூர்ந்து சொல்லிக் கொண்டே வந்தார்கள். தன் வகுப்புத் தோழராகிய திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்களைப் பற்றியும்

குறிப்பிட்டார் அப்போதே 'பொதுக்கட்டம் பொதுக்கட்டம்' என்று செல்வது அவர் வழக்கமாக இருந்தாலும் பாடத்தில் கெட்டிக்காரர் என்று குறிப்பிட்டது எனக்கு மிக மகிழ்ச்சியாக இருந்தது.

இறுதியாக எதிர்பார்த்ததைவிட அதிகமாகச் சிதம்பரனார் பற்றிய தகவல் களஞ்சியத்தை எனக்கு வழங்கி ஆசீர்வதித்தார்.

அடுத்து நான் சென்ற இடம் சென்னைத் தலைமைச் செயலகத்தில் அமைந்த சட்டமன்ற நூலகம் அ சிதம்பரனார் சட்டமன்ற மேலவை உறுப்பினராக ஆசிரியத் தொகுதியிலிருந்து இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டு அந்த அவையில் ஆசிரியர்களுக்காக முழங்கினாரே, அந்த முழக்கங்களில் இன்றியமையாதவற்றைப் பற்றிக் குறிப்பெடுக்க, முறைப்படி அனுமதிபெற்று ஒரு நாள் முழுதும் அங்கு ஆய்வில் ஈடுபட்டேன்.

அனுமதித்த அலுவர்களும் உதவிய நூலக ஊழியர்களும் மறக்க முடியாதவர்கள்!

அ சிதம்பரநாதனார் பெயரில் அறக்கட்டளை ஏற்படுத்தியது, டாக்டர் ஆறு. அழகப்பன் அவர்கள் 1986இல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராக வீற்றிருந்தபோதுதான்

மேலே குறிப்பிட்ட அத்துணை சான்றோர்களுக்கும், பிற நூலகங்களின் பொறுப்பாளர்களுக்கும் நூலாக்கத்தில் உதவிய பிற பெருமக்களுக்கும் 'டாக்டர் அ சிதம்பரநாதச் செட்டியார்' என்னும் இந்த நூல் வேள்வியை நடத்தியவன் என்ற முறையில் நெஞ்சார்ந்த நன்றியைப் படையலாக்குகின்றேன்.

ஈரோடு, **ந. வேலுசாமி**
16.01 2004

# 1

# பிறப்பும், கல்வியும், பதவிகளும்

குடமூக்கு, குடந்தை, கோயில் நகரம் என்ற சில பெரிய பெயர்களைக் கொண்டிலங்குவது கும்பகோணம் இந்நகர், சோழ நாட்டின் வட பகுதியாம் தஞ்சை மாவட்டத்தில் அன்று வான்பொய்ப்பினும் தான்பொய்யாமல் இருந்த காவிரிக் கரையில் உள்ளது.

இக்கும்பகோணம் நகரில், 'வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப் பிறவும் தமபோற்செயின்' என்ற வேளாண் வேதத்திற்கு ஏற்ப நேர்மையுடன் வாணிகம் புரிந்து புகழுடன் வாழ்ந்து வந்தார் பெருந்தகை அமிர்தலிங்கம் செட்டியார். இவர் கார்காத்த வேளாளர் மரபில் தோன்றியவர் இவருக்கு இருவர் இல்லத்தரசிகளாய் அமைய வேண்டிய நிலை ஏற்பட்டது.

மூத்த மனைவியின் பெயர் திருமதி தையல்நாயகி அம்மையார் ஆவர். இவருக்குச் சிங்காரம், மகாலிங்கம் என்ற இரு ஆண் மக்கள் பிறந்தனர். இந்த இருவரும் சிசுக்களாக இருந்தபோதே தையல்நாயகி அம்மையார் மறைந்தார். தீயூழின் திறம்தான் என்னே!

பிறகு அமிர்தலிங்கம் அவர்களுக்கு, குணவதியாம் பார்வதி என்னும் நங்கையை மணம் செய்வித்தனர். திருமதி பார்வதி அம்மையார், முதல் மனைவிக்குப் பிறந்த குழந்தைகளைத் தான்பெற்ற குழந்தைகளாகவே பாவித்து வளர்த்து வந்தார்.

அமிர்தலிங்கம் - பார்வதியம்மாள் தம்பதியினருக்கு, 1907, ஏப்ரல் திங்கள் 3ஆம் நாள் தோன்றியவர்தாம் பார் போற்றும் பல்கலைக் குரிசிலாம் செந்தமிழ்க் காவலர் டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார் அவர்கள்.

அ. சிதம்பரநாதர் அவர்களுக்கு உடன்பிறந்த சகோதரிகள் வள்ளியம்மை, கோமளவல்லி, தையல்நாயகி என்ற மூவராவர். உடன்பிறந்த சகோதரர்கள் அ கணபதி, அ. சபாபதி என்ற இருவர்.

பிள்ளைப் பருவம் நீங்கிப் பள்ளிப் பருவம் அடைந்த அ. சிதமபரநாதன், கும்பகோணம் பேட்டையில் உள்ளதொடக்கப் பள்ளியில் சேர்க்கப்பட்டார். முதலிரண்டு வகுப்புகள் இங்கு முடித்த பிறகு, நேடிவ் உயர்நிலைப் பள்ளியில் சேர்க்கப்பட்டார். இங்கே மூன்றாம் வகுப்பு முதல் பள்ளியிறுதி வகுப்பு வரை படித்துத் தேறினார்.

தொடக்கத்திலிருந்தே தமிழையும், ஆங்கிலத்தையும் சம அளவில் கற்று வந்தார். பின்னால் (தமிழாசிரியர்களுக்கு ஆங்கிலம தெரியவே தெரியாது என்ற பழிநீக்கி) இருமொழி அறிஞராக வலம் வரத்தானோ! தன் ஆசிரியர்களின் நன்மதிப்பைப் பெற்றார் எனக் கூற வேண்டுவதில்லை. அப்போது அங்குத் தமிழாசிரியர்களாய் இருந்த திரு. சீனிவாச அய்யங்காரிடமும், திரு.பி. சீனிவாச அய்யங்காரிடமும் தமிழ் கற்றார்.

'சில்வர் டங்க்' சீனிவாச சாஸ்திரியாரின் மருமகனாகிய வி. மகாதேவ சாஸ்திரிதான் ஆங்கிலத்தில் வல்ல ஆசிரியராக அங்கு விளங்கினார். அவரிடம் ஆங்கிலம் கற்றவர் அ சிதம்பரநாதர். நேடிவ் உயர்நிலைப் பள்ளியின் உரிமையாளரும் தலைமை ஆசிரியருமாக விளங்கிய எஸ். அப்பு சாஸ்திரியார் மற்றும் இதர ஆசிரியர்களின் அன்பைப் பெற்று விளங்கினார்

1924இல் பள்ளியிறுதி வகுப்பில் வெற்றிபெற்றதும் தற்போதுள்ள மூத்த அரசு கலைக் கல்லூரிகளில் ஒன்றாக விளங்கிய கும்பகோணம் அரசு கலைக் கல்லூரியில் சேர்ந்தார். டி.பி. கிருட்டிணசாமி முதலியார், எம்.ஆர். இராசகோபால அய்யங்கார், பி.ஆர். கிருட்டிணசாமி போன்ற ஆங்கிலப் புலமையாளர்களிடம் ஆங்கிலம் கற்றார் ஆங்கிலத்தில் இப்படித் தேர்ச்சி பெற்றிருந்தும் தமிழில் இவருக்குள்ள பற்று அணுவளவும் குறையவில்லை.

கல்லூரியில் நுழைந்ததும் முற்றாகத் தமிழை மறந்து முழுதும் ஆங்கில மயமாக மாறிவிடும் மாணவர் மலிந்த அக்காலத்தில் (இககாலத்திலும்) தமது பி.ஏ வகுப்பில் சிறப்புப் பாடமாகத் தமிழை எடுத்துப் பாராட்டைப் பெற்றார்

அந்த ஆண்டு தமிழைச் சிறப்புப் பாடமாக எடுத்த மாணவர்கள் மூன்று பேர்களே! அவர்களில் ஒருவர், தமிழ் மாணவர் அ. சிதம்பரநாதர் ஆவார்! அப்போது அங்குத் தமிழ் விரிவுரையாளராக இருந்தவர் சடகோப இராமானுசாச்சாரியார்.

இந்த முதல்நாள் வரவேற்புத்தான் இவர் பின்னாளில்பெயர் கூறி வெளிப்படுத்திக் கொள்ளாமல் பெரியார் அவர்களின் பல பணிகளைச் செய்யத் தூண்டுகோலாய் இருந்ததோ!

குடந்தைக் கல்லூரியின் மாணவர் சங்கச் செயலாளராக 1926-27ஆம் ஆண்டிலிருந்து பல சேவைகளையும் சீர்திருத்தங்களையும் செய்தார். அதுவரை கல்லூரியின் எல்லா அறிக்கைகளும் ஆங்கிலத்திலேயே படிப்பது பழக்கமாக இருந்தது முதல் முதலில் தமிழ்க்கூட்ட அறிக்கையைத் தமிழில் படிக்க, எழுத ஆவன செய்தார். அப்போது வேறு

சில நெருக்கடிகளுக்கும் ஆளானார். தமிழவேள் உமாமகேசுவரன் பிள்ளை, நாவலர் ந மு. வேங்கடசாமி நாட்டார் முதலிய பல தமிழறிஞர்களைப் பல எதிர்ப்புகளுக்கிடையேதான் கல்லூரிக்கு அழைத்து வந்து உரையாற்றச் செய்தார் அப்போது கல்லூரி முதல்வராக இருந்தவர் எம் சி எஸ். அனந்தபத்மநாபராவ்.

அப்போதெல்லாம் குடந்தைக் கல்லூரியில் மாணவர்களுள் தேர்தல் முறையாக நடப்பதில்லை. போராடி, வாதாடி உண்மையாகவே மாணவர் தேர்தல் நடக்க ஆவன செய்தார்.

சிதம்பரநாதர் தமிழ், ஆங்கிலத்திற்கு அடுத்து, வரலாற்றில் ஆர்வம் கொண்டிருந்தார். பி ஏ. வகுப்பில், நடந்த கல்லூரி வரலாற்றுத் துறைப் போட்டியில் கலந்து கொண்டு 'தமிழ் நாகரிகத்தின் தொன்மை' என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் கட்டுரை எழுதி முதல் பரிசு பெற்றார்.

அக்கட்டுரையில் முதலில் மனிதன் எங்குத் தோன்றினான்? அப்போது உலக அமைப்பு எப்படி இருந்திருக்கும்? என ஆராய்ந்து சிந்தித்தார்.

'இலமூரியாக் கண்டம்' ஆஸ்திரேலியா, தென்னாப்பிரிக்கா, தென்னிந்தியாவின் ஒரு பகுதி ஆகிய நிலப்பகுதிகளைக் கொண்டதாக அமைந்திருந்தது எனவும், இந்த வெப்ப மண்டலத்தில்தான் முதல் மனிதன் தோன்றினான் எனவும் சான்றுகளுடன் கூறியுள்ளார். மனிதன் எப்படிக் கடவுளைப் படைத்தான் என்றும், தன்னால் அடக்கவும் ஆளவும் முடியாத பொருள்களை எவ்வாறு வணங்கத் தொடங்கினான் என்றும் அழகாகக் கூறியுள்ளார் வட இந்தியாவையும், தென்னிந்தியாவையும் பிரித்தவை அரசபட்டணக் கடலும் (The Rajaputna Sea), கீழ்க்கடலும் (Eastern Sea) என்பதை அறிகிறோம்.

ஆகவே, வட இந்தியருக்கும் தென்னிந்தியருக்கும் தொடர்பில்லை. பாணர்கள்தாம் வசித்து வந்தனர். பாணர்கள் சிரியாவில் குடியேறி பொன்ஷியர்கள் என்று அழைக்கப்பட்டனர் டைகிரீஸ், யூப்ரடீஸ் ஆற்றுமுகப்பில் குடியேறி நாகரீக விளக்கேற்றினார்கள். பாணர் குடியேறுவதற்கு முன்பு பொனீஷியா லெபனான் என்று அழைக்கப்பட்டது. பிறகு சோழ, பாண்டியர் எகிப்தில் குடியேறினர். எனவே, தமிழ்ப் பாண்டியரால் ஏற்பட்ட எகிப்து நாகரிகமும், பாபிலோனிய நாகரிகமும் பழமையானவை எனப் பிறர் வாதிட்டாலும், தமிழ் நாடே உலக நாகரிகத்தின் ஊற்று என்று முடித்திருந்தார் அ. சிதம்பரநாதர். இக்குறிப்பை எழுதியுள்ளவரின் பெயரைத் தெரிந்துகொள்ள இயலவில்லை. ஆனால் 'உலக நாகரிகத்தின் ஊற்று' என்ற தலைப்பில் பல ஆண்டுகளுக்கு முன்பு 'செந்தமிழ்ச் செல்வி' இதழில் இக்கட்டுரை வெளியானது குறிப்பிடத்தக்கது ஆகும்.

எழுத்தில் மட்டுமின்றி, சொற்பொழிவிலும் சிறந்து விளங்கினார்.

1928இல் பி ஏ தேர்வில் தமிழில் மாநிலத்திலேயே முதல் மாணவனாகத் தேறியதால் சென்னைப் பல்கலைக்கழகம் ஜி.யூ. போப் தங்கப் பதக்கத்தைப் பரிசாக வழங்கியது. இன்னொரு பதக்கமாம் 'பிராங்க்ளின்' பதக்கத்தையும் அதற்காகப் பெற்றார்.

நாடு போற்றும் நல்லாசிரியராகும் முன்பு ஒரே வகைப் பணிதான் புரிந்தார். இது உலகச் சான்றோர்களுக்கு இயற்கை விதித்த சாபம் போலும்!

பி.ஏ பட்டத் தேர்வில் வெற்றிபெற்ற அ. சிதம்பரனார், 1928-30 ஆண்டுகளில் சென்னைப் பல்கலைக் கழக அலுவலகத்தில் எழுத்தராகவும், பிறகு தலைமைச் செயலகத்தில் எழுத்தராகவும் பணியாற்றினார் பணியாற்றிக் கொண்டே அரசினர் நடத்திய வருவாய்த் துறைத் தேர்விலும் **(Revenue Examination)**, வரவு செலவுக் கணக்குத் தேர்விலும் **(Accounts Test)** முதல் வகுப்பில் வென்றார் என்பது குறிப்பிடத்தக்க செய்தியாம்.

இவரது நுண்மான் நுழைபுலத்தை அறிந்த அப்போதைய சென்னை மாகாண அரசு இன்றைய அண்ணா சாலையில் அமைந்துள்ள சென்னை அரசாங்க முகமதியக் கல்லூரியில் (இன்றயை அண்ணாசாலை அரசுக் கலைக் கல்லூரி) தமிழாசிரியராகப் பொறுப்பேற்கச் செய்தது

வைதீக மொழயில் குறிப்பிடுவதென்றால்,

"நெடுமால் அன்ன நெடிதுயர்ந்த தோற்றம்,

*"செம்மேனி அம்மான்"*

என்பவனவற்றிற்கிணங்க, உயர்ந்த தோற்றமும், உள்ளத்து உயர்ந்த எண்ணமும் சிவந்த மேனியும் அணிநின்ற ஆடையும், ஆங்கிலப் புலமையும்ஒருங்கு நிறந்த இவரை ஓர் ஐரோப்பியர் என்றே காட்டும்.

அ சிதம்பரநாதர், கல்லூரியில் தமிழாசிரியராக இருந்தபோது, அங்குக் கல்லூரி முதல்வராக இருந்தவர் E.W. கிரீன் என்ற ஆங்கிலேயர், அ சிதம்பரநாதரின் ஆங்கிலப் புலமையை அறிந்து இடைநிலை வகுப்பிற்கு ஆங்கிலத் துணைப்பாடம் நடத்தவும், ஆங்கிலக் கட்டுரை ஏடுகளைத் திருத்தவும் நியமித்தார் எனின் இவரது ஆங்கில அறிவைப் பறைசாற்றப் போதுமன்றோ!

இவ்வாறு இங்கு மூன்றாண்டு பணியாற்றிவிட்டு, பாலக்காடு அரசினர் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றத் தொடங்கினார். ஆனால் இதற்கான காரணம் புலப்படவில்லை.

இப்போது அ. சிதம்பரனார் திருமணத்திற்கு அணியமானார்.

'வரம்பலவுடையார்' என்னும் குடும்பப் பெயர்பூண்ட அமிர்தலிங்கம் செட்டியாரும், திருமதி பார்வதி அம்மையாரும், அதே கும்பகோணத்தில்

அணிவணிகம் செய்துவந்த, திரு. சாமிநாதன் செட்டியார் - திருமதி சின்னம்மாள் ஆகியோரின் ஒரே புதல்வியான பெரியநாயகி அம்மையை 30.06.1933இல் திருமணம் செய்து வைத்தனர்.

இவ்விடத்தில் பெரியநாயகி அம்மையார் அவர்களைப் பற்றிச் சற்று விரிவாகக் காண்பது தேவை. ஏன்? வெற்றிகரமான ஒவ்வொரு ஆணுக்குப் பின்பும் மனைவியின் வடிவில் ஒரு பெண் இருப்பார் என்பது பொருள்மொழியாக விளங்குகிறதன்றோ!

அழகு-அறிவு-அன்பு-பண்பு ஆகிய நற்குணங்களின் வடிவம் இவர். ஓவியக் கலை வல்லுநர் இவரது கலை உள்ளம் இவர் யாத்த 'கலையுள்ளம்' என்னும் பெயரிய நூல்வழி இனிது புலனாகும்.

அம்மையாரின் 'கலையுள்ளம்' நூலுக்கு அணிந்துரை வரைந்த 'சொல்லின் செல்வர்' ரா.பி. சேதுப்பிள்ளையவர்கள்.

''இந்நூலாசிரியருக்குக் கவின்கலைகளில் உள்ள ஆர்வமும், பழந்தமிழ் நூல்களில் உள்ள பயிற்சியும் நூல் முழுவதும் விளங்குகின்றன. வாழ்க்கை முழுவதும் கலையின் வண்ணமே என்பதை நன்கு எடுத்துக் காட்டுகின்றது. இந்நூல், 'நாணமும் மடனும் நாரியர்க்கு அழகு' என்னும் மடக்கொள்கையை மறுத்து மாதவம் செய்தவரே மங்கையராய்ப் பிறப்பர் என்னும் கருத்தை ஆதரிக்கின்றார் இந்நூலாசிரியர்'' என்று குறிப்பிட்டுள்ளமைக்கு மேல் வேறென்ன வேண்டும்?

மேலும், நல்ல பாடகராகவும், புல்லாங்குழல் இசையை 'விசில்' ஒலி மூலமாகவே பிசிறு தட்டாமல் ஆலாபனை செய்யும் ஆற்றலும் உடையவர்- அதுவும் நீண்ட நேரம். பேச்சிலும் இனிமையே மிகுந்திருக்கும்

ஓவியத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டு ஓவியம் கற்று, அரசு நடத்திய, கீழ்நிலை, மேல்நிலைத் தேர்வுகளில் எல்லாம் வெற்றிபெற்றார். இக்கலையை மேலும் வளர்க்க, அண்ணாமலைப் பல்கலைக்கழக ஓவியக் கல்லூரியில் சேர்ந்து 'மூன்றாண்டுகள் பயின்று வெற்றி பெற்றார் எனில் அவரது ஆர்வத்திற்கு எல்லை ஏது? சிலகாலம் இவர் கடலூர் பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் ஓவிய ஆசிரியராகவும் பணியாற்றினார். இவர் பேசிய மேடைப் பேச்சுக்கள் எல்லாம் உயர்நிலைப் பள்ளிப் பாடப் புத்தகங்களில் பாடங்களாக நிலைபேறு அடைந்துள்ளன.

மேலும் பெரியநாயகி அம்மையார் வரைந்த அண்ணல் காந்தியடிகளின் ஓவியம் திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியை இன்றும் அணி செய்கிறது என்பது மகிழ்வான தகவலன்றோ!

இளமையிலேயே அன்னை - தந்தையைப் பறிகொடுத்தது அ. சிதம்பர நாதரின் குடும்பம். எனவே, அவரது இளவல்கள் அ. கணபதிக்கும்,

அ சபாபதிக்கும், சிதம்பரநாதரும் - பெரியநாயகி அம்மையாருமே அன்னை - தந்தையாக இருந்து வளர்த்துத் திருமணமும் செய்து வைத்துள்ளனர். அதுபோலவே திரு அ. சபாபதி அவர்களும், அண்ணன் - அண்ணியாரைத் தாய் தந்தையராகவே போற்றினார் என்பதும் ஈண்டுக் குறிப்பிடற்பாலதாகும்.

தமிழில் காதல் கொண்ட அ. சிதம்பரநாதர் 1933ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் தமிழ் எம்.ஏ. வகுப்பில் சேர்ந்தார் அப்போது பலகலைக்கழகப் பொதுப் பேரவையில் (University Union) நடந்த பல ஆங்கிலச் சொற்போர்களில் கலந்து பலரின் பாராட்டுக்களைப் பெற்றார் பிறகு பொதுப் பேரவையின் தலைவராகவே தேர்வு செய்யப்பட்டார். இவர் தலைமையினால்தான் முதன் முதலில் போலிப் பாராளுமன்றம் நடந்தது. அதை விடுதலைப் போராட்ட வீரர் தீரர் சத்தியமூர்த்தி கண்டு சிதம்பரநாதரை வெகுவாகப் பாராட்டினார். பின்பு இது வாரந்தோறும் நிகழத் தொடங்கியது 'செந்தமிழ்க் காவலர்' டாக்டர் அ சிதம்பரநாதனார் வாழ்க்கை வரலாறு' என்ற அச்சேறாத நூலே இவற்றிற்கெல்லாம் சான்றாகும்

''காக்காய் பிடித்தல் கற்றோர்க்கு அழகன்று''; ''காதலின் கடமையே சிறந்தது'', ''ஜெமீன்தார் ஒழிப்புச் சட்டம்'' ஆகிய தலைப்புகளில் பேசினார்.

அண்ணாமலையில் பயின்ற இரண்டு ஆண்டு காலமும் தமிழ்ப் பேரவையின் தலைவராகவும், சமூகச் சீர்த்திருத்தச் சங்கத் தலைவராகவும், பல்கலைக்கழக ஆண்டு மலரின் மாணவ ஆசிரியராகவும் பணியாற்றினார் தலைமைத் தன்மையைப் பயிலும் போதே வளர்த்துக் கொண்டவரன்றோ இவர்!

முதுகலை மாணவராகிய அ. சிதம்பரநாதரைப் பார்க்கும் போதெல்லாம், அவரை அறியாத உடன் பயிலும் மாணவர்கள் (*பேராசிரியர் அ மு பரமசிவானந்தம் அவர்களைப் போன்றோர்*) ''இவர் ஆசிரியரா? மாணவரா?'' என்று அறியப் பல காலம் தவித்திருக்கிறார்கள். இதை பேராசிரியர் அ.மு ப அவர்கள் 'செயல் வீரர் செட்டியார்' என்ற கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

ஆசிரியராய் இருந்துவிட்டு மீண்டும் மாணவராய வந்ததினால்தான் அ. சிதம்பரனார் அவர்களிடம் இரு வேறுபட்ட தன்மைகளும் பொலிந்தன.

இவர் எம்.ஏ. பயிலும்போது, பல்கலைக்கழகத்திற்கு அருகில் இருந்த உசுப்பூர், சிதம்பரநாதன்பேட்டை, கோவிலான்பூண்டி முதலிய சிற்றூர்களுக்குப் போய் அங்குள்ள தாழ்த்தப்பட்ட மக்களுடைய முன்னேற்றத்திற்கும் உழைக்கலானார்

அ. சிதம்பரநாதர் சமூகச் சீர்திருத்தச் சங்கத் தலைவராக இருந்தபோதுதான் அண்ணல் காந்தியடிகள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கு வருகை புரிந்தார். அவருக்குத் தமிழில் வரவேற்பிதழ் அச்சிட்டுப் படித்தளித்தார் என்பது வைர வரிகளில்பொறிக்கத் தக்கதாகும். அந்தக் கூட்டத்திற்குத் துணை வேந்தர், மற்றைய பேராசிரியர்கள், அப்போதைய தமிழ்ப் பேராசிரியராக இருந்த 'பசுமலைப் பாரதி' என்ற டாக்டர் நாவலர் சோமசுந்தர பாரதியார் அவர்களும் வந்திருந்தனர். அப்போதுதான், நாவலர் சோமசுந்தர பாரதியார் அவர்களின் மனைவியார் தம் இரு பொன்வளையல்களையும் கழற்றிக் காந்தியடிகளிடம் வழங்கியுள்ளார்.

1935ஆம் ஆண்டு எம்.ஏ. தேர்வில் வழக்கம்போல் முதலிடம் பெற்று மீண்டும் சென்னை அரசு கல்லூரிக்கு விரைவுரையாளராகச் சென்றார். இவரின் மொழியறிவின் நுட்பத்தை உணர்ந்த, அப்போதைய துணைவேந்தர் சீனிவாச சாஸ்த்திரியார் இவருக்குக் கடிதம் எழுதி அழைத்து தம் 'பல்கலைக் கழகத்திலேயே விரிவுரையாளர் பணியை' அளித்தார். நாவலர் ச. சோமசுந்தர பாரதியார் பேராசிரியராகப் பணியாற்றும் தமிழ்த்துறையிலேயே நம் சிதம்பரனார் தமிழ் விரிவுரையாளராக 1935 முதல் சிறக்கப் பணியாற்றத் தொடங்கினார்.

அமிர்தலிங்கம் - பார்வதி அம்மையார் குடும்பம் கார்காத்த வேளாளர் மரபைச் சேர்ந்தது என்று கண்டோம் பின் எவ்வாறு 'பிள்ளை' பட்டம் போய் இவர் 'ஏ சி. செட்டியார் ஆனார்?' கார்காத்த வேளாளரேயானாலும் இவரது குடும்பம் பரம்பரை வாணிகத் தொழிலைச் செய்ததால் அமிர்தலிங்கம் குடும்பம் செட்டியார் குடும்பம் ஆகியது. இக்கருத்தை அ சிதம்பரநாதரின் இளவர் அ சபாபதி கூறியுள்ளார். மேலும், அ சிதம்பரநாதர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் படிக்கும்போதே, உடன் பயின்ற மாணவர்கள், அ. சிதம்பரநாதச் செட்டியாரை சுருக்கமாக 'ஏ.சி. செட்டியார்' என்றழைக்கத் தொடங்கினர் பிறகு அதுவே நிலைத்த வழக்காகிவிட்டது!

தமிழகத்தில் தமிழாராய்ச்சியில் முதன்முதலில் டாக்டர் பட்டம் பெற்ற தமிழ்ப் பேராசிரியர் அ சிதம்பரநாதர் அவர்களே.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் சட்டப் பேரறிஞர் பேராசிரியர் கா. சுப்பிரமணியப் பிள்ளை (எம் எல். பிள்ளை) தமிழ்ப் பேராசிரியராக விளங்கத் தமிழ்த்துறையின் வரலாறு பீடுடன் தொடங்கிற்று எனலாம். அந்த வகையில் 1929இல் அங்கே தமிழ்த்துறைத் தலைவராக இருந்த கா சு. பிள்ளையவர்கள் வேறு பணிகள் ஆற்றிவிட்டு 1940இல் மீண்டும் தமிழ்த்துறைத் தலைவர் ஆனார். அவரது ஓய்வுக்குப் பிறகு திரு.தெ பொ மீனாட்சி சுந்தரனார் துறைத் தலைமைக்கு வந்தார். அவர்

1946ஆம் ஆண்டு ஜுன் திங்களில் ஓய்வுப்பெற்றார். பிறகு டாக்டர் அ. சிதம்பரநாதர் அவர்கள் துறைத் தலைவரானார். அன்றிலிருந்து அவரது அரும்பணி தொடங்கியது.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையின் எட்டாவது தலைவர் டாக்டர் அ. சிதம்பரநாதர்.நம் தமிழ் நூல்களைக் கற்றாராய்ந்து பிற மொழியாளரும் அறிய வேண்டும் என்ற வேணவாவினால் ஆங்கிலத்தில் 'திருக்குறட் செய்தி' (Thiruvalluvar's Message to the World) என்ற ஆராய்ச்சிக் கட்டுரையை உருவாக்கி அனைத்திந்திய கீழைக்கலை மாநாட்டில் சமர்ப்பித்தார்

திருவனந்தபுரத்தில், "திராவிட மொழிகளில் செயப்பாட்டு வினை" என்ற தலைப்பிலும், திருப்பதியில் "நக்கீரன் சொல்லாராய்ச்சி" என்றும், காசியில் "பழந்தமிழ்ப் புலவர்கள்" என்றும், ஆமதாபாத்தில் "பழந்தமிழ் மன்னர்கள்" என்றும், நாகபுரியில், "இறையனார் களவியல் உரையில் இடைச்செருகல்கள்" என்றும், அண்ணாமலை நகரில், "சிலப்பதிகாரத்தின் காவிய நலம்" என்றும் ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பித்தார் சில மட்டுமே இங்கு எடுத்துக் காட்டப்பட்டன விரிக்கிற் பெருகம்; தொகுப்பின் எஞ்சும்.

வேறு பல ஆய்வுரைகள் பூனாவிலிருந்து வெளிவந்த "நியூ இந்தியன் ஏண்டிக்குயரி", கல்கத்தாவிலிருந்து வெளிவந்த "இந்திய மொழிக்குழு இதழ்", சென்னையிலிருந்து வெளிவந்த "கீழ்த்திசை ஆராய்ச்சி இதழ்", தூத்துக்குடியிலிருந்து வெளிவந்த "தமிழ்ப் பண்பாடு" (Tamil Culture) ஆகிய இதழ்களில் வந்தமை குறிப்பிடத்தகையாகும். 1927ஆம் ஆண்டு முதல் "சொல்லாராய்ச்சி"க் (Etimology) கட்டுரைகள் செந்தமிழ்ச் செல்வி, செந்தமிழ், தமிழ்ப் பொழில் ஆகிய இதழ்களில் வெளி வந்துள்ளன. இவர்தம் இப்பணிகளைப் பாராட்டி ஊக்கப்படுத்தியவர் 'செந்தமிழ்ச் செல்வி'யின் ஆசிரியராய் இருந்த கா.சு. பிள்ளையவர்கள்!

சிறுகதை போன்ற நவீன இலக்கிய வடிவங்கள் பின்னாளில் ஆழமாகத் தடம்பதிக்கவிருக்கின்றது என்பதை முன்னரே அறிந்ததினாலோ என்னவோ சிறுகதைகளையும் படைக்கத் தொடங்கினார் சிதம்பரநாதர். சிறுகதையை 'நொறுக்குத் தீனி'க்கு ஒப்பிட்டார்.

மாதவமணி, பிரசண்ட விகடன், ஆகிய இதழ்களிலும், 'அல்லயன்ஸ் கம்பெனி'யாரின் 'கதைக்கோவை' என்பவைகளிலும் இவர்தம் கதைகள் இடம் பெற்றன. அவ்வளவும் சீர்திருத்தம் பேசும் சிந்தனைக் கதைகளாகும்.

திறனாய்வு அடிப்படையில் சிறுகதையும் தமிழ் இலக்கியத்தில் அதன் வளர்ச்சியும் என்று ஆங்கிலக் கட்டுரை ஒன்றை 1954இல் அண்ணாமலை நகரில் நடந்த அனைத்திந்திய எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பித்தார்.

இவ்வாறு பல்வேறு வகைகளில் அருந்தமிழிலும் ஆங்கிலத்திலும் இவர்தம் தமிழ்ப் பணிகள் தொடர்ந்தன.

இதற்கிடையில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் பொறுப்புத் துணைவேந்தராக ஆனார். முழு வளர்ச்சியுற்ற துணைவேந்தராக (Full Fledged) நியமிக்கப்படும் நிலையை அடைந்துள்ள டாக்டர் அ. சிதம்பரநாதர் பொறுப்புத் துணை வேந்தராகவே நியமனம் பெற்றார்.

சர். எஸ்.இ. ரங்கநாதன் அவர்கள் முதல் துணைவேந்தர் (1929-1935). இரண்டாவது துணைவேந்தர் 'ரைட் ஆனரபிள்' வி.எஸ். ஸ்ரீனிவாச சாஸ்திரியார் (1929, 1935-1940), மூன்றாவது துணைவேந்தர் டாக்டர் கே வி. ரெட்டிநாயுடு. (1940-1942), நான்காவது துணைவேந்தர் பேராசிரியர் எம். ரத்தினசுவாமி (1942-1948).

1948இல் துணைவேந்தர் எம். ரத்தினசுவாமி அவர்கள் லண்டன் மாநகருக்குச் சென்ற காரணத்தால், அவர் நாடு திரும்பும் வரை 1948 ஜூலை திங்கள் முதல் நவம்பர்த் திங்கள் வரை ஐந்து திங்கள் மட்டும் பொறுப்புத் துணைவேந்தராகப் பணியாற்றினார் அ.சிதம்பரநாதர். பேராசிரியர் எம். ரத்தினசுவாமி அவர்களுக்கும் டாக்டர் எஸ்.ஜி. மணவாள ராமானுஜம், M.A., M.D., (Lond) D.I.C., அவர்களுக்கும் இடையில் துணைவேந்தர் பொறுப்பை வகித்தார்.

இந்தக் குறுகிய காலத்தில், பொறியியல் கல்லூரி மாணவர்களுக்கு உரிய மாணவர் விடுதியை, அப்போதைய நிதியமைச்சராக இருந்த கோபால்ரெட்டி அவர்களைக் கொண்டு திறந்து வைத்தார்.

சென்னை சட்டமன்றத் தலைவராக இருந்த திரு.சிவசண்முகம் அவர்களும், அமைச்சர்களும் திரு கோபால்ரெட்டி, திரு. சந்திரமௌலி, டாக்டர் குருபாதம் ஆகிய பெருமக்கள் பல்கலைக் கழகத்திற்கு வந்து அ. சிதம்பரநாதன் பணியாற்றி வருகின்ற பான்மையைப் பாராட்டியும் ஆட்சிக்குழு, கல்விக்குழு முதலியவற்றைத் திறம்பட நடத்திச் செல்லும் பாங்கைப் போற்றியும் உற்சாகப்படுத்தினார்கள். இக்குறிப்புகளை 'செந்தமிழ்க் காவலர் டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியார்' என்ற அச்சேறாத படிவம் குறிப்பிடுகிறது

டாக்டர் அ. சிதம்பரநாதர் பல்கலைக்கழகச் சட்டங்களை நன்கு அறிந்து வைத்துள்ள நிபுணர் (Constitutional Pandit) என்று துணைவேந்தர் இரத்தினசாமி அவர்களும் திரு. சிவசண்முகம் அவர்களும் பாராட்டியுள்ளார்கள் இதைத் 'தூதுக்கு ஏ.சி.' என்ற தலைப்பில் 'சோமலே' எழுதிய கட்டுரை குறிப்பிடுகிறது.

பின்னர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறி 1958இல் ஆசிரியர் தொகுதியில் சட்டமன்ற மேலவைக்கு நின்று

வெற்றிபெற்ற ஓராண்டிற்குள் இவரின் இருமொழிப் புலமையில் ஈடுபாடு காட்டிய சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் ஏ. இலட்சுமணசாமி முதலியார் அவர்கள், சென்னைப் பல்கலைக்கழகம் தமிழில் மொழிபெயர்க்க எண்ணிய ஆங்கில அகராதியின் தலைமைப் பதிப்பாசிரியராக வந்து பணியாற்ற வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்

இப்பணியை 1959இல் தொடங்கினார் பேராசிரியர் டாக்டர் அ.சிதம்பரநாதர்.

ஆங்கிலம் - தமிழ்ச் சொற்களஞ்சியத்தின் தொகுப்பிற்குப் பதிப்பாசிரியர் குழு ஒன்று அமைக்கப்பட்டது

டாக்டர் அ சிதம்பரநாதச் செட்டியார் அவர்கள் தலைமைப் பதிப்பாசிரியர்.

இத்தொகுப்பின் ஆலோசனைக் குழுவில் -

டாக்டர் ரா.பி சேதுப்பிள்ளையவர்கள் தலைவராகப் பணியாற்றினார் (1961, ஏப்ரல் 25 வரை) டாக்டர் மு. வரதராசன் (உறுப்பினராக 1959 முதலும், தலைவராக ஜூலை 1961 வரையிலும்).

பேராசிரியர் தெ பொ மீனாட்சி சுந்தரனார், டாக்டர் அ சிதம்பரநாதர் (தலைமைப் பதிப்பாசிரியர்) ரெவரண்ட் டாக்டர் சேவியர் எஸ் தனிநாயக அடிகள் (1961 செப்டம்பர் வரை).

பேராசிரியர் பூ ஆலாலசுந்தரம் (1961 செப்டம்பர் முதல்)

பேராசிரியா எஸ். ஆறுமுக முதலியார் செப்டம்பர் 1961 முதல், பணியாற்றினார்கள்.

மேற்கூறிய அறிஞர்களின் ஆலோசனை மற்றும் ஒத்துழைப்பால் முதல் தொகுப்பு 1963இல் வெளியிடப்பட்டது. இரண்டாவது தொகுப்பு 1964இல் வெளியிடப்பட்டது. மூன்றாவது தொகுப்பு 1965இல் வெளியிடப்பட்டது

பிறகு மூன்று தொகுப்புகளையும் ஒரே தனித் தொகுப்பாக 1965ஆம் ஆண்டிலேயே வெளியிட்டுச் சாதனை படைத்து, அறிஞர் உலகின் பாராட்டுதலைப் பெற்றார் டாக்டர் அ. சிதம்பரநாதர் என்று கூறவும் வேண்டுமோ!

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலிருந்து வந்த நாள் முதற்கொண்டே, மதுரை தியாகராசர் கல்லூரியின் முதல்வராக டாக்டர் அ. சிதம்பரநாதரை நியமிக்க வேண்டும் என்ற எண்ணம் கல்லூரி நிறுவனர் கருமுத்து தியாகராசர் அவர்களுக்கு இருந்தது.

இடையில் ஆங்கிலம் - தமிழ்ச் சொற்களஞ்சியத்தை உருவாக்கும் பணி வேறு குறுக்கிட்டது. இப்பணி முடிந்தது.

பிறகு நல்வாய்ப்பு தியாகராசர் கல்லூரிக்குக் கிடைத்தது. 1965 ஜூலைத் திங்கள் 15ஆம் நாள் முதல், தன் வாணாள் இறுதிவரை - அதாவது 1967 நவம்பர்த் திங்கள் 22ஆம் நாள் வரை அக்கல்லூரியின் *முதல்வராகப் பணியாற்றினார். டாக்டர் அ. சிதம்பரநாதர்.*

இதுகாறும், அ சிதம்பரநாதரின் கல்வி மற்றும் அவர் ஆற்றிய குறிப்பிடத்தக்க சில பதவிகளைப் பற்றி மட்டும் இங்கே வரையப்பட்டுள்ளது என்பது மனங்கொள்ளத்தக்கதாகும்

# 2
# புரிந்த தொண்டுகள்

வரையறுத்த ஊதியத்திற்கு அரசோ, பல்கலைக் கழகமோ, இதர நிறுவனங்களோ அளிக்கும் பணிகளுக்குப் பெயர் பதவி என்றால், அத்தகைய ஊதியத்திற்குள், பிறரிடம் எந்தப் பலனையும் பெறாமல், இதயத்தை அகண்டமாக்கி அருள் சுரக்கும் நெஞ்சோடு ஆற்றும் பணிகளைத் தொண்டு எனலாம். இயல்பாக பெரிய உள்ளம், தூய உள்ளம், தொண்டு உள்ளத்திற்கு உரியவர் அ. சிதம்பரநாதர் அவர்கள் அவர் வாணாளில் அவர் ஆற்றிய தொண்டுகளுக்குக் குறைவில்லை

முதன் முதலில் தமிழாசிரியராகப் பணியாற்றிய சென்னை அரசாங்க முகமதியக் கல்லூரியில் ஒரு நிகழ்ச்சி அந்தக் கல்லூரியில் பெயருக்கேற்பப் பெரும்பான்மையாராகப் பயின்று வந்தவர்கள் இஸ்லாமியர்கள். அங்குப் பயின்ற முகமதிய மாணவர்களின் தமிழ் - ஆங்கில மொழிகளின் வளர்ச்சி குறித்துப் பெரிதும் முயல வேண்டியிருந்தது அப்பணியை முனைப்புடன செய்தவர் சிதம்பரநாதர்.

அக்கல்லூரி முதல்வருக்கு, வகுப்பு நேரத்தில் மாணவர்கள் வெளியில் நிற்பது பிடிக்காது யாரேனும் ஒரு மாணவர் வெளியில் நின்றாலும் அவரை அழைத்து எந்த வகுபபென்று கேட்டு அந்த வகுப்பில் அவரை உட்கார வைத்து விட்டுத்தான் மறு வேலை பார்ப்பார்.

ஒருநாள் வகுப்பை முடித்துக் காலை பதினோரு மணியளவில் அ.சிதம்பரநாதர் நூல் நிலையத்திற்குச் செல்லும் வழியில் பல பத்து ரூபாய், ஐந்து ரூபாய்த்தாள்கள் சிதறிக் கிடந்தன இவை யாருடையவை என அறியாது திகைத்தார் உடனே அதைக் கல்லூரி முதல்வரிடம் அளித்தார். அவரும் அவையாருடையவை என அறியாது குழம்பினார்.

அப்போது, அக்கல்லூரியின் ஊழியராக அப்துல் சமது என்பவர் இருந்தார். அவர் வங்கிக்குப் போய்ப் பணம் செலுத்த முயலும்போது நூற்றையம்பது ரூபாய் குறையக் கண்டு தேடாத இடம் எல்லாம் தேடினார் அவருடைய மாத ஊதியமே ரூபாய் பதினேழேதான் மாலை நான்கு மணி அளவில் கல்லூரி அலுவலகத்தில் வந்து அவர் முறையிட்டபோதுதான், அது அக்கல்லூரிக் கணக்கர் கொடுத்தனுப்பியது என்பது புலனாகியது. சிதம்பரநாதரின் சீரிய பண்பை அன்று எல்லோரும் பாராட்டினர். குறிப்பாகக் கல்லூரி முதல்வர் ஈ டபிள்யூ. கிரீன் அவர்களும் பாராட்டினார்.

டாக்டர் அ.சிதம்பரநாதர் 1938 ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகக் கல்விக் குழுவில் உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டார். 1941 ஆம் ஆண்டு முதல் சிறப்பு ஆட்சியாளர் குழுவில்(Syndicate) தேர்ந்தெடுக்கப்பட்டு இடம் பெற்றார்.

1942 ஆம் ஆண்டு முதல் 1945 ஆம் ஆண்டு வரையில் சென்னை அரசினர் பள்ளி இறுதி வகுப்புக் குழுவில் உறுப்பினராய் இருந்தபோது செய்த தொண்டுகள் பலவாகும்.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் சற்று ஏறத்தாழ அரை நூற்றாண்டுக்கு முன்பு தனித் தமிழ் பயின்றோர் 'வித்துவான்' என்ற பட்டம் பெற இயலாது. மாறாக, அவர்கள் தமிழ்ப் பாட நூல்களோடு வடமொழிகளையும் படித்துத் தேர்ச்சி பெற்ற பிறகுதான் வித்துவான் பட்டம் கிடைக்கும்.

இதையறிந்த அ.சிதம்பரநாதர் மற்றும் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தார் புரட்சியில் ஈடுபட்டனர். சென்னைப் பல்கலைக்கழகம், இவர்களின் புரட்சி - கிளர்ச்சி ஆகியவற்றின் பயனாய், தனித்தமிழ் பயின்றோர்க்கு வித்துவான் பட்டம் கொடுக்கத்தொடங்கினர்.

சென்னைப் பல்கலைக் கழகத்தின் இச்செயலை அறிந்த அண்ணாமலைப் பல்கலைக்கழகமும், 1930 முதல் தனித்தமிழ் வித்துவான் வகுப்பைத் தொடங்கியது.

'வித்' என்ற வடமொழிச் சொல்லுக்கு 'அறிவாயாக' (to Know) என்பது பொருள். அதாவது வித்துவான் என்பதற்குப் 'புலமை பெற்றவன்' என்பது பொருள்.

1942-இல் அ. சிதம்பரநாதரும், கரந்தைத் தமிழ்ச் சங்கச் செயலாளர் ஐ குமாரசாமிப் பிள்ளையும் இப்பட்டத்தைத் தமிழ்ப் பெயரிலேயே வழங்க வேண்டுமென்று கிளர்ச்சி செய்தனர். இதற்கு எதிர்ப்புகள் மிகையாக இருந்ததால், தேர்தலுக்கு உட்படுத்தினார்கள்.

பெரும்பாலான வாக்குகளினால் புலவர் என்பதையே ஆட்சியாளர் குழு (Senate) ஒப்புக்கொள்ளுமாறு செய்தது மிகவும் வியப்பிற்குரியதாம்

திரு.வி எஸ் சீனிவாச சாஸ்திரியார் துணை வேந்தராக இருந்தபோது, அதாவது 1935 முதல் 1940 வரையில், பல்கலைக் கழகத்திலுள்ள எல்லாப் பதவிகளையும், எல்லா உறுப்பினர் இடங்களையும் பார்ப்பனர்களே பெற்று வந்தனர். அப்போது ஆட்சிக்குழு உறுப்பினர்களாக இருந்த அ சிதம்பரநாதரும், ஐ.குமாரசாமிப் பிள்ளையும், பல்கலைக்கழகத்தின் எல்லாத் துறைகளிலும் பல்வேறு சாதியினரும் இடம்பெற வேண்டும் எனப் போராடினர். அது தீர்மானமாக வந்து, பேரெதிப்புக் கிடையே-அதாவது ஒரு வாக்கு அதிகம் பெற்று நிறைவேறியது.

அடுத்த தொண்டு, கண்களில் ஒற்றிக்கொள்ள வேண்டிய ஒன்று

சர். கே வி ரெட்டி அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தராக விளங்கியபோது (1940-42) ஓர் ஆணை பிறப்பித்தார். அதன்படி பல்கலைக் கழகத்தில் மாணவராகச் சேர்த்துக் கொள்ளப்படுவோரில் நூற்றுக்கு ஐம்பது பேர் பார்ப்பனர்களாகவும் ஏனைய ஐம்பது பேர் பிற சாதியினராகவும் இருக்க வேண்டும் ஏனென்றால் இதற்கு முன் மாணவர்களில் எண்பது பேர் பார்ப்பனர்களாகவே இருந்தனர். அக்காலத்தில் ஏனையோர் அறிவியல் துறையில நுழையாவண்ணம் அம்மாணவர்கள் ஆக்கிரமித்திருந்தனர் அப்போது ஆட்சியாளர் குழுவில் உறுப்பினராகிய - சிதம்பரம் நகர வழக்கறிஞர் ஒருவர், அண்ணாமலைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் 5 வது பிரிவின்படி இந்த ஆணை தவறு என வழக்காடினார் அதாவது, மாணவர்களைச் சேர்ப்பதில் சாதி அடிப்படை கிடையாது என்பது அவர் வாதம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் கடந்த கால நடை முறையே இதற்குச் சான்றாகும்.

இதை எதிர்த்து நீதிபதிக்கு உதவியாக, அ. சிதம்பரநாதர் அவர்கள், மற்றும் பொருளியல் துறைப் பேராசிரியராக இருந்த டாக்டர்.பி வி. நாராயணசாமி அவர்களும் கடந்த 1935-40இல் (சீனிவாச சாஸ்திரி துணைவேந்தராக இருந்தபோது) சுமார் ஐந்து ஆண்டுகளில் சேர்க்கப்பட்ட மாணவர் விகிதங்கள் அடங்கிய புள்ளி விவரங்களைச் சேகரித்தனர் மேலும் பொருத்தமான காரணங்களையும் திரட்டித் தந்து, இத்திட்டத்தை நிறைவேற்றிய திரு.கே.வி ரெட்டியவர்களுக்குப் பக்கத்துணையாது இருந்தனர்.

அ.சிதம்பரநாதர் அவர்கள் ஒருக்கால் பள்ளி இறுதித் தேர்வுக் குழுவின் உறுப்பினராய் விளங்கினார். அப்போது பொதுக் கல்வித் துறை இயக்குநராக இருந்தவர் மெவரல் ஸ்டேதம் என்ற ஆங்கிலேயர். இதற்கு முன் அவர் சென்னை மாநிலக் கல்லூரியின் முதல்வராக இருந்தவர். அப்போது அங்கு ஆங்கிலத் துறைப் பேராசிரியராக இருந்தவர்தாம், பின்பு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் முதல் துணைவேந்தராக நியமனம் பெற்ற திரு. எஸ்.இ. ரங்கநாதன் அவர்கள். அப்போது ஆங்கிலேயர் ஆட்சி நடைபெற்று வந்ததால் ஆங்கிலத்திற்கு மதிப்பளிக்கப்பட்டு வந்தது ஒன்றும் வியப்பில்லை

பள்ளியிறுதித் தேர்வுக்கு ஆங்கிலத்தில் இரு வினாத்தாள்களும், மொத்தம் 200 மதிப்பெண்களுமாக இருந்தன. ஆனால் அத்தேர்வுக்குத் தமிழில் ஒரே வினாத்தாளும் 100 மதிப்பெண்களுமாகவே இருந்தன. இதைக்கண்ட அ.சிதம்பரநாதர் அவர்கள் ஆங்கிலத்தில் உள்ளதுபோல் வினாத்தாள்கள் இரண்டு இருக்க வேண்டும், அதே போல் 200

மதிப்பெண்கள் வைக்கப்பட வேண்டும் என்று கூறினார். இதைக் கேட்ட அந்த ஆங்கிலேயர்'' எல்லாம் ஒன்றுதானே ஆங்கிலத்தில் 200 மதிப்பெண்களைக் கடைசியில் 100 க்குக் கணக்கிட்டுத்தானே எழுதுகிறோம்' என்றார்.

அப்படியென்றால் ஆங்கிலத்திலும் தமிழைப் போல் ஒரே வினாத்தாளாக அமைக்கலாமே. அதற்கு இரு வினாத்தாள்கள் குறிக்கத் தேவையில்லையே எனவும், 'தாங்கள் தற்போது அதைச் செய்தால் நாகரிகமாகச் செய்தவர்' (Graceful) ஆவீர். அல்லாவிடல் நாங்களே இன்னும் சிறிது காலத்தில் அதைச் செய்து விடுவோம் எனவும், அ.சிதம்பரநாதர் இயக்குநரிடம் வாதாடினார் இதைக் கேட்ட இயக்குநர் இத்தீர்மானத்தை வாக்கெடுப்பிற்கு உட்படுத்தாமலேயே முடிவு செய்தார் எனின் இவரது தொண்டைப் புகழச் சொற்கள் உண்டோ! அ.சிதம்பரநாதரின் தமிழ்ப் பணிகளின் பட்டியலே சிறந்த ஆதாரச் சான்றாக விளங்குகிறது.

அ சிதமபரநாதர் அவர்கள் சென்னை, ஆந்திரா, மைசூர், திருவிதாங்கூர் ஆகிய பல்கலைக் கழகங்களில் பாட நூல் குழு உறுப்பினராகப் (Member of Board of Studies of Madras, Andhra, Mysore and Travancore Universities) பணியாற்றியுள்ளார்.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் பாட நூல் குழு உறுப்பினராக இருந்தபோது இடைநிலை (Inter) வகுப்பு கலை வகுப்பு (B.A) முதலிய வகுப்புக்களுக்குப் பாடமாக வைக்கப்பட்ட புத்தகங்கள் சில வேளைகளில் மணிப்பிரவாள நடையில் இருந்தது. இத்தகைய புத்தகங்களைப் பாட நூல்களாக வைக்கக்கூடாது என்று கூறினார். அதையும் மீறி அவற்றைப் பாட நூல்களாக வைத்தால் நாம் அக்குழுவிலிருந்தே விலகி விடுவதாகக் கூறினார் அ.சிதம்பரநாதர்.

அ.சிதம்பரநாதர் கருத்தைத் தீர்மானமாக்கி வாக்கெடுப்பிற்கு விடாமலேயே ஒப்புக் கொண்டார் அக்குழுவின் தலைவர்

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பதுகளிலும், ஐம்பதுகளிலும் பள்ளிக் கல்வி மற்றும் உயர்கல்வித் துறைகளில் இருந்த குறைபாடுகளும், ஒரு சாதியினரின் ஆக்கிரமிப்பும், வெள்ளையர்களின் ஆதிக்கமும் கொஞ்சமா?, நஞ்சமா?

கல்லூரிகளில் எம் இ.எஸ். (Madras Educational Service) நிலையினர் அல்லது சென்னைக் கல்விப் பணி நிலையினர் எனவும், எஸ்.இ.எஸ் (Subordinate Educational Service) நிலையினர் அதாவது துணைக் கல்விப் பணி நிலையினர் எனவும் பிரிக்கப் பட்டிருந்தது. முன்னையோர் சென்னை அரசு (அப்போது) வெளியிட்ட (Gazatte)

அரசிதழிலும் பதிவானவர்கள் அவர்கள் ரூபாய் 250 முதல் 700 வரையுள்ள ஊதியம் பெறுபவர் பின்னையோர் ரூபாய் 125 முதல் 250 வரையுள்ள ஊதியம் பெறுபவர்.

ஒவ்வொரு துறையிலும் உள்ள விரிவுரையாளர்கள் அத்துறையில் உள்ள எம்.இ.எஸ். நிலையினரின் கீழ் வேலை செய்வோர் ஆவார் அந்நிலையில் (எம்.இ எஸ் ) ஒரு தமிழாசிரியர் கூட இல்லை என்பது குறிப்பிடத்தக்கது ஆனால் வடமொழிக்கு அதிக மதிப்புக் கொடுத்ததால் அனைத்துக் கல்லூரிகளிலும் எம் இ எஸ். நிலையில் வடமொழி ஆசிரியர் இருந்தனர். எனவே, தமிழ்மொழி ஆசிரியர்கள், வடமொழி ஆசிரியரின் கீழ் பணியாற்றும் நிலை நீடித்தது

எம்.இ.எஸ். நிலையில் ஒரு தமிழாசிரியர் கூடக் கல்லூரியில் நியமிக்கப்படாதது பெரிய குறை என்றும், அ.சிதம்பரநாதர் வற்புறுத்தி வந்தார். இதன் விளைவாகச் சென்னை மாகாணக் கல்லூரி (மாநிலக் கல்லூரி) மேரி ராணி கல்லூரி, வெலிங்டன் பயிற்சிக் கல்லூரி, கும்பகோணம் அரசுக் கல்லூரி, கோவை அரசுக் கல்லூரி ஆகியவற்றில் எம்,இ.எஸ். என்ற நிலைக்கு (சென்னைக் கல்விப பணி ரூபாய் 250 முதல் 700 வரையுள்ள ஊதிய விகிதத்தில்) உரியவர்களாகத் தமிழாசிரியர்கள் நியமனம் பெற்றனர்.

தமிழகத்தில் தமிழுக்கும் தமிழாசிரியருக்கும் உரிமை பெறவே இவ்வளவு பாடுபட வேண்டியிருக்கிறதென்றால் இன்னும் நாம் மொழியுணர்ச்சியில் எவ்வளவு பின் தங்கியுள்ளோம் என எண்ணிப்பார்த்து நடந்துகொள்ள வேண்டியதாகிறது. எவ்வாறெனினும் காந்தியக் கொள்கை அடிப்படையில் தாய்மொழிக்கு முதலிடம் தந்த காந்தியத் தொண்டர் தி சு.அவினாசிலிங்கம் செட்டியார் போற்றுதலுக் *குரியவரன்றோ!* இந்நிலைக்குத் தூண்டுகோலாகவும், நெம்புகோலாகவும் விளங்கிய அ. சிதம்பரநாதனாருக்கு எவ்வகையில் நன்றி தெரிவிப்பது'

இதற்கான ஆணையை 1948 இல் அப்போதைய கல்வி அமைச்சர் மாண்புமிகு தி.சு அவினாசிலிங்கம் செட்டியார் பிறப்பித்தார் இது ஆட்சியாளர் கொள்கையேயாகும்

1948 டிசம்பர் திங்களில் சென்னையில் கூடிய இந்தியப் பல்கலைக் கழகங்களின் பிரதிநிதிகள் கூட்டத்தில் அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பிரதிநிதியாகப் பங்குகொண்டு பல்கலைக் கழகச் சீர்திருத்தம் பற்றி உரையாற்றியுள்ளமை குறிக்கத்தக்கது

1949 இல் இந்திய அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்ட சர்.எஸ் இராதாகிருஷ்ணன் கல்விக் குழு முன்னிலையில் அ.சிதம்பரநாதர் *அவர்கள் அளித்த கருத்தின் சுருக்கம் வருமாறு;-*

இந்தியப் பல்கலைக் கழகங்களில் பாடம் சொல்ல வைக்கும் மொழி ஆங்கிலமாக இருக்கக் கூடாது என்றால், தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் அது தமிழாகத்தான் இருக்க வேண்டும் என்று கூறத்தயங்க மாட்டோம். தமிழ்மொழி பிற மொழிகளில் உள்ள எந்தக் கருத்தினையும் எடுத்து இயம்புவதற்குரிய செம்மை வாய்ந்த மொழி என்பதில் ஐய மில்லை தமிழ் மொழியைத் தமிழ்நாட்டுக் கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் கல்வி கற்பிக்கும் மொழியாக ஆக்குவதற்குத் தடையாக உள்ளவை அரசியல் பற்றிய காரணங்களேயன்றிப் பிற வழியாகப் பாடங்கள் கற்பிக்கப்பட வேண்டும் என்று ஒரு சாரார் கருதுகின்ற கருத்தினை வன்மையாக கண்டிக்கிறேன் தென்னாட்டைப் பொறுத்த வரையில், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில ஆங்கிலமும் இந்தியும் அந்திய மொழிகளே.

''நமக்குப் புரியாத அந்நிய மொழியாக ஆங்கிலம் இருப்பதால் அதன் வாயிலாகப் பாடங்கள் கற்பிக்கக் கூடாது என்பது கருத்தானால் அதைப் போலவே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் அந்நிய மொழியாக உள்ள இந்தி வாயிலாகப் பாடங்கள் தமிழ்நாட்டில் கற்பித்தல் எவ்வாறு பொருந்தும்? பல்கலைக்கழகங்களில் ஆங்கிலம் அல்லாத மொழியினால் பாடம் பயிற்றுவிக்க வேண்டுமென்றால், தமிழ்மொழி வாயிலாகவே கற்பிக்கப்படவேண்டும் என்பதை வற்புறுத்துவேன்''.

தமிழகப் பல்கலைக் கழகப் பாடமொழி பற்றித் தமிழர்களின் கருத்தாக வெளியிட்ட அ. சிதம்பரநாதர் அவர்கள், 'சாகித்ய அகாதெமி' எனும் இந்திய இலக்கியக் கழகத்திலும் உறுப்பினராக, நம்முன்னோரின் உயிர்ப்பான உரிமையை எடுத்துரைக்கத் தவறவில்லை.

புது தில்லியில் இந்திய அரசால் நிறுவப்பட்டிருக்கின்ற 'சாகித்திய அகாதெமி''யின் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் சார்பாளராக, அ.சிதம்பரநாதர் அவர்கள் 1953 முதல் இருந்தார். அனைத்திந்தியக் கலை, இலக்கியங்களுக்குப் பாதுகாப்பளித்து ஊக்குவது இக்கழகத்தின் நோக்க மாகும். முதன் முறையாக இக்கழகத்தின் கூட்டம் 1953 ஆம் ஆண்டில் புது தில்லியில் உள்ள இந்தியத் தலைமை அமைச்சர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் இல்லத்தில் கூடியது அவரே அந்நிறுவனத்திற்கும், கூட்டத்திற்கும் தலைவர். ஆண்டுக்கு ஒரு முறைதான் இக்கூட்டம் கூடும் இதில் பல்வேறு உட்குழுக்கள் அமைக்கப்பட்டன.

தென்னிந்தியர் மூவரும், வட இந்தியர் எண்மரும் ஆகப் பதினோரு பேர் ஒவ்வொரு குழுவிலுமிருந்தனர். அமைக்கப்பட்ட ஒவ்வொரு குழுவின் உறுப்பினர் பெயரும் படிக்கப் பெற்றது அ. சிதம்பரநாதர் பேசினார்;

நான் தென்னிந்தியா, வடஇந்தியா என்று பிரித்துச் சொல்ல விரும்பவில்லை. இருந்த போதிலும் அமைக்கபபட்ட குழுக்களில் தென்னிந்தியர்களுக்குச் சமமான சரியான பிரதிநிதித்துவம் கொடுககப்படவில்லை எனச் சான்று காட்டிப் பண்டித நேரு அவர்களே வியக்கும் வண்ணம் துணிவுடம் எடுத்துக் கூறிய - தென்னிந்தியாவின் உரிமைக்காகப் போராடிய தென்னாட்டவர் அன்று அ சிதம்பரனார் ஒருவரேயாவர்.

பண்டித நேருவும் அதைக் கேட்டு, " அப்படியிருக்குமானால் நாளை கவனித்து மாற்றலாம்" என்று பதிலளித்தார். அந்தக் கூட்டத்தில் மைசூர் பல்கலைக் கழகத்துணைவேந்தர் டாக்டர் பி.எல் கோபாலசாமி, இலட்சுமி காந்தம்(தெலுங்கு) இராமநுசநாயுடு ஆகியோரும் கலந்துகொண்டனர் அண்ணாமலைப் பல்கலைக்கழக நிகழ்ச்சித் தொகுப்புரையிலிருந்து இவற்றை அறிய முடிகிறது.

1954 இல் அண்ணாமலை நகரில் நடந்த அனைத்திந்திய எழுத்தாளர் மாநாட்டிற்குத் தலைமை வகிக்க பண்டித நேரு வந்திருந்த போது, 'சாகித்திய அகாதெமி'யில் டாக்டர் செட்டியார் அவர்கள் ஒருவர்தாம் தென்னிந்தியாவுக்காகத் துணிவாகப் பேசினார்" என்று வந்திருந்தோரிடம் அவர் குறிப்பிட்டார் எனில், அ.சிதம்பரநாதர் அவர்கள் உரிமைக்குக் குரல் கொடுத்த பான்மையை வேறு யார் கூறத் தேவை? அணணாமலைப் பல்கலைக் கழக நிகழ்ச்சித் தொகுப்பே இதற்கு ஆதாரமாகும்.

1955 இல் இந்திய நாடாளுமன்றத் தலைவர் திரு ஜி.வி மாவ்லங்கார், இந்திய மொழிகள் அனைத்திற்கும் தாய் வடமொழியே என்று பத்திரிக்கையில் வெளியிட்டிருந்ததை அ. சிதம்பரநாதர் அவர்களும், திரு. இலட்சுமி ரதன் பாரதி அவர்களும் மறுத்து வெற்றி கண்டனர்.

தமிழ், வடமொழியினின்று தோன்றியது என்ற கருத்துத் தவறானது.

அடிப்படையான கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு உரிய சொற்களையும் சொல்வேர்களையும் தமிழ்மொழிதானே நிரம்பப் பெற்றுள்ளது என்ற கருத்தைத் தமிழர்கள் நன்குணரத் "தமிழ்மொழியின் தனிமை" என்று 'தமிழ்நாடு' பொங்கல் சிறப்பிதழில் அ.சிதம்பரநாதர் எழுதியது குறிப்பிடத்தகுந்ததாகும்.

"தமிழ்மொழி வடமொழியிலிருந்து பிறந்தது என்பது தவறு" என்று ஒருவர் துணிந்து கூறினாலே போதும். இதை வற்புறுத்துவதற்குச் சிலர் கூசுகின்றனர். அது வருந்தத்தக்கது தமிழர் தம்முன் உயர்ந்த நிலையில் உள்ளோரும் பெரிய அலுவலாளர்களும் பெருஞ் செல்வர்களும் இக்கருத்தினை உள்ளத்தில் பதித்துக் கொண்டு தாமும் கூறுவதற்குத் தயங்காமல் வெளி வருவார்களானால் அதுவே தமிழ்நாட்டிற்கு அவர்கள்

செய்வதொரு சிறந்த கடமையாகும்'' என்று வருத்தந்தோன்றச் சிறப்பாக அவா அந்த இதழில் எழுதியுள்ளார்

எத்தனை தமிழர்கள் தத்தம் மனத்தில் இதைப் பதித்துக் கொண்டார்களோ!

அ சிதம்பரநாதர் அவர்கள், ஓர் இன்றியமையாத எழுத்திற்கு உச்சரிப்பு எளிமை கூட்ட நமக்கு வழிகாட்டியுள்ளார்.

1940-41 ஆம் ஆண்டில், நாகப்பட்டிணத்தில் தமிழ்ச்சங்க விழா ஒன்று நிகழ்ந்தது அவ்விழாவில் சொற்பொழிவாற்றிய அ.சிதம்பரநாதர் அவர்கள் தமிழ் எழுத்துக்களினால் எந்தச் சொற்களையும் எழுத முடியும் என்றும், ஆங்கிலத்தில்,'எப்' (F) என்ற சொல்வரும் இடங்களைத் தமிழில் எழுதும் போது உச்சரிப்புக் குறையாதிருக்க (ஃ) என்ற ஆய்த எழுத்தைச் சேர்த்து எழுதலாம் என்றும் கூறினார். (சான்றாக, கலிஃபோர்னியா (California) என்பது போன்ற சொற்டொர்கள்) அன்று முதல் தமிழகத்தில் இம்முறை பரவியது.

1946 இல் அண்ணாமலைப் பல்கலைகழகத் தமிழ் துறைத் தலைவராகப் பணியாற்றியதுடன், கீழை மொழிப்புல முதன்மையர் (Deen, Faculty of Oriental Languages) - எனும் பொறுப்பிலும் திறம்பட பணியாற்றினார். மேலும் மாணவர் இல்லப் பாதுகாவலராகவும் (Warden) பொறுப்பேற்றுத் தொண்டாற்றியுள்ளார் பல்கலைக்கழக ஆராய்ச்சி இதழ் (Journal) பதிப்பாசிரியர் குழுவிலும் அங்கம் வகித்து அரும்பணி ஆற்றியுள்ளார். அப்போதைய சென்னை அரசினரின் தமிழ் ஆலோசனைக் குழுவிற்குத் தலைமைதாங்கிப் பணியாற்றியுள்ளார் பொது ஆணைக் குழுவில் (Public Service Commission) தேர்வாளராகவும் தம் பங்களிப்பைத் தந்துள்ளார்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அ.சிதம்பரநாதர் தலைமையில் பணிபுரிந்து வந்தவர்களில் ஒருவர் கிறித்துவர் அவர் தம் உறவினர் ஒருவர் காலமாகிவிட்டார். அவருடைய சவப்பெட்டியைச் சிதம்பரம் மாதா கோயிலுக்கு எடுத்துச் செல்வதற்கு உரிய வாகனத்தைச் சத்த (வாடகை) வண்டிக்காரர் கொடுக்க முன்வரவில்லை. எவ்வளவு பணம் தந்தாலும் போவதில்லை என்ற உறுதியோடு அவர்கள் இருந்தனர்

அப்படி அவர்கள் வண்டியில் சவத்தை ஏற்றிச் சென்றால் வண்டியும், மாடும் துன்புறும் என்று அவர்கள் நம்பியதே காரணம்

இந்நிலையில் ஐயா அ சிதம்பரநாதர் அவர்களும், அம்மையார் பெரியநாயகி அவர்களும் தங்களிடமிருந்த மாட்டு வண்டியை அந்தக் கிறித்தவருக்குக் கொடுத்துதவினர் சவப்பெட்டியை ஏற்றிச் சென்ற வண்டியும் மாடும் பிறகு நன்றாகத்தானிருந்தன இப்பொழுது சத்த

வண்டிக்காரர்கள் இனிமேல் தாங்களே வண்டி கொடுக்கலாம் என்று பேசிக் கொண்டார்களாம்!

தக்க காலத்தில் ஓர் உதவியையும், ஒரு மூட நம்பிக்கை ஒழிப்பையும் அவர்கள் ஒரே சமயத்தில் செய்திருப்பதை நாம் ஆழ்ந்துபதித்துக் கொள்ளவேண்டும்

அ சிதம்பரநாதர் அவர்கள் தொட்ட பணிகள் எல்லாம் வெற்றிகளாகக் குவிந்தமைக்கு ஆட்சித் திறனும் அணுகுமுறையுமே காரணங்களாக இருந்திருப்பதைக் காணுகின்றோம்.

எதையும் கூர்ந்து நோக்கும் இயல்பு, பட்டறிவு ஆகியவையும் சேர்ந்துகொண்டால் பொன்மலர் நாற்றம் உடைத்தன்றோ!

அ சிதம்பரநாதர் அவர்களின் பார்வைக்கு வரும் கோப்பு (File) களில் உயிரோட்டமான பகுதிகளைப் படித்து,'சிக்கு' எடுத்து விரைந்து முடிவு காண்பது அவரது பழக்கமாக இருந்தது.

அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆட்சியாளர்களுக்கு இவர் அவ்வபபோது சீரிய அறிவுரைகளை நல்கி வந்திருக்கிறார் என்று எழுத்தாளர் 'சோமலே' குறிப்பிட்டிருப்பது ஈண்டு நோக்கத்தக்கது. அ சிதம்பரநாதரின் மணிவிழா மலரில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனை அப்பல்கலைக் கழகத் துணைவேந்தராக இருந்த பேராசிரியர் எம்.இரத்தினசாமி அவர்களும், சென்னைப் பல்கலைக் கழகத்துணை வேந்தராக இருந்த டாக்டர் ஏ.எல் முதலியார் அவர்களும், 1959-இல் சென்னை தாஷப்பிரகாஷ் விடுதியில் நடைபெற்ற விழா ஒன்றில் குறிப்பிட்டுப் பெரிதும் பாராட்டியுள்ளனர்.

இந்த இடத்தில் அ.சிதம்பரநாதர் அவர்களின் அண்ணன் திரு.அ. மகாலிங்கம் செட்டியார் அவர்கள் தமிழகத்தில் பெரிய அதிகாரியாக விளங்கிவிட்டுத் தென் கன்னடத்தின் சில மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியராக இருந்ததும் நினைவு கூரற்பாலது.

வாழ்நாள் முழுதும் தமிழ்த்தொண்டு, சமூகத்தொண்டு ஆகியவற்றில் தலைசிறந்து நின்றவர் அ சிதம்பரநாதர் அவர்கள் என்பதைக் குன்றேறிக் கூறலாம் அன்றோ!

# 3
# படைத்த நூல்கள்

அன்னைத் தமிழையும் ஆங்கிலத்தையும் கண்களாகப் பாவித்த அ சிதம்பரநாதர், தம் ஆங்கிலப் புலமையைத் தமிழ் மொழித் தொண்டின் உயர்வுக்கே பயன்படுத்தினார். அவர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் எம் ஏ பயின்று வந்தவேளையில், தமிழ்ப் பேரவைத் தலைவராகவும், ஆங்கிலப் பேரவைத் தலைவராகவும் ஒருசேர விளங்கிய திறனாளர் அன்றோ! தடைக்கற்களைப் படிக்கற்களாக மாற்றி முன்னேறுவதைப் போல், நம்மை இரு நூற்றைம்பது ஆண்டு காலம் அடிமைப்படுத்தி வைத்திருந்தவர்களின் மொழி என்றாலும் உலகின் பெரும்பான்மையோரால் பேசப்படுகின்ற மொழியாயிற்றே, நம் நோக்கம் தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்ய வேண்டிதுதானே!

அதனால், அந்த ஆங்கிலத்தையே கற்று அதன் மூலமே தமிழைப் பரப்புவதே அறிவுடைமை எனத் தேர்ந்து ஆங்கிலப்புலமையில் சிறந்து விளங்கினார் உயராய்வுப் பட்டமாம் பிஎச்.டி பட்டத்திற்கும் ஆங்கிலத்திலேயே ஆய்வுரை எழுதி - அதுவும் தமிழ்ச் செய்யுள் வரலாற்றிலக்கணத்தை ஆய்வு செய்து, நாம் விடுதலை பெறாத அந்த நாளிலேயே (1941) பட்டம் பெற்றார் எனில், அவர்களின் பேராற்றலை எந்தக்கோணத்தில் நின்று போற்றுவது! அப்போது ஆங்கிலத்தில்தான் ஆய்வேடு சமர்ப்பிகக வேண்டும் என்பது விதி என்பதையும் நாம் மறந்துவிடுவதற்கில்லை.

அத்தகைய அறிஞர் அ சிதம்பரநாதர் அவர்களின் படைப்புக்களைப் பற்றிச் சுருஙகிய அளவில் குறிப்பிடுவது இங்கு இயல்கிறது

### அ.சிதம்பரநாதரின் நூல்கள்

தெரிந்த அளவில் பட்டியலிட்டுப் பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளது. இதுவே முடிந்த முடிவல்ல இவ்வற்றிலும், கைக்குக் கிடைத்த அளவில் உள்ள நூல்களைக் கொண்டே அவர்தம் படைப்புக்கள் இங்கே எழுத்துருவம் பெற்றிருக்கின்றன

இவற்றைக் கண்ணுற்று, இந்நூலில் இடம்பெறாத அ சிதம்பரநாதரின் நூல்கள் சிலரிடம் அல்லது சில நூலகங்களில் இருக்கக்கூடும். அவற்றை அவர்கள் தயவுடன் இந்நூலாசிரியருக்கு நூலாகவோ தகவலாகவோ

நல்கினால் இந்நூல் அடுத்த வரும் பதிப்புகளில் செழுமைப்பட அவை பெருந்துணையாக இருக்கும் என்பதில் ஐயமில்லை

1930 ஆண்டு முதலே, அ.சிதம்பரநாதர் எழுத்துப் பணியில் ஈடுபட்டுள்ளார்.

'இந்திய சரித்திரமாலை' என்பதே அவர் எழுதிய முதல் நூல். இந்திய சரித்திரம் என்று மற்ற வரலாற்றாசிரியர்களைப் போல சோர்வுதரும் வகையில் தலைப்புத் தராமல் மாலை என்ற அழகான சொல்லைச் சேர்த்து இந்திய சரித்திர மாலை என்று 'கேட்டார்ப் பிணிக்கும்' வகையில் தலைப்பிட்டது அவரது 'எழுத்தாளத் தன்மை'யை உணர்த்தப் போதுமானதாகும் தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கான இந்நூல் தெலுங்கு மொழியிலும் மொழி பெயர்க்கப்பட்டிருப்பது அதன் ஆழத்தையும் அகலத்தையும் தேவையையும் உணர்த்தப் போதுமானதாகும்.

அடுத்த நூலின் பெயர் கட்டுரைத் தொகுபபான 'கட்டுரைக் கொத்து' என்பதாகும். மலர்க்கொத்தை நினைவூட்டும் இலக்கியக் கட்டுரைகள் இதில் அடங்கியுள்ளன. ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பத்து மூன்றில் இந்நூல் எழுந்துள்ளது.

அடுத்தது அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் டாக்டர் பட்டத்திற்காக ஆய்வு செய்தது 1943 இல் அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீடாக வந்துள்ளது. 'தமிழ் யாப்பு வரலாறு' எனும் ஆங்கில ஆய்வு நூல் (Advanced Studies in Tamil prosody) பதினோரு அத்தியாயங்களையும், 208 பக்கங்களும் கொண்டது. 'ராவ் சாகிப்' பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்களின் அணிந்துரையைப் பெற்றுப் பொலிகின்றது

இதற்கு அடுத்து அ. சிதம்பரநாதர் எழுதியதும் ஆங்கில நூல்தான் 'தமிழ்ச் செய்யுளியல் அறிமுகம் (An Introduction to Tamil Poetry) என்பது. இது வெளியான ஆண்டு அறியக்கூடவில்லை.

1944 இல் எழுதிய நூல்தான் ' உழைப்பால் உயர்ந்த ஒருவர்' என்பது நாடு, மொழி, இனம் கடந்து ஓர் உலகச் சான்றோரின் வரலாற்றை நந்தமிழ்ச் சிறார்களுக்காக எழுதப்பட்ட நூல் உயர் எண்ணங்கள் மலரும் சோலையாகப் படிப்போர் உள்ளம் மாற வேண்டும் என்பதற்காக எழுதினார் இதன் வேறு பெயர் 'புக்கர் - தி - வாஷிங்குடன்' என்பதாம். பள்ளிப் பாட நூலாக இது வைக்கப்பெற்ற சிறப்புடையதாகும்

1945 இல் அ சிதம்பரநாதர் இளைஞர்களுக்காக வரைந்த இன்னொரு நூலே 'பெரியார் மன்றோ' இதுவும், உலகச் சான்றோர்களை தமிழர்களுக்கு அறிமுகப்படுத்தி வைக்கும் முகத்தான் எழுந்ததேயாகும்.

1951 இல் எழுதிய நூல் 'முன்பனிக்காலம்'. நூற்று எண்பது பக்கங்களில் பழனியப்பா பிரதர்ஸ் நிறுவனம் வெளியிட்ட நூல்.

இந்நூலில் உள்ள முன்பணிக் காலம், மகளிர் பந்தாட்டம், பாரதியார் பாட்டு, காணப்படாதது கண்டால், ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, நாட்டுப் பாடல்கள், பெருங்கதை, பழந்தமிழ்ப் புலவர்கள் சிறப்பியல்புகள், மரபும் இலக்கிய வளர்ச்சியும், நாடகத் தமிழ், மொழிப் பற்று, நீதி நூல்களில் இலக்கிய நயம், புலவர் மகளிர் சிலர், புறநானூறும் கலைகளும், நாடும் நகரமும் என்ற பதினைந்து கட்டுரைகளைக் கொண்டிலங்குகிறது.

இந்நூல் முழுமையும் பயின்றால் சங்க இலக்கியத்திலிருந்து தற்கால இலக்கியம் வரை உள்ள துறைகள் அனைத்தும் அளாவி வரும் பாங்கினை உய்த்துணர முடியும்

';பனிப்படு பைதல் விதலைப் பருவத்து' என்னும், நல்லந்து வனாரின் பரிபாடல் அடியைக் (விதலைப் பருவம் என்றால் நடுக்கத்தைச் செய்யும் காலம் என்பது பொருள்) கட்டுரைத் தலைப்பிற்கு ஏற்றவண்ணம் அமைந்திருப்பது நோக்கத்தக்கது. மலரும் பூக்கள், பழுக்கும் காய்கள், மக்களுக்கு உண்டாகும் மெய்ப்பாடுகள், உண்ண, உடுக்க, பருக விழையும் பொருள்கள், அக்கால நீராடல், நீராடலில் தோன்றும் இறைவனின் நினைவுகள் இவ்வாறு அவ்வளவையும் அக்கட்டுரையில் கொண்டுவந்துள்ளார்.

தமிழர் வரலாற்றுச் சான்றுகள் எனத்தகும் புறநானூற்றில் பயின்றுவந்த கலைகளை ஆராய்ந்து தெளிவுபடுத்தியமை புலனாகிறது.

புறநானூற்றில் இசைக்கலை உண்டு. பேய்களைத் தடுக்கக் 'காஞ்சிப் பண்ணைப் பாடுவோம்' என்று யாழ், குழல் ஆகியவற்றைத் தலைவியும் தோழியும் இயக்குவது குறிக்கப்பட்டுள்ளது

புலவர் பொத்தியார், கோப்பெருஞ்சோழன், ஆடற்கலையையும் பாடற் கலையையும் போற்றினான் என்பதை,

> ''பாடுநர்க் கீந்த பல்புகழன்னே
> ஆடுநர்க் கீந்த பேரன்பினனே''

என்பதிலிருந்து பாடற்கலை, ஆடற்கலை இருந்ததையும்,

ஓவத்தன்ன இடனுடை வரைப்பு' (ஓவியம் போல் வீடு) என்பதிலிருந்து ஓவியக் கலை இருந்தது என்பதையும், மேலும் படைக்கலப் பயிற்சிக்கலை, போர்க்கலை, மற்போர், கோள்நூல், அறநூல், சொல்வன்மை (மதுரபாடணம்) ஆகிய கலைகளும் இருந்தன என்பதைப் புறநானூறு பளிச்செக் காட்டுவதை, நூலாசிரியர் படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

இவ்வாறே பிற கட்டுரைகளும் திகழ்கின்றன. இதனாலேதான் இந்திய அரசின் முன்னாள் நிதியமைச்சரும், இந்திய நாடாளுமன்ற முன்னாள் தலைவருமான டாக்டர் ரா. க. சண்முகம் செட்டியார் அவர்கள் தன் அணிந்துரையில், ''இந்தக் கட்டுரைத் தொகுதியில் டாக்டர் சிதம்பரநாதன் செட்டியார் அவர்கள் ஒரு நல்ல இலக்கிய விருந்தை நமக்குக் கொடுத்திருக்கின்றார்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

1954 இல் எழுதப்பட்ட நூல் 'சிறுகதையும் அதன் வளர்ச்சியும்' என்பது சிறந்த சிறுகதை இலக்கண விளக்கமாகவும், அவைகளின் எதிர் கால வளர்ச்சிக்குரிய கருத்துக் கருவூலமாகவும் கொள்ளத்தகும்.

1956 இல் எழுதப்பட்ட நூல் தமிழோசை என்பது நூற்தலைப்பே அது மொழியினை உணர்த்தும் தகைமைத்து என்பதைப் பறைசாற்றும் இவரிடம் மொழியியல் கேட்க அந்தக்கால மாணவர்கள் பேரார்வத்துடன் இருந்தார்கள்.

தமிழ் இலக்கியக் கட்டுரைகளைக் கொண்டிலங்கும் 'தமிழ்காட்டும உலகு' என்பதாகும் இது 1957 இல் வெளியிடப் பெற்றது. பசும்புல்லின் நுனியில் இருக்கும் பனித்துளி எட்ட முடியாத உயரத்தில் இருக்கும் சூரியனையே பிரதிபலிப்பது போல், தமிழின் வழி உலகையே காணலாம் என்பதன் அடிப்டையில் எழுதப்பட்டதாகும் இந்நூல்.

வீட்டுத் திருமகள் என்ற அழகிய பெயரைக் கொண்டிருக்கும் இந்நூலில் மொழிஇயல் கட்டுரைகளும் இலக்கிய விளக்கக் கட்டுரைகளும் உண்டு.

முந்நூற்றுப் பன்னிரண்டு பக்கங்களைக் கொண்ட ''சிறுகதைக் களஞ்சியம் - தொகுதி ஒன்று '' என்று சாகித்ய அகாதெமியாரால் வெளியிடப்பெற்ற நூல், அதன் தொகுப்பாசிரியராகப் பணியாற்றியவர் அ.சிதம்பரநாதர் அவர்கள்.

சி. இராசகோபாலாச்சாரியார்(ராஜாஜி) எழுதிய அன்னையும் பிதாவும், 'கல்கி' யின் கேதாரியின் தாயார், புதுமைப்பித்தனின் கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும் ,கு ப ராஜகோபாலனின் விடியுமா?, அகிலனின் பூச்சாண்டி, ஜீவாவின் வேதாந்தகேசரி, மாயாவியின் பனித்திரை, பி.எஸ் ராமையாவின் நக்ஷத்திரக் குழந்தைகள், தேவனின் சுந்தரம்மாவின் ஆவி, த.நா. குமாரசாமியின் ஸ்ரீசைலம், சோமுவின் உதயகுமாரி, கி வா ஜகந்நாதனின் மிட்டாய்க்காரன், ரா.கி.ரங்கராஜனின் கன்னி, தி.ஜ.ரங்கநாதனின் நொண்டிக்கிளி சுகியின் துறவி, லா.ச.ராமாமிர்தத்தின் ஜனனி, ந பிச்சமூர்த்தியின் விஜயதசமி, ராஜம் கிருஷ்ணனின் திங்கட்கிழமை, தி.ஜானகிராமனின் கோபுரவிளக்கு, துறைவனின் கல்லின் கருணை என்னும் இருபது பொறுக்குமணிக் கதைகளின் தொகுப்பு.

இத்தொகுப்புச் செய்து, இதற்குப் பொருள்பொதிந்த ஆராய்ச்சி முன்னுரையை 1957லேயே எழுதிவிட்டார் அ.சிதம்பரநாதர் அவர்கள். ஆனால் அது நூலாக அச்சுவடிவம் பெற்றது 1959இல் தான்.

சிறுகதையின் இலக்கணத்தை எட்கார் ஆலன்போ, ஹென்றி ஹட்சன், ஆங்கில அறிஞர் பேரிபெயின் ஆகியோர் வழிநின்று எடுத்துக் கூறியுள்ளார். கவிஞர் ரவீந்திரநாத் தாகூர் எழுதிய முந்நூறு பக்கம் கொண்ட 'குமுதினி' என்பவை சிறுகதை(!)தான் என்று வாதிப்போரும் உண்டு என்றும், 'மெரிடித்' என்பார் எழுதிய 'குளோவின் கதை' என்பது சிறுகதையா இல்லையா என்று இன்னும் ஆய்வு நடந்து வருகிறது என்றும் அறிந்து நாம் அதிசயிக்கிறோம்

சிறுகதை ஒவ்வொன்றிலும் ஒரெ ஒரு நிகழ்ச்சி போதும் என்றும், சிறுகதைகளில் ஒரே நோக்கமும், ஒரே விளைவும்தான் எதிர்பார்க்கப் படுகிறது என்றும், முதற் பத்தியைப் பார்த்தவுடன் கதையின் நோக்கம் புலப்பட வேண்டும் என்றும், குறிப்பிட்டுள்ளார், அ.சித்ம்பரநாதர்.

திருடினவரோ, விபச்சாரம் செய்தவரோ குற்றவாளி இல்லை. அவர்களை அந்த நிலைக்கு ஆளாக்கியிருக்கும் சமுதாயமே குற்றவாளி என்று 'யார் குற்றவாளி?' எனும் தலைப்பில் உள்ள அறிஞர் அண்ணா அவர்களின் 'குற்றவாளி யார்?' என்ற கதையும், ஜீவா அவர்களின் 'கொலுபொம்மை' என்ற கதையையும் காட்டும். அ.சிதம்பரநாதர், சிலவேளைகளில் பழங்கதைகள் புதுமெருகோடு சிறுகதையாகத் தோன்றுதல் உண்டு, அவ்வகையில் வெளிவந்தவையாக கு.ப.இராச கோபாலன் அவர்களின் ''துரோகமா'' என்றகதையையும், கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் 'இராயசம் வெங்கண்ணா' என்ற கதையையும் எடுத்துக் காட்டியுள்ளார்.

இவ்வாறு கதைகளைப் படிக்கப் புகுமுன் சிறுகதை பற்றிய அனைத்துத் தகவல்களையும் கற்பிக்கின்றார் தொகுப்பாளர். ஆனால், 'சிறுகதைக் களஞ்சியம் தொகுதி இரண்டு' வெளிவந்ததா என்று அறிய இயலவில்லை

**ஆங்கிலம்-தமிழ் அகராதி**
(English-Tamil Dictionary)

இந்நூல் 1965-இல் முழுமை பெற்ற ஒரே நூலாக வெளியிடப் பெற்றது.

அ.சிதம்பரநாதர் அவர்கள் எழுதிய பிற தமிழ், ஆங்கில நூல்கள் எல்லாம் இலக்கிய ஆர்வலர்களுக்கும், அறிஞர் பெருமக்களுக்கும் சுவையும் பயனும் நல்குவன. ஆனால், இந்நூல்,அறிஞர், ஆராய்ச்சியாளர்

போன்றோர்கட்கு மட்டும் அல்லாமல், அனைவருக்கும், எல்லா நாட்களிலும், எல்லா வகையிலும் பயன்தரத்தக்க நூலாகும. சுமார் 1224 பக்கங்களில் வெளிவந்து ஒளி நல்கும் நூல் இது.

பதினைந்து அறிஞர்கள் அடங்கிய தகைமை சான்றகுழு. அக்குழுவின் சாரதியாகப் பொறுப்பேற்றுக் குறிப்பிட்ட காலத்துக்குள் (Time bound)-முடித்து சாதனை செய்தவர்தாம் நம் .சிதம்பரநாதர் அவர்கள்.

இந்நூலின் இன்னொரு சிறப்பு, இதை எவ்வாறு பயன்படுத்தலாம் என்று பதினான்கு ஆலோசனைகள் வேறு உள்ளன பழம் நழுவிப் பாலில் விழுந்தது போன்ற பயன் இது இதன் மூன்று தொகுதிகளும் தனித்தனியாக முறையே 1963, 1964, 1965 ஆகிய ஆண்டுகளில் வெளியிடப்புட்டு, பிறகு ஒரே தொகுதியாக வெளியிடப்பட்டது.

இதன் முதல் தொகுதி வெளியீட்டு விழா 1.4 1963இல் சென்னைப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்றது. அப்போதைய கல்வி அமைச்சர் எம் பக்தவத்சலம் அவர்கள் வெளியிட்டு உரையாற்றினார். அவர் தமது உரையில் 'இப்பணி ஒரு கடினமான பணி (Arduous task) என்று குறிப்பிட்டு, தலைமைப் பதிப்பாசிரியர் அ.சிதம்பரநாதா அவர்களை வெகுவாகப் பாராட்டினார். 2.4 1963 அன்று வெளிவந்த தமிழ்-ஆங்கிலத் தினசரிகள் எல்லாம் இதற்கு முதன்மை தந்து வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் இதை 'செட்டியார் டிக்ஸ்னரி' என்றே அழைத்து வருகிறார்கள்.

இவ்விழாவில் நன்றியுரையாற்றிய அ.சிதம்பரநாதர் அவர்கள் ஆக்ஸ்ஃபோர்டு அகராதியை (Oxford Concise Dictionary) முன் மாதிரியாகக் கொண்டு இந்நூல் தயாரிக்கப்பட்டது என்று கூறினார்.

இந்தச் சாதனை நிகழ்த்திய அ.சிதம்பரநாதரை நினைக்கும்போது,

*"பற்பல நாட்டின் பாவலரிடையில்*
*பண்புடைச் சிதம்பர நாதனின் குரலே*
*அற்புத முரசமாய் அமைந்ததை எண்ணி*
*அகத்திடை இன்ப மழையினைக் கண்டோம்*
*சொற்புலவோர் தம் தோள் விழ மலரை*
*தூயவன் காலில் சூட்டிடவிழைவர்!*
*விற்பனன் தமிழின் பெருமையைக் காத்தான்*
*விழிவழி வாழ்த்தி வரவேற்கின்றோம்!"*

என்ற கவியரசு கண்ணதாசன் அவர்களின் பாடல் வரிகளே நம் நினைவில் மின்னுகின்றன.

1969இல் சிதம்பரநாதர் அவர்கள் அமரரான பின்பு வெளிவந்த நூல்தான் 'இளங்கோவின் இன்கவி' மதுரையில் உள்ள நாவலர் புத்தக நிலையத்தார் இதை நீர் மல்கும் கண்ணீரோடு வெளியிட்டனர் காரணம்,

''இவர், தாம் இவ்வுலக வாழ்வினை நீத்தற்கு'-ஒரு சில நாட்களுக்கு முன்னர் இந்நூலை எங்கள்பால் தந்து, மறைந்தார்! மறைந்த அன்னார் திருவடிகட்கே இந்நூலினைக் காணிக்கையாகப் படைக்கின்றோம்'' என்ற கூற்று இதை மெய்ப்படுத்தும்.

எதுகை, மோனைகளுக்காக நூலாசிரியர் இப்பெயரினைச் சூட்டவில்லை. மொழிஇயலையும் சிலப்பதிகாரத்தையும் பாடம்கேட்க இவர்பால் மாணவர்கள் பழுமரம் தேடிய பறவைகளாய்க் குழுமுவர் என்ற கருத்து அக்கால மாணவச் சான்றோர்களிடம் நிலவியது, உண்மை

காரணம் சிலம்பை உணர்ந்து, உணர்ந்து, அதில் தோய்ந்து தோய்ந்து நின்றவர் அ சிதம்பரநாதர் என்பதை இந்நூல் தெற்றெனக் காட்டும்.

இளங்கோவின் இன்கவி, பத்தினிக் கடவுள், கண்ணகி மதிநலன், சிலம்பின் வென்ற சேயிழை, தென்னவன் மகள், மாதவியின் கானற்பாணி, கோவலன் கலையார்வலர், சிலப்பதிகாரமும் கலையும், சிலம்பிற்பரதவர், சிலப்பதி காரம்-முன்னும் பின்னும், கவியின்பம், நக்கீரர் கவித்திறன், அரசாட்சி, தன் குற்றமும் பிறர் குற்றமும் என்றவாறு பதினான்கு கட்டுரைகள் இதில் அணிவகுக்கின்றன.

இத்தொகுப்பில் உள்ள முதல் பத்துக் கட்டுரைகளும், சிலம்பின் பிழிவுகள், அடுத்துவரும் 'கவியின்பம்' என்னும் கட்டுரை, பள்ளிகளில் மாணவர்களுக்கு செய்யுளை எவ்வாறு கற்பிக்க வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளார். பதவுரை, பொழிப்புரைசொல்வது மட்டும் ஆசிரியர் கடன் அல்ல; கவிஞனின் உணர்ச்சியை எடுத்து அப்படியே மாணவனுக்கு ஏற்றும் வண்ணம் கற்பிக்க வேண்டும் என்ற 'ஜார்ஜ் சாம்சன்' என்பார் கருத்துக்கேற்ப கற்பிக்க வேண்டும் என்று எடுத்துக் காட்டியுள்ளார்.

'நக்கீரர் கவித்திறன்' என்ற மற்றொரு கட்டுரை நக்கீரரின் கவிதை அழகைப் படம் பிடிக்கிறது.

'அரசாட்சி' என்ற பிறிதொரு கட்டுரையில் திருவள்ளுவர் அரசருக்குக் கூறும் அறிவுரைகள் தொகுக்கப்பட்டுள்ளன.

'தன் குற்றமும் பிறர் குற்றமும்' என்ற இறுதிக் கட்டுரையில், ''சமன் சீர்'' எந்த அளவுக்குச் சிறப்பாக ஒருவரிடம் வேண்டற்பாலது என்பதைக் கூறுகிறது 128 பக்கங்களில் இந்நூல் இலங்குகின்றது.

இதற்கு அடுத்து குறிப்பிடத்தக்கதொரு தொகுப்பு நூல் 'செங்கோல் வேந்தர்' என்பது பதினைந்து கட்டுரைகள் அடங்கியது-பேராசிரியர் புளோரம்மாள் அவர்களும், பேராசிரியர் இரபிசிங் அவர்களும், தம் ஆசிரியர் அவர்களுக்குச் செய்த நன்றிக் காணிக்கையாக இது வெளியிடப்பெற்றது.

அ. சிதம்பரநாதர் அவர்களின் இன்னொரு தலையாய மாணவரும் நண்பருமாகத் திகழ்ந்த பேராசிரியர் டாக்டர் கா.மீனாட்சிசுந்தரனார் அவர்கள் இந்நூலிற்கு நூன்முகம் வழங்கியிருக்கிறார்கள் நூன்முகம் வழங்குவதன் மூலம் மீண்டும் தம் ஆசிரியரை அவர் அஞ்சலித்துள்ளார் எனின் தம் ஆசிரியர் பால் அவர் கொண்டுள்ள பக்திதான் என்னே!

118 பக்கங்கள் கொண்ட இந்நூலில் செங்கோல் வேந்தர், குறுந்தொகை, நக்கீரர் கவித்திறன், தமிழ் இலக்கிய மகவு, கம்பன் காட்டும் உளப்பாங்கு, இராமலிங்க அடிகளும் ஒருமைப்பாடும், நிலைகுலையா மலை, தாகூரும் தமிழ் இலக்கியங்களும், அழகின் சிரிப்பு, வையாபுரிப் பள்ளு, சிறுகதை, மொழிக்கலை, சொல்ஆக்கம், ஆங்கில அகராதிகளில் தமிழ்ச் சொற்கள், பழமொழிகள் ஆகியன அடக்கம்.

முதல் கட்டுரை, குடியாட்சியாக இருந்தாலும் முடியாட்சியாக இருந்தாலும் ஆட்சித் தலைமையில் உள்ளவர்களுக்கு இருக்க வேண்டிய தகுதிகள் ஒரே தன்மைத்தே என்பதைச் சுட்டும் குறுந்தொகை என்ற இரண்டாம் கட்டுரை நல்ல குறுந்தொகையின் முறுகிய கவிதை அழகினைப் படம் பிடித்துக் காட்டுகிறது.

இக்கட்டுரை, 'குறுந்தொகை விளக்கம்' என்ற தலைப்பில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழாராய்ச்சியாளர் மகாவித்துவான் பாஷாகவிசேகரர் ரா.இராகவையங்கார் இயற்றிய நூலுக்கு பேராசிரியர் டாக்டர் அ.சிதம்பரநாதச் செட்டியார் அவர்கள் எழுதிய ஆராய்ச்சி முன்னுரையினின்றும் வேறுபட்டதாகும்.

மூன்றாம் கட்டுரையாகிய நக்கீரர் கவித்திறன் 'இளங்கோவின் இன்கவி' நூலிலேயே இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

'தமிழ் இலக்கிய மகவு' எனும் தலைப்பில், தமிழ் இலக்கியத்தில் இடம்பெற்ற மகவு பற்றிய செய்திகள் தொகுக்கப்பெற்றுள்ளன

*''செருநரும் விழையுஞ் செயிர்தீர் காட்சிச்*
*சிறுவரைப் பயந்த செம்மலோர்''*

என்று பெற்றோருக்கு நற்பெயர் இவர்களே பெற்றுத் தருவர் என்று குறிப்பிடுவது நோக்கற்பாலது

அடுத்து 'கம்பன் காட்டும் உளப்பாங்கு' என்னும் கட்டுரையில், கைகேயி சூழ்வினைப் படலத்தை உளநூல் வழிநின்று கண்டால் புதுநயங்கள் தோன்றுவதை உணர்த்துகிறார்

அடுத்த கட்டுரை 'இராமலிங்க அடிகளும் ஒருமைப்பாடும்' என்பது.

*''ஒற்றுமை வேற்றுமையுரிமைகளனைத்தும்*
*அற்றென வகுத்த அருட்பெருஞ் ஜோதி''*

யைப் படம் பிடிக்கிறார் பேராசிரியர் அவர்கள். குறிப்பிட்ட இந்த

மூலவித்தே, பின்னாளில் சிலம்புச் செல்வர் ம பொ.சி. அவர்கள் எழுதிய 'வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு' நூலுக்கு வழிவகுத்ததோ என எண்ண இடம் உண்டாகிறது.

மறைமலை அடிகளின் மாண்பு பற்றி விளக்கும் கட்டுரையே 'நிலைகுலையா மலை' என்பது; அடிகள் சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் பணியாற்றியபோது நாவலர் ச.சோமசுந்தர பாரதியார், டாக்டர் பி.சுப்பராயன், டி.கே. சிதம்பரநாத முதலியார் போன்றோர் அவர்தம் மாணவர்களாக இருந்ததை நினைவு கூர்ந்துள்ளார்

'தாகூரும் தமிழ் இலக்கியங்களும்' என்ற கட்டுரையில், தாகூர் எவ்வாறு தமிழ்ப் படைப்பாளிகளோடு தொடர்பு கொண்டார் என்றும் அவர்தம் படைப்புக்களை— பாரதியாரும், வ.வெ.சு.ஐயரும், த.நா.குமாரசாமி, த.நா.சேனாபதி, வி.ஆர்.எம்.செட்டியார் போன்றோர் மொழிபெயர்த்துத் தமிழுக்கு அறிமுகப்படுத்தினர் என்றும் கவிமணி தாகூர் படைப்புக்களில் ஈடுபாடுகொண்டார் என்றும் அரிய தகவல்கள தரப்பட்டுள்ளன.

அடுத்து இடம் பெறுவது வையாபுரிப் பள்ளு. பழனியில் உள்ள பள்ளர்களை வைத்து ஆக்கப்பட்டது. மற்றபடி உள்ளடக்கம் எல்லாம் முக்கூடற்பள்ளை நினைவுபடுத்தும்

*''வள்ளத்தைப் பனங்கள்ளுக்கு விற்றான்*
*வளவைச் சுற்றுவான் உழவைப்பாரான்''*

என்று மூத்தபள்ளி பள்ளனை அறிமுகப்படுத்துகிறாள். இவ்வாறு பள்ளர் இயல்பும், நாட்டுப்புற மக்கள் இயல்புமாகத் தமிழர்க்கு அறிமுகமாக வேண்டிய நூல் இது.

'சிறுகதை' கட்டுரை சிறுகதை, பற்றிய சிந்தனைகள் கொண்டது.

மொழிக்கலை என்ற கட்டுரையில் பிறமொழிகளிலிருந்து சொற்களைக் கடன் வாங்குதல், ஒலியியல் வகை, ஒலியவகை, பொருளியல் வகை, ஒப்பியல்வகை என்ற ஐந்து வகைகளில் மொழிகள் மாறுதல் அடைகின்றன என்பதைக் கூறியுள்ளார்.

அடுத்து, சொல்லாக்கம் என்ற கட்டுரையில் சொல்லாக்கம் என்றால் சொற்களை உண்டாக்குகிற முறை பற்றிய செய்தி என்பது. பிரெஞ்சு விகுதி 'இ இ' (e,e) என்பதை ஆங்கிலச் சொல்லோடு சேர்த்துப் பல சொற்கள் உண்டாக்கப்பட்டுவிட்டன. டிரஸ்டி (Trustee), ரெஃப்ரி (Referee) என்ற சொற்களை 'கார்லைல்' அமைத்தார். மிஸஸ் ரூஸ்வெல்ட், ரிடர்னி (Returnee) எக்ஸ்பெல்லி (Expellee) போன்ற சொற்களையுண்டாக்கி, இவற்றை அமெரிக்கர்கள் வழங்குகிறார்கள். நம நாட்டில் அவ்வளவு வேகத்தில் சொற்களை ஆக்க முடியாது என்றாலும்

சொல்லை அமைக்கும், ஆற்றல் நமக்கு உண்டு என்கிறார். அடுத்து 'ஆங்கில அகராதிகளில் தமிழ்ச் சொற்கள்' என்ற கட்டுரை தமிழிலிருந்து ஆங்கிலத்துக்குப் போன சொற்களை அடையாளம் காட்டுகிறார் (கட்டுமரம்-கட்டுமரான்; கணக்குப்பிள்ளை- கணக்குப்பொருளை) என்பன சில எடுத்துக்காட்டுக்கள் ஆம்.

இறுதியாக ஒரு சிறு கட்டுரை பழமொழிகள் என்பது, பல பழமொழிகள் வாழ்க்கைக்குத் தேவைப்படுவன என்பதைக் கோடிட்டுக் காட்டுகிறார்.

'அக்கரை மாட்டுக்கு இக்கரை பச்சை', பணமில்லாதவன் பிணம், பகுத்தறியாமல் துணியாதே படபடப்பாகச் செல்லாதே, 'பெண்டாட்டி கால்கட்டு பிள்ளைவாய்க் கட்டு' என்பன அவை.

1977இல் இதே பெருமக்கள் வெளியிட்ட நூல் 'தமிழில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும்' என்பது; சுமார் 25 பக்கங்கள் கொண்ட சிறிய-சீரிய நூல். சிறுகதை இலக்கியம் தமிழில் சிறுகதைகள் என்ற இரு கட்டுரைகளின் தொகுப்பு. பேராசிரியர் ஆய்ந்து குறிப்பிடும் கதாசிரியர்களுள், கதைகளில் ஜெகசிற்பியனின் 'ஜலசமாதி' என்ற கதையும் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.

மொழிபெயர்ப்பு என்ற வகையில் ஷேக்ஸ்பியரின் 'ஒத்தெல்லா' என்ற துன்பியல் நாடகப் படைப்பு குறிப்பிடத்தக்கது இதுவும் சாகித்ய அகாதெமிக்காகவே மொழிபெயர்த்தார் என அறிகிறோம்.

நீதிக்கட்சியின் முன்னோடி மரியாதைக்குரிய பி.டி இராஜன் அவர்களின் வேண்டுகோளுக்காக 'ஸ்ரீமீனாட்சி சுந்தரேசுவரரின் ஆயிரந்திருநாம அர்ச்சனை' நூலை 1967இல் தொகுத்தார் என அறிகிறோம். இதைப் பி.டி இராஜன் அவர்களே குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா முழுதும் தமிழ் இலக்கிய இலக்கணச் செல்வங்களைப் பரப்பும்முகத்தான் பேராசிரியர் அவர்கள் எழுதிய சிறுநூல்-குறுநூல் என்னும் தரத்தன Cilappadikaram, the Earliest Tamil Epic,Introduction to Tamil Poetry, Indian Words in English Dictionary, Ancient Tamil Kings-their High Ideals

போன்றவற்றைக் குறிப்பிட்டாக வேண்டும்

சமுதாய நிலைக்கேற்ப ஒரு நகைச்சுவை, சிற்றிலக்கண நூல், "காக்காய் பிடித்தலும் குருவி பிடித்தலும்". என்பது. இது 5 11.1933இல், அ.சிதம்பரநாதர் தமிழ்ப் பேரவையில் பேசியது ஆனால் நூலாக வந்தது 1940இல், இதைப் பற்றிச் சற்று விரிவாக வேறு ஒரு தகுந்த இடத்தில் காண்போம்.

# 4
# சென்ற நாடுகள்

**அ. சி**தம்பரநாதரின் 'கட்டுரைக் கொத்து' என்ற நூலில், ஐந்தாவது கட்டுரையாக அமைந்திருப்பது 'சுற்றுப் பிரயாணங்களும் பயனும்' என்பது. சுற்றுப் பயணத்தின் நன்மைகளை நன்கு உணர்ந்திருக்கிறார் என இதன்மூலம் புலனாகிறது

இங்கிலாந்து, சிங்கப்பூர், மலேசியா, இலங்கை, இத்தாலி, பிரான்ஸ், சுவிட்சர்லாந்து, எகிப்து, ரஷ்யா (முன்னாள் சோவியத் ஒன்றியம்) ஆகிய நாடுகளுக்கு அ. சிதம்பரநாதர் சென்று வந்திருக்கிறார் என அறிய முடிகிறது. ஆனால் ஒரு பயண நூலோ, பயணக் கட்டுரைத் தொகுப்போ அச்சேறியதாகத் தெரியவில்லை. அச்சேறாத தட்டச்சுப்படிகளாகப் பல கட்டுரைகள் காணக் கிடைத்துள்ளன. பயங்ணகளில் அவர் கண்ட உணர்ந்த காட்சிகளை எவ்வளவு உணாவுப் பூர்வமாகக் குறிப்பிட்டுள்ளார் என அறியும் போது வியவாமல் இருக்க இயலவில்லை

அ. சிதம்பரநாதர் வெளிநாடுகளுக்குச் சென்ற காலம் ஐம்பதுகளிலும், அறுபதுகளிலும் என அறிகிறோம் அப்போது 'உலகம் சுற்றிய தமிழன்' ஏ கே. செட்டியார் அவர்கள் போன்ற வெகுசிலரே வெளிநாடு சென்று வந்து பயண நூல் படைத்தனர். அது அங்கொன்றும் இங்கொன்றுமாகப் பயண நூல்கள் தோன்றிக் கொண்டிருந்த காலம் பின்னால் பயண இலக்கியம் என்ற தனி வகையே தோன்றும் அளவில் அவை பல்கிப் பெருகும் என அப்போது யாரும் நினைக்கவில்லை!

பயண இலக்கியத்தில் இந்நூலாசிரியர் எண்பதுகளில் ஆய்வு மேற்கொண்ட காரணத்தால்தான் இவ்வளவு ஆழமாகப் பயண இலக்கியத்தை எண்ணும் நிலை இங்கு ஏற்பட்டது.

*''சிரிக்கும் இதழும் தமிழிற் சிரிக்கும்*
*சிந்தனை இதயம் தமிழ்சிந்திக்கும்*
*சுருக்கம் நுதலில் விழுந்தெழுங்காலை*
*தொடரும் வியர்வில் தமிழ் நதிபெருகும்*
*திறக்கும் கண்கள் தமிழாய்த் திறக்கும்*
*திகழும் புருவம் தமிழ்வில் தொடுக்கும்*
*பிறக்கும் மொழியில் தமிழ்ப்பூ மலரும்*
*பீடுறுந் தோற்றம் தமிழனைக் காக்கும்''*

என்ற பண்ணரசன் கண்ணதாசன் அவர்கள் படம் பிடித்தபடி வீற்றிருந்த

அ. சிதம்பரநாதர், பிரிட்டிஷ் கவுன்சிலின் அழைப்பிற்கிணங்க இங்கிலாந்துக்குச் செல்லும்போது, சென்னை ஒய்.எம்.சி.ஏ பட்டி மன்றத்தார் வாசித்தளித்த 'பிரிவுரைப் பேரிதழ்' என்ன பகர்கிறது எனில்,

''ஷேக்ஸ்பியரை ஈன்ற சீமை, இன்று செந்தமிழ்ச் சிற்பி ஒருவரை அன்புடன் அழைப்பதைக் காண்கிறோம். தாயெழில் தமிழை வையத்து ஆயிரம் மொழிகள் அவாவுகின்றன எனும் ஆசைத்தென்றலைக் காண்கின்றோம். நெடுமாலன்ன நீண்ட உருவம், செம்மேனி அம்மானின் திருவுருவன்ன சிவந்த வண்ணம் புன்னகையும் சிரிப்பும் குலவி வரும் தமிழ்ச் சிதம்பர நாதரே தங்களைத்தான் கண்டோம்!

முன்னிய வினை அனைத்திலும் முதல்வராகத் திகழும் தங்களைத் தமிழ்மொழிக்கு முதல் என்றே கருதுகிறோம்.

இந்தி மொழியாளர்களுக்குத் தமிழின் தனிச்சிறப்பை எடுத்து இயம்பியவர் தங்களிடம் பயின்ற ஜான்மார் அன்றோ! அவரைப் போன்று இன்னும் பல ஆங்கில மக்களுக்குத் தமிழ்ப் பெருமையை அறிவுறுத்திப் பல போப்புகளும், கால்டுவெல்களும் தோன்றுவதற்கு வழிசெய்து வர வேண்டுகிறோம்'' என்ற வேண்டுகோளோடு 24.1.1955இல் விடை கொடுத்தார்கள் அம்மட்டோ?

அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவர்களும் அன்பர்களும் 22.1.1955இல் வழங்கிய வழியனுப்பு வாழ்த்திதழில் இப்படிக் குறிப்பிட்டுள்ளார்கள்:

மொழிநோய் தீர்க்கும் முதல் தமிழ் டாக்டர், பகை முகம் நீக்கும் நகைமொழி முகத்தோய்!

ஆக்ஸ்போர்டையும் அண்ணாமலையும் இணைப்பதற்குச் செலவயரும் தாங்கள் தமிழிலும் பல மாக்ஸ் முல்லர்கள், மாக்டொனால்டுகள், கெயித்கள் தோன்றுவதற்கு வழி வகுத்துவிட்டு வாருங்கள். கால்டுவெல், போப்புகளின் அடிச்சுவடு பற்றிக் கேம்பிரிட்ஜ் மண்டபங்களில் தமிழ் ஒலி கேட்பதாக!

தமிழுக்குச் சிறப்பு எண்ணாக உள்ள மூன்றில் (3) தாங்கள் முதல்வராக விளங்குதலை முத்தமிழ் இயற்றிய மெய்த்தவம் என எண்ணுகிறோம்.

தமிழ்மொழயில் ஆராய்ச்சி செய்து முதல் டாக்டர் பட்டம் பெற்ற தமிழகத்தின் முதல் தமிழ்ப் பேராசிரியர். தமிழ்ப் பேராசிரியர்களுள் பல்கலைக்கழக ஆட்சியாளராக விளங்கிய முதல் துணைவேந்தர் பொறுப்பாளர்.

தமிழ்த்துறையில் மேனாடு செல்லும் முதல் மொழித் தூதுவர் தம் மாணவர்களின் இத்தகைய மகழ்ச்சிக் கடலில் நீந்தி இங்கிலாந்து சென்றார் அ. சிதம்பரநாதர்.

இங்கிலாந்திற்குச் சென்றுவந்த அ. சிதம்பரநாதர் அவர்களுக்கு அண்ணாமலை நகரில் நடந்த பாராட்டு விழாவில் தன் அனுபவங்கள் சிலவற்றைக் குறிப்பிட்டு உரையாற்றினார்:

பிரிட்டிஷாரிடம் இருந்த நாணயம் என்னும் பண்புதான் முதன்முதலாக இவரைக் கவர்ந்தது இதனால் நாம் நாணயமாக இருப்பதில்லை என்று பொருளன்று.

நம்மைக் காட்டிலும் இன்னும் நாணயமாக அவர்கள் நடந்து கொள்கிறார்கள் என்பது கருத்து. அங்கு, பேராசிரியர் அவர்களுக்கு முதன் முதலாக வியப்பளித்தது, அவர்களின் பல்கலைக்கழக விடுதிகளில் உள்ள அறைகளைப் பூட்டாமல் திறந்து போட்டிருக்கிறார்கள் என்பது.

ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ் இவைகளில் உள்ள கல்லூரிகளிலேயும் மாணவர்கள் வாழ்கிற அறைகளிலுள்ள பெட்டிகளும் பூட்டப்படுவதில்லை மதிப்புமிக்க அருமையான பொருள்கள் பெட்டிகளில் இருந்தாலும் அவை பூட்டப்படுவதில்லை. ஆனாலும் அவை களவு போவதில்லை அவ்வாறு நாணயப் பொறுப்பு மாணவர் மாட்டு இருக்கிறது.

**'உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்**
**கள்ளத்தால் கள்வே மெனல்'**

என்ற திருக்குறளை நாம் அடிக்கடி ஓதுகிறோம், படிக்கிறோம், படிப்பிக்கின்றோம். ஆனாலும் நாமே பல வேளைகளில் அதைச் செயல்படுத்துவதில்லை. அவர்கள் களவாடுதலைச் சிந்தித்தலும் இல்லை எனக்கண்டு திருவள்ளுவர் எல்லா நாட்டிற்கும் எல்லா வகையான இனத்திற்கும் உரியவர் ஆயினர் போலும் என்று கருதினேன். இந்திய மாணவர் பலர் ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ் இவைகளுக்குப் போகிறார்கள். அவர்களும் இப்படித்தான் பழகுகிறார்கள்

ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ் இவைகளில் இரட்டைக் கதவுகள் ஒவ்வொரு அறைக்கும் இருக்கின்றன. அங்கு ஒரு மரபாக இருப்பது என்னவெனில் இரண்டு கதவுகளும் அடைத்திருந்தால் ஒருவரும் அறைக்குள் போகக்கூடாது. வெளிக்கதவு மட்டும் திறந்திருந்தால் ஆசிரியர் மட்டும் உள்ளே நுழையலாம் என்பது, வேறு அலுவலாக இருந்தால் உடனே வெளிப்புறத்தே உள்ள கதவை அடைத்துவிடுவர் பிறர் தொல்லை தரக்கூடாது என்பது பொருள். இது, எந்த நண்பனாக இருந்தாலும் 'நாளை வா' என்று கூறுவதைப் போன்றது. அதுபோலவே நீங்களும் 'படிக்கும் நேரம்' என்று எழுதி வைத்துவிட்டுப் படித்தால், தொல்லை தரக்கூடாது என்ற எண்ணம் பிறருக்கு வரும் என்று மாணவர்கட்குக் கூறினார்.

மேலும், மாணவர்கள் அந்தப படிக்கும் நேரத்தில் நன்றாகப் படிக்கிறாாகள் விளையாடும் நேரத்தில் நன்றாக விளையாடுகிறார்கள். கேம்பிரிட்ஜ், ஆக்ஸ்போர்டு முதலியவற்றில் பிற்பகலில் பள்ளி கிடையாது பிற்பகலில் விளையாட்டிற்கோ, படிப்பதற்கோ என்று முடிவு கட்டி விடுகிறார்கள்.

மாணவர்களின் தனிக் கண்காணிப்புக்கு ஆசிரியர்கள் நியமிக்கப் படுகிறாாகள் இந்த ஆசிரியர்களைக் குரவர் (Tutors) கள் என்று குறிப்பிடுகிறார் அ சிதம்பரநாதர்

குரவர்களை 'ஒழுக்கக் குரவர்கள்', 'கல்விக் குரவர்கள்' என இரு வகையினராகப் பிரித்துள்ளனர் ஒழுக்கக் குரவர் என்றால் மாணவர்களின் நிலையைச் சீர்தூக்கி அவர்களுடைய ஒழுக்கத்தைப் பற்றிப் பொதுவாகக் கவனிக்கிறார்கள் என்று பொருள் கல்விக் குரவர்கள் அந்தந்தத் துறையிலே வல்லவர்களாக இருக்கின்றனர். 10 வரலாற்று மாணவர்கள் ஒரு வரலாற்று ஆசிரியர்களுக்குக் கீழே கண்காணிக்க விடப்படுகிறார்கள். இவர்தான் கல்விக் குரவர் என்று அழைக்கப்படுகிறார்.

மாலையில் விடுதியை விட்டுச் செல்லுவோர் இரவு 12 மணிக்குள் திரும்பிவிட வேண்டும். 12 மணி என்றால் இங்குள்ள மணிபோலன்று. இங்குள்ள 9 மணிக்கு சமம். அங்கே சாதாரணமாக உணவருந்திவிட்டு உறங்கச் செல்வது இரவு 11 மணி, 12 மணி. அந்த 12 மணிக்கு மேலே சினிமா பார்ப்பதற்குப் போக வேண்டிய நிலையிலே மாணவர்கள் இருப்பின், முன்னரே உரிய குரவரிடம் இசைவு பெற்றிருக்க வேண்டும். அதைப் பெறாமல் போய்விட்டால் அவர்களுக்குக் கொடுக்கப்படும் முதல் தண்டனையே, ஒரு வாரத்திற்கு இரவு 9 மணிக்குமேல் வெளியே போகலாகாது என்பதுதான். இசைவின்றி அடிக்கடி வெளியேறினால் ஐந்து பவுன், பத்து பவுன் என்று தண்டனை விதித்து விடுவர். பெரும்பான்மையான இந்திய மாணவர்கள் அங்குப் படிக்கிறார்கள். அவர்கள் படிக்கக்கூடிய வகையிலே, போற்றக்கூடிய வகையிலே ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ் ஆகியவற்றில் வாழ்கிறார்கள் என்பதற்காக நாம் மகிழ வேண்டும் என்று தன் உள்ள நிறைவைக் குறிப்பிட்டுள்ளார் அ சிதம்பரநாதர்.

'எனது மேல்நாட்டு அனுபவம்' என்ற இந்தப் பயணக் கட்டுரை 4 12 1955 'தமிழ்நாடு' இதழ் ஞாயிறு மலரில் வெளியாகியுள்ளது.

பிரிட்டனில் தூய்மையும் துப்புரவும் சிறப்பாகப் பேணப்படுகிறது என்பதை ஓரிடத்தில் குறிப்பிட்டுள்ளார்.

'இங்கிலாந்தில் நான் கண்ட அறிஞர்கள்' என்ற தலைப்பில் அரிய கருத்துக்கள் பலவற்றைக் கூறியுள்ளார்

பிரிட்டிஷ் பொருட்காட்சி சாலையில் (British Museum) அந்நிலைய அதிகாரி டாக்டர் எல்.டி. பார்னட் (Dr. L.D. Barnett) என்பார் தொண்டுக் கிழவர், தமிழ்ப் புத்தகப் பகுதிக்கு அவரே தலைவர். அண்ணாமலைப் பல்கலைக்கழகம் அப்போது வெளியிட்ட எஸ் இராமசாமி நாயுடு என்பாரின் 'தமிழ் இலக்கியம்' என்ற நூலும், வெள்ளைவாரணனார் எழுதிய 'பரத சங்கிரகம்' என்ற நூலும் அ சிதம்பரனார் பார்வையில் பட்டன.

அடுத்து, லண்டன் ஓரியண்டல் கல்லூரி ஆதரவில் நடைபெறும் ஒலிஇயல் நுண்ணாராய்ச்சித் தலைவராய் உள்ள பேராசிரியர் பர்த் (Prof.J.R. Firth)என்பவரைக் கண்டார் இவர், கோபன் ஹேகன் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த டாக்டர் எஸ் ஜஸ்பர்ஸன் (Dr.Jespersen) என்பாரின் பழைய மாணவர். டாக்டர் ஜஸ்பர்ஸன் மொழி இயலுக்குச் செயத தொண்டு உலகு அறியும். பேராசிரியர் பர்த் அவாகளின் மாணவர்கள், சியாம், பர்மா, எகிப்து ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள். இந்தப் பேராசிரியர் அ. சிதம்பரநாதர் அவர்களிடம், ''பலவகைகளில் இந்தியரைக் காட்டிலும் நான் ஓர் இந்தியனாக இருக்க விரும்புகிறேன்'' என்றாராம்

கைமோகிராப் (Kymograph) என்ற எந்திரத்தில், அ. சிதம்பரநாதர் அவர்களைச் சில தமிழ் ஒலிகளை எழுப்புமாறு பேராசிரியர் பர்த் வேண்டினார். கருத்து, தகர, டகர ஒலிகளின் வேறுபாட்டினை அறிந்து கொள்ளவேயாகும் வடமொழிப் பிரிவில் தலைவராக உள்ள டாக்டர் பிரப் (Dr. Brough) என்பவருக்கு, இந்தியாவிலிருந்து வடமொழி பயில யாரும் தன்னிடம் வருவதில்லை என்ற கவலை இருந்தது. காரணம் இந்தியாவிலேயே வடமொழி கற்பிப்பதுதான் என்றார் அவர் மேலும், கேம்பிரிட்ஜில் திருவாட்டி வான் லொகுஞ்சியான் (Mrs. VanJohuzen) என்பவரின் கணவர் வரலாற்றுத்துறைப் பேராசிரியர் திருவாட்டி லொகுஞ்சியான் தமிழ்ப் பற்றுடையவர். பிரிட்டிஷ் கவுன்சில் அதிகாரி திருவாட்டி கிளாக்ஸ்டன் (Miss. Claxton) என்பார் அ. சிதம்பரநாதருக்கு விருந்து ஒன்றையும் தந்தார்.

''வங்காளிகளைவிடத் தமிழர்களே மிகவும் எனக்குப் பிடிக்கும்'' என்ற பேராசிரியர் பர்த் அவர்களின் கூற்று மகிழ்வுறுத்துவதாக உள்ளது என்பதை நாம் மறக்க முடியாதல்லவா?

அடுத்து ''*லண்டனில் இந்தியா ஆபீசு நூல் நிலையத்தில் சிலமணி*'' என்ற கட்டுரையில் அரிய தகவல்கள் உள்ளன.

இங்கிருக்கும் பன்னீராயிரம் நூல்கள் ஒரு மூலையில் புழுதிபடிந்த கோலத்தில் காணப்பட்டன 'இந்தப் புத்தகங்களைத் துடைத்து வைக்கக்

கூடாதா' என்று பேராசிரியர் கேட்டபோது, அவர் (பேராசிரியர் சட்டன் (Prof. Sutton) என்பார் "இதைப் படிப்போர் இருந்திருந்தால் இவ்வாறு இருந்திரா" என்று விடையளித்தாராம்.

அங்கே, 1840இல் வீரமாமுனிவர் தம் கைப்பட எழுதிய தேம்பாவணி காவியத்தை அ. சிதம்பரநாதர் கண்ணுற்றார். அதை 1858இல் வால்டர் எலியட் (Walter Elliot) என்பவர் இந்தியாவிலிருந்து வாங்கி அனுப்பினார் என அறிய முடிகிறது அதில் காவேரிப்பட்டணத்துத் தம்புசாமி என்பவருடைய சொந்தக் கையெழுத்துக் காணப்படுகிறது. 1844இல் இவ்வேடு தம்புசாமியால் வால்டர் எலியட்டுக்கு அளிக்கப்பட்டது என்பது உறுதியாகிறது இந்நூல் நிலையத்தில் 4000 கையெழுத்துப் பிரதிகள் தென்னிந்திய மொழிகள் பற்றி உள்ளன அதில் 20 தமிழ்மொழி பற்றிய பிரதிகள் ஆகும்

அங்குள்ள தமிழ்ப் புத்தக விவர அட்டவணையில் தேவநேயப் பாவாணரின் ஒப்பியல் மொழி நூலும், 'தமிழ்ப் பயண நூல்களின் தந்தை' ஏ.கே. செட்டியாரின் 'அமெரிக்கா'வும், பாரதிதாசன் கவிதைகள், ஔவை துரைசாமிப் பிள்ளையின் சிலப்பதிகார ஆராய்ச்சியும், அண்ணாமலை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சைவ சித்தாந்த சமாஜம் ஆகிவயற்றின் வெளியீடுகளும் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

இங்கு இன்னொரு புத்தகத்தையும் அ. சிதம்பரநாதா அவர்கள் கண்ணுற்றிருக்கின்றார். அதில் பழங்கால இந்தியாவில் ஒரு கறுப்புநிறச் சாதியார் வாழ்ந்து வந்தார் என்பதும், பிறகு திராவிடர் அல்லது தமிழர் அங்கே குடியேறினர் என்பதும், அவருக்குப் பின் ஆரியர் அங்கு வநதனர் எனவும், ஆரியர் வடபுறத்தில் இருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது ஆரிய பூமி யமுனைக்கும் கங்கைக்கும் இடைப்பட்ட ஒரு பிரதேசம் என மனுதர்ம சாத்திரத்தில் கூறப்பட்டிருப்பதாக அப்புத்தகம் கூறுகிறது திராவிடர்கள் தென்னாட்டில் சாதிபேதமற்றவர்களாக வாழ்ந்தனர் என்பதும், சிறபபுற்ற நாகரிகமாக இருந்த தமிழர்கள் ஆரியர்களுடன் சேர்ந்த பிறகுதான் அநேக தீய வழக்கங்களுக்கு ஆளாயினர் என்பதும், ஆரிய அரசாட்சிக்கு உட்படாதவர்களைச் சூத்திரர் அல்லது அடிமைகள் எனப் பெயரிட்டனர் என்பதும, ஆரியர்கள் முதலில் தொழில் காரணமாகச் சாதிகள் வகுத்தார்கள் என்பதும் கூறப்பட்டிருக்கின்றன. இப்புத்தகத்தின் பெயர் "தமிழர்கள் சரித்திரம்" என்பது.

வேத வியாசர் செம்படவப் பெண்ணின் மகன் என்பதும, தசரதன் சுமத்திரை என்ற வைசியர் பெண்ணை மணந்தார் என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது இருக்கு வேதத்தில் சாதி வித்தியாசம் இல்லையெனினும், பிற்காலத்தில் அதில் புருஷ சூக்தத்தில் சில சுலோகங்களைப் புகுத்திவிட்டனர் என்பதும் சொல்லப்படுகிறது.

பிராமணர் கடவுளின் வாயிலிருந்தும், சத்திரியர்கள் தோளிலிருந்தும், வைசியர்கள் தொடையிலிருந்தும், சூத்திரர்கள் காலிலிருந்தும் தோன்றியவர்கள் என இப்பகுதி 'புருஷசூக்தம்' 90வது கீர்த்தனையில் நுழைக்கப்பட்டவை என அந்நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

'இவ்வித நாலு சாதியும் வடநாட்டு ஆரியருக்குள் இருந்ததேயொழிய தென்னாட்டுத் தமிழருக்குள் கிஞ்சித்தும் கிடையாது என்பதை மறுபடியும் வற்புறுத்திச் சொல்லுகிறோம் என்று இவ்வாசிரியர் எழுதியுள்ளார். அன்றியும் ஆரியர்கள் வட இந்தியாவில் யாரை வென்றிருந்தாலும், தென்னிந்தியாவிலிருந்த திராவிடர் என்கிற தமிழர்களை எக்காலத்திலும் வென்றாரில்லை என்கிறார்.

இந்நூலின் ஆசிரியர் கோபாலசெட்டியார். 1908இல் வெளியிடப்பட்டது.

'தமிழர்கள் சரித்திரம்' நூலின் ஆசிரியர் கோபால செட்டியார், தம் நூலை இவ்வாறு முடிக்கின்றார்.

"கடவுளே தங்களைச் சதா அடிமைத்தனத்திற்கும், அவமானத்திற்கும் ஏற்படுத்திவிட்டார் என்று நம்பும் தமிழர்களின் மூடத்தனத்திற்குச் சமானம் உலகத்தில் வேறெங்கும் கிடையாது". இச்சாதி வேறுபாடுகள் எல்லாம் மனிதர் செய்ததேயொழிய கடவுளுடைய ஏற்பாடு அல்ல என்றவாறு அந்நூல் நிறைவெய்தியது.

அடுத்து, பிரிட்டன் பல்கலைக்கழகங்கள் என்று ஒரு கட்டுரை வரைந்துள்ளார். பூகோள அமைப்புப்படி பார்த்தால் பிரிட்டன், இங்கிலாந்து, ஸ்காத்லாந்து, அயர்லாந்து, வேல்சு என நான்கு வகைப்படும். பல்கலைக்கழகங்களும் கேம்பிரிட்ஜ், ஆக்ஸ்போர்டு, இரெட்டிங், டர்ரம் முதலிய பல்கலைக்கழகங்கள் ஒரு வகையைச் சாரும். இவைகளில் ஆசிரியர்களும் மாணவர்களும் உடனுறைகிறார்கள்.

லண்டன் பல்கலைக்கழகம் இன்னொரு வகை இங்கே விடுதி வசதி போதிய அளவில் இல்லை இம்மாணவர்களில் பகலில் வேறு கல்லூரிகளுக்குப் போகிறார்கள். மாலையில் வருகின்றனர் மேலும் இப்பல்கலைக்கழகப் பட்டங்களை வேறு நாடுகளிலிருந்தே பெறுதலும் உண்டு. இதனால் இதைத் 'தேர்வுப் பல்கலைக்கழகம்' என்று கூறுவதும் பொருந்தும் மாணவர் தொகை பெரிது. பதினெட்டாயிரம் பேர் வெளியூர்களிலிருந்து லண்டன் தேர்வுக்குப் பயில்வோர் இருபத்தி எட்டாயிரம். மொத்தம் 40 ஆயிரம் மாணவர்கள். சென்னைப் பல்கலைக்கழக மாணவர் தொகை 50 ஆயிரம் இதை எட்டிப் பிடிக்கிறது லண்டன் பல்கலைக்கழகம் (1950களில்). இந்தியாவில் கல்கத்தா பல்கலைக்கழகத்தில்தான் மாணவர்கள் அதிகம், சுமார் 62 ஆயிரம்

பேர்கள். இப்புள்ளி விவரம், அ. சிதம்பரனார், மேனாடு சென்ற காலத்ததாகும்.

இலண்டனின் உள்ள ஓரியண்டல் கல்லூரி எனப்படம் ஓரியண்டல் ஸ்கூலில் (School of Oriental Studies) தான் தமிழ் கற்பதற்கு வேண்டிய வசதி செய்யப்பட்டுள்ளது. இங்குதான் திரு. ஜான் மார் (John Marr) என்ற ஆங்கிலேயர் முன்னர்த் தமிழ் பி.ஏ. ஆனர்சு பட்டம் பெற்று அ. சிதம்பரனார் தலைமையில் தமிழாராய்ச்சி செய்து வருகிறார். இவர் ஓராண்டிற்கு முன் அண்ணாமலைப் பல்கலைக்கழத்தில் சில திங்கள் தங்கிப் படித்துள்ளார். பதிற்றுப் பத்து ஆராய்ச்சி செய்து இருப்பதுடன் அந்நூலை ஆங்கிலத்திலும் மொழி பெயர்த்துள்ளார். கேப்டன் பதி என்ற தமிழ் விரிவுரையாளர் இங்கு இருந்தார் இங்குதான் ஆஷர் (Asher) என்பார் தமிழாராய்ச்சி செய்து வந்தார். இக்கல்லூரிக்கு இந்திய அரசு ஆண்டுதோறும் ஆயிரம் பவுன் உதவுகிறது.

மூன்றாவது வகை மாகாணப் பல்கலைக்கழகங்கள் என்று மான்செஸ்டர், லீட்ஸ், பர்மிங்காம், செப்பீல்டு ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இவை இங்கு வாழும் தொழிலாளர்களுடன் கூடிப்பணியாற்றுவது இப்பல்கலைக் கழகங்களின் தனிச்சிறப்பாகும். லண்டன் பல்கலைக்கழகங்கள் செய்யாததை இவை செய்கின்றன ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ் ஆகியவை நாட்டுப்புறப் பல்கலைக்கழகங்கள் என்றே குறிப்பிடப்படுகின்றன.

மொத்தத்தில் பார்த்தால் பிரிட்டன் பல்கலைக்கழகங்கள் அனைத்திலும் அரசியல் தலையீடில்லை. ஆனால் அரசு ஒதுக்க வேண்டிய நிதி வசதிகளைத் தாராளமாக ஒதுக்குகிறது. இவற்றையெல்லாம் கண்டே இந்திய அரசு பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவைத் (University Grants Commission) - *தோற்றுவித்தது எனலாம். இது இந்நூலாசிரியர்* கூற்றாகும்.

பிரிட்டன் பல்கலைக்கழகங்களில் சிறப்பாக அ. சிதம்பரநாதர் அவர்கள் கண்டது என்னவென்றால், ஒவ்வொரு பல்கலைக்கழகத்தாரும் தத்தமது கோயிலுக்கு (Chapel) விருந்தினரை அழைத்துச் சென்று காட்டுவதாகும்.

'பாட்லியன் முதலிய நூல் நிலையங்களில்' என்ற கட்டுரையில், ஆக்ஸ்போர்டில், ஸர். தாமஸ் பாட்லியன் (Bodleian) என்பவரால் கி.பி. 1602இல் நிறுவப்பட்டது இந்நூல் நிலையம் இந்தியக் கழக நூல்நிலையம் (Indian Institute) என்பது பாட்லியன் நூல் நிலையத்தின்ஒரு பகுதியாகும். இங்குக் காணப்படும் கையெழுத்துச் சுவடிகளாக - இலக்கண விளக்கம் தஞ்சாவூர் அரிச்சுவடி, கல்லாட ஏடு

1828இல் எழுதப்பட்ட திருக்குறள் ஏடு ஒன்று ('பரிமேலழகர் உரையுடன் வெஃகாமை அதிகாரம் வரை உள்ளது) காணப்படுகின்றன. இறையனார் அகப்பொருள் ஏடு ஒன்று பர்னல் (Burnell) என்பவருக்கு மதுரை முத்துப் பிள்ளை என்பவரால் அமைத்துத் தரப்பட்டதை அறிய முடிகிறது. அன்றியும் 1869இல் 2வது பதிப்பாக வெளியாகியிருந்த சென்னைப் பொறிஇயல் கல்லூரித் தாள்கள் சில அடங்கிய ஒரு புத்தகம் காணப்படுகிறது. அப்புத்தகம் 1500 ஆங்கிலச் சொற்களுக்கு ஏற்ற தமிழ்ச் சொற்களைத் தாங்கி மராமத்து (பொதுப்பணி)த் துறையில் வேலைபார்க்கும் பணியாளர்களுக்குப் பயன்படும் பொருட்டு, பொறிஇயல் கல்லூரியில் வேலைபார்த்த திரு.பி.எஸ். இராஜகோபால் என்பவரால் அமைக்கப்பட்டதெனத் தெரிகிறது.

மாணிக்கவாசகரின் திருவாசகம் ஜெர்மன் மொழி பெயர்ப்பில் உள்ளது. ஷோமரெசு (Schomerus) என்பவரால் இயற்றப்பட்டது. ஹல்லே (Halie) என்பவரால் எழுதப்பட்ட பட்டினத்தார் பாடலின் ஜெர்மன் மொழி பெயர்ப்பும் உண்டு. தமிழிலிருந்து புத்தர் உருவகக் கதைகள் சிலவற்றைப் பிரெஞ்சு மொழியில் ஜூலியன் வில்சன் (Julian Vilson) என்பார் மொழிபெயர்த்ததும் காணக்கிடக்கின்றது.

கிருஷ்ண லீலாவைப் பற்றிய மலையாள ஓலைச் சுவடி ஒன்று நூறு சுலோகம் அடங்கியது 1816இல் தாளில் எழுதப்பட்டது. வேதநாயகம் பிள்ளை எழுதியுள்ளார் என்பதும், அதற்கு ஒரு பொழிப்புரை உண்டென்பதும் தெரிகிறது. 1831இல் செப்பனிடப்பட்ட தொல்காப்பிய ஓலை ஒன்றும் உண்டு. அதைத் திருநின்றவூர் பக்தவத்சல ஐயர் என்பவர் எழுதி ஹென்றி ஹார்க்கனஸ் என்பவருக்குப் பரிசிலாக அளிக்கப்பட்டது என்பதாக ஒரு குறிப்பும் அதில் உண்டு. பிறகு 1892இல் டாக்டர் உ.வே. சா. அவர்களால் அச்சிடப்பட்ட சிலப்பதிகார நூல் ஒன்றும் அங்கு காணப்படுகிறது. 1911இல் டாக்டர் ஜி.யூ. போப் மொழி பெயர்த்து அச்சிடப்பட்ட மணிமேகலை என்னும் நூற்பிரதியும் அங்கு உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. டாக்டர் பர்ரோ என்பவர் பின்னாளில் டாக்டர் கால்டுவெல் செய்த பணிகளைச் செய்ய ஆயத்தமாக உள்ளார் என்ற குறிப்பையும் அ. சிதம்பரநாதர் அவர்கள் குறிப்பிட மறக்கவில்லை.

அ. சிதம்பரநாதர் அவர்கள் ''சோவியத்து நாடு'' என்ற பயணக் கட்டுரையில், அந்நாட்டு உயர்ந்த கட்டிடங்கள், அவர்கள் கல்விக்குத் தரும் மதிப்பு, பள்ளிக் கல்வி, உயர்கல்வி ஆகியவற்றின் வளர்ச்சி, லெனின்கிராடு, கீவ் ஆகிய பல்கலைக்கழகங்களில் பயிலும் மாணவர்கள் காசின்றிக் கல்வி பெறுகிறார்கள் என்றும், அங்கு அதிகம் புத்தகங்கள் விற்கப்படுகின்றன என்றும்,

நோய்களைத் தடுத்துக் கொள்வதிலும், நோய்களை நீக்கிக் கொள்வதிலும் சோவியத் மக்கள் அதிக காலம் செலவிடுகின்றனர் என்றும், இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஒருவரின் சராசரி ஆயுட்காலம் 39 ஆண்டுகள். 1955களில் அதுவே 67 ஆண்டுகளாக உயர்ந்துள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

நம் நாட்டு (இந்திய நாட்டு) மக்கட் தொகையைக் குறைக்க முற்படுவதற்கு மாறாக வேளாண்மையிலும், கைத்தொழில்களிலும் உணவுப் பெருக்கத்திலும் சிந்தையைச் செலுத்துமானால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்ற கருத்து சோவியத்து நாட்டு வாழ்க்கையைக் கண்டறிந்து மீள்வார்க்கு ஏற்படாமலிராது என்பது பேராசிரியர் அவர்களின் உறுதியான எண்ணமாகும். அ. சிதம்பரநாதர் சோவியத் நாட்டிற்குச் சென்று வந்தபிறகு எழுதிய பயணக்கட்டுரையில் இக்கருத்து காணக்கிடக்கிறது.

சோவியத் நாட்டின் தலைநகராகிய மாஸ்கோவில் நடந்த கீழ்த்திசை ஆராய்ச்சித் துறை அறிஞர் மாநாட்டிற்கு இந்தியப் பிரதிநிதிகளில் ஒருவராக டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார் அவர்கள் கலந்து கொண்டு "உலகிற்குத் திருக்குறள் வழங்கும் செய்தி" என்ற தலைப்பில் 12.7.1960இல் ஆய்வுரை நிகழ்த்திவிட்டு, அந்நாட்டில் உள்ள தமிழ்மொழி அறிஞர்களுடன் எல்லாம் உறவுபூண்டு மீண்டார்.

இப்பணிக்காக பேராசிரியர் அவர்களுக்குத் தமிழ் கூறு நல்லுலகமே சென்னையில் 20.8.60 அன்று பாராட்டுவிழா நடத்தியது குறிப்பிடத்தக்கதாம். பாராட்டுக்கு நன்றி தெரிவித்துப் பேசிய அ. சிதம்பரநாதர் உலகில் தமிழார்வம் பெருகி வருகிறது என்று குறிப்பிட்டார். இவ்விழா பற்றிய செய்தியைச் சிறப்பாக வெளியிட்ட இதழ்களில் 'தென்றல்' இதழும் ஒன்று. அவர் மாஸ்கோவில் தமிழ் முழக்கம் செய்துவிட்டு வந்த செய்தியைத் தனி அரசு (23 8.1960), நம்நாடு (24.8.1960) போன்ற இதழ்கள் வெளியிட்டு மகிழ்ந்தன.

1965ஆம் ஆண்டு, தன் துணைவியார் அவர்களோடு இலங்கைக்குச் சென்று வந்தார், அ. சிதம்பரநாதர், இப்பயணம் குறித்து 'ராதா' என்ற இதழுக்குப் பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறிய கருத்துக்கள் சிந்தனைக்குரியவையாகும்.

இலங்கைக்கும் தமிழகத்திற்கும் சங்க காலம் முதலே தொடர்புண்டு ஒரு காலத்தில் இலங்கை தமிழகத்தோடு இணைந்திருந்தது என்பதற்கு இலெமூரியாக்கண்டம் பற்றிய தகவலே பெருஞ்சான்று. 'இலங்கையில் தமிழ்ப் பண்பாடு' என்று ஒரு விரிவான நூல், தமிழ் ஆங்கிலம், சிங்களம் அறிந்த வல்லுநர்களைக் கொண்டு, அவர்களின் கருத்துக்களைப் பெற்றுச்

சீராக்கி செயற்படுத்த வேண்டும். இலங்கைப் புலவர்களிலேயே, அ சிதம்பரநாதர் அவர்களைக் கவர்ந்தவர்கள் சுவாமி விபுலாநந்தர், ஆறுமுக நாவலர், சி.வி. தாமோதரம் பிள்ளை ஆகியோராவர். இலங்கைத் தமிழ்ப் பேச்சு நடை, நல்ல தமிழ் இலக்கிய நடை போன்று அமைந்துள்ளது. திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டத்தார் பேச்சுப் போனறுள்ளது

தமிழ்நாட்டின் தென்பகுதிவாழ் தமிழர்களுக்கும் இலங்கையில் வடபகுதி வாழ் தமிழர்களுக்கும் இதனால் இருந்த நெருங்கிய தொடர்பும் புலனாகும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

தன் மலேசியாப் பணயத்தின்போது குறிப்பிடத்தக்கப் பகுதிகளான கிள்ளான், 'ஈப்போ, கோலாலம்பூர்' ஆகிய பகுதிகளில் பல நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டுள்ளார். சிங்கப்பூரிலும் பல நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார்.

அக்காலத் தமிழர்கள் இமயம், கடாரம், கிரேக்கம், எகிப்து, பாபிலோனியா ஆகிய நாடுகளுடன் வாணிபம் செய்து, தமிழ்ப்பண்பு, கலை, ஒழுக்கம் ஆகியவற்றை உறுதி செய்தார்கள். நூலாடை செய்து வெளிநாடுகளுக்கு அனுப்பியது தமிழ்நாடுதான், தமிழர் அல்லற்பட்டு உழைத்து வெற்றி கண்டுள்ளனர்.

தமிழர்களிடையே தாளாண்மை, தன் முயற்சி, உழைப்பு ஆகியவற்றிற்குப் பஞ்சமில்லை கூழ்ச்சோறு உண்டாலும் அவர்களது தன்மானம் பிழைபடுவதில்லை. எனவே கூலி வேலை செய்கிறோம் என்று எவரும் மனந்தளரக்கூடாது. தமிழன் முன்னேற்றப் பாதையில் இன்று செல்ல முற்பட்டுவிட்டான் அதன் அறிகுறிதான் தமிழர் திருநாள்.

தமிழர் பலதலைமுறைகளாக இங்கு வாழ்ந்து வருகின்றனர். ஆனால் தமிழகத்தோடு நெருங்கிய தொடர்பு வைத்துக் கொள்ள மறந்து விட்டனர் இந்நிலை இப்போது மாறி வருகிறது எங்கே இருந்தாலும் தமிழ்க் கலையை, தமிழ்ப் பண்பாட்டை தமிழர்கள் மறந்துவிடக்கூடாது. இங்குள்ள மற்ற சமூகத்தினரோடும் நட்புறவோடு அவசியம் பழக வேண்டும் என அறிவுறுத்தினார்.

மலேயா நாட்டில் உள்ள தமிழ் மக்கள் தமிழகப் புயல் நிதிக்குப் பெருந்தொகை சேர்த்துக் கொடுத்ததைக் குறிப்பிட்டபோது சென்னை முதலமைச்சர் (அப்போது உள்ள பெயர்) காமராசரும் மற்றவர்களும் அம்முயற்சியை பெரிதும் பாராட்டுவதாகவும் குறிப்பிட்டார். மலேயாப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர், அப்பல்கலைக்கழகத்தால் 'தமிழ்ப் பகுதி' தொடங்க உறுதி மேற்கொள்ள அ. சிதம்பரநாதர் அவர்களின் மலேசியா சிங்கப்பூர் பயணம் உதவியது என்றால் மிகையில்லை.

அவர் 'பினாங்கு' என்ற இடத்தில், பாண்டி மண்டலப் பைந்தமிழர்களும், சேர மண்டலச் செந்தமிழர்களும், சோழநாட்டுத் தமிழர்களும், இலங்கைத் தமிழர்களும் வேறுபாடு கருதாமல் ஒன்று சேர வேண்டும், சைவர், சமணர், சாக்கியர், வைணவர், கிறித்துவர், முஸ்லீம்கள் ஆகிய எச்சமயத்தவர்கள் ஆயினும் மொழி அடிப்படையில் ஒன்றுசேர முழக்கமிட்டார்

நம்முடைய திராவிட நாகரிகம் பழமையானது. கலை, பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றில் தனித்தியங்கும் தன்மை பெற்றது. மேல்நாட்டுப் பகுதியில் நம் திராவிட நாகரிகம் காணப்படுகிறது. மத்திய தரைக்கடல் பகுதியிலிருந்து திராவிடர் வந்தவர், அவர்கள் நாகரிகம் வந்தது என்று குறிப்பிடுவது சரியானதல்ல, நம் மூதாதையர் கிரீஸ், ரோம், பாபிலோனியா, பாலஸ்தீனம் போன்ற இடங்களில் திராவிட நாகரிகத்தைப் பரப்பினர்.

பல தமிழ்ச் சொற்கள் மலாய்மொழியில் இன்று காணப்படுகின்றன. சாமி சத்யானந்தா அவர்கள் இந்தச் சொற்களை விளக்கி நல்ல நூல் ஒன்று எழுதியுள்ளார். அதிலிருந்து பல உண்மைகளை நாம் தெரிந்து கொள்ள முடியும்.

'பெட்டர் குரு' என்பது அவதார குரு என்று அதில் ஓரிடத்தில் கூறப்பட்டுள்ளது. மொழி நூல் துணைகொண்டு ஆராய்ந்தால் பெருமதகுருநாதன் பெத்தர் குருவாக மாறியிருக்கக் கூடும் நாரங்காய் என்பது நாரத்தம் பழமாகி இன்று ஆரஞ்சு என்று ஆங்கிலத்தில் திரிந்துள்ளது. இதுபோல் பல சொற்கள் தமிழிலிருந்து வேறு மொழிகளுக்குச் சென்றுள்ளன.

மேற்கூறிய, அ. சிதம்பரநாதர் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவுகளைத் தமிழ் முரசு, தமிழ் நேசன் ஆகிய நாளிதழ்கள் வெளியிட்டுள்ளனர் இவற்றிற்கெல்லாம் காரணமான தமிழவேள் கோ. சாரங்கபாணி அவர்களைத் தமிழ்கூறு நல்லுலகம் பாராட்டக் கடமைப்பட்டுள்ளது.

பேராசிரியர் அ சிதம்பரநாதர் அவர்களின் துணைவியார் சி பெரியநாயகி அம்மையார் அவர்கள் ''வடபுலத்து வாழ்க்கை'' என்றோர் நுணுக்கமான பயணக் கட்டுரை எழுதியுள்ளார். மாண்டா, ஈத்துவார், காட்டிகார் ஆகிய நகர மக்களின் வாழ்க்கையை - உணவு வகைகளைச் சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளார். 'வசந்த பஞ்சமி' என்ற சரசுவதி பூசையைப் பற்றியும் அப்போது வழங்கும் தின்பண்டங்கள் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். கோதுமை மாவில் தண்ணீர் விட்டுப் பிசைந்து, வெல்லத்தைக் கடித்துக் கொண்டு பீகார், மேற்கு வங்கக் கூலித்

தொழிலாளர்கள் உண்பதைக் குறிப்பிட்டுள்ளார். இங்குள்ள பொருட்காட்சித் தட்டுக்களில் உள்ள இனிப்புப் பண்டத்தின் மீது ஈக்களும் சுமார் ஒன்றரை அங்குல நீளமுள்ள தேனீக்களும் அமர்ந்துள்ளதைப் பொருட்படுத்தாமல் அப்பகுதி மக்கள் அவற்றை வாங்கி உண்பதையும் இளிவரல் சுவைதோன்ற எழுதியுள்ளது குறிப்பிடத்தக்கது. நல்ல படப்பிடிப்பாக அவர்தம் பயணக் கட்டுரை விளங்குகிறது எனில் மிகையன்று.

# 5

# டாக்டர் (Doctor of Philosophy) பட்டம்பெற்ற தமிழகத்தின் முதல் தமிழ்ப் பேராசிரியர்

**எ**ன்றைக்கும், எதிலும் முதன்மைக்குச் சிறப்பு உண்டன்றோ? எனவே அ சிதம்பரநாதரின் முதன்மைக்கு மிக்க சிறப்புண்டு. எதில்? தமிழ்த்துறையில் பல்கலைக்கழக முறைப்படி- மரபுப்படி தக்கார் ஒருவரின் நெறிகாட்டுதலின் படி ஆராய்ச்சி செய்து பிஎச் டி (Doctor of Philosophy) பட்டம் பல்கலைக்கழக ஆட்சிப் பேரவையின் அங்கீகாரத்தோடு தமிழகத்தில் பெற்ற முதல் ஆய்வாளர் அவர் என்பதை அறியும்போது நம் உள்ளம் துள்ளாமல் இருக்குமா?

தமிழகத்திலேயே இவரே முதன் முதலாகப் பெற்றார் எனில், உலகிலேயே - தமிழ்கூறு நல்லுலகிலேயே தமிழில் பிஎச்.டி பட்டம் பெற்றவர் வேறு யாராக இருக்கக்கூடும், இவரன்றி!

அ. சிதம்பரநாதர் அவர்கள் ஆய்வுக்காக விரும்பித் தெரிவுசெய்த ஆய்வுப் பொருள் இலக்கணம் வேறு யாரும் அற்றை நாளில் தொடத் தயங்கிய துறை அது. அதைத் துணிந்து தொட்டு, தன்வயமாக்கிக் கொண்டதோடு மற்றவர்கள் அத்துறையில் அச்சமின்றி நுழைய அவரே ராஜபாட்டை அமைத்துக் கொடுத்தவர் எனில் மிகையன்று.

அ சிதம்பரநாதர் அவர்களுக்குப் பிறகு ஆய்வு மேற்கொண்ட பேராசிரியர்களுக்கு ஒருவரே ஆய்வு மேற்பார்வையாளராக அமைவர். அதுவும் இல்லாமல் ஆய்வு மேற்கொண்டோரும் உண்டு ஆனால் -

நம் சிதம்பரநாதர் அவர்களுக்கு இருபெரும் தமிழ் இமயங்கள் ஆய்வு நெறியாளர்களாக அமைந்தனர். அது அவர்கள் பெற்ற பேறு அன்றோ!

'பசுமலை பாரதியார்' என்று அழைக்கப்பெற்ற சொல்மறவர் பேராசிரியர் நாவலர் ச. சோமசுந்தர பாரதியார், எம் ஏ , பி.எல்., அவர்களும், 'எம்.எல். பிள்ளை' என்று இலக்கிய உலகில் அழைக்கப் பெற்றவரும் தமிழ் இலக்கிய வரலாற்றுத் தொகுதிகளை வரைந்தவருமான பேராசிரியர் கா. சுப்பிரமணிய பிள்ளை, எம் ஏ., எம்.எல் , (கா சு பிள்ளை) அவர்களுமே அந்த இருபெருமக்கள் ஆவர்

தம் ஆய்வேட்டில் பல இடங்களில் தம் பேராசிரியர் ச. சோமசுந்தர பாரதியார் அவர்களைக் குறிப்பிட்டுள்ளார், கம்பர் தம் காவியத்தில்

சடையப்ப வள்ளலைக் குறிப்பிட்டதுபோல், அந்தக் காலத்தில் ஆய்வேடுகள் எல்லாம் ஆங்கிலத்திலேயே பல்கலைக்கழகத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டும் என்ற நிலை. இலக்கணத்தை ஆராய்ந்து ஆங்கிலத்திலே ஆய்வேடு சமர்ப்பித்து வாகை சூடியவர் அ சிதம்பரநாதர் அவர்கள்

ஆங்கிலத்தில் அவர்தம் ஆய்வுப் பொருள் "Advanced Studies in Tamil Prosody" என்பது. இதைத் தமிழில் பலரும் பலவிதமாக மொழிபெயர்த்துக் கிளத்தியுள்ளனர்.

'யாப்பிலக்கணம்' என்றும், 'தமிழ்ச் செய்யுள் வரலாறு' என்றும்; 'தமிழ்ச் செய்யுள் இலக்கணம்' என்றும், 'தமிழ் யாப்பு' என்றும், 'தமிழ் யாப்பின் உயராய்வு' என்றும், 'தமிழ் யாப்பின் மியாய்வு' என்றும் கூற, 'தமிழ்ச்செய்யுளியல்' என்று கலைக்களஞ்சியம் பத்தாவது தொகுதியும் சுழறுகிறது! அவரவர் கோணத்தில் இவையனைத்தும் சரியான பொருள்களாக இருக்கக்கூடும் என்று ஏற்கலாம். ஆனால்-

தமிழ்ச் செய்யுள் இலக்கணத்தில் ஆய்வு செய்வது எளிதன்று. அவர்தம் மாணவர் டாக்டர் வ.சுப. மாணிக்கனார் குறிப்பிட்டதைப் போல, இப்பொருள் ஆராய்ச்சிக்குரிய அரிய பொருள் என்பதில் ஐயமில்லை 'கல்நார் உரித்தன்ன வன்மையுடையார்க்கே' இத்தகைய பொருளை ஆராய முடியும். தமிழ்கற்று டாக்டர் பட்டம் பெற்றோருள் முதல்வர் ஆவார் சிதம்பரனார். தமிழ்த்துறையின் முதல் டாக்டர் திரு.சிதம்பரநாதனார் அவர்கள் தமிழில் ஆராய்ந்து டாக்டர் பட்டம் பெறலாம் என்ற எண்ணத்தினை நீண்ட நெடுங்காலத்திற்கு முன்னே தமிழகத்தில் உருவாக்கியவர்களே திரு.அ.சி. அவர்கள்தாம். அவர்களுக்கு முன்னர் அந்த நிலையும் நினைப்பும் தமிழகத்தில் இருக்கவில்லை. அவர்கள் ஆசிபெற்று அத்துறையில் ஈடுபட்ட பல மாணாக்கர் இன்று தாய்த் தமிழகத்தில் மாணவச் சிறந்த டாக்டர்களாய் வலிவோடும் பொலிவோடும் உலா வருகின்றனர். செந்தமிழ் வானில் அந்த நிலாக்களை உலா வரவிட்ட பெருமை டாக்டர் சிதம்பரநாதர் அவர்களையே சாரும். இது தமிழன்னைக்கு அவர்கள் புரிந்த தலைத்தொண்டாகும் தமிழ் ஆராய்ச்சி உள்ளளவும் இத்தலைத்தொண்டு நிலைத்த பெயருடன் நீடித்து நிற்கும் என்ற பேராசிரியர் டாக்டர் மெ. சுந்தரம் அவர்களின் உணர்வு பொங்கும் அறிவிப்பு உண்மையேயன்றோ!

இவர் தமிழகத்தில் தமிழில் முதன் முதல் ஆராய்ச்சித் திறமைக்காக டாக்டர் பட்டம் பெற்ற பெரியார். இவர் நின்ற சொல்லர்; நீடு தோன்று இனியர், ஆங்கிலத்தில் அழகாகப் பேசும் நாவலர் முதன் முதல் ஒரு பல்கலைக்கழகத்தின் பொறுப்புத் துணைவேந்தராகப் பணியாற்றும் பேறு பெற்ற தமிழ்ப் பேராசிரியர் இவரே என்று தேற்ற ஏகாரத்தில் குறிப்பிடும்

டாக்டர் நா. பாலுசாமி அவர்களின் கருத்து 'உண்மை வெறும் புகழ்ச்சியில்லை' என்பதையன்றோ நிறுவுகிறது.

''பேராசிரியர் அவர்கள் முதன் முதல் தமிழாராய்ச்சியில் டாக்டர் பட்டம் பெற்றவர்கள், அதன் வாயிலாக அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்குத் தனிப்புகழ் தந்தவர்கள்'' என்ற பேராசிரியர் டாக்டர் ந.சஞ்சீவி அவர்களின் கருத்து எழுத்துக்கு எழுத்து உண்மையன்றோ!

கணக்காயர் நாவலர் ச. சோமசுந்தர பாரதியாரின் தலைமாணவர் மற்றும் தமிழ் வாரிசு என அடையாளம் காட்டும் வண்ணம் அ. சிதம்பரநாதர் வாழ்க்கை விளங்கியது இதோ. அதற்கோர் எடுத்துக்காட்டு

திறம்படைத்த ஆங்கிலப் பெரியவர் ஒருவர் தமிழைக் குறைகூறிய போது, சிதம்பரனார் தாம் ஒரு கூட்டம் கூட்டி அப்பெரியவர் கருத்தை அதே இடத்து மறுத்து மொழிந்தார். அப்பெரியவர் தமக்குப் பெரிய அதிகாரியாயினும் தமிழைக் குறைகூற அவருக்கு உரிமையில்லை. இருக்குமாயின் அதனை மறுத்து நிறைவு செய்ய நமக்கு உரிமை யில்லையா என்பது சிதம்பரனார் கருத்து. நாவலர் சோமசுந்தர பாரதி யாரின் மாணவ வழித்தோன்றல் ஆதலால் அஞ்சாது எதிர்க்கும் உணர்ச்சி சிதம்பரனாரிடத்து அமைந்து கிடப்பதில் வியப்பில்லை.

தமிழ்மொழியினையோ, தமிழ் அறிஞர்களையோ எவரேனும் இழுக் காகப் பேசுவார்களேயாகில், அதனைக்கேட்டு வாளா இரார். மனம் பொறார். அப்பொழுதே கண்டித்து அடக்கும் ஆண்மை பெற்றவர். ஒரு சமயம் மறைமலை அடிகள் தமிழ் ஒரு தமிழா என்று ஒருவர் கூறிவிட, அப்பொழுதே அவர் உளப்பான்மையை மாற்றி அறிவுறுத்தியதை இதற்கு ஓர் எடுத்துக்காட்டாக இயம்பலாம். சென்னையில் எழுத்தாளர் கழகக் கூட்டம் நடந்து கொண்டிருந்தது. அதில் சொற்பொழிவாற்றிய ஒரு புதுமை எழுத்தாளர் தம் பேச்சி னிடையே மறைமலை அடிகள் என்றால் யார் வாயில் நுழையும் மரஞ் செடிகொடிகள் என்றன்றோ கூற வரும் என்று நொடித்துக் காட்டிய போது, முகத்தில் காறி உமிழ்ந்து விட்டு (மேடை நாகரிகம் அன்றென்றாலும்) அது தகும் என அமைதி கூறினார்.

*''மோதி மிதித்து விடுபாப்பா - அவர்*
*முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பா''*

என்ற ஆண்மை மிக்க மகாகவி பாரதியின் பரம்பரை என்று நிலைநாட்டியவர் அ சிதம்பரநாதர்.

இவ்வாறு, தமிழை மட்டுமல்ல; தமிழறிஞர்களை இழித்தும் பழித்தும் பேசியவர்களை இடித்துரைத்துத் தமிழ், தமிழர் மானம் காத்தவர் அவர் அப்படிப்பட்டவருக்குத்தான் உடன்பிறந்தே கொல்லும் நோய்நொடிகள் போல், அவர்பால் பொறாமை கொண்டும், நயமாக வஞ்சித்தும், கீழறுப்பு வேலை செய்த தமிழறிஞர் சிலர் இருக்கவே செய்தனர் என்ற வரலாற்றை

அறியும்போது, இவருக்குக்கூட இப்படிப்பட்டவர்கள் இருந்தார்களா? என்று நெஞ்சம் கனக்கவே செய்கிறது

இவ்வாறு ஆண்மையும், ஆற்றலும் அறிவும் திருவும் வாய்க்கப்பெற்ற அ. சிதம்பரநாதருக்கு அவர் அளித்த ஆய்வேட்டின் அடிப்படையில், தேர்வாளர்களின் பரிந்துரையில் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் 1941ஆம் ஆண்டு டாக்டர் பட்டம் வழங்குவதாக அறிவித்தது.

அவர்பெற்றதோ 1942ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் 9ஆம் நாளில் ஆகும். அந்நாளைய துணைவேந்தர் திரு.எம் இரத்தினசுவாமி, M.A. (cantab); Bar-At-Law, C.I.E., அவர்கள் அந்தப் பட்டத்தில் கையொப்பமிட்டிருக்கிறார். இனி, டாக்டர் பட்டத்தினைப் பெற்றுத் தந்த ஆய்வேடு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தாராலேயே நூலாகவும் வெளி யிடப்பெற்றது.

"Thesis<br>Approved<br>for<br>The Degree of<br>Doctor of Philosophy<br>in<br>The Annamalai University"

என்ற முத்திரைச் சொற்களோடு.

உண்மை இவ்வாறிருக்க பி எஸ். சுப்பிரமணிய சாஸ்திரி என்பார் தமிழ் மொழியின் இரண்டாயிரம் ஆண்டு வரலாற்றை ஆய்வு வழிகாட்டியின்றி ஆராய்ந்து சென்னைப் பல்கலைக்கழகத்தின் வழியாக டாக்டர் பட்டம் பெற்ற முதல்வர் என்ற கருத்தும் உலவுகிறது. இது உண்மைக்கு மாறானது என்றும் கருதப்படுகிறது அது அவரால் வடமொழிக்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சியாகும் என்றும் கருதப்படுகிறது..

தமிழ் யாப்பை ஆராய்ந்த அ. சிதம்பரநாதர் கி பி. 10ஆம் நூற்றாண்டு வரை (being a History of Tamil Prosody upto the 10th Century A.D.) - எனக்காலத்தை வரையறை செய்து கொண்டதை ஈண்டுக் குறிப்பிட வேண்டும். ஆய்வுப் பட்டம் பெற்ற போது அவரது நிலை தமிழ் முதுநிலை விரிவுரையாளர் (Senior Lecturer in Tamil) - தான்.

இந்த ஆய்வு நூலைத் தன் வணக்கத்திற்குரிய பெற்றோர்களுக்குச் சமர்ப்பணம் செய்துள்ளார் இப்படி:

Dedicated<br>to<br>My Parents<br>Varampalamudaiyar

Appu. Amirtalinga Chettiar
and
Theaga. Parvati Ammal

இனி இந்த ஆய்வு நூலில் புகுந்து சில அரிய முத்துக்களைக் காண்பது உவகைதரும் ஒன்றாகும். இந்நூல் இரு நூற்றுப் பத்துப் பக்கங்கள் கொண்டது.

அணிந்துரை, முன்னுரை, எழுத்துப் பெயர்ப்பு ஆகியவை நூலின் முற்பகுதியை அணிவகுக்கப் பன்னிரண்டு இயல்கள் உள்ளன. பிறகு, ஆய்வு முடிவு, கவனத்தில் கொண்ட நூல்கள், அகரவரிசைத் தொகுப்பு அட்டவணை ஆகியவற்றோடு, அச்சிடப்பட்ட இந்நூலில் பிழைத்திருத்தங்கள் (Corrigenda) பகுதியும் இறுதியாக அமைக்கப்பட்டுள்ளது.

பிழைத்திருத்தத்தில் - பத்தொன்பதே சொற்கள்தாம், இவ்வளவு பெரிய நூலில் பிழையாக அச்சில் வந்துள்ளன என்பதைக் கண்ணுறும்போது, அக்காலத்தில் அச்சில் எவ்வளவு கவனமும் நேர்த்தியும் செலுத்தப்பட்டுள்ளன என்பது விளங்கும்.

நூலின் பொருளடக்கம் கீழ்வருமாறு:

1 அறிமுகம் (Introductory)
2. எழுத்து (The Letter)
3. அசை (The syllable)
4 சீர் (The foot)
5. அடி (The Line)
6. ஒலிஇயைபு அல்லது தொடை நயம் (Rhyme or Todai)
7. ஆசிரியப்பா (The Asiriya Verse)
8. வஞ்சிப்பா (The Vanji Verse)
9. வெண்பா ( The Venpa)
10. கலிப்பா (The Kali Verse)
11 பாவினங்கள் அல்லது பிற்சேர்க்கை (The Pavinams or Supplemental meters)
12. செய்யுளில் முன்னுணர்வு (Augury in verse)

இந்நூலுக்கு அணிந்துரை அளித்துள்ள சென்னைப் பல்கலைக்கழகத் தமிழாராய்ச்சித் துறையின் தலைவரும், இணைப் பேராசிரியருமான (Reader) ராவசாகிப் எஸ். வையாபுரிப் பிள்ளை, பி.ஏ., பி எல்., அவர்கள் தன் உரையில்,

“இந்த ஆய்வுப் பொருள் மிக நுண்மையாக ஆராயப்பட்டுள்ளது. செய்யுளியல் பற்றிய முறையான ஆய்வு இதுவரை வேறு யாராலும் ஆராயப்படவில்லை. இந்த வகையில் டாக்டர் செட்டியார் அவர்களின் ஆய்வுதான் முதல் ஆய்வு ஆகும். (It is in the main a general survey of the development of meters in Tamil, and all the works relevent to the subject have been very closely studied. The subject itself is very important, and though general speculation with regard to it has been rife, no systematic research has been done till now. Dr. Chettiar's thesis is the first work of its kind).

அ. சிதம்பரநாதர் அவர்கள் தம் ஆய்வேட்டை எழுதத் தொடங்குவதற்கு முன்பு தமிழ் எழுத்திற்கு ஈடான ஆங்கில எழுத்தை தமிழ் ஓசை, இசை நயங்களுக்கு ஏற்ப ‘எழுத்துப் பெயர்ப்பு’ (Transliteration) ச் செய்து கொண்டார் அஃதாவது தமிழ் மொழியின் சொற்களை ஆங்கில மொழியின் எழுத்துக்களால் எழுதிக் கொண்டார். இது கால்டுவெல் முறையாகும். அவை வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| a - | அ | | ஞ |
| ā | ஆ | | ட |
| i | இ | ṇ | ண |
| ī | ஈ | t | த |
| u | உ | n | ந |
| ¦ | ஊ | p | ப |
| e | எ | m | ம |
| ē | ஏ | y | ய |
| ai | ஐ | r | ர |
| o · | ஒ | l | ல |
| | ஓ | v | வ |
| au | ஔ | | ழ |
| k | க | | ள |
| | ங | | ற |
| c | ச | | ன |

அ சிதம்பரநாதர் அவர்கள் தன் ஆய்வு முன்னுரையில், முதல், இடை, கடைச் சங்கங்களை முறையே First Academy, Second Academy and Third Academy - என்றவாறு குறிப்பிட்டுள்ளார் தொல்காப்பியரின

காலம் கி.மு 5ஆம் நூற்றாண்டு, கி.மு. 3ஆம் நூற்றாண்டு என்றும் வேறு பலவாறும் கூறப்பட்டிருந்தாலும், சரியான காலம் இதுதான் என்று இன்னும் நிறுவப்படவில்லை என்றே கூறியுள்ளார். பனம்பாரனாரும், அதங்கோட்டு ஆசானும் தொல்காப்பியரின் (திரணதுமாக்கினி) வகுப்புத் தோழர்களாக இருந்தனர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

செய்யுளின் ஆக்கக் கூறுகள் (elements) இருபத்தியாறு என்று பட்டியலிட்டுள்ளார்.

1. நொடி அல்லது மாத்திரை 2 எழுத்து அல்லது எழுத்தியல் வகை, 3. அசை அல்லது அமையியல் வகை 4. சொல் அல்லது சீர் 5. வரி அல்லது அடி 6. தொடர்பு அல்லது யாப்பு 7 வழக்கு அல்லது மரபு 8. இசை அல்லது தூக்கு 9 ஒலியியைபு அல்லது தொடை 10 இசை அல்லது நோக்கு 11 செய்யுள் வடிவம் அல்லது பாட்டு 12. எல்லை அல்லது அளவு 13. இனம் அல்லது திணை 14. ஒழுகலாறு அல்லது கைகோள் 15. பேச்சு அல்லது கூற்றுவகை 16 தணிக்கையாளர் அல்லது கேட்போர் 17. இடம் அல்லது களன் 18. நேரம் அல்லது காலம் 19. விளைவு அல்லது பயன் 20 வெளிப்பாடு அல்லது மெய்ப்பாடு 21. விடுபாடு அல்லது விடுபடல் 22. எண்ணத்தொடர்பு அல்லது முன்னம் 23 பொது இயற்கை அல்லது பொருள் 24. வகைப்பிரிவு அல்லது துறை 25. சொல்தொடரியல் அல்லது மாட்டு 26. சந்தம் அல்லது வண்ணம் என்பன அவை.

எழுத்துப்பற்றியும் அசை பற்றியும் கூறியுள்ளார். அசை பற்றித் தொல்காப்பியர் குறிப்பிடுகையில் நேர், நிரை, நேர்பு மற்றும் நிரைபு என நான்கு வகைகளைக் குறிப்பிட்டிருக்கக் காக்கை பாடினியார் இரண்டு வகைகளை மட்டும் குறிப்பிட்டுள்ளார். ஆனால் அவிநயனார் நான்கு வகைகளைக் குறிப்பிட்டுள்ளமையையும் அ.சிதம்பரநாதர் தந்துள்ளார்

அடிகளின் பிரிவுகள் பற்றிக் குறிப்பிடும்போது, அவை நான்கு வகையாகும் எனத் தெளிவுறுத்தியுள்ளார்.

ஆசிரியப்பா வகைகளைக் குறிப்பிடும்போது, அராகம் என்பது வண்ணம் என்று குறிப்பிட்டுள்ளார் தொல்காப்பியர்.

வெண்பாவைப் பற்றிக் குறிப்பிடும்போது, அவர் காலத்தில் வெண்பாவின் இரண்டாவது அடியின் இறுதியில் தனிச் சொல்லோ தனிச்சீரோ வரும் என்று குறித்துள்ளார் மேலும் தொல்காப்பியர் காலத்தில் வெண்பா 12 அடிகளுக்கு மேல் இருக்கக்கூடாது. ஆனால் யாப்பருங்கல அடிப்படையில் 2 அடிக்கு மேல் எத்தனை அடி நீளமும் இருக்கலாம் என்ற நிலை இருந்தது.

மேலும் கலிப்பா, ஒத்தாழிசைப்பா, கலிவெண்பாட்டு ஆகியவை பற்றியும் குறிப்பிட்டுள்ளார் கலிவெண்பாட்டுப் பகுதியில் வெண்கலி

மற்றும் கலிவெண்பா என்ற இரு பிரிவுகள் இருந்ததையும் எடுத்துக்காட்டுகளாகச் சாற்றியுள்ளார்.

பிறகு கொச்சகக் கலி பற்றியும் கொடுத்துள்ளார். சிலப்பதிகாரத்தில் 7வது காதையான கானல்வரியிலும், 17வது காதையான ஆய்ச்சியர் குரவையிலும், 18வது காதையான 'துன்பமாலை' என்பதிலும் தொல்காப்பியர் கருத்துப்படி கொச்சகக் கலியே பயின்று வருதல் ஒருதலை.

அடுத்துவரும் தலைப்பு 'உறழ்கலி' இது தொல்காப்பியர் குறிப்பிட்ட மற்ற மூவகைக் கலிப்பாக்களினின்றும் வேறுபட்டது. அதாவது இது உரையாடல் வடிவ இலக்கியமாகும். எனவே உறழ்கலி என்பது கூற்றும் மாற்றமுமாக வருதலின் அவற்றைத் தொகுத்துச் சரிதமாகக் கூறுதல் அமையாதாகலின் போக்கிலக்கணம் இன்றிச் சுரிதகம் வந்தது என்றார். படைப்பிலக்கிய வடிவத்தில் இது ஒரு புதுமையேயாகும்.

'இனி, பாவினங்கள் அல்லது பிற்சேர்க்கைகள்' என்ற தலைப்பில் ஆசிரியம், வெண்பா, கலி, வஞ்சி, மருட்பா மற்றும் பரிபாடல் இவற்றில் முதன் நான்கும் முதன்மைப் பாவகைகள் ஆகும். அவருடைய காலத்திற்குப் பின்பு வந்தவை மற்ற செய்யுள் வகைகளாகும். பிறகு பாவினங்களான தாழிசை, துறை, விருத்தம் ஆகியவை கடைச்சங்க காலத்திற்குப் பிறகே தமிழ் இலக்கியங்களில் வெளிப்படலாயின போன்ற கருத்துக்கள் இவ்வத்தியாயத்தில் அலசப்பட்டுள்ளன.

பன்னிரண்டாவது அத்தியாயமாம் செய்யுளில் முன்னுணர்வு என்பது தமிழ் இலக்கியத்தில் பிற்காலத்திய கண்டுபிடிப்பாகும் என்கிறார் அ. சிதம்பரநாதர்.

தமிழின் உயிர் நாடியான இலக்கணத்தில் பிற்காலத்தில் களைகள் எனத் தோன்றிய வழுக்களை நீக்கி அதன் தன்மானம் காக்கவே யாப்பிலக்கணத்தை ஆய்வுப் பொருளாக எடுத்துக் கொண்டார் எனத் துணியலாம் பன்னிரண்டாவது இயல் இதையே பரக்கப் பேசுகிறது.

வெண்பாவைப் பார்ப்பனச் சாதி எனவும், ஆசிரியப் பாவை அரச சாதி எனவும், கலிப்பாவை வணிகச்சாதி எனவும், வஞ்சிப்பாவைத் தாழ்ந்த சூத்திரச் சாதி எனவும் யாப்பிலும் நால்வருணம் இடைக்காலத்தில் புகலாயிறறு. பாவகைகளுக்கு மட்டுமின்றிப் பாவினங்களுக்கும் நால்வருணம் கற்பித்தனர் பெற்றோர்க்குச் சொன்ன சாதியே பிள்ளைகட்கும் என்றனர்

மேற்கூறியவாறு வருணத்தாக்கம் ஏற்பட்டதன் விளைவாக இயற்கைக்கும் பகுத்தறிவிற்கும் ஒவ்வாத பாட்டியல்கள் எழுந்தன குற்றெழுத்தெல்லாம் ஆண்பால் என்வும், நெடிலெல்லாம் பெண்பால்

எனவும், சுட்டும் ஆய்தமும் அலி எனவும் பாட்டின் முதற்சீரில் இவை மாறிவரின் செய்யுள் வழுவெனவும் பாட்டியல் இலக்கணம் விதிக்கின்றது.

உயிர் பன்னிரெண்டும் க,ங.ச.ஞ,ட,ண, என்ற ஆறு மெய்யும் பார்ப்பனச் சாதி என்றும், த, ந, ப, ம, ய, ர என்ற ஆறு மெய்யும் அரச சாதி எனவும், ல, வ, ற, ன நான்கும் வணிக சாதி எனவும், ழ, ள இரண்டும் சூத்திரச் சாதி எனவும் வகுக்கின்றது. தமிழ் மொழிக்கே உரிய ழகரம் எந்தச் சாதி ஆகின்றது என்பதனைத் தன்மானத்தோடு நினைந்து பார்க்க வேண்டும்.

இத்தகைய வருணப் போக்கும், பொய்ப் பொருத்தங்களும் 'யாப்பிலக்கணத்திற் புகுந்து இலக்கியப்பாழ் செய்திருப்பதனை உணர்ந்தார் சிதம்பரனார். இலக்கிய வளர்ச்சி மரபைப் பினபற்ற வேண்டும என்றாலும், அவ்வளர்ச்சிக்குத் தடையாக இருப்பவை தாமே தொலைந்து போய்விடும் என்ற கோட்பாட்டினை 'மரபும் இலக்கிய வளர்ச்சியும்' என்ற கட்டுரையில் விளக்குவர் சிதம்பரனார்.

"Augury in Verse' என்ற தம் ஆய்வுப் பகுதியில் செய்யுட் பொருத்தம் பற்றிய வரலாற்றையும் விதிகளையும் ஓர்ந்து சாடி இவையெல்லாம் முரண்கள் என்று முடிவு கூறினார்.

வெண்பா அந்தணனுக்கு உரியது. ஆசிரியப்பா அரசனுக்குரியது என்றால் வெண்பாவால் எழுந்த களவழி நாற்பது, சோழன் கோச் செங்கனான் மேல் பாடப் பெற்றிருப்பது வழுவா? வஞ்சிப்பா வேளாளனுக்கு உரியது என்றால், வேளாளர்களாகிய ஆய் மேலும், பெருஞ்சாத்தன் மேலும், அந்தணன் விண்ணந்தாயன் மேலும் ஆசிரியப்பாவால் பாடியன வழுவா?

ஆண்பாற் செய்யுள் குற்றெழுத்தில் தொடங்க வேண்டும் என்றால் 'ஆரியம் நன்குணர்ந்தோன்' கம்பரைக் கவிமணி நெட்டெழுத்தில் பாடியிருப்பது எழுத்துப் பொருத்தமாகுமா? பெண்பாட்டு நெட்டெழுத்தில் தொடங்க வேண்டும் எனின், 'அன்பின் வெற்றி' என மீராபாயைக் கவிமணி குற்றெழுத்து முதலாகப் பாடியிருப்பது குற்றமா? என இவ்வாறு சிதம்பரனார் எல்லாக் காலத்து இலக்கியங்களிலிருந்தும் மேற்கோள் காட்டி பாட்டியல் கூறும் பத்துப் பொருத்தங்களும் மிகச் செயற்கையானவை, மரபற்றவை, பகுத்தறிவுக்கு ஒவ்வாதவை, தமிழ்ப் பண்பில்லாதவையெனத் தெளிவித்துள்ளார்

தம் ஆய்வில் அவர் தெரிந்து - தெளிந்து எழுதிய ஆங்கிலப் பகுதி இதோ!

"... All these considerations ought therefore to make it acceptable that several foreign ideas were imported as prosodial theories

**into the Tamil Language where before such artificialities did not exist. To put it briefly, we might may that Pannirupattyal does not represent any improvement upon the older porosodies but it has done great violence to the genius of the Tamil language.**

**Thus it is evident that looking for augury in verse was not a practice of the ancient Tamilians.**

இதே கருத்தை அவர் மாணவர் பேராசிரியர் செ. வைத்தியலிங்கன் அவர்கள், செந்தமிழ்க் காவலர் சிதம்பரநாதனார் சிந்தனைத் திறம் எனும் சிறு பனுவலில், பாட்டியல் நூலால் செய்யுளியற்றுவார்க்கு விதிக்கப்பட்ட பத்து வகைப் பொருத்தங்கள் (மங்கலம், சொல், எழுத்து, தானம், பால், உண்டி, வருணம், நாள், கதி, கணம்) தமிழ் மரபிற்கும் பண்பாட்டிற்கும் ஒவ்வாதவை என்பதும், முற்கால யாப்பு நூல்களைவிட முன்னேற்றம் உணர்த்துவதாகப் பன்னிருபாட்டியலைக் கருத முடியாது என்று அ. சிதம்பரநாதர் குறிப்பிட்டிருப்பதை அவர் எடுத்துக்காட்டியிருப்பது குறிப்பிடத்தக்கது.

'தமிழ் மொழிஇயல் துறையின் தந்தை' என அழைக்கப் பொருத்தமானவர் அ. சிதம்பரனார் அவர்களைத் தவிர வேறு யாரே உளர்?

தமிழ்மொழியுணர்வும், தமிழின உணர்வும் அதே சமயத்தில் ஆங்கில அறிவும் வாய்க்கப்பெற்ற அ. சிதம்பரநாதர், ஆய்வுத் துறையிலும் இக்கூறுகளை மெய்ப்பித்துச் செம்மாந்து வீற்றிருந்ததால்தான் அவர் நாவலர் ச.சோ. பாரதியாரின் உண்மை வாரிசானார்.

அ. சிதம்பரநாதனாரின் ஆற்றலையும், தோற்றத்தையும், அருங்குணங்களையும் போற்றி, தன்னோடு அவர் அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பேரவையில் (Senate) உறுப்பினராகத் திகழ்ந்த பான்மையையும் வியந்து ஐம்பதுகளில் அப்போதைய சென்னை அரசின் நிதியமைச்சராகத் திகழ்ந்த திரு.பி. கோபாலரெட்டி அவர்கள் பாராட்டி புகழ்ந்துள்ளார்.

# 6
# தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினர்

பேராசிரியர் அ சிதம்பரநாதர் அவர்கள் மிகச் சிறந்த கல்வியாளராக மட்டும் தமிழகத்தில் தடம் பதிக்கவில்லை மிகச்சிறந்த மக்கள் தொண்டராகவும் திகழ்ந்தார். அந்தக் காலத்தில் அவரளவில் சட்டமன்ற மேலவை உறுப்பினர் பதவி என்பது அசாதாரணமானது.

எந்தத் தமிழை, தமிழாசிரியர்களை உயிராகவும், ஊனாகவும் நினைத்துத் தொண்டு செயதாரோ அதே தமிழும் தமிழாசிரியரும் தாம் தங்கள் பிரதிநிதியாக அவரை அந்தப் பொறுப்பில் அமர வைத்து அழகு பார்த்தனர்.

அவர் அப்பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றிய வரலாற்றை அறிவதற்கு முன்பு, மாண்பு நிறைந்த தமிழகச் சட்ட மேலவை பற்றிச் சிறிது நோக்குவது பொருத்தமானதாகும்.

முதறிஞர் குழு என்றும், மூத்தோர் அவை என்றும் கண்ணியமாக அழைக்கப்பெறும் சட்ட மேலவையை (Legislative council)யை 1921ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 13ஆம் நாளில் அப்போதைய சென்னை ஆளுநராக இருந்த மேதகு லார்டு வெல்லிங்டன் தொடங்கி வைத்தார். இந்த அவையில் உறுப்பினராகப் பல்வேறு தரப்பாரிடமிருந்து பல்வேறு வகைகளில் நியமனங்களும் தேர்தல்களும் நிகழ்த்தப்பெற்று உறுப்பினர்கள் ஆவது உண்டு. சுருங்கக்கூறின் துறை வல்லுநர் சமூக சேவகர்கள் நியமனம் ஆவதோடு, துறைசார்ந்த தொகுதிகளில் குறிப்பிட்ட சாரரால் தெரிவுசெய்யப்பட்டு மேலவை உறுப்பினர் (Member of Legislative Council)-ஆவதும் உண்டு. அந்த வகையில், முதல் பெண் உறுப்பினராக மருத்துவத் துறையில் புகழ்பூத்து விளங்கிய டாக்டர் முத்துலட்சுமி அம்மாள்தான் நியமிக்கப் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது

இதற்குப் பிறகும் இந்தியா தன் விடுதலைப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தியது. ஒருவாறு எண்ணற்ற இழப்புகளுக்குப்பிறகு 1947 ஆகஸ்ட் 15இல் விடுதலை அடைந்தோம் பிறகு இந்திய அரசமைப்புச் சட்டத்தின் கீழ் மேலவை 1952ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 21ஆம் நாள் முதல் பணியாற்றத் தொடங்கியது அப்போது மேலவை உறுப்பினர்களின் எண்ணிக்கை 72, அவர்களில் பன்னிருவரை ஆளுநர் நியமனம்

செய்வார். பேரவை, பட்டதாரிகள், ஆசிரியர்கள் மற்றும் உள்ளாட்சி மன்றங்கள் ஆகிய தொகுதிகளிலிருந்து எஞ்சிய இடங்களுக்கு உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

இதே முறைதான் பின்னரும் தொடர்ந்தது. அகில உலகப் புகழ்பெற்ற அறுவைச் சிகிச்சை நிபுணரும் சென்னை மாகாண முன்னாள் மருத்துவத் துறைத் தலைவருமான டாக்டர் பி வி செரியன் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு 1964ஆம் ஆண்டுவரை, 12 ஆண்டுகள் தலைவராகப் பணியாற்றினார். அவருக்குப் பின் முன்னாள் அமைச்சரும், சிறந்த பாராளுமன்ற வாதியுமான திரு எம்.ஏ. மாணிக்கவேலு அவர்கள் தலைவராகத் தேர்வுபெற்று 1970 வரை பணியாற்றினார்

மேற்கூறப்பட்ட இரு பெருந்தலைவர்களில் தலைமையில் நம் பேராசிரியப் பெருந்தகை சட்டமன்ற மேலவை உறுப்பினராக அரும்பணி ஆற்றினார்.

அக்காலத்தில் தனியார் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் பணியாற்றி வந்தவர்களுக்குப்பணிப் பாதுகாப்பு இல்லாத நிலை இருந்தது. ஆசிரிய உறுப்பினர்கள் ஆசிரியர்களுக்குப் பணிப்பாதுகாப்பு வேண்டுமென்று அரசை வற்புறுத்தி வந்தனர். ஆசிரியர்களின் நியாயமான இந்த வேண்டுகோளை ஏற்று அன்றைய முதலமைச்சர் தனியார் பள்ளிகளையும், தனியார் கல்லூரிகளையும் முறைப்படுத்தும் இரு சட்டங்களை 1973இல் நிறைவேற்றினார். இச்சட்டங்களின் பயனாக ஆசிரியர்கள் பணிப் பாதுகாப்புப் பெற்றனர்.

அடுத்து, 10+2+3 அமைப்பை அகில இந்திய அளவில் முதன் முதலில் தமிழக அரசு ஏற்றுக்கொண்டு செயல்பட்டது. பல மாநிலங்களில் +2 வகுப்புகள் அமைப்பதில் கருத்து வேறுபாடுகள் இருந்தபோதிலும், தமிழகத்தில் +2 வகுப்புகள் பள்ளிகளில்தான் இருக்க வேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டதற்குச் சட்டமன்றத்தில் செயலாற்றிய ஆசிரியர்களே காரணம் பிறகு தமிழகத்தைப் பார்த்துப் பல மாநிலங்கள் இம்முறையைக் கையாளத் தொடங்கின...

இவை, எழுபதுகளில் ஆசிரியப் பிரதிநிதிகள் சட்டமன்ற மேலவையில் ஆற்றிய பணியின் விளைவுகள். ஆனால், இவற்றிற்கும் மேலான உயிர்ப் பிரச்சினைகளை எல்லாம் வெற்றிகரமாக்கி அடிப்படை அமைத்துத் தந்தவர்கள், 1950களிலும் 60களிலும் மேலவை உறுப்பினர்களாக இருந்த சான்றோர்கள் ஆவர். அவர்களில் முதன்மையானவர் அ சிதம்பரநாதர் அவர்கள்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் 1936 முதல் 1958 வரைத் தமிழ்ப் பேராசிரியராகவும், தமிழ்த்துறைத் தலைவராகவும் ஆற்றிய

பணியை முடித்துக் கொண்டு வெளிவந்தார் அ. சிதம்பரநாதர் அவர்கள். இதற்கிடையில் அவர் ஏழு ஆண்டுகள் மாநிலத தமிழாசிரியர் கழகத் தலைவராயிருந்து மாநிலத் தமிழாசிரியர்களுக்குப் பெருந்தொண்டுகள் புரிந்து வந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் தமிழகப் புலவர் குழுவின் செயற்குழுத் தலைவராகவும் இரண்டாண்டுகள் பணியாற்றியுள்ளார்.

எனவே, மாநிலம் முழுதும் ஒரு தொகுதியாக இருநத ஆசிரியர் தொகுதியில் 1958ஆம் ஆண்டுத் தேர்தலில் சட்டமன்ற மேலவை உறுபபினராகக் கடுமையான போட்டிக்கு இடையில் ஆசிரியர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார்

பின்னர் தொகுதிகள் பிரிக்கப்பட்ட பிறகு நடந்த 1964ஆம் ஆண்டுத் தேர்தலில் வடஆர்க்காடு-தென்ஆர்க்காடு ஆசிரியர்கள் தொகுதியில் கடும் போட்டிக்கு இடையில் மீண்டும் வாகைசூடி வரலாறு படைத்தார் அதாவது 1958 முதல் 1966 மேற்கூறப்பட்ட இரண்டு தேர்தல்களிலும் பெற்ற வெற்றியைப் பொதுவாக ஆசிரியர் அனைவரின் நலத்திற்கும் தமிழாசிரியர் நலத்திற்கும் பயன்படுத்திப் பாடுபட்டார்.

அ. சிதம்பரநாதர் அவர்கள் மேலவை உறுப்பினராக அரும்பாடுபட்ட சிதம்பரம் புலவர், உழைப்பிற்கு அஞ்சா உத்தமர்,சிதம்பரநாதர் தலைவராக இருந்தபோது, தமிழகத் தமிழாசிரியர் கழகத்திற்குப் பொதுச் செயலாளராகப் பணியாற்றிய வாழ்க்கை வழி, மரங்கள், காதல் காவியம், இலக்கியக் கனவு ஆகிய நூல்களின் ஆசிரியராக உள்ள 'புலவர் முறுகேசம் பிள்ளை' என்ற முதுபெரும் புலவர் த.முருகேசன் அவர்களும், அ சிதம்பரநாதர் அவர்களின் அன்பு மாணவராவர். அந்தப் பகுத்தறிவு-பட்டறிவுப் பழம் கூறுகிறது மூப்பின் காரணமா மென்மையான குரலில்-

''அ.சி.அவர்கள் எம் எல் சி யா ஆக்க என்னாலான தொண்டுகளைச் செய்தேன். காரணம் தமிழாசிரியர் நிலை உயர வேண்டும் என்ற ஒரே காரணத்தால்தான் என ஆசிரியரை எப்பாடு பட்டேனும்வெற்றிபெறச் செய்ய வேண்டும் என உறுதிபூண்டேன் அதற்கும் ஒரு காரணம் இருந்தது.

நான் 1942-43இல் கள்ளக்குறிச்சியில் தமிழாசிரியராக வேலைசெய்த போது அப்பள்ளியில இருந்த தலைமை ஆசிரியர் கிருஷ்ணசாமி ஐயங்கார் என்பவர், தோவுப் பணிகளைத் தமிழாசிரியர்களுக்கு மட்டும் தர மறுத்துவிட்டார் மற்ற ஆசிரியர்களுக்குத் தந்தார். ஏன் எங்களுக்கு இப்பணியைத் தரக்கூடாது? என்று நான் கேட்டபோது ''உங்களுக்கு அதைச் செய்ய அருகதை இல்லை எனவே தமிழாசிரியர்களுக்குத் தர மாட்டேன்'' என்று கூறிவிட்டார் என்பது நோக்குதற்குரியது.

'அ.சி அவர்கள் மேலவை உறுப்பினரானது தமிழாசிரியர்களுக்கு மிகவும் உதவியாக இருந்தது. தமிழாசிரியர்களுக்கு அப்போதுதான் மதிப்பே ஏற்படத் தொடங்கியது. தமிழாசிரியர் கழகம் வாழ்ந்தது. கல்வி அமைச்சராகவும் பிறகு முதலமைச்சராகவும் திகழ்ந்த எம்.பக்தவத்சலம் அவர்கள் மிகுந்த மரியாதை வழங்கினார். மொத்தத்தில் தமிழாசிரியர்கள் அனைவரும் இன்று மானத்தோடு, வாழ வழிவகுத்தவர் அ.சி.அவர்கள்தாம்' என்று ஒரே மூசசில் கூறியது இங்கு நினைவு கூரற்பாலதாகும்.

அ. சிதம்பரநாதர் அவர்களின் மேலவை உறுப்பினர் வெற்றிக்கு மிகவும பாடுபட்டவர்களில் வித்துவான் நா.இராமையா பிள்ளை, திருச்சிப் பேராசிரியர் ஐயன் பெருமாள் கோனார் பேராசிரியா அன்பு கணபதி போன்றவர்களும் குறிப்பிடத்தகுந்தவர்கள்.

'தமிழ்நாடு சட்டமன்றப் பவளவிழா-சட்டமன்றப் பேரவை வைரவிழா மலர்' என்னும் வரலாற்று ஆவணத்தில்-

21.04.1958 அன்றுள்ளவாறும்,
21 04.1960 அன்றுள்ளவாறும்,
31.03.1962 அன்றுள்ளவாறும்,
01.05.1962 அன்றுள்ளவாறும்,
01.05.1964 அன்றுள்ளவாறும்,
21.04.1966 அன்றுள்ளவாறும்,
21.09.1966 அன்றுள்ளவாறும்,

அ.சிதம்பரநாதர் அவர்கள் சட்மன்ற மேலவையில் தொண்டாற்றி உள்ளார்கள்.

அனைத்துத் தரப்பு ஆசிரியர் நலம், குறிப்பாகத் தமிழாசிரியர் நலம், அறநிலையத்துறை, உள்ளாட்சித்துறை, உயர்கல்வித்துறை போன்ற பல்வேறு துறைகளின் வளர்ச்சிக்கு அவரது (இருமுறை) பதவிக்காலங்களில் அரசுடன் அறிவுப்பூர்வமாக வாதாடியுள்ளார், போராடியுள்ளார், ஆலோசனைகளையும் வழங்கியுள்ளார்.

கோவில்களில் நிரந்தரமான இரும்பு உண்டியல் வைப்பதன் தொடர்பாக இரட்டைப்பூட்டு(Doubld-lock System) முறையை அமல்படுத்தலாம் என்ற யோசனையை அறநிலையத் துறைக்குத் தெரிவித்துள்ளார். திருவட்டீஸ்வரர் கோயில் உண்டியல் பிரச்சனையின் போது மேற்கூறிய யோசனையைத் தெரிவித்துள்ளார் மேலவையில்.

1962ஆம் ஆண்டு நவம்பர் முதல் தேதியில் கேள்வி நேரத்தில் மேலவையில் அ.சிதம்பரநாதர், வடஆர்க்காடு, தென்னார்க்காடு

மாவட்டங்களில் உள்ள நகராட்சி மன்றங்களில் பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள் வெற்றிடங்கள் கொண்ட பட்டியல்கள் தயாரிக்கப்பட்டு அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனவா என்ற வினாவை எழுப்பினார். அதற்கு அமைச்சர், அவை விழுப்புரம், ஆம்பூர், அரக்கோணம், வாலாஜாபத் ஆகிய நான்கு என மறுமொழி தந்தார்.

இதே கட்டத்தொடரில், தொடக்கக் கல்வி மற்றும் உயர்நிலைப் பள்ளிக் கல்வி தொடர்பாக ஆற்றிய உரை வருமாறு:

This council recommends to the government that a committee be constituted to review to whole position of Elementary and Secondary Education in the State and the suggest measures necessary to make available facilities for Elementary and Secondary Education particularly in the rural areas so that a definite plan may be evolved which will not be subjected to frequent changes'.

இத்தீர்மானத்தினுடைய கருத்து. இதுகாறும் நம்முடைய மாநிலத்திலே தொடக்க நிலைக் கல்வி, உயர்நிலைக் கல்வி இவற்றின் நிலைபற்றி ஒரு மதிப்பீடு செய்யப்பட வேண்டும் என்பது 'Review' என்று தீர்மானத்தில் இருப்பது 'புனர் ஆலோசனை' என்று மொழி பெயர்ப்பில் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த மாதிரி என் கருத்து இல்லை. A critical examination of the position is what is wanted. புனராலோசனை செய்ய வேண்டும் என்பது என்னுடைய நோக்கம்

-அன்று இப்பொழுது கிடைக்கக்கூடிய வசதிகளை எல்லாம் நாட்டு மக்களுக்கு, நாட்டுப்புற மக்களுக்கு அதிகமான அளவுக்குப் பயன்பட வேண்டிய முறையில் செயலாற்ற வேண்டும் என்பது நோக்கம். இதற்காக ஆலோசனை கூறுவதற்காக கல்வி நிபுணர்கள் அடங்கிய குழு ஒன்று அமைக்க வேண்டும் என்பது தீர்மானத்தின் நோக்கம். அதேமாதிரி, அந்தக் குழு ஆலோசனை சொல்லுகிறபொழுது நல்ல தெளிவான, பலமான, உறுதியான திட்டம் தருமேயானால் அடிக்கடி மாற்றப்படாத திட்டம் தருமேயானால் நல்லதாக இருக்கும் என்ற கருத்தில் அந்தக் குழு அமைக்கப்பட வேண்டும் என்று நான் இந்தத் தீர்மானத்தில் சொல்லியிருக்கிறேன். நம்முடைய மாநிலத்தில் தொடக்க நிலைக் கல்வி பெருவாரியாகக் கொடுக்கப்பட்டு வருகிறது என்பது தெளிவு. தம்முடைய மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவுக்குள் பள்ளிக்கூடம் போகும் வயதுடைய குழந்தைகள் பெரும்பான்மை யானவர்கள் பள்ளிக்கூடத்திற்கு வந்து சேரும் வகையில் திட்டம் வகுக்கப்பட்டிருகிறது என்பது உண்மை. அந்தப் பரவலான வகையில் இந்தக் கல்வி தொடக்கநிலையில் கொடுக்கப்படுகிறதா என்பதைச் சீர்தூக்கி ஆராய வேண்டும் ஆராய்ந்து இந்தக் குழு சொல்ல வேண்டும் என்பது கருத்து

உயர்நிலைக் கல்வி மாத்திரம் தரமாக இருந்தால் போதுமா என்பதைக் கேட்கிறேன். அபோல் அடிப்படைக் கல்வியாக இருக்கிற கல்வி தொடக்க நிலைக் கல்வி தரமுடையதாக இருக்க வேண்டாமா? அந்த அஸ்திவாரம் தரம் உடையதாக இருந்தால்தானே மேலே எழுப்பப்படுகிற கல்விக் கட்டிடம் ஒழுங்காக அமையும்? ஆகையினால் இம்மாதிரியான நோக்கம் சரிதானா என்று அந்தக் குழு ஆராய்ந்து சொல்ல வேண்டும் என்று எதிர்பார்க்கிறேன். Emphasis in both primary Education and secondary Education should be on improving the quality and content of education.

'ஒன்றிலே மாத்திரம் தரம் அதிகமாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பதும், இன்னொன்றில் பெருவாரியாக எண்ணிக்கையைப் பெருக்க வேண்டும் என்று சொல்லுவதும், அதை எதிர்பார்த்து இருப்பதும் பொருந்தாது என்பது என்னுடைய அழுத்தமான நம்பிக்கை'.

இனி 1964 மார்ச் 2ஆம் நாளில் நடந்த மேலவைக் கூட்டத் தொடரில், முதலமைச்சர் எம்.பக்தவத்சலம் அவர்களிடம் ''ஐயா, விழுப்புரம் நகராட்சி மன்றம் ஆணையை நிறைவேற்றி வைத்த பொழுது அங்கிருந்து முன்னர் வேலையினின்று தற்காலிகமாக நீக்கப்பட்ட தலைமை ஆசிரியர்கள், மற்ற ஆசிரியர்கள் திரும்பவும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பொழுது, இடைக்கால சம்பளம் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டாதா என்பதை அறிய விரும்புகிறேன்' என்று வினாத்தொடுத்ததன்மூலம் அ.சிதம்பரநாதர் கொண்ட அக்கறை புலனாகும்.

அதே கூட்டத்தொடரில், சென்னை பூங்காக்கள், விளையாட்டு மைதானம், வெற்றிடங்கள் பராமரிப்புச் சட்டம் 1959இன்படி மேற்படி பகுதிகளைக் கொண்ட நகராட்சி மன்றங்களில் பட்டியல் பற்றிய தகவலைக் கோரியபோது, உள்ளாட்சித்துறை அமைச்சர் பட்டியலை-

1) குடியாத்தம்
2) விழுப்புரம்
3) ஆம்பூர்
4) கொளச்சல்
5) தாராபுரம்
6) குழித்துறை
7) கோபிச்செட்டிப்பாளையம்
8) திருப்பத்தூர்
9) வாணியம்பாடி
10) வாலாஜாபேட்டை.

என்றவாறு தந்துள்ள போதும், இவைகளில் ஏதேனும் ஆக்கிரமிப்பு

நிகழ்ந்துள்ளதா என்றும் கேட்டுத் தெரிந்துகொண்டது நகராட்சிநிர்வாகம் செம்மையாக நடக்க வேண்டுமே என்ற அக்கறை இருப்பதும் தெரிந்தது.

இனி, 1964-65ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் (Budget)-தாக்கல் செய்யப்பட்டதையொட்டி நடந்த பொதுவிவாதத்தில் கலந்துகொண்டு அ.சிதம்பரநாதர் அவர்கள் ஆற்றிய உரை குறிப்பிடத்தக்கது.

'இந்த ஆண்டு நம் முன்னால் வைக்கப்பட்டுள்ள வரவு-செலவுத் திட்டத்தில் மாநிலத்தின் வளர்ச்சிக்கு நல்ல திட்டங்களை உருவாக்கியிருப்பது குறித்து முதற்கண் நான் வரவேற்றுப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். சிறப்பாகக் கல்வித்துறையிலே 141 கோடி ரூபாய் பட்ஜெட் போட்டிருக்கிற நம்முடைய மாநிலநத்தில் 30 கோடி நாம் கல்விக்கு ஒதுக்கி வைத்திருக்கிறோம் என்பது பெருமகிழச்சிக்குரிய செய்தியாகும். மூன்று நான்கு ஆண்டுகளுக்கு முன்னாள் அது 1/6 பங்காக இருந்தது இப்போது ஏறத்தாழ 1/4 பாகத்திற்கு வருகிறது. கல்வி அமைச்சரும் பொருளாதார அமைச்சரும் ஒருவராக இருக்கின்ற காரணத்தால் என்று ஒரு பக்கம் நினைத்தாலும், இன்னொரு பக்கம் மந்திரிசபை அவ்வாறு செலவு செய்வது நல்லது என்பது குறித்துப் பெரும் அளவுக்குக் கல்விக்காக ஒதுக்கி இருப்பது குறித்து மகிழ்கிறேன், பாராட்டுகிறேன். கல்வித் துறையிலே பல்கலைக்கழகத்துக்காக ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கற பணம் ஒரு கோடியே 53 லட்சம். இதிலே சென்னைப் பல்கலைக் கழகத்துக்கு 20 லட்சமும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்குப்11 லட்சம் சொச்சமும் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிற செய்தி குறித்து, இந்தப் பல்கலைக் கழகங்கள் விருத்தியடையக்கூடிய முறையில் அரசாங்கம் பணம் ஒதுக்கியிருப்பது குறித்துப் பாராட்டுகிறேன். அதே மாதிரி இடைநிலைக் கல்விக்கு (Secondary Education) அதாவது 1961-62இல் $5^1/_4$ கோடியாக இருந்தது. இப்போது வருகின்ற ஆண்டில் $9^1/_4$ கோடியாக அபிவிருத்தி அடைவது மகிழ்ச்சிக்குரிய செய்தி ஆகும். அதே மாதிரி தொடக்க நிலைக் கல்வியைப் பொறுத்தவரையில் 1961-62இல் $11.^3/_4$ கோடி செலவினத்தில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. வருகிற ஆண்டில் $13.^3/_4$ கோடியாக உயர்த்தப்பட்டிருப்பது மகிழ்ச்சிக்குரியது. ஒரு பக்கம் இவ்வளவு பணம் நாம் கல்விக்காகத் திட்டம் வகுத்துச் செலவினம் ஏற்படுத்தியிருக்க ஏன் தரக்குறைவு ஏற்படுகிறது என்று சிலர் சொல்லுகிறார்கள் என்பது விளங்கவேயில்லை. தரக்குறைவு என்பதுதான் என்ன என்று சிந்திக்க வேண்டும் ஒருவருக்குத் தரக்குறைவு என்று தோன்றுவது, இன்னொருவருக்குத் தரக்குறைவாகத் தோன்றாது. ஒருவருக்குத் தரமானதாகத் தோன்றுவது இன்னொருவருக்குத் தரமற்றதாகத் தோன்றும். இதற்கு அவரவர்களின் மனோநிலையும்

சூழ்நிலையுமே காரணம் அதன் காரணமாகத்தான் சந்தேகங்கள் எழுப்பப்படுகின்றன, என்பது மட்டும் தெளிவு.

நிறைய மாணவர்களைப் பள்ளியில் சேர்ப்பதாலோ, மதிய உணவு காரணமாகவோ, வேறு காரணத்தை முன்னிட்டு நிறைய மாணவர்கள் வந்து சேர்வதால் தரம் குறைந்துவிட்டது என்று சொல்வதை நான் ஒப்புக்கொள்ளத் தயாராக இல்லை. நம்முடைய நாட்டில் அறிவுப் பசியைப் போக்க ''மம்மர் அறுக்கும் நல்ல மருந்தை'' அவர்களுக்குக் கொடுக்க அரசாங்கம் முன் வருகிறபோது, கட்டமாகப் போய்விட்டது பள்ளிகளில் அதனால் தரக்குறைவு என்று சொல்லுகிற கருத்து ஒவ்வாத கருத்து என்றுநான் உறுதியாக நம்புகிறேன் சில நேரத்தில் ஒப்பிட்டுப் பார்த்தால், பள்ளிக்குக் கட்டடம் இல்லை. Secondary School-ல் கட்டடம இல்லாமல் 1300 பள்ளிகள் திறந்தவெளியில் நடத்துகிறார்கள். அதெல்லாம் சரியா? தரம் குறைந்துவிட்டது'' என்றெல்லாம் பேசுகிறார்கள். பள்ளிக் கட்டடத்தை வைத்துத் தரத்தை நிர்ணயிப்பது ஒக்குமா என்பது எனக்குத் தெரியவில்லை. கட்டடமோ, சுண்ணாம்பும், வெறுங்கல்லுமோ உண்மையில் கல்வி ஆகிவிடமாட்டா. கல்வியை, மாணவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்களின் சேவையையும், மாணவர்களின் அறிவையும் வைத்துத்தான் நிர்ணயம் செய்ய வேண்டும் என நான் நினைக்கிறேன். அப்படிப் பார்ப்போமானால், ஆசிரியர்கள் எந்த வகையிலும் திறமைக்குறைவானவர்கள் இல்லை. நன்றாக உணர்ந்து சொல்லிக் கொடுக்கிறார்கள். பத்தாண்டுகளுக்கு முன்னால் இருந்த கல்வியைக் காட்டிலும், இப்போது ஆசிரியர்களின் நிலை, பொருளாதார வகையிலும் ஓரளவு உயர்ந்திருக்கிற காரணத்தால் அவர்கள் மிக ஊக்கம்கொண்டு உழைத்துச் சொல்லிக் கொடுக்கிறார்கள்.

கலாஷேத்திரத்தில் கரைக்குள்ளே வைத்து கல்வி கற்பிக்கப்படுகிறது.

மேற்கூறிய அவரது உரை, தரமான கல்வி எது என்பதை எவ்வாறு கணிக்க வேண்டும் என்ற அறிவுரையைக் கொண்டிருப்பது விளங்கும்

*சென்னை மாகாணம் என்பது தமிழ்நாடு என்ற வரலாற்றுப் புகழ்பெற்ற* பெயர் மாற்றம் ஏற்பட்டது பேரறிஞர் அண்ணாவின் ஆட்சிக் காலத்தில்தான் என்றாலும், அதறகான அடித்தளம் 1964இல் இடப்பட்டு விட்டது என்பது வரலாற்று உண்மை

1964, மார்ச் 9ஆம் நாள் நடந்த சட்டமன்ற மேலவை நடவடிக்கைகளை அறிந்தோர் அல்லது அவற்றை நினைவில் வைத்திருப்போருக்கு விளங்கும். அந்நாளில் தமிழ்நாடு என்ற பெயர் மாற்றத்தை வற்புறுத்தி திரு கே எஸ். அப்துல் வகாப், டாக்டர் அ. சிதம்பரநாதர் ஆகியோர் உரையாற்றியுள்ளனர்.

தன் உரையில் திரு.அப்துல் வகாப் அழுத்தந்திருத்தமாக 'இன்றைக்கு அது மாற்றப்படாவிட்டாலும், இது தொடர்ந்து மக்களுடைய கோரிகையாக இருப்பதால், மற்றொரு நாளைக்கு மெட்ராஸ் ஸ்டேட் என்பது தமிழ்நாடு என்று நிச்சயமாக மாற்றப்படத்தான் போகிறது. மாற்றக்கூடிய பெருமையை இப்போதிருக்கிற அமைச்சரவை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று நான் மிகவும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன் என்றார். ஆனால், அந்தப் பெருமை அன்றைக்கு இருந்தவர்களுக்குப் போய்ச் சேரவில்லை. அண்ணாவைத்தேடி வந்தது அது. பேரறிஞர் அண்ணாவின் ஆட்சிக்காலத்தில்தான் சென்னை மாகாணம் என்ற பெயர் நீக்கப்பட்டு தமிழ்நாடு' என்று பெயர் சூட்டப்பட்டது. அந்த நன்னாள் 18.7.1967 ஆகும்.

தமிழ்நாடு பெயர் மாற்றத்தை வழிமொழிந்து டாக்டர் அ சிதம்பரநாதர் ஆற்றிய உரை வரலாற்றுச் சிறப்புமிக்கதோர் அரிய உரையாக அமைந்தது இதோ, அ.சிதம்பரநாதா பேசுகிறார்:

''தமிழ்நாடு என்ற பெயர் இன்று நேற்றுத் தோன்றியதன்று. தொல்காப்பியர் காலமான 2500 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழ்நாடு என்ற பெயர் இருந்து வருகிறது.'தண்டமிழ் வரைப்பு' என்று சில சங்ககால இலக்கியங்கள் வழங்குகின்றன. கவிஞர் சுப்பிரமணிய பாரதியார் அவர்கள் தமிழ்நாடு என்றுதான் தன்னுடைய பாடல்களில் குறிப்பிட்டிருக்கிறார் ஆன்றோர்கள் தேசமென்று இந்திய தேசத்தைப் பாராட்டி இன்னொரு இடத்தில் இந்தியாவிற்கு உட்பட்ட தமிழ்நாடு என்று அழகாக மொழிந்திருக்கிறார். நாம் தமிழ்நாடு என்று வைப்பது கட்டாயம் தவறாகாது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நாம் 1947ஆம் ஆண்டுக்குப் பிறகு உரிமைபெற்ற இந்தியாவில் பல ஆங்கிலச் சொற்களை, நாட்டுப் பெயர்களை நம்முடைய மொழிப் பெயர்களாக மாற்றி வந்திருக்கிறோம் என்பது சிந்திக்கத்தக்கது. முன்னால் பெஜவாடா என்பதை விஜயவாடா என்று மாற்றியிருக்கிறோம் முன்னர் பெனாரஸ் என்றிருந்ததை வாரணாசி என்று மாற்றியிருக்கிறோம்

'கான்ஸ்டியுஷன் ஆஃப் இந்தியா' படிக்கு அந்தச் சட்டத்தில் தமிழ்நாடு என்றில்லை மெட்ராஸ் ஸ்டேட் என்றிருப்பதால் இந்தச் சட்டத்தை மாற்றுவதில் தடை இருக்கிறது என்றால் அந்த 'அரசமைப்புச்சட்டம்' இது போன்ற காரணங்களுக்காக மாற்றப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட விரும்புறேன். 'யுனைடெட் பிராவின்சஸ், சென்ட்ரல் பிராவின்சஸ்' என்று 1947 வரை இருந்தவை எல்லாம் உத்தரப்பிரதேசம்,மத்தியப் பிரதேசம் என்று அரசியல் சீர்திருத்தச் சட்டத்தினால் திருத்தப் பிரேரணை கொண்டு வந்து திருத்தப்பட்டிருக்கின்றன. மீண்டும் பம்பாய் இரண்டு

மாகாணங்களாகப் பிரிக்கப்பட்ட பொழுது மகாராஷ்டிரா, குஜராத் என்று பிரித்திருக்கிறோம் தப்பு இல்லை என்று நம்பித்தான் குஜராத்தி, மகாராஷ்டிரா என்று பிறகு அவர்கள் கூக்குரல் இட்டதன் காரணமாக மத்திய அரசாங்கம் ஒப்புக் கொண்டிருக்கிறது. மாற்ற முடியாது என்று சொல்லிப் பினபு ஒப்புக் கொண்டிருக்கிறது இந்திய அரசாங்கம், என்பது நினைவுக்குக் கொண்டு வரத்தக்கது. கான்ஸ்டிடியூசனை நாம் திருத்த முடியாது. ஏகோபிதது இந்தச் சபையிலும், அசெம்பிளியிலும் ஒப்புக்கொண்டு ஒருமுகமாகத்தீர்மானம் போட்டு அனுப்பினால் அங்கு அவர்கள் கான்ஸ்டிடியூசனை மாற்ற முடியும். அங்கு மாற்ற வேண்டுமென்று லோக் சபையிலும் தீர்மானம் கொண்டு வந்தால் மாநிலத்தின் பொறுப்பில அது இருக்கிறது. அங்கிருந்து தீர்மானம் கொண்டு வந்தால் நாங்கள் ஏற்றுக்கொள்வதில் தயக்கமில்லை என்று சொல்கிறார்கள்.

நம் மாநிலத்தில் மெட்றாஸ் ஸ்டேட் என்றால் அது தேசப்படங்களில் எல்லாம் நன்றாகத் தெரியும். எல்லோருக்கும் தெரிந்த இடம். அதை ஏன் தமிழ்நாடு என்று மாற்றுவது என்று முன்னாள் முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்தியா என்பது எவ்வளவு சரித்திர, பூகோளப் புத்தகங்களில் ஏறிவிட்டது. அதை 'பாரத்' என்று நாம் இப்போது மாற்றிவிட இல்லையா என்பதுதான் என் பதில்,

கவுன்சில் ஆஃப் ஸ்டேட்ஸ் என்றிருந்ததை ராஜ்ய சபா என்கிறார்கள். அதே மாதிரி 'ஹவுஸ் ஆஃப் தி பீப்பிள்ஸ்' என்றிருந்ததை லோக்சபா என்கிறார்கள். இதே மாதிரி தமிழில் மாத்திரம் வழங்காமல் ஆங்கிலத்திலும் மாற்றினால் பூளோக சரித்திரத்தில் இடம் பெறும்.

ஜப்பான் தலைநகர் எட்டோ (Eddo) என்றிருந்ததை டோக்கியோ என்று மாற்றினார்கள். நாமும் போடுகிறோம். அதே மாதிரி 'பெட்ரோகிராட்' என்று ரஷ்யாவில் இருந்தது சோவியத் ரஷ்யாவில் பீட்டரிடத்தில் நம்பிக்கை இல்லாததால் 'லெனின் கிராட்' என்று மாற்றி விட்டார்கள்

இந்த விளக்கம் எவரையும் சமாதானப்படுத்திவிடும் என்பதில் ஐயமில்லையன்றோ!

மேலும், மேலவையில் நடந்த உரையின்போது "Voluntary" என்பதை சுயேச்சை என்று மொழிபெயர்த்திருக்கிறார்கள். சுயேச்சை என்றால் Arbitrary என்று ஆகும். சுயேச்சை என்ற சொல்லுக்குப் பதிலாக 'விரும்பிக் கொடுப்பது' என்று மொழி பெயர்த்திருக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். சொல்லாராய்ச்சி வித்தகர் அவர் என்பது உள்ளங்கை நெல்லிக் கனியாகத் துலங்கின்று.

1963,பிப்ரவரி 4ஆம் நாளில் நடந்த விவாதத்தில் அ.சிதம்பரநாதர் அவர்கள்,

''இம்மாநிலத்தில் உள்ள செகண்டரி கிரேடு பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் சம்பள விகிதங்களை அதிகப்படுத்த உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென்று இச்சபை அரசினருக்குச் சிபாரிசு செய்கிறது'' என்ற தீர்மானத்தை முன்மொழிந்தார். திரு.டி.பி.ஸ்ரீனிவாச வரதன் என்ற உறுப்பினர் வழிமொழிந்தார்.

திரு.ஜெ.பொன்னுசாமி வில்லவராயர் ''சாதி அல்லது வகுப்பு நிலைகளைப் பரிசீலிக்காமல் பொருளாதார சமுதாய நிலைகளில் பின் தங்கியுள்ள மாணாக்கர்களுக்கு ஹரிஜன நலத்துறைப் படிப்பு உதவித் தொகைகள் வழங்கப்பட வேண்டும்'' என்ற தீர்மானத்தை முன்மொழிய, அ.சிதம்பரநாதர் வழிமொழிந்தார்.

எட்டாம் வகுப்பிற்கு செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் பாடம் எடுக்கக் கூடாது, பி.ஏ.எல்.டி.படித்தவர்கள்தான் எடுக்க வேண்டும் என்றால் செகண்டரி கிரேடு ஆசிரியர்களில் பணி பாதுகாக்கப்பட வேண்டும். அவர்களுடைய ஊதியம், படி உயர்த்தப்பட வேண்டும் என்று முழக்கமிட்டார்.

தமிழகத்தில் சென்னைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் ஆகியவை தோன்றிப் பல ஆண்டுகளுக்குப் பிறகு மூன்றாவது பல்கலைக் கழகமாக மதுரைப் பல்கலைக் கழகம் தோன்ற, அதன் மசோதா சட்டப்பேரவை, மேலவைகளில் விவாதத்திற்கு விடப்பட்டபோது 1965, நவம்பர் 8ஆம் நாள் அ.சிதம்பரநாதர் மேலவையில் கீழ்க்காணும் கருத்துக்களை வெளியிட்டார்:

''எனக்கு முன்பு பேசிய ராஜா ஸர் முத்தையா செட்டியார் அவர்கள் கூறியதைப் போல, அண்ணாமலைப் பல்கலைக் கழகம் தோன்றுவதற்கு முன் தமிழ்ப் பல்கலைக் கழகக் கிளர்ச்சி என்ற ஒரு கிளர்ச்சி இருந்தது

தமிழ்நாட்டில் தமிழ்ப் பல்கலைக் கழகம் ஒன்று ஏற்படுத்த வேண்டும் என்று 1929ஆம் ஆண்டிற்கு முன் மக்கள் செய்த கிளர்ச்சியின் பேரில் திரு ராமலிங்கம் செட்டியார் தலைமையில் தமிழ் யுனிவர்ஸிடி கமிட்டி நியமிக்கப்பட்டது அந்தக் கமிட்டி எங்கும் சுற்றி வந்து ஒரு தமிழ்ப் பல்கலைக் கழகம் அமைக்க வேண்டும் என்று பரிந்துரைத்தது அப்படிப்பட்ட பல்கலைக் கழகம் அமைக்க அப்போது அரசாங்கத்திற்குப் பெரிய நிதி வழங்க திரு.அண்ணாமலைச் செட்டியார் முன் வந்தார் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் உருவானது.

ஏறத்தாழ 30 வருடங்களுக்கு முன்பு ஏற்பட்ட கிளர்ச்சியைப் போன்று இன்னொரு பல்கலைக் கழகம் தொடங்க வேண்டும் என்ற கிளர்சசி

வந்ததாலும், பல்கலைக்கழக மானியக் குழுவின் மானியத் தொகை கிடைக்கும் என்ற நம்பிக்கை காரணமாகவும் சென்னைப் பல்கலைக் கழகம் தோற்றுவித்துப் பல ஆண்டுகளாக மதுரையில் வளர்ந்து வரும் பல்கலைக் கழகக் கேந்திரத்தின் யுனிவர்ஸிடி சென்டரின் வளர்ச்சி காரணமாகவும் இந்த மதுரைப் பல்கலைக் கழகம் உண்டாக வாய்ப்பும் வசதியும் ஏற்பட்டுள்ளன. சென்னைப் பல்கலைக் கழகம் பட்டப் படிப்பை- போஸ்ட்க்ராஜ்வேட் கோர்ஸை மையமாக வைத்து அங்கே ஆராய்ச்சிக்கு வழிவகுத்ததால் இப்போது இந்தப் பல்கலைக் கழகம் திருச்சிக்கோ, கோயம்புத்தூருக்கோ போகாமல் மதுரைக்குச் செல்லும் வாய்ப்பு இருப்பதை நாம் மறந்துவிட முடியாது. இந்த மதுரைப் பல்கலைக் கழகம் உருவாகி வளர்ச்சியடைய தாய்ப் பல்கலைக்கழகமான சென்னைப் பல்கலைக்கழகத்தின் நல்வாழ்த்துக்களும் நன்கொடைகளும் தேவைப் படுகின்றன. அவை கிடைப்பதற்கு மசோதாவிலும் உறுதி செய்யப்பட்டு விட்டது.

சென்னைப் பல்கலைக் கழகச் சட்ட விதிகளைப் பின்பற்றியே மதுரைப் பல்கலைக் கழகச் சட்ட விதிகள் வகுக்கப்பட்டன என்றாலும், 'மாடல் யுனிவர்ஸிடி ஆக்ட்' என்ற மாதிரிப் பல்கலைக் கழக மசோதா டில்லியிருந்து வந்ததை ஓரளவு பின்பற்றியும், வேறு சில பல்கலைக் கழக மசோதாக்களை ஓரளவு பின்பற்றியும் உருவாக்கப்பட்டுள்ளது. செனட் என்று சொல்லப்படும் அதிகாரத்தில் அதாரிடி ஆஃப் தி யுனிவர்ஸிடி உறுப்புப் பெறுகிறவர்களில் 15 பேர் பட்டதாரிகள் தொகுதியிலிருந்து வரமுடியும் என்று சொல்லப் பட்டிருக்கிறது. சென்னைப் பல்கலைக் கழகத்தில் 30 பேர் உள்ளனர். எனவே 4 மாவட்டங்களைக் கொண்டுள்ள மதுரைப் பல்கலைக் கழகத்திற்கு இன்னும் கணிசமான அளவில் பட்டதாரிப் பிரதிநிதிகள் வர வழிவகை காண வேண்டும்

எடின்பரோ போன்ற பிரிட்டன் பல்கலைக் கழகங்களில் பட்டதாரி தொகுதிகளிலிருந்து வருபவர்கள்தான் ''ரெக்டர்'' போன்றவர்களைத் தேர்ந்தெடுக்கின்றனர் அங்கே 'கான்வொகேஷன்' என்பது, இங்கே நாம் காண்பது போல் பட்டமளிப்பு விழாவாக இல்லாமல் பட்டதாரிகள் கூட்டமாக இருந்து செயல்படுகிறது கான்வொகேஷன் என்பது ஒரு கூட்டம். எனவே, பட்டதாரி தொகுதியிலிருந்து வருவோர் எண்ணிக்கையை 20ஆக உயர்த்த வேண்டும்.

இவ்வாறு கூறிவிட்டு, வித்துவான், புலவர், சிரோமணி போன்ற பட்டம் பெற்றவர்களும் தாமாக ஒரு தொகுதி பெற்றுச் செனட்டில் இடம் பெற வேண்டும் என்று பல ஆண்டுகளாக வற்புறுத்தப்பட்டுள்ளது. 'கிராஜுவேட்' என்பதற்கு டெபனிஷன் பி.ஏ., பி.எஸ்ஸி., பி காம்., என்று இருப்பதாலே 'டிக்ரி ஹோல்டர்சு'க்குத்தான் இடமே தவிர டைட்டில்

ஹோல்டர்சுக்குப் பல்கலைக்கழகச் சட்ட வரம்பிற்கு மாறாகத் தாங்களாக மாற்ற முடியாது என்பது, சென்னை, அண்ணாமலைப் பல்கலைக் கழக முடிவு என்றாலும் வித்துவான், புலவர், சிரோமணிகளுக்கு பி.ஏ. வகுப்புக்கு உள்ள அளவு ஆங்கிலப் பாடம் வைத்துத் தேறியவர்களுக்கு பி.ஓ.எல். பேச்சலர் ஆஃப் ஓரியண்டல் டைட்டில் என்ற பட்டம் ஆகிவிடுகிறது.

இவர்களும் பட்டதாரி தொகுதிகளில் வெற்றிபெற்று 'செனட்' அவைக்குச் செல்ல இயலும் என்ற யோசனையையும், மதுரைப்பல்கலைக் கழகம் முளைவிடும்போதே சொல்லி வைத்தவர் அ.சிதம்பரநாதர்.

1965, நவம்பர் 13ஆம் நாள் ஆற்றிய பணியின் அடிப்படையில் உயர்நிலைப் பள்ளிகளும், 'லோகல்பாடி' (Local body) பள்ளிகளும் அரசுப் பள்ளிகளாக அங்கீகாரம் பெற்றன.

பிறகு 1966 நவம்பர் 5ஆம் நாள் நடைபெற்ற மேலவைக் கூட்டத்தில் துணை மானியக் கோரிக்கையை வரவேற்று, அரசு மருத்துவக் கல்லூரிகளுக்குப் போதுமான நிதி ஒதுக்குவதோடு, இந்தக் கல்லூரிகளை ஒட்டி நடைபெறும் மருத்துவமனைகள் சிறப்பாக நடைபெற ஆவன செய்ய வேண்டும் குறிப்பாக இரத்தப் பரிசோதனை நிலையங்கள் நன்கு பணியாற்றுகின்றனவா என்று கண்காணிக்க வேண்டும் என்றார்.

இவ்வாறு அ சிதம்பரநாதர் அவர்கள் தன் சட்ட மேலவைப் பதவிக்காலத்தில் தேர்ந்தெடுத்தோர் மனம் மகிழும் வண்ணமும், மற்றவர்கள் போற்றும் வண்ணமும் அரும்பணியாற்றினார் எனில் அது உண்மை.

அ.சிதம்பரநாதரின் சட்டமன்ற மேலவைத் தலைவர்களான டாக்டர் பி.வி. செரியன் அவர்களும், எம் ஏ. மாணிக்கவேலர் அவர்களும் மனம் திறந்து பாராட்டினர்.

# 7
# தமிழாசிரியர் தலைவர்

''ஓங்குலிடை வந்துயர்ந்தோர் தொழ விளங்கி
ஏங்கொலி நீர்ஞாலத் திருளகற்றும் - ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன்றே னையது
தன்னேரி லாத தமிழ்''

அ. சிதம்பரநாதர்,1936ஆம் ஆண்டு முதல் 1958ஆம் ஆண்டு வரையில அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்ப் பேராசிரியராகவும், தமிழ்த்துறைத் தலைவராகவும் பணியாற்றினார். இந்தக் காலகட்டங்களில் தான் தமிழாசிரியர்களின் தலைவராகப் பொறுப்பேற்று ஒற்றுமையின்றியிருந்த தமிழாசிரியர்களை சீரிய திராட்சைக்கனிக் கொத்தாய் மாற்றினார்.

சென்னைத் தமிழாசிரியர் கழகத்தில் தலைவராக விளங்கி அவர் தமிழாசிரியர் நலனுக்காக ஆற்றியுள்ள பணிகள் பல. தமிழாசிரியர் நலனுக்காகத் தமிழ்நாட்டுக் கல்வி அமைச்சரிடத்திலும், கல்வித்துறை இயக்குநரிடத்திலும் பலமுறை தூது சென்று தமிழாசிரியர்களுக்குப் பல நன்மைகளைச் செய்துள்ளார்.

ஆண்டுதோறும் தமிழாசிரியர் மாநாடு நிறைவேற்றும் தமிழாசிரியர் நன்மைக்குரிய தீர்மானங்களை அரசியலார்க்குத்தாமே நேரில் சென்று எடுத்துச் சொல்லித் தமிழாசிரியர்களுக்கு நன்மை புரிந்துள்ளார்.

தமிழுக்கு ஊறு என்ற பேச்சின் எதிர்வலை எங்காவது தென்பட்டால் போதும். அவர் சொற்கள் வேல் நுனிகள் போல் நிமிர்ந்தெழுந்து பாய முனைந்துவிடும் அ. சிதம்பரநாதர் அவர்கள் பல கல்லூரிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும், பல்வேறு தமிழ் மன்றங்களிலும் புலவர் மாநாடுகளிலும் சொற்பொழிவாற்றிப் பெயர் பெற்றவர். மாநிலத் தமிழாசிரியர் சங்கத் தலைவராய்த தொடர்ந்து பணியாற்றியவர். சட்டமன்ற மேலவையில் தமிழ் வளர்ச்சி கருதியும், தமிழாசிரியர் நலம் கருதியும் பேசிய பேச்சுக்கள் பல

'சென்னைக் கடற்கரை' என்னும் தலைப்பில் 1932ஆம் ஆண்டில் அ. சிதம்பரநாதர் எழுதிய கட்டுரை, சென்னைக் கடற்கரைக் காட்சியை நன்கு படம்பிடித்துக் காட்டுவதாகும். அக்கட்டுரைச் செய்திகள் இன்றளவும் உண்மையாய் இருத்தலைக் கண்டு மகிழலாம். அவரிடம் 'பல அரசுப்

பணியாளாகள் அன்பு காட்டியதறகுரிய பல காரணங்களில் ஒன்று, அவர் தொடக்க காலத்தில், சென்னை வருவாய்த்துறைக் கழகத்திலும், தலைமைச் செயலகத்திலும் சிறிது காலம் பணியாற்றியதாகும் தமிழன்னைக்குப் பணிபுரிய வேண்டும் என்னும் நியதியிலிருந்தமையால் அவர் அரசுப் பணியை விட்டுவிட நேர்ந்தது.

அ. சிதம்பரநாதர் அவர்கள் மாணவர்களிடமும் தமிழாசிரியர் களிடமும் நடந்து கொள்ளும் முறை மற்றவர்கள் எளிதில் பின்பற்ற முடியாத முறையாகும். அதில் அவரது அன்பு நெறியும் இருக்கும்; தம் கடமையில் ஒரு சிறதும் பிறழாதவாறும் நடந்து கொள்ளும் ஆற்றலும் இருக்கும் வெறுப்பு, விருப்பின்றி ஒரு செயலில் ஈடுபட வேண்டியது இன்றியமையாதது. வெறுப்புக் கொள்வதால் ஒரு பொருளைப் பற்றிய உண்மைத் தன்மை வெளிப்படாது. விருப்பம் கொள்வோம் எனில் அதில் உள்ள குற்றமானது வெளிவராத வகையில் கெடுத்துவிடும்.

*'காய்தல் உவத்தல் அகற்றி ஒரு பொருட்கள்*
*ஆய்தல் அறிவுடையார் கண்ணதே - காய்வதன்கண்*
*உற்றகுணம் தோன்றாததாகும் உவப்பதன்கண்*
*குற்றமும் தோன்றாக் கெடும்'*

என்னும் ஆன்றோர் காட்டிய வழியைத் திறம்படப்பின்பற்றி அவ்வகையில் வெற்றி கண்டார் 12.7.1960ஆண்டில் கீழைநாட்டு மொழிப் பேரறிஞர் மாநாட்டில் அவர் ஆற்றிய சொற்பொழிவு பொன்னே போல் போற்றத் தக்கது

''திருவள்ளுவர் புறவேடஙகளுக்கு வைத்த மதிப்பைக் காட்டிலும் அகப் பண்புகளுக்கு நிரம்பிய மதிப்பு வைத்திருந்தார் எனபதாகவும் உலகம் இருண்டது எனத் திருவள்ளுவர் கருதாமல் இடர்பாடுகளைப் பொடியாக்கித் தம் துயரங்களை எதிர்த்துப் போராடி வெல்பவனே சிறந்த மனிதன் எனத் திருவள்ளுவர் கருதுகிறார் என்பதாகவும், தனித்தனி மனிதரும், சமுதாயங்களும் மனித இனஙகளும் உழைத்து வருவாய தேடி, வாழ்ந்து மகிழ வேண்டுமென்றாலும், பிறரை அழித்து அவர்களைப் புண்படுத்தி வாழ வேண்டும் என்பதைத் திருவள்ளுவா விரும்பவில்லை என்பதாகவும் குறிப்பிட்டது சிறந்த கருத்துக்கள் ஆகும்.

தமிழாசிரியர்கள் அதுவரையில் புகாத இடங்களில் எல்லாம் புகுந்து செயல்புரியவும், மற்ற ஆசிரியர்களோடு தமிழாசிரியாகள் சரிநிகர்சமானமாக வாழவும், அவர் ஆற்றிய செயல்கள் அளப்பில. எல்லோருக்கும் இன்முகம் காட்டி ஏற்றிப் போற்றி - அதே வேளையில் தவறகண்டால் 'கடிதோச்சி மெல்ல எறியும்' பண்பால் தவறுகளைக் களையும் செயல்புரிந்து எல்லோருக்கும் நல்லவராய் வல்லவராய்ச் செயல்வீரராய்ச் செம்மைத் தலைவராய் வாழ்ந்தார்

சென்னை ஒய்.எம் சி ஏ. பட்டிமன்றத்தின் வாயிலாகத் தமிழ் இலக்கிய வகுப்புகள் நடத்துவதிலும் அ.சிதம்பரநாதரின் புலமை பயன்பட்டிருக்கிறது மாணவர்கள் அவரை ஒரு பேராசிரியராக மட்டுமின்றித் தங்கள் தலைவராகவும் கருதினர்.

அ.சிதம்பரனார் பொதுவாக எல்லா ஆசிரியர்களிடத்தும், சிறப்பாகத் தமிழாசிரியர்களிடத்தும் பெரிதும் அன்பு கொண்டவர். அவர்களின் ஆக்கத்திற்கு அருமபாடுபட்டவர்.

சங்கப் புலவர் பெருஞ்சித்திரனார் தாம் பெற்ற பரிசுப் பொருட்களைத் தம் மனைவியின் வழி 'இல்லை' என்று கேட்ட அத்துணை பேர்களுக்கும் கொடுத்து மகிழ்ந்ததைக் கீழ்வரும் பாடலால் அறியலாம்

''நின்நயந்து உறைநர்க்கும் நீநயந்து உறைநர்க்கும்
பன்மாண்கற்பின் நின்கிளை முதலோர்க்கும்,
கடும்பின்கடும்பசி தீர யாழநின்
நெடுங்குறி எதிர்ப்பை நல்கியோர்க்கும்
இன்னோர்க்கு என்னாது என்னொடும் சூழாது
வல்லாங்கு வாழ்தும் என்னாது நீயும்
எல்லோர்க்கும் கொடுமதி மனைகிழவோயே!
பழந்தூங்கு முதிரத்துக்கிழவன்
திருந்துவேல் குமணன் நல்கியவளனே!''

இப்புலவர் பெருமான் எங்ஙனம் பிறர் நலங்கருதி வாழ்ந்தனரோ, அப்பெற்றியே அ.சிதம்பரநாதர்க்கும் உண்டு. தமிழாசிரியர் நலமே தம் நலமாகக் கொண்டு அவர்தம் முன்னேற்றத்திற்கு அல்லும் பகலும் அயராது அரசுடன் உரையாற்றிப் பாடுபட்ட பெரியவர் அவர்.

'அறிஞர் சிதம்பரநாதன் செட்டியார் ஐந்து பேரறிவும் தமிழேயாகத் திகழ்பவர்' என்று கலைத்தந்தை கருமுத்து தியாகராசச் செட்டியார் அவர்கள் குறிப்பிட்டது சாலப் பொருத்தமாகும்.

1938இல் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் 'கல்கி' இரா. கிருஷ்ணமூர்த்தி குறிப்பிட்டபடி, 'சர்வகலாட்ட'சாலை (சர்வகலா சாலை என்பதற்குப் பதிலாக)யாக இருந்தது மாணவர் வேலை நிறுத்தம் செய்தனர்; வகுப்புக்களுக்கு மாணவர்கள் வரவில்லை; ஆசிரியர்களும் பாட நேரத்தில் வகுப்புக்களுக்குச் செல்லவில்லை. ஆனால், அ சிதம்பரநாதர் அவர்கள் மட்டும் உரிய நேரத்தில் வகுப்பறைக்குச் செல்வார். விதிமுறைகளுக்கேற்பப் பத்து நிமிடங்கள் காத்திருப்பார். பிறகு, மாணவர் பட்டியலில் அவர்கள் வராததைப் பதிவு செய்து மீள்வார். இது கண்டு ஏனைய பேராசிரியர்கள் தம் கடமை தவறியதை உணர்ந்தனர் இதைப் பண்டித இராம. மீனாட்சிசுந்தரம் பிள்ளை குறிப்பிட்டுள்ளார்.

இயன்றபோதெல்லாம் வெளியூர்த் தமிழ் மன்றங்களுக்கும், சங்கங்களுக்கும் சென்று இனிய முறையில் சொற்பொழிவு ஆற்றி வந்தார். தலைமை தாங்கும்போதும், சொற்பொழிவாளர் அல்லது பொது மக்களுடைய கருத்துக்கு மாறுபடாதவாறு மிக்க பண்பாட்டுடன் நடந்துகொண்டு கூட்டத்தை இனிது நடத்தித் தருவார்.

அரசியல் பிணக்கும், காழ்ப்பும், கிளர்ச்சியும் நிறைந்த இன்றைய உலகச் சூழலில் ஏதேனும் ஒரு சிக்கலில் பலர் தடுக்குற்று வீழ்ந்து விடுகின்றனர் எனினும், அ. சிதம்பரநாதர் செட்டியார் அவர்கள், அத்தகைய இடர்ப்பாடுகளை உய்த்துணர்ந்து விலக்கி நீர்ச்சூழலில் சிக்காமல் தோணியைச் செலுத்துவது போன்று தமது நற்றமிழ்ப் பணியை நடுநிலை நின்று இடையறாது புரிந்து வந்தது அவரது திறமைக்கு ஓர் எடுத்துக் காட்டாகும். மொழிக் கிளர்ச்சியின்போது உணர்ச்சிப் பெருக்கால் மாணாக்கர் கொதித்தெழுந்தபோது அவர்களில் பலரை மாற்றிச் செந்நெறிப்படுத்திய பெருமை பேராசிரியர் சிதம்பரநாதரையே சாரும்.

சென்னை மாநிலத் தமிழாசிரியர் கழகத் தலைவராகத் துலங்கிய டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார் மதுரை தியாகராசர் கல்லூரி முதல்வராகப் பொறுப்பேற்று மதுரை வந்திருப்பது குறித்து மதுரை மாவட்டத் தமிழாசிரியர் மன்றத்தார் 8.8.1965 ஞாயிறு பிற்பகலில் மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் கொண்டாடிய பாராட்டு விழாவில் படித்தளித்த வரவேற்பிதழில்,

*''துயர்தவிர மாநிலத்திற் றமிழாசான் மார்முயன்று தோற்றுவித்த*
*வுயர்கழகத் தலைமை கொடுதமிழகத்துப் புலவர் குழுக்குள்ளே -*
*வாய்ந்த*
*செயல்சிறக்குங் குழுமைத் தலைமைமேற்கொண்டு மேன்மன்றஞ் -*
*சிறப்பநாளு*
*மயர்வுகொளா துறுப்பாகியாசிரியர் குறைதீர்க்கு மன்னானன்றி*

என்ற வரிகளால் அவரின் தலைமைத் தன்மை புலனாகும்.

தி.பொ. நாராயணசாமி பாரதி என்பார் உத்தமபாளையத்தைச் சேர்ந்தவர். அ. சிதம்பரநாதரின் அன்பர் அவர் பாடியுள்ள வெண்பாக்களில் ஒன்று,

*''கோவைத் தமிழ்ப்புலவர் கூடியுள்ள மாநாட்டில்*
*பாவை விளக்கிப் பணிபுரிவோர் - தேவைக்குச்*
*சம்பளத்தைக் கூட்டுகென்று சர்க்காரைக் கேட்டிட்ட*
*நம்பி சிதம்பரநாதன்''*

என்பது. அவர் தலைமைத் தன்மைமிக்கவர் என்பது அவரது உடல்தோற்றம் - உரையாற்றல் - செயல்வன்மை என்பனவால் விளங்கும். யாரும் கற்றுக் கொடுத்து வந்ததல்ல தலைமைத் தன்மை!

**செந்தமிழ்க் காவலர்**

டாக்டர் அ. சிதம்பரநாதர் அவர்கள் தமிழுக்குச் செய்யும் பணிகளையும் உயர்தனித் தமிழ்மொழியினை உலகெங்கும் பரப்புகின்ற ஆற்றலையும் வியந்து போற்றிப் புகழாதார் தமிழ்நாட்டில் குறைவு எனத் துணிந்து கூறலாம். ஆவணி மூலநாள் அன்று 28.9.1955இல் மதுரைத் தமிழ்ச்சங்கத் தலைவர் சர்.பி.டி. இராசன் அவர்கள் தலைமையில் தருமபுரத்தில் கூடிய பெருங்கூட்டத்தில் தருமையாதீனத் தலைவர் அவர்கள் டாக்டர். செட்டியார் அவர்களின் நற்றமிழ்ப் பணிகளைப் பாராட்டி, ''செந்தமிழக் காவலர்'' என்ற பட்டத்தை அளித்துப் பொன்னாடை போர்த்திப் பாராட்டினார்கள் இது குறித்துத் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் கீழ்க்காணுமாறு வரைந்துள்ளார்:

''ஞாலம் நின்புகழே மிக வேண்டும்தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே''

செந்தமிழ்க் காவலர் அ சிதம்பரநாதர் செட்டியார் அவர்கள் தமிழ்கூறு நல்லுலகத்திற்கு எழில்மிகு பணிகள் பலபுரிந்து, தமிழ்ப் பெருமக்கள் நெஞ்சங்களில் நீங்கா இடம்பெற்றவர். அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவராக இருந்து திரு. செட்டியார் அவர்கள் புரிந்த தமிழ்ப் பணிகளை உலகம் அறியும். இங்கிலாந்து சென்று அங்கும் தமிழ்ப்பணி புரிந்தவர். சிவநெறிப் பற்றுடைய செந்தமிழ்ப் பேராசிரியர்.

தில்லைப் பொன்னம்பலத்தினைச் சார்ந்து தமிழ்த்தொண்டு புரிந்த இப்பெருந்தகையார், மதுரை வெள்ளியம்பலத்திற்கும் சென்று, தியாகராசர் கல்லூரி முதல்வராக இருந்து பணியாற்றி வருவது மகிழ்ச்சிக்குரியது.

அவ்வப்போது இனிய பல நூல்களைத் தமிழகத்திற்கு வழங்கிவரும் திரு.செட்டியார் அவர்கள் தெய்வபக்தி உடையவர். திருமுறைகளிடத்து ஈடுபாடு கொண்டவர். ஆங்கிலத் தமிழ் அகராதியைச் சென்னைப் பல்கலைக்கழகச் சார்பில் ஆய்ந்து வெளியிட்ட பணி முதலிய பல தமிழகம் பெற்ற பெருஞ்சிறப்புகள்.

செந்தமிழ்ச் சொக்கர் திருவருள் 1955இல் திரு. செட்டியார் அவர்களைச் ''செந்தமிழ்க் காவலர்'' என்ற சிறப்புப் பட்டத்திற்கு உரியவர் ஆக்கிற்று.

திரு. செட்டியார் அவர்கட்கு எடுக்கும் மணிவிழா தமிழ் உலகிற்கே பெருமை தருவதாகும் ''நயனொடு நன்றிபுரிந்த பயனுடையார், பண்பு பாராட்டும் உலகு'' என்ற திருவள்ளுவர் திருவாக்கின்படி அன்பர்களின் பாராட்டு முயற்சி பாராட்டுக்குரியது. மணிவிழாப் பெறும் செந்தமிழக் காவலர் நூற்றாண்டு விழா முதலிய எல்லா விழாக்களும் பெற்று, தமிழ் உலகத்திற்குப் பெரும்பணிகள் புரிந்து நல்லன எல்லாம் பெற்று, நீடு

வாழ்க என்று செந்தமிழ்ச் சொக்கர் சேவடி சிந்திக்கின்றோம்'' என்று குறிப்பிட்டுள்ளமை நோக்கற்குரியது.

'ஜெமினி' எஸ்.எஸ். வாசன் அவர்கள் எடுத்தபடம் ''ஔவையார்''. காலஞ்சென்ற கானக்குயில் கொடுமுடி கே பி சுந்தராம்பாள் அவர்கள் ஔவையாராக நடித்த படம். இந்தப்படம் ஜெமினியின் 19வது படம். இது கன்னடத்திலும், மலையாளத்திலும் எடுக்கப்பட்ட படமாகும். இந்தப் படத்தைப் பார்த்தவர்கள் எல்லாம் வானளாவப் புகழ்ந்தனர். ஆனால் -

அ. சிதம்பரநாதர் அவர்கள் மட்டும் நிலைதடுமாறாமல் திறனாய்வு செய்தார். இதை மட்டும் ஏன் அவர் விமர்சிக்க வேண்டும்? ஔவையார் என்ற ஓர் இலக்கியப் படைப்பாளியின் வரலாறு கூறும் படம். அ. சிதம்பரநாதர் அவர்களோ இலக்கியப் பேராசிரியர். எனவே, இப்படத்தைப் பார்த்தபின்பு, துணிவாகக் கூறினார்; ''இப்படத்தில் பல குறைகள் உள்ளன.'' இதனால் இவர் திறனாய்ந்து அறியும் அறிஞர் (Critic) - எனத் தன் முத்திரையைப் பதித்தார்.

திரைப்படத்திலோ, நூலிலோ - நிறை - குறைகள் கண்டு - காய்தல் உவத்தலின்றிக் குறிப்பிடும் பான்மைக்கு மற்றுமோர் எடுத்துக்காட்டு.

முன்னாள் கல்லூரிக் கல்வி இயக்குநரும், அ சிதம்பரநாதர் அவர்களின் அன்பிற்கும் நட்பிற்கும் தலைமாணவர்களில் ஒருவருமாகிய பேராசிரியர் டாக்டர் கா. மீனாட்சிசுந்தரம் அவர்கள் எழுதிய நூல் "A Study of the Achievements of Bharathi as a Poet' - என்பது. அதற்கு அணிந்துரை வழங்கிய அ சிதம்பரநாதர் அவர்கள், பாரதியின் கண்ணன் பாட்டு, குயில்பாட்டு, பாஞ்சாலி சபதம் ஆகிய முப்பெரும் பாடல்களை நூலாசிரியர் ஆராய்ந்த விதத்தையும், அதில் அவர் தன்னிகரற்ற முறையில் அணுகி அவற்றின் மறைபொருளைத் தெளிவுபடுத்தியுள்ளார் எனக் குறிப்பிட்டிருப்பது (With rare critical attitude he has tempted to assign places for Bharathi's Kannanpattu, Panchali Sapatham and Kuyil Pattu in the realm of Tamil Literature. A reference to pages 72 to 75, and 81 to 126 is commended. I congratulate the author on the extraordinary skill with which he has attempted to unravel the mysteries of Kuyil Pattu in special) என்பது நோக்கத்தக்கதாகும்.

ஞானியாரடிகளும், திரு.வி க வும், மறைமலை அடிகளும் பாராட்டிப் போற்றிய அ.சிதம்பரனார் அவர்கள் சிறுவயது முதலே அறிவுப் பெட்டகமாக உயர்ந்து நிறைவாழ்வு வாழ்ந்தவர் என்று அவர் தம் தங்கை திருமதி வள்ளியம்மையார் கூற்று இங்கே நினைவு கூரத் தக்கது.

தமிழகப்புலவர் குழுவின் அமைப்பாளராகத் திகழ்ந்த முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம் அவர்கள் தன்னை விட எட்டாண்டுகள்

இளையவராக இருந்த அ.சிதம்பரநாதரை உடன் பிறந்தவர் என்றே அழைத்து மகிழ்ந்தார். எப்படி உடன்பிறந்தார் ஆகிறார் என்பதற்குச் சில காரணங்களைத் தந்துள்ளார்.

1)தமிழ்த் துறையில் இவர்கள் இருவருக்கும் அமைந்த பேராசிரியர் பசுமலை நாவலர் ச.சோமசுந்தர பாரதியார் அவர்கள்.

2) நாவலர், கணக்காயர் ச.சோமசுந்தர பாரதியார் அவர்களை ஊர்வலமாக அழைத்து வந்து பொன்னாடை போர்த்திப் பட்டம் வழங்கிப் பாராட்ட மதுரைத் திருவள்ளுவர் கழகத்தார் வடக்கு ஆடி வீதியில் ஒரு பெருங்கூட்டத்தைக் கூட்டினர். அக்கூட்டத்தில் அவர்களைப்பாராட்டிப் பேச அழைக்கப்பெற்றவர் இருவர் மட்டுமே அந்த இருவரும் நாங்களே. பாரதியார் அவர்கள் பேசஎழுந்ததும், ''எனக்குத் தமிழகத்தில் பல்லாயிரம் மாணவர்கள் உள்ளனர் ஆனாலும் மிகச் சிறந்த மாணவர் இருவர். ஒருவர் வலப்புறமுள்ள அ.சி. இவர் பல்கலைக் கழகத்திற்கு உள்ளே மற்றொருவர் இடப்புறமுள்ள கி.ஆ.பெ. இவர் பல்கலைக் கழகத்திற்கு வெளியே'' என்று எடுத்த எடுப்பிலேயே கூறினார். இதனாலும் நாங்கள் உடன்பிறந்தோர்களே.

3)தமிழகத்தை, தமிழ் மக்களை, தமிழ் மொழியை, தமிழிசையை, தமிழ்ப்பண்பை வளர்க்கத் தமிழகத்துச் சான்றோர்களை எல்லாம் ஒன்று திரட்டித் '' தமிழகப் புலவர்குழு'' எனப் பாரதியார் அவர்களின் இல்லத்தில் ஒரு குழு அமைக்கப்பெற்றது. நான் அதன் தொண்டர் திரு.அ.சி. அவர்கள் அதன் தலைவர். இதனாலும் நாங்கள் உடன் பிறந்தவர்கள்''.

ஆக, இவ்வாறே எதிலும் தலைமைத்தன்மை மிக்கவராகவே திகழ்ந்தார் என்பது வெள்ளிடைமலை.

சங்க இலக்கியத்திற்கும் பிற இலக்கியங்களுக்கும் மாநாடு அல்லது கருத்தரங்குகள் கூட்டி அவற்றில் தக்கார் ஒருவரைத் தலைமை வகிக்கச் செய்து, தமிழ்ச் சான்றோர் பலரைக் கொண்டு ஒவ்வொரு நூல் பற்றியும்உரை ஆற்றச் செய்து பிறகுஅவற்றை நூலாக்கித் தமிழ் கூறு நல்லுலகிற்கு அளிப்பது என்ற தொண்டைச் செய்து வந்தது தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

அவ்வாறு நடந்த ஒரு சொற்பொழிவு மாநாடுதான் பதிற்றுப்பத்துச் சொற்பொழி மாநாடு இச் சொற்பொழிவுக்குத் தலைமை தாங்கியவர் ''செந்தமிழ்க் காவலர், அ. சிதம்பரநாதச் செட்டியார், எம்.ஏ ,''

இச்சொற்பொழி நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றிய பெருமக்கள் பேராசிரியர் அ மு.பரமசிவானந்தம் அவர்கள், பேராசிரியர் டாக்டர் ந.சஞ்சீவி அவர்கள் ( இவர்கள் இருவருமே இந்நூலாசிரியருக்குப் பேராசிரியர்கள் என்பது கருதத்தக்கது)

பதிற்றுப்பத்துச் சொற்பொழிவுக்குத் தலைமை தாங்கிய அ.சிதம்பரநாதர் அவர்கள் தனது சொற்பொழிவைக் கீழ்க்காணும் வகைகளாகப் பிரித்துக் கொண்டு ஒவ்வொரு தலைப்பின் கீழும் தன் அரிய ஆய்வுப் பிழிவுகளை வழங்கியுள்ளார்கள். அவற்றைச் சுருங்கக் காண்பது பொருத்தமே.

**நூல்**

பதிற்றுப்பத்து என்பது பத்துப்பத்து என்று பொருள்படும். பத்து சேர அரசர்களைப் பற்றிப் பத்துப் புலவர்கள் பாடிய பத்துப்பாடல்கள் தொகுதியே பதிற்றுப்பத்து என்று பெயர் பெற்றது. முதல் பத்து உதியஞ்சேரல் என்பானைப் பற்றியதாக இருத்தல் வேண்டுமெனவும், பத்தாவது பத்து யானைக் கண்சேய் மாந்தரஞ் சேரவிரும்பொறை என்பானைப் பற்றியதாக இருத்தல்வேண்டுமெனவும் சிலர் கருதுகின்றனர். எண்மரைப் பற்றிப் பதிற்றுப் பத்திலிருந்து கிடைக்கும் சான்றுகளைக் கொண்டு பழங்காலச் சேரர் பரம்பரையினரின் ஆட்சி காலஞ்சென்ற திரு.கா. சுப்பிரமணியப் பிள்ளையவர்களாலும் அறுதியிடப்பட்டுக் காட்டப்பட்டிருகின்றது. அவர்களுடைய முன்னணி ஆராய்ச்சிகள் பாராட்டும் தகையன.

**நாட்டுவளம்**

சேரநாடு பொதுவாக வளஞ்சிறந்த நாடு. அந்நாட்டில் நெய்தல், குறிஞ்சி, முல்லை, மருதம் ஆகிய நான்கு நிலத்துப் பொருள்களும் ஒருங்கே விளைந்து மலிந்திருந்த செய்தி இரண்டாவது பத்தில் குமட்டூர்க் கண்ணனாரால் கூறப்பட்டுள்ளது.

இன்னொரு சேரனைப் பற்றிய பாடலில் நெல்வயல்களில் வள்ளைப் பூக்கள் மலிந்துள்ளன என்பதும்,நெல்மணிகள் மலிந்துள்ளன என்பதும் ஆகும். நெல்மணியின் பொறையைத் தாங்கமாட்டாமல் நெல்லந்தாள்கள் வளைந்து கிடக்கின்றன என்பதை 'முடந்தைநெல்' என்பதனால் கவிஞர் விளக்குகிறார். அந்நாட்டில் எல்லாநாட்களிலும் கரும்பு விளைந்தது என்பதை,

*''காலமன்றியுங் கரும்பறுத்து ஒழியாது''*

என்பதால் அறியலாம்.

**மக்கள் வாழ்க்கை**

அந்நாட்டுமக்கள் பிறர்க்குரிய பொருளை விழையாதவர்களாகவும், குற்றமற்ற அறிவுடையவர்களாகவும், செம்மையினின்று வழுவாதவர் களாகவும், அன்பு நெறியைக் கடைப்பிடிப்பவர்களாகவும், பலரோடு பகுத்துண்டு வாழ்பவர்களாகவும், செயலாற்றாமல் வீணே மூத்துப்போன யாக்கையையும் நோயையும்இல்லாதவர்களாகவும் அவர்கள் இருந்தார்கள் என்ற குறிப்புகள் காணப்படுகின்றன

**கொடை**

செல்வக்கடுங்கோவாழியாதன், செங்குட்டுவன், ஆடுகோட் பாட்டுச் சேரலாதன் ஆகிய அரசர்களின் கைவண்ணம் பேசப்படுகிறது.

செல்வக்கடுங்கோ ஆழியாதன், பிறருக்குப் பெரும்பொருளைக் கொடுப்பதற்கு ஒரு போதும் வருந்தமாட்டானாம்.

தன்னிடம் இருக்கும்பொருள் பெரியனவாக இருப்பினும், அரியனவாக இருப்பினும் அவற்றைப் பற்றிக் கவலை உறாது பலருக்கும் விருப்பத்தோடு கொடுப்பானாம். ஆடுகோட்பாட்டுச் சேரலாதனோடு, தன்னிடத்திற்குப் பரிசிலர் வாராயினும் பரிசிலர் இடம் தேடிப் பரிசு கொடுக்கச் செல்வானாம்

**வீரம்**

சேரர்கள் கடற்போரில் வல்லவர்கள் என்ற செய்தி கூறப்பட்டுள்ளது. சேரன் செங்குட்டுவனுக்குப் 'பரதவன்' என்ற பெயர் இருப்பது குறிப்பிடத்தக்கது. ஐந்தாம்பத்தில் உள்ள அரசன் பேரே 'கடல்பிறக் கோட்டிய குட்டுவன்' என்பதாகும்

**கவித்திறன்**

சில இடங்களில் கவிஞர்கள் ஆண்டிருக்கிற உவமைகள் பொருளோடு நன்றாய்ப் பொருந்தி இன்பம் விளைவிக்கின்றன. இளஞ்சேரல் இரும் பொறையின் இனிமைக்கு சாந்துவரு வாநீருக்கு ஒப்பிடுகின்றார் புலவர் வானி என்பது சேரநாட்டு ஓர் ஆறு. சேரநாட்டு ஆறு மரச் செறிவினூடேயே பெரும்பாகலும் ஓடிவருகின்றமையால் இயல்பாகவே குளிர்ந்த நீராக ஓடிவரும் தன்மையது. அரிசில் கிழார், பெரும்சேரல் இரும்பொறையைக் குளவிக்கு ஒப்பிடுகிறார். தனக்கு இன்னல் செய்யாதோரைக் குளவிகொட்டுவதில்லை.

**அறவுரை**

பல்யானைச் செல்கெழுகுட்டுவனைப் பார்த்துப் பாலைக் கௌதமனார் - கோபம், காமம், அளவிறந்த கண்ணோட்டம், அச்சம், பொய்ச்சொல் கழி பேரன்பு, அழிக்கும் மனப்பான்மை, கொடுமை ஆகிய இவை தவிர்க்கத்தக்கன என்று கூறுகிறார். பிறர் நலியாமல், வேற்றுப்பொருளை வெஃகாமல், மனைவியைப் பிரியாமல், உள்ள பொருள்களைப் பகுத்துண்டு வாழ வேண்டும் என்கிறார்.

**சொல்லாட்சி**

ஓரிடத்தில் 'சவட்டுதல்' என்பது உருவு அழிதல் என்ற பொருளில் வந்துள்ளது வேறு இடத்தில் 'கற்பு' என்ற சொல் கல்வியை உடையவனே என்றபொருளில் வந்துள்ளது வேறு இடத்தில் 'நெய்த்தோர்' என்ற குருதி அல்லது இரத்தம் என்ற பொருளில் வழங்கியுள்ளது. இச்சொல் கன்னடமொழியில் 'நெத்துரு' என இன்றும் வழங்கப்படுகிறது.

**சொல்லழகு**

பதிற்றுப்பத்துச் சொல்நடை நம்மை மகிழ்வூட்டும். ''சிதைந்தது மன்றல்- நீ சிவநதனை நோக்கலின்'' என்கிறார் ஒரு கவிஞர். 4 ஆம் பத்து முழுதும அந்தாதித் தொடையில் அமைந்துள்ளது. ஏனைய பத்துக்களில் இல்லாமல் 'காப்பியாற்றுக் காப்பியனார்' பத்தில் மட்டும் இந்நடை உள்ளது.

**பதிகம்**

பதிற்றுப்பத்துப் பாடல்கள் ஒவ்வொன்றின் இறுதியிலும் பதிகம் காணப்படுகினறன. சிலவற்றில் பாடல்வடிவிலும், சிலவற்றில் உரைநடை வடிவிலும காணப்படுகின்றன. சேரவேந்தர்களின் வரலாற்றுண்மையைத் தெளிவுபடுத்தவே பதிகங்கள் உள்ளன என்பது சதாசிவ பண்டாரத்தின் முடிவாகும். எனவே பதிகங்கள் கி.பி. 99 க்கு முன்னால் எழுந்தன என்பது அவர் கருத்து. ஆனாலும் பதிகத்தில் காணப்படும் செய்திகளும், செய்யுளில் உள்ள கருத்துக்களுக்கும் இயைபு இல்லை என்பது தெளிவாக உள்ளது

**சிலப்பதிகாரமும் பதிற்றுப்பத்தும்**

சிலப்பதிகாரத்திற்கும் பதிற்றுப்பத்துக்கும் கருத்தொற்றுமைகள் உண்டு. ஐந்தாம் பத்தில் பாடப்பட்டுள்ள செங்குட்டுன் மோகூர் மன்னனின் வேப்பமரத்தை வெட்டினான் என்று கூறப்படுகிறான். இது சிலப்பதிகாரத்தின் நீர்ப்படைக்காதையின் கண் சொல்லப்பட்டிருக்கிறது. செங்குட்டுவனின் மூதாதையர் ஒருவர் அகப்பா என்ற ஊரை எறிந்தவர் என்று சிலம்பில் பேசப்படுகிறார் இதுவே, 3 ஆம் பத்திற்குரிய பல்யானைச் செல் கெழு குட்டுவனைப் பார்த்து பாலைக் கௌதமனார்.

''தண்ணலம் பெருங்கோட்டு அகப்பா எறிந்த
பொன்புனை உழிஞை வெல்போர்க்குட்டுவ''

என்று குறிப்பிடுகின்றார்.

# 8

# செந்தமிழ்க் காவலர்

அ.சிதம்பரநாதர் அவர்கள் 1930 ஆம் ஆண்டு முதல் 1967 ஆம் ஆண்டு வரை - அதாவது அவர்களது மூச்சு இறுதிவரை மாணவர்க்கும் மற்றவர்க்கும் அறிவுகொளுத்தும் ஆசானாகவே விளங்கி வந்திருக்கிறார்கள் - கல்லூரி முதல்வராக இருந்த நிலையிலும், பல்கலைக்கழக பொறுப்புத்துணைவேந்தராக விளங்கிய காலத்திலும் மாணவர் பணியே தனக்கு அணி என்று ஆற்றி வந்தார்கள்! சுமார் 37 ஆண்டு பணி என்றால் சாதாரணமானதா?

சூரியனுக்குக் கீழே இருக்கும் மரம், செடி, கொடி, புல் பூண்டு, பயிர்ப்பச்சைகள் ஒவ்வொன்றும் என் செழிப்புக்குக் காரணம் 'கதிரவனே, கதிரவனே' என்று கழறுவதைப் போன்றே, தமிழகத்தில் எத்திசைச் சென்றாலும், அத்திசையில் இருக்கும் சான்றோர்கள் எல்லாம் 'என் செழுமைக்கும் வளமைக்கும் காரணம் என் ஆசான் சிதம்பரநாதரே! சிதம்பரநாதரே! என்று குன்றேறிக் கூறுவதைக் கண்டுகளிக்க முடிகிறது'.

அத்துணை ஆயிரம் நன்மாணாக்கரை உருவாக்கி - உதவி இந்த அவனிக்குத் தன் எச்சமாக விட்டுச் சென்றிருக்கிறார் எனின் மிகையன்று!

ஒரு நூலை மாணாக்கருக்குக் கற்பிக்க என்னென்ன தகுதிகள் வேண்டும்?

உயிர் குடிப்பிறப்பு,

சீவகாருண்யம்,

இறைவழிபாடு,

பல நூல்களில் பழகிய பரிச்சயம்,

மாணவர் உளங்கொள நூற்பொருளை எடுத்துச் சொல்லும் வலிமை,

நிலம் - மலை - துலாக்கோல் - மலர் ஆகியவை போன்று குணங்கள்,

உலக நடைமுறை அறிவு,

உயர் குணங்கள்

ஆகிய இவைகளனைத்தும் தகுதிகளாகப் பெற்றிருக்கும் ஒருவர் ஆசிரியராக அல்ல, நல்லாசிரியராக விளங்க முடியும்.

இப்படி அறுதியிட்டு உறுதியாகக் கூறியவர் யார்? அவர்தான் பவணந்தியார் இதோ நன்னூலார் குரலில் நல்லாசிரியர் இலக்கணம்,

*குலனரு தெய்வங் கொள்கை மேன்மை*
*கலை பயில்தெளிவு கட்டுரை வன்மை*
*நிலமலை நிறைகோல் மலர்நிகர் மாட்சியும்*
*உலகியலறி வோடுயர் குணமினைவும்*
*அமைபவனூலரையாசிரியன்னே*

இவ்வாறு இலக்கணங்கள் பொருந்தியிருந்தால் மட்டும் போதுமா? முறையாகப் பாடஞ்சொல்லத் தெரிய வேண்டாமா? வேண்டும் ஓர் ஆசிரியனுக்குப் பாடஞ் சொல்லலே உயிர் மூச்சு. பாடம் நடத்துகிறேன் என்று வகுப்பில் நுழைந்து பாடப் புத்தகத்தையும் மாணவர்களையும் பார்த்து பாடம் சொல்லுவது மட்டுமே பாடம் நடத்துதல் ஆகா. இவ்வாறு நடத்தினால் அது விழலுக்கிறைத்த நீராகுமே தவிர நாட்டின் எதிர்காலத்திற்குரிய அறிஞர்களையும் தலைவர்களையும் உருவாக்கித் தராது.

*காலமிடனும் வாலிதினோக்கிச்*
*சிறந்துழியிருந்து தன்தெய்வம் வாழ்த்தி*
*உரைக்கப்படும் பொருளுள்ளத் தமைத்து*
*விரையான் வெகுளான் விரும்பி முகமலர்ந்து*
*கொள்வோன் கொள்வகை யறிந்தவனுளங் கொளக்*
*கோட்டமின் மனத்திநூல் கொடுத்தலென்ப*

இவ்வாறு ஒரு வேள்விபோலப் பாடம் நடத்த வேண்டும். கல்வி மாணவரின் உள்ளம் தொடர்பான செயல். இந்த இலக்கணத்திற் சிறிதும் குறைவுபடாது ஆசிரியப் பணியை ஓர் அறப்பணியாகப் பாவித்து அதற்கே தன்னை அர்ப்பணித்தவர் அ சிதம்பரநாதர். எனவே தான், அவர் பேர்சொல்லும் பிள்ளைகளாக அவரது மாணவர்கள் விளங்கி வருகிறார்கள்.

'சித்திரனாரும் சிதம்பரனாரும்' என்கிறார் ஒரு மாணவர் தமிழ்த்தாயின் தவப்புதல்வர் என்கிறார் ஒரு மாணவர். செந்தமிழ்க் காவலர் என்கிறார் ஒரு மாணவர். நிமிர் ஆசிரியர் என்கிறார் ஒரு மாணவர் நேர்மையான ஆட்சியாளர் என்கிறார் ஒரு மாணவர். நெறிஞர் என்கிறார் ஒரு மாணவர். நல்லாசிரியர் என்கிறார் ஒரு மாணவர். நெருப்பென்ன நின்ற நெடுமால் என்கிறார் ஒரு மாணவர்

இவையத்தனையும் அ.சிதம்பரநாதரின் வித்தகத்தால் வந்ததன்றி வேறில்லை.

தங்கள் பேராசிரியருக்கு மணிவிழா எடுக்க வரவேற்புக் குழுத் தலைவர்களாக இருந்து அல்லும் பகலும் அயராது உழைத்து வெற்றியை

ஈட்டிய டாக்டர் லலிதா காமேஸ்வரன் அவர்களையும், ஆவி. க. தியாகராசச் செட்டியார் அவர்களையும் முதற்கண் நன்றியோடு நினைப்பதா? அல்லது மணிவிழாவுக்கு மூலவித்தாக இருந்த டாக்டர் ந. சஞ்சீவி அவர்களை நினைப்பதா?

முதலில், டாக்டர் ந.சஞ்சீவி அவர்களைத்தான் நினைக்க வேண்டும்.

"மதுரை தியாகராசர் கல்லூரியில் சில மாதங்களுக்கு முன்னர்த் தமிழ்ச் சிறப்புச் சொற்பொழிவொன்று நிகழ்ந்தது எங்களிற் பலர் அழைக்கப்பெற்று அதற்குச் சென்றிருந்தோம் அப்போது சென்னைப் பச்சையப்பர் கல்லூரித் தமிழறிஞர் திரு. ந. சஞ்சீவியவர்கள் எம் ஏ., சிறப்புச் சொற்பொழிவாற்றினார். சொற்பொழிவுக்கிடையில், இக்கல்லூரி முதல்வர், அ.சி.செட்டியார் அவர்களுக்கு அண்மையில் அறுபதாண்டு நிறைவுறுகிறதென்று கூறி அதனை நினைவுபடுத்தினார்கள். அக்குறிப்பே, இவ்விழாக் கொண்டாட்டத்துக்கு அடிப்படை"

என்று, அ.சிதம்பரநாதர் அவர்களின் மணிவிழாவுக்குக் 'கால்' எங்குத்தோன்றியதென்று 7-9-1967 இல் ஆவி.க. தியாகராசச் செட்டியாரும் டாக்டர் லலிதாகாமேஸ்வரனும் குறிப்பிடுவதிலிருந்து முதல் நன்றி காலஞ்சென்ற, உணர்வுப் பேராசிரியர் டாக்டர் ந.சஞ்சீவி அவர்களுக்கன்றோ சென்றாக வேண்டும்!

மாணவர் நெஞ்சிலும், சான்றோர் நெஞ்சிலும் ஓராசிரியர் இடம் பிடிப்பது எளிதன்று கடமையில் கண்ணாக இருந்தது ஆற்றி, அதில் இன்பம் காண்பவராக விளங்கியிருத்தல் வேண்டும். அ.சிதம்பரநாதர் அவ்வாறு விளங்கியிருக்கிறார்.

அவரே கடமையில் இன்பம் பற்றிக் கூறுதல் நமக்குப் பேரின்பம் பயப்பதாக உள்ளது.

கடமையாற்றுவதில் இன்பம் கண்டுள்ளவர் ஒவ்வொரு நாட்டிலும் சிலர் உண்டு. கடமையைக் கடமை என்று கருதிச் செய்வோரே எல்லா நாடுகளிலும் பலர் உளர். செய்வதொன்று கடமையாயினும், அதன்கண்ணே உள்ளம் பூரித்து ஈடுபடுவோர் உயர்மக்களால் நன்மதிப்புப் பெறுவர். அங்ஙனம் நன்மதிப்புப் பெறுபவர்கள் வயதில் முதிர்ந்தவர்களாய் இருக்க வேண்டும் என்பதில்லை. கடமையை மனமுவந்து ஆற்றியதால் சிறு வயதுப் பையன் ஒருவன் பெரும்புகழ் ஈட்டிவிட்டான்.

அப்பூதியடிகளுடைய மகன் மூத்த திருநாவுக்கரசு என்பவன் சைவ உலகிலும் இலக்கிய உலகிலும் பெரும் புகழுக்கு உரியவனாகி விட்டான். அதற்குக் காரணம் அவன் செய்த கடமைச் செயலில் இன்பங்கண்டான் என்பதே. அப்பூதியடிகள் வீட்டுக்கு வந்து சேர்ந்த அப்பரடிகளை அமுது

ஊட்டுவதற்காக வாழைக்குருத்து கொண்டு வரும்பொருட்டு மூத்த திருநாவுக்கரசனைப் பெற்றோர் ஏவினர். அச்சிறுவன், 'நல்லது, தாய் தந்தை ஏவ நானிது செய்யப் பெற்றேன்' என்று மகிழ்ச்சி கொண்டான். நான் கொடுத்து வைத்தவன் என்று கருதி விரைந்தோடித் தோட்டத்திற் புகுந்த பெரிய வாழைக்குருத்தை அரிந்த நேரத்தில் அரவம் ஒன்று அவன் அங்கையில் தீண்டிற்று. அவனோ அந்தப் பாம்பினை உதறித் தள்ளிவிட்டுப் பதைபதைத்துக் குருத்தோடு பெற்றோரிடம் ஓடிவந்தான். பாம்பின் விடம் ஏறுவதற்கு முன்னாள் நான் பெற்றோரிடம் கொடுத்துவிட வேண்டும் என்ற மகிழ்ச்சியோடு ஓடி வந்தான், அவ்வாறே கொடுத்தான் புகழ் ஈட்டினான்

மெய்ப்பொருள் நாயனாரை வஞ்சித்துக் கொல்ல முற்பட்டு வந்தான் முத்தநாதன். கடமை உணர்ச்சியால் முதலில் தடுத்தான் தத்தன். சிவவேடந்தாங்கிய முத்தநாதன் அரிய புத்தகத்தின் அரும்பொருளை வேந்தருக்கு உபதேசிக்கச் செல்வதாகக் கூற, உள்ளே விடுத்தனனாயினும் எச்சரிக்கையாக உள் நிகழ்வதைக் கடமை உணர்ச்சியால் கவனித்துக் கொண்டேயிருந்தான். முத்தநாதன் புத்தகத்தை அவிழ்ப்பான் போன்று மெய்ப்பொருள் நாயனாரைக் குத்திவிட்டான். எறிவதற்கு வாளை ஓங்கிய தத்தனை நோக்கி மெய்ப்பொருள் நாயனார் ''தத்தா, நமர்'' எனத் தடுத்து, வீழ்ந்தார். தத்தன் கடமை உணர்ச்சியால் 'யாது யான் செய்ய வேண்டும்?' எனக் கேட்க, அவரும் ''முத்தநாதனை இடையில் யாரும் தடுக்காதபடி பார்த்து வெளியே கொண்டுபோய் விடு நீ!''என்றார்.

கடமை உணர்ச்சியால் அவனே உடன்போய் ஊரைக் கடந்து ஆள் நடமாட்டம் இல்லாத கானகத்தில் விட்டுவந்தான். அரசனைக் கொன்றானிவன் என முத்தநாதனை எதிர்த்துவந்த பலரைத் தடுத்து வழிவிலக்கிக் கொண்டு சென்றான் தத்தன். அம்மட்டோ, திரும்பி வந்து ''செய்தவ வேடங் கொண்டு வென்றவனுக்கு இடையூறின்றிவிட்டனன்'' என்று தத்தன் கூற, மெய்ப்பாருள் நாயனார், ''இன்றெனக்கு ஐயன் செய்தது யார் செய்ய வல்லார்?'' என்று நன்றி கூறினார். இவ்வாறு கடமையில் இன்பங்கொண்டவர் செய்திகள் நம்மை வியக்க வைப்பவை.

இன்பம் விழையாமல், கடமையில் இன்பங்கண்டு உழைப்பவர்கள் குடும்பமாகிய பாரத்தைத் தாங்கும் வலிய தூண்கள் ''இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான் தன்கேளிர் துன்பம் துடைத்தான்றும் தூன்'' என்றார் வள்ளுவர்.

நன்னிலைக்கண் தன்னை நிலைபெறுமாறு செய்பவனும், தன்னை நிலைக்கலக்கிக் கீழிடுவானும், உள்ள நிலையினும் மேன்மேலும் உயர்ந்து நிற்பானும் தன்னைத் தலைமைக்கு உரியவனாக்கிக் கொள்வானும் தானேயாதலால் ஒவ்வொருவரும் அவரவர் கடமையில் இன்பம்

காணுதல் வேண்டும் என் குடியை உயருமாறு செய்வதற்குரிய கடமைகளைச் செவ்வனே செய்வேன் என முயலும் ஒருவர்க்குத் தெய்வங்கூட உடுப்பினை இறுகக் கட்டிக்கொண்டு உடன்வந்து உதவும் என்பார்கள் போர்க்களத்தில் படை வீரர்கள் பலரிருந்தாலும் முன்னணியில் உள்ள வீரர்களுக்குத்தான் பொறுப்பு அதிகம். 'ஒவ்வொரு குடித்தனத்திலும் பிறந்திருப்பவர் பலராயினும் சிலருக்குத்தான் குடும்ப பாரம் அதிகமாகிறது அவ்வாறே ஒவ்வொர் அலுவலகத்திலும் வேலையை நன்றாகச் செய்து முடிப்பவர்களுக்கே அதிகமாக மேன்மேலும் வேலைகள் வந்து கொண்டிருக்கும்; அதற்காகக் கவலைப்படாது அக்கடமைகளை ஆற்றுவதில் இன்பங்கொள்ளுதல் வேண்டும்.

இவ்வாறு கடமையில் இன்பம் கண்ட கர்மவீரருக்குத்தான் மணிவிழா எடுக்கப்பட்டது. 7.9 1967 இல்.

மலர்ந்த முகத்துடனும் இனிய சொல்லுடனும் பழகும் தமிழ்ப் பண்பாளர் செந்தமிழ்க் காவலர் டாக்டர் அ. சிதம்பரநாதஞ் செட்டியார் அவர்கள் மணிவிழாக் கொள்வதறிந்து மகிழ்வெய்துகின்றோம். இவர் பெறும் சிறப்பு நம் தமிழ்த்தாய் பெறும் சிறப்பாகும்' என்பது எவ்வளவு பொருள்மொழி!

''டாக்டர் சிதம்பரநாதனார் அவர்கள் என்னுடைய தமிழ்ப் பேராசிரியர் என்று சொல்லிக்கொள்வதிலே பெருமையடைகிறேன்'' என்று புளகம் பொங்கக் கூறுகிறார் அந்நாளைய கல்வி மற்றும் தொழில் அமைச்சர் நாவலர் டாக்டர் இரா நெடுஞ்செழியன் அவர்கள்.

டாக்டர் சிதம்பரநாதனார் அவர்கள் சிறந்த தமிழப் பேச்சாளர்; நல்ல சொற்பொழிவாளர், சீரிய எழுத்தாளர்; இனிய பண்பாளர்; அரிய நண்பர்; நல்ல முயற்சியாளர்; வினை முடிக்கும் திறனாளர் என்று அவர்தம் ஆசானைப் போற்றியிருப்பதில் வியப்பொன்றுமில்லை.

''இவரது நுண்மான் நுழைபுலப் பண்மான் பெருநலம், தென்னாட்டுப் பல்கலைக் கழகங்களுக்கும், சென்னை அரசியல் மன்றத்திற்கும் மன்னிய பயன் அளித்துள்ளது. தவப்பெரும் தமிழ்ச் செல்வரானதற்கேற்ப, இவர்பால் பயின்ற தமிழ் மாணவர்கள் இன்று தமிழக அரசின் தலைமை ஏற்றுத் திகழ்கின்றார்'' என்று, பேராசிரியர் அவர்களிடம் பயின்ற மாணாக்கர் சார்பாக, அவரை விதந்தோதும் கலையன்ன டாக்டர் திருமதி இராதா தியாகராசன் அவர்களது புகழுரை போருரையேயாகும்.

டாக்டர் அ.சி செட்டியாரிடம் சிலப்பதிகாரம், மொழியியல் இன்னோரன்னவை பற்றிய பாடங்கள் கேட்பதற்குப் பல மாணவர்கள் பேரார்வத்துடன் காத்திருப்பர் அவர்கள் உள்ளத்தில் தமிழின்பம்

உவட்டெடுக்கும் வண்ணம் இப்பேராசிரியர், அவர்களுக்குத் தமிழறிவு ஊட்டுவார் ஆராய்ச்சித் துறையிலும் ஆர்வம் ஊட்டித் தமிழை வளர்த்த பெருமை அவ்ருக்கு உண்டு என்ற கருத்தை அவரது மாணவர்கள் ஆதாரத்துடன் தலையசைப்பதை இன்றும் காண்கின்றோமே!

உழைப்பு! உழைப்பு! உழைப்பு! - இதுவே அ. சிதம்பரநாதரின் வேதம். இன்று செய்ய வேண்டிய வேலையை அவர் நாளைககுத் தள்ளிப் போட்டது கிடையாது. உழைப்பிற்கும் செம்மையான பழக்க வழக்கங்களுக்கும் அவர் ஓர் இலக்கியம்

ஆழ்ந்தகன்ற அறிவு, எடுப்பான அழகு மிக்க தோற்றம், ஆராய்ந்த கல்வி இம்மூன்றும் தூதருக்குரிய நல்லிலக்கணமாகும்

*அறிவுரு ஆராய்ந்த கல்வியாம் மூன்றான்*
*செறிவுடையான் செல்க வினைக்கு''*

என்பது குறட்பா. தூதர்க்குரிய இம்மூன்று இலக்கணங்களையும் ஒருங்கே பெற்றுத் தலையாய தமிழ்த் தூதராகச் சிறந்து விளங்குகின்றார் செந்தமிழ்க் காவலர் என்று குறிப்பிட்டுள்ளார் டாக்டர் அ. சிதம்பரநாதனாரிடம் மாணவனாக அமர்ந்து அறிவுபெற்ற பேராசிரியர் வ.பெருமாள்.

இயல்பாகவே பிறர்க்கு ஒல்லும் வழியெல்லாம் உதவவேண்டும் என்ற நெஞ்சினர் அ. சிதம்பரநாதர். அதுவும் தன் ஆசான் வழிவந்த பரிந்துரை என்றால் கேட்கவா வேண்டும்? இதோ! நெக்குருகிக் கூறும் ஒரு தமிழன்பர் குரல்.

கல்லூரித் தமிழாசிரியர்களோடும், வேறு சிலரோடும் டாக்டர் செட்டியார் அவர்களைக் காண அவர் இல்லம் சென்றோம். அதுவரை டாக்டர் அவர்களை நான் நேரில் கண்டதில்லை. கண்டதும் மகிழ்ச்சி கொண்டேன் காரணம் இப்படித்தான் தமிழ்ப் பேராசிரியர்கள் இருக்க வேண்டும் என எண்ணியிருந்ததால், உரையாடிக் கொண்டிருந்தோம். கனிவான பேச்சு, குலுங்கிய சிரிப்பு, என்னோடு வந்த கல்லூரித் தமிழாசிரியர் பால் பரிவுகாட்டிய முகமன் ஆகியவை இருந்தன. நாங்கள் விடைபெறும் முன் என் நூல் பற்றியும், நாவலர் பாரதியார் எழுதிய கடிதம் பற்றியும் மெல்லத் தெரிவித்தேன். கேட்டதும் டாக்டர் அவர்களுக்கு அவரது ஆசிரியர்பால் எத்துணை பெரிய மதிப்பும் அன்பும் இருந்தன என்பதை அவர்கள் நிலை எனக்குக் காட்டிற்று. சொல்லற்றுச் செயலற்றுச் சில நொடிகள் இருந்தார்கள் கருத்துச் செலுத்துவதாகக் கூறி விடை தந்தார்கள். இங்கிலாந்து செல்வதற்குமுன் என் நூலைப் பல்கலைக்கழகப் பாட நூலாக ஆக்க ஆவன செய்த பிறகே சென்றார்கள். இவ்வாறு பல நிகழ்வுகள் உண்டு.

இவர்போல், அ.சிதம்பரநாதர் அவர்களிடம் உதவி பெற்றோர் எத்தனை பேரோ!

ஆடவர் அவரவும் அழகுபடைத்த அ. சிதம்பரநாதர் அரிவையரும் நாணும் பெண்மைச் சாயலும் பெற்றிருந்தது மறைமலை அடிகள் - திரு.வி.க. மரபுக்காகவே போலும்! என வியக்கின்றார் டாக்டர் ந.சஞ்சீவி அவர்கள். அவர் கூறுவது;

சிதம்பரநாதனார் சிந்தைக்கு இனிய பெருமாட்டியார், திருமதி பெரியநாயகி அம்மையார், பெண்ணுரிமை போற்றும் பெருந்தகைக்கு வாழ்க்கைத் துணைவியராய் வாய்ந்த அவர்கள் கலையுள்ளம் நிறைந்த கருணையாளர். ஐயா அவர்களைக் கடமையின் வடிவம் என்றால் அம்மா அவர்களைக் கருணையின் வடிவம் எனலாம். கடமையும் கருணையும் கலந்த காட்சியே மிகவும் ஒளியும் வழங்கும் மாட்சி; என அந்த இரு பெருந்தகையாளர்களையும் அவர்படம் பிடித்திருப்பது நம் நெஞ்சைப் பிணிக்கின்றது.

தில்லியில் இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவர் டாக்டர் பாபு இராசேந்திரப்பிரசாத் அவர்களோடு அளவளாவிய இப்பெருமகன் அ.சிதம்பரநாதர் மொழி இயலுக்கு (Linguistics) ப் புரிந்த கலப்பற்ற தொண்டை நினைவு கூறுகிறார் டாக்டர் மெ.சுந்தரம் அவர்கள்.

சிலர் மேலைநாட்டு மொழிஇயல் கொள்கையினைத் தழுவி, அவற்றைத் தமிழோடு பொருத்திப் பார்த்துத் தாய்த்தமிழுக்குச் சிறுமையும் குறைவும் கற்பித்தனர் டாக்டர் சிதம்பரநாதர் அவர்கள் அப்புன்னெறிப் படராது செந்தமிழ் மரபிற் கேற்ற செந்நெறிச் சென்று முத்தமிழின் மொய்ம்பினையும், அதன் மொழி இயற்கொள்கைகளின் தொன்மை யினையும், தன்மையினையும் இயற்பட மொழிந்து எழிற்றமிழ் மொழிக்கு ஏற்றம் அளித்தார். எஞ்சிய சிலர் இரக்கம் இன்றி அன்னைத் தமிழுக்கு இறக்கம் அளித்த நேரத்தில் துணிவொடும் கனிவொடும் களத்தில் இறங்கி, மாற்றாரைப் புறங்கண்டு மொழிக்கொடியை உயர்த்திப் பிடித்தவர். இதனால் ‘தமிழ்மொழியியல் துறையின் தந்தை’ என்று இவர்ளை அழைக்கலாம் என்ற அவர்தம் மாணவர் கருத்து அ.சிதம்பரநாதரின் மொழி இயல் தொண்டை அறிய உதவுகிறது.

என் ஆசிரியர் சிதம்பரனாரை நினைக்கும் போது, செந்தமிழும் செயல்மாண்பும் கண்முன் ஓடி வருகின்றன. முப்பதாண்டுகட்கு மேலாக அவர்தம் அன்பையும், நண்பையும் துணையையும் இடையறாது பெற்ற அன்பர் குழாத்துள் நானும் ஒருவன் சிதம்பரனார் தோற்றத்தில் சான்றான்மையையும், நடையில் பெருமிதத்தையும் சொல்லில் மொழித் தூய்மையையும், கருத்தில் துணிவுடைத் தெளிவையும், செயலில் மொழி கால ஒழுங்கினையும், நட்பில் கூடிப்பிரியாப் பண்பையும் நெஞ்சத்தில் உயிர் ஊட்டும் உணர்ச்சியினையும் கண்டு வந்திருக்கிறேன்.

இலக்கணம் இலக்கியம் என்ற இரு மார்பிலிருந்து மொழிப்பால் ஊட்டிய கன்னித் தமிழ்த் தாயை மறவாத மகனாவார் சிதம்பரனார் என்ற டாக்டர் வ.சுப.மாணிக்கனாரின் இந்தப் படப்பிடிப்பு நம்முடைய உடலைப் புளகமுறச் செய்கின்றதன்றோ!

தன் அலுவற் கூறுகளை அடுக்கடுக்காக வகுத்துக் கொண்டு காலம் போற்றிக் காரியம் முடிக்கும் சிதம்பரநாதர் உடையிலும், சொல்லிலும், ஒழுக்க வழக்கங்களிலும் மொழி மரபுகளிலும், நட்புமுறைகளிலும் தமிழ் நெறிஞராகத் தம் மாணவர் உள்ளங்களிலே பதிந்துள்ளார், படிந்துள்ளார்

இந்தப் பண்புகள் இன்று முன்னேறத் துடிக்கும் இளைஞர்களுக்கு நல்வழிகாட்டிகள் எனக் கூற வேண்டுவதில்லை.

ஓர் ஆசிரியருக்கு, அரசு நல்லாசிரியர் என்ற பட்டம் கொடுப்பதை விட அவரிடம் பயின்ற மாணவர்கள் அவருக்கு நல்லாசிரியர் என்ற பட்டம் நல்க வேண்டும். இதுவே சிறந்த அளவுகோலாக இருக்க முடியும். சிலப்பதிகாரக் கோவலனை, ஷேக்ஸ்பியரின் ஜூலியஸ் சீசர் நாடகக் கதாநாயகன் ஜூலியஸ் சீசரோடு ஒப்பிட்டுக்காட்டி பாடம் நடத்தியது பல மாணவர்களைப் பரவசப்படுத்தி 'இவரே நல்லாசிரியர்' என்று முழங்குமாறு செய்திருக்கிறது

''ஆங்கிலமும் செந்தமிழும் அடைவுபெறப் பயின்றுலகில் ஓங்கிய பல்கலை வளர்க்கும் உணர்வுடைய பேராசான் தீங்கு கருதாமனச் செம்மையினான் திருவாளன் பாங்கினுளா ரியல்பறிந்து பழகிடுநற் பண்புடையான்''

எனச் செம்மாந்து போற்றியுள்ளார், உடன் பணியாற்றிய பெரும்புலவர் க.வெள்ளைவாரணனார், அருகிருக்கும் அன்பர் மனமறிந்து பழகிடும் பண்புடையவர் அ.சிதம்பரநாதர் எனகிறார், இது அனைவரும் அறிந்த அவர் பண்பன்றோ!

பேராசிரியர் டாக்டர் அ சிதம்பரநாதச் செட்டியார் மணிவிழா மலர் தாங்கிய வாழ்த்துச் செய்திகளில் கருத்தூன்றி எண்ணிப் பார்க்கும் செய்தி கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் விடுத்த செய்தி:

காலமெல்லாம் குறிப்பிட்ட லட்சியத்திற்காக உழைக்கும் சான்றோர்க்கு நன்றி உணர்ச்சியைப் புலப்படுத்தும் வகையில் விழாக்கள் எடுப்பது மரபு. அந்த வகையில் டாக்டர் சிதம்பரநாதனாரின் மணிவிழாவை, அவரது மொழித் தொண்டினைப் போற்றும் தமிழன்பர்கள் நடத்தும் 'நன்றி அறிவிப்பு விழா' என்றே குறிப்பிடலாம்' என்பது எவ்வளவு பொருள் பொதிந்த செய்தி!

7-9-1967 இல் நடந்த மணிவிழாவில் பாராட்டுரை ஆற்றியவர் அன்று நாடாளுமன்ற உறுப்பினராகியிருந்த பேராசிரியர் க.அன்பழகன் அவர்கள்

அ.சிதம்பரநாதரின் தலைமாணாக்கர்களில் ஒருவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

டாக்டர் கா.மீனாட்சி சுந்தரம், அழகிய சொக்கநாதன், பாகீரதி அம்மாள் போன்ற பல மாணவ நன்மணிகளைப் பெற்றிருந்தார், அவர்

இதுகாறும் தமிழக மாணவர் நெஞ்சில் அ சிதம்பரநாதர் எவ்வாறு பதிந்திருக்கிறார் என்று சில எடுத்துக்காட்டுகளுடன் கண்டோம் இனி, அயல்நாட்டு மாணவரான 'ஜான்மார்' என்பார் மனதில் அ.சிதம்பரநாதர் எவ்வாறு பதிந்திருந்தார் எனக் காணுதல் மிகையன்று.

1954 ஆம் ஆண்டு, ஜான்மார் தன் துணைவியாருடன் அ சிதம்பர நாதரிடம் தமிழ்பயில பெருவேட்கை கொண்டு சிதம்பரம் வந்திருந்தார். அவரையும் அவர்தம் துணைவியாரையும் அந்த ஆண்டுப் பொங்கல் விழாவுக்கு அழைத்திருந்தார் அ சிதம்பரநாதர்

விருந்தினரைப் பகல்விருந்துக்கு அழைத்துவர அ.சிதம்பரநாதர் தம் இளவல் அ சபாபதியைப் பணித்தார் அவரும் விருந்தினர் விடுதியில் இருந்த ஜான்மார் தம்பதிகளை அழைக்கச் சென்றபோது, அவர்கள் தமிழ்நாட்டு உடையில் வர விருப்பம் தெரிவித்து, திரு.ஜான்மார் வேட்டியணிந்தும், அவரது மனைவி புடவை அணிந்தும் வந்தனர் வந்தவர்கள் தரையில் அமர்ந்து உணவருந்த விரும்பினர். அ சிதம்பரநாதரும் மகிழ்வுடன் மேசை நாற்காலிகளை அப்புறப்படுத்தச் செய்து விரிப்பை விரிக்கச் செய்தார்.

அனைவரும் தரையில் அமர்ந்து உணவருந்தினர். இடையில் தன் பெயரைத் தமிழ்படுத்தித் தரவேண்டும் என ஜான்மார் சிதம்பரநாதரைக் கேட்க அவரும் 'இறையருள்' என்று பெயர் வைத்தார். அவரும் தன் பெயரை 'இறையருள், இறையருள்' என இருமுறை சொல்லிப் பார்த்து மகிழ்ந்தார் ஏனில் வெளிநாட்டாரைத் தமிழராகவே மாற்றிய அ. சிதம்பரநாதரின் கனிந்த தமிழ்ப் பண்புதான் என்னே!

அ. சிதம்பரநாதர் அவர்கள் சென்னையில் பணியாற்றுங்காலை ஒவ்வொரு வியாழன்தோறும் சிலப்பதிகார வகுப்பு நடத்தி வந்தார் அதில் அறிஞர் பலர் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

19.4 1962இல் காவிரிப்பூம்பட்டிணத்தில் சிலப்பதிகார விழாவைச் சிறப்பாக நடத்தினார். காலை, மாலை, இரவு என்று தொடர்ந்து நிகழ்ச்சிகள் நடந்தன இயல்விழாவுக்கு திரு மாணிக்க வாசகத் தம்பிரான் அழைக்கப்பட்டார். இசை விழாவுக்கு திரு. சுந்தரேச பாகவதர் அமர்த்தப்பட்டார். நாடக விழாவுக்கு மாதவி என்ற பெண்மணி நாட்டியமாட அழைக்கப் பெற்றிருந்தார்.

அ சிதம்பரநாதரின் மற்றொரு மாணவர் டாக்டர் எஸ. அகத்தியலிங்கம் அவர்கள். தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தராக இருந்தபோது 23.12.1987இல் அங்கே சிதமபரனார் அறக்கடடளை ஏற்படுத்தப்பட்டது இதையொட்டி சிதமபரனார் 80ஆம் ஆண்டு நிறைவு விழாக் குழுவினர் ரூ. 12,000 வழங்கியது குறிப்பிடத்தக்கது. குடந்தையில் 'சிதமபரனார் பேரவை ஏற்படுத்தப்படடு ஆண்டுதோறும பாட்டு, பேச்சு, நடனம் ஆகிய போட்டிகள நடத்தப்பெற்று பரிசுகள் வழங்கப பெறுகின்றன.

தமிழப் பல்கலைக்கழகத்தில் ஏறபடுததப்பட்ட அ.சிதம்பரனார் அறக் கட்டளைச சொற்பொழிவை ஆற்றியவர்களுள் ஒருவர், அ. சிதம்பரநாதரின் தலைமாணாக்கர்களில் ஒருவரான டாக்டர் மீனாட்சி சுந்தரனார் அவர்கள் சிறப்பிடம் பெறற ஒருவராவர்.

மேலும் குடந்தையில் அவர் பயின்ற நேடிவ் உயர்நிலைப் பள்ளியில் அ. சிதம்பரநாதர் தம் தாயார், தகப்பனார் பெயரில் ஓர் அறக்கட்டளை ஏற்படுத்தி தமிழில் முதல் மதிப்பெண் பெறும் மாணவருக்குப் பரிசுத திட்டம் ஒன்றை 1961இல் ஏற்படுத்தியுள்ளார்

வேலூர் ஆக்ஸீலியம் கல்லூரியில் டாக்டர் அ சிதம்பரநாதன் செட்டியார் பெயரால் ரூ.500க்கு ஓர் அறக்கட்டளையை 1981இல் ஏற்படுத்தி தமிழில் முதல் மதிப்பெண் பெறும் மாணவிக்குப் பரிசுத் திட்டத்தினை க. சபாராசன் ஏற்படுத்தியுள்ளார், தன் அன்பையும் மரியாதையையும் தெரிவிக்கச் சபாராசன் செய்த ஏற்பாடு இது. அ சி. அவாகளின் நினைவு போற்றவும் இது உதவுகிறது

# 9

# பல்கலைக்குரிசில்

ஒப்பாரும் மிக்காருமின்றித் திகழ்ந்த ஒரு சிலரின் சிறப்புக்களைச் சொல்லவோ எழுதவோ புகும்போது, "அவர் பெருமைகள் எல்லாம் விரிக்கிற்பெருகும் தொகுப்பின் எஞ்சும்" என்று குறிப்பிடுதல் இயல்பு

இவ்வாறு குறிப்பிட நூற்றுக்கு நூறு பொருத்தமானவர் 'பல்கலைக்குரிசில்' அ.சிதம்பரநாதர் அவர்கள் எனில் மிகையன்று

குரிசில் என்னும் சொல்லுக்குத் தலைவன், பெருமையில் சிறந்தவர் போன்ற பொருள்கள் உண்டு அ சிதம்பரநாதரிடம் பல கலைகள் நிறைந்திருந்தன. அவற்றிற்கு அவர் தலைவராக விளங்கினார்.

தமிழ்ப் பேராசானாகிய அவரிடம் குடிகொண்டிருந்த திறமைகள் எல்லாம் கலைகளாகப் பரிணமித்தன அவரிடமிருந்த கலைகள் என்ன என்ன எனக் கணக்கிட்டோமானால்-

மாணவர் உள்ளங்கொள்ளப் பாடம் சொல்லும்
பாங்கு
அழுத்தமாக மனதில் பதியும் வண்ணம்
ஆற்றும் சொற்பெருக்கு
சொற்சித்திரங்களாக மாறும்
எழுத்து
காய்தல் உவத்தல் அற்ற ஆய்வு,
பிசிறு தட்டாத மொழிபெயர்ப்பு
மொழிஇயலின் நுண்ணாய்வு,
அயல்நாட்டுப் பயணங்களைத் தமிழ்,
தமிழரின் மேன்மைக்காகவே பயன்படுத்திக் கொண்டது.

தம் மாணவர்களுக்கு நல்லாசானாக மட்டும் இல்லாமல், நண்பனாக, தந்தையாக நின்று ஒல்லும் வகையான் உதவியது.

அழகியல் பொதுளக் கவிதை புனைவது, அவரவர் தரத்திற்கேற்றவாறு அறிவுரை பகர்வது.

கடமையில் கண்டிப்பும் கனிவும் காட்டுவது, எச்சூழலிலும் சுயமரியாதைக்கும் தன்மானத்திற்கும் பங்கம் வராமல் காத்துக்கொள்ளும்

விழிப்பு... இப்படிப் பலவற்றை அவரது செம்மாந்த வாழ்க்கையிலிருந்து அறிந்து பாடம் பெறலாம்.

அ.சிதம்பரநாதர் இனிய செந்தமிழ் நடையில் தக்க உடன் பாட்டுரைகள், மறுப்புரைகளுடன் பாடங்களை நடத்துவார். வாய்ப்புள்ள இடத்துத் தம் ஆசிரியர் நாவலர் சோமசுந்தர பாரதியார் அவர்களை நினைவு கூர்வார். மாணவர்கள் ஒழுங்கு முறையைப் பின்பற்ற வேண்டும் என்ற உறுதியினர். மாணவர்களுக்கென கருததரங்கு ஒன்று உண்டு. மாணவர்கள் தம் படிப்பின் மூன்றாண்டு எல்லைக்குள் கருத்தரங்கில் கட்டுரை படிக்க வேண்டும். ஒரு மாணவர் சிறிய வருத்தம் ஒன்றால் கட்டுரை படிக்காதிருந்தார். மூன்று ஆண்டுகள் முடியும் நிலையில் அந்த மாணவர் கட்டுரை படிக்காவிடின் தேர்வெழுதச் சான்றளிக்க மாட்டேன்' எனக் கண்டிப்புடன் கூறிவிட்டார்.

தம் கருத்துரிமையை என்றும் விடுத்தவரல்லர்

பதவியிலேயே நிலைக்க வேண்டும் என்று விரும்பியவர் அல்லர் அ.சிதம்பரநாதர். சென்னை மாநில மேலவைத் தேர்தலுக்குப் போட்டியிட்டபோது, இசைவு வேண்டி எழுதிய தன் கடிதத்திற்கு நிருவாகம் மறுமொழி தராத நிலையில் தன் பதவியினின்றும் விலகிய உளத்திண்மையர்.

தம்மிடம் பயின்று விடைபெறும் மாணவர்களுக்கு, அ.சிதம்பரநாதர்,

''அடக்கமாக வாழுங்கள். ஆனால் பிறர் அடக்க இடம் கொடுத்து விடாதீர்கள்'' எனப் பண்பும் கொள்கையும் செறிந்த அறிவுரை கூறி விடை தருவார்

பலரும் பேராசிரியரிடம் உதவிகேட்டு வருவதுண்டு. அவர்களில் உறவினர் சிலரும் உண்டு. உறவினர் என்பதற்காக நெறி பிறழ்ந்து உதவி செய்யும் இயல்பினர் அல்லர். அவர் உறவினர் ஒருவர்க்கு அழகப்பா கல்லூரியில் வேலைவாய்ப்பு கிட்டியபோது அவர் தம் பரிந்துரைக் கடிதத்தால் அங்கு வேலையில் சேர்ந்தார். சேர்ந்த பின்னரே அவருக்கு முன்னர், அவர் தம் பரிந்துரைக் கடிதம் பெற்றுப் பணியில் சேர்ந்த இருவர் இருந்தமையை மூன்றாவதாகச் சேர்ந்தவர் அறிந்தார். ஆதலின் தம் மாணவர்கள் என்பதால் பரிந்துரைக் கடிதம் கொடுத்துள்ளாரேயன்றி வேறு காரணத்தால் அல்ல என்பதும் புலனாயிற்று.

நல்ல, நேரிய குணநலன்கள் ஒருவர்க்கு வாய்க்கப்பெற வேண்டுமானால் அவர்தம் மனத்தைத் தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டும். அந்த மனத்தூய்மைக்கு வழிகாட்டியுள்ளார் அ.சிதம்பரநாதர்.

மனத்தூய்மைக்கு இன்றியமையாத வழி வாய்மை.

*புறத்தூய்மை நீரான் அமையும்*

அகத்தூய்மை வாய்மையாற் காணப்படும்

என்றார் திருவள்ளுவர். ஒருவர் மனத்தாலும், செயலாலும், சொல்லாலும், உண்மையும், மெய்ம்மையும், வாய்மையும் உடையவராய் இருந்தால் அவருடைய தூய்மை உள்ளத்தைப் பாதுகாத்துக்கொள்ள முடியும்

''வாய்மையின் வழாது மன்னுயிர் ஓம்புநர்க்கு
யாவதும் உண்டோஎய்தா அரும்பொருள்''

என்றார் இளங்கோ அடிகள் ''மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு தானஞ்செய்வாரின் தலை'' என்பது வள்ளுவர் வாய்மொழி. உடம்பினாற் செய்யப்படும் தவத்தையும் தானத்தையும் விட மானத்தோடு பொருந்திய வாய்மை சிறந்தது.

மனத்தூய்மைக்கு அடுத்தபடியாக வேண்டப்படுபவை அவாநீத்தலும், அழுக்காறு கொள்ளாமையும், பேராசை பிடித்த ஒருவர் உள்ளத்தைத் தூயதாக வைத்துக்கொள்ளல் இயலாது. அவ்வாறே பொறாமையாகிய பாவி தீய சிந்தனையிலும், தீச்செயலிலும் ஒருவரைக் கொண்டு சேர்த்துப் பாழாக்கி விடும். மனத்தூய்மைக்கு இன்னொரு சாதனம் கோபங் கொள்ளாமை. சினம் சீற்றமும் கொண்டால் உள்ளத்தில் கொதிப்பு அதிகம் உண்டாகும். அதனால் நடுநிலை கெடும். நடுவுநிலை கெடுகிறபோது மனம் எவ்வாறு தூயதாகக் கொள்ளப்படும்? கடுஞ்சொல்லை நீக்கி இன்சொல் கூறக் கற்றுக்கொள்வதும் இன்முகங்காட்டக் கற்றுக்கொள்வதும் நல்லது. ''இன்சொலால் ஈத்தளிக்க வல்லார்க்குத் தன் சொலால்தான் கண்டனைத் திவ்வுலகு''.

மனத்தூய்மையைக் கெடுப்பது அச்சம். பழிபாவத்து அஞ்சாமல் நாளை நம் குடும்பம் என்னாகுமோ, நான் யாது ஆவேனோ என அஞ்சியஞ்சிக் கணந்தோறும் சாகிறவர்கள் எவ்வாறு மனத்தூய்மையைப் பேண முடியும்?

யான் ஒருவனேயானாலும், நான் கருதுவது தக்கதாதலால் அந்நல்லதன் கண்நிற்பேன் என உறுதிப்பாட்டோடு இருப்பது உளத் தூய்மையை வளர்ப்பதற்குரிய சாதனமாகும். பிரகலாதன், நக்கீரர், காந்தியடிகள் வரலாறுகளில் எடுத்துக்காட்டுகள் நிறையக் கிடைக்கும்.

ஆன்மீகத்திற்கு வேண்டப்படுவது 'அந்தரியாகப் பூசை' என்றார் உமாபதிசிவம். அந்தரியாகப் பூசை என்பது மனத்துள் செய்யப்படுகிற ஞானப்பூசை. 'பூவும் புகையும் பிறவும் பூசைக்கு வேண்டுவனவற்றை மனத்தால் கருதிக்கொண்டு சிந்தையிலே அர்ச்சிப்பதற்கு ஒருவர் கற்றுக் கொள்வாரேயானால் இறைவம் உளத்தில் வரவர வந்திடுவன் என்கிறார் அவர்.

ஞான நூல்களை ஓதுதல், அவற்றை
ஓதுவித்தல், நற்பொருளைக் கேட்டல்

கேட்பித்தல், அப்பொருளைச்
சிந்தித்தல் ஆகிய ஞானபூசை
ஆகும்.
காயமே கோயிலாகக் கடிமணம் அடிமையாக
வாய்மையே தூய்மையாக மனம் அணியிலிங்கமாக
நேயமே நெய்யும் பாலாநிறைய நீர் அமைய ஆட்டிப்
பூசனை யீசனார்க்குப் போற்றவிக் காட்டினோமே

என்பது அப்பர் வாக்கு ஆக, வாய்மையும் அன்பும் உளத்தூய்மைக்கு இன்றியமையாகும் என்பது அ.சிதம்பரநாதர் துணிபு.

தூய்மை உளத்தராகிய அ சிதம்பரநாதர் அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பொன்விழா மலரில் (1929-1979) பல்கலைக் கழகப் பிதாமகர் அரசர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களை மனமாரக் கீழ்க்காணுமாறு போற்றியுள்ளார்:

''செயலாற் சொல்லாற் செப்பரிய மனத்தால்
இயலிசை ஓம்பிய இன்றமிழ் வள்ளல்
உயலாம் வழிகள் உயர்தமிழ்க்குக் கண்டார்
அயலும் விரும்பும் அண்ணாமலை மன்னர்''

பல்கலைக் கழகம் கண்ட தமிழ் வள்ளலை மேற்கூறியவாறு பாடியதில் உளம் நிறைவு பெறாதவராய், அவர் (ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியார்) மணிவிழா மலரில், புறநானூற்றுப் புலவோன் போலப் 'புகழாய பொருளொடு' என்று தொடங்கும் 'பலதாழிசைக் கொச்சகக் கலிப்பா' பாடிய பான்மையையும் கண்டு மகிழலாம்.

''புகழாய பொருளொடு புலமை சானத்தோடு
தகவுகூர் திறமெய்தித் தணிவில்சீர்த் தாளாற்றி
மகழ்பல வாற்றியும் மாணறங்க ளாக்கியும்
அகனமர்ந்தளித் திட்டும் முகனமர்ந் தியம்பியுஞ்
செகமுள்ள திசையெல்லாஞ் செட்டிநாட்டிசை செல்ல
உகப்புடனே வாழ்தரும் உயரண்ணா மலையன்னே!''
(இது தரவு)
முன்னொருநாட் பாரிதான் முல்லைக்குத் தேரளிதான்
இன்றொரு நாட்போலவே எந்நாளுஞ் சோறளிக்கும்
நின் வண்மை இருந்தவாதில்லை மூவாயிரக்கே
கரவாதிர வலர்க்குக் காரியென்பான் புரவி தந்தான்
இரப்போர்கள் யாவர்க்கும் எளிதிற் சோறளிக்கப்
பரம்பரையாய்ச்சத்திரங்கள் பரவுதில்லை வைத்தனையே
ஆலமர் செல்வர்க்கே யருங்கலிங்கம் ஆயளித்தான்
மேலவாந்தில்லையில் மேவிடுங் கூத்தன் மால்
ஆயிருர்க்கும் மேயறப்பணி வகுத்தனையே

அரு நெல்லிக்கனி தன்னைஅதிகமான் கொடுத்திட்டான்
தரு கலைகள் பலபயிலுங்கழகத்தே புலவருக்கும்
அருங்கலைகள் பயில்வார்க்கும் பல்லாயிரங்கள் தந்தனையே
உள்ளிவரும் இரவலர்கட்கு வந்தீந்தான் ஒரு நள்ளி
உள்ளாதே யிருபோர்க்கும் உவந்தீயும் வேளண்ணால்
தள்ளாத மாணவர்க்குத் தனியுதவி செய்குவையே
பேகனென்பான் பெருங்கனாடன் பீலிக்குப் படாமளித்தான்
ஆகவத்திற்கதிக பணம் அந்நாள் போலிந்நாளும்
ஆகுலமில் செட்டிநாட்டாரரசே யளித்தனையே
ஆடுவார் மறந்தாரே பாடுதற்கே ஓரியினைப்
பாடல் சொல் பள்ளியினிற்பற்றல வாமன்றுகளில்
ஆடுகொள் நின்பெயர்தான் அடிக்கடியே சொல்லுவரே
(இவை ஏழும் தாழிசை)
என வாங்கு
நின்திறம் முற்றும் பாடுநர்க்கடங்கா
அன்னையாந் தமிழையளிக்கும் வள்ளலே
மன்னரும் விழைசீர் அண்ணா மலையே
துன்னருஞ் சீர்த்தித் துணைவி மக்களொடு
பன்னெடுங் காலம் பாரினுள் வாழ்கவே!

இதேபாடல், ராம.பழனியப்பச் செட்டியார் ஆசிரியராக இருந்து நடத்தி வந்த 'இந்திரா' எனும் திங்கள் இதழ் வெளியிட்ட ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் சஷ்டியப்த பூர்த்தி சாந்தி விசேஷ மலரிலும் வந்தள்ளது குறிப்பிடத்தக்கது. அ.சி.அவர்களின் பெயர் அதில் உண்டு

வள்ளல் அதியமானை எத்துணை பாடல்களால் பாடியும் நிறைவு பெறாத அவ்வையாரின் நன் மனம்போல், அண்ணாமலை அரசரை எவ்வளவு பாடியும் உளம்நிறையாததால் பின்னும் போற்றுகிறார் சிதம்பரநாதர்:

கலையெல்லாம் ஓதியதால் கசடற்ற அந்தணாளன்
விலையெல்லாம் பகருவதால் வியத்தக்க வணிகமேலோன்
கலனெல்லாம் படைத்துளதால் கருதரிய அரசனானோன்
இலனென்ன உரையாதே நிலன்மஃகு வேளாயோன்
நற்குலமும் ஒருகுலமாய் நயமாகக் கல்விகற்கப்
பார்க்குள்ளே பெரியதொரு பல்கலைசொல் அவையமைத்தோன்
நாற்குலத்தத் தொழிலெல்லாம் நல்லொருவன் பாற்கண்டு
மேல்குலமும் கீழ்க்குலமும் வேறெண்ணி பேசலென்னே

என, ஏழு வள்ளலும் இவனே என்று புகழ்மாலை சாத்திய திறம் போற்றத்தக்கது.

தந்தையை மேற்கூறியவாறு போற்றி அ.சிதம்பரநாதர், அண்ணாமலை அரசரின் அருந்தவப் புதல்வர் டாகடா ராஜா சர். முத்தைய்யா செட்டியார் அவர்களையும் போற்றியுரைக்கத் தவறவில்லை.

''வகுப்புக்களில் முதன்மையான மாணவராய், இனத்தவருள் பிறர் அடையாப் பெருமையுடையவராய், சட்டமன்ற உறுப்பினருள் அஞ்சாது கருத்துக்களை எடுத்துரைக்கும் வீரராய், அமைச்சர் என்ற முறையில் பெரும் நிர்வாகத் திறத்தினராய், கல்வி நிபுணர் என்ற வகையில் நேரிய நெஞ்சத்தினராய் உள்ள ராஜா சர் முத்தையாச் செட்டியார் அவர்கள் பல்லாண்டு பல்லாண்டுமிக்க பெருஞ்சிறப்புகளுடன் நல் உடல் உரத்துடன் வாழுமாறு வேண்டியுள்ளதும் ஈண்டு நோக்கத்தக்கது.

மாணவப் பருவம் தொடங்கிப் பல்கலைக் கழகத் தலைவராய்த் தம்மை உயர்த்திய பல்கலை கழக நிர்வாகத்தைப் போற்றுவது, நன்றி பாராட்டுவது தம் தலையாய கடன் என்று நினைத்த காரணத்தாலேதான் மேற்கூறப்பட்ட பெருமக்களை அ.சிதம்பரநாதர் வாழ்த்தியுள்ளார் என்பது அங்கை நெல்லிக்கனி.

அண்ணாமலை அரசரை, முத்தைய்யா வேளைச் சொற்சித்திரமாகத் தீட்டிய அ.சிதம்பரனார் புக்கர் தி வாஷிங்டனுன் (Booker T.Washington) என்ற உழைப்பால் உயர்ந்த 'கறுப்பு மலரை' (நீக்ரோ இனத்தவர்) படிப்போர் சிந்தையெல்லாம் இவரைப்போல் உழைத்து ஊர்போற்ற உலகம்போற்ற வாழ்தல் வேண்டும் என்ற எண்ணம் எழுமாறு வரைந்துள்ளது குறிப்பிடத்தக்கது

'அரிதாகப் பெற்ற வெல்லப்பாகைத் தாய் தன் தட்டில் ஊற்றியது குறைவாக இருந்த போதும் அதைத்தட்டு முழுவதும் பரப்பி, அதிகமாக்கிக் கொண்டதாக நினைத்துத்துளித்துளியாக நக்கினார் என்றால் அவரது வறுமை நிலையைப் பெரிதும் எடுத்துரைக்க வேண்டா அன்றோ?'

நீக்கிரோ சாதியார் என்று கேட்ட மாத்திரத்தாலேயே, அவர்தம் காதை அறுக்கும் பழைய பட்டாளத்தார் பலர் அவ்வழியே வருவர்'.

'முரட்டுச்சணலால் ஆகிய சட்டைதான் அவருக்குண்டு அடிமைகள் எல்லோருமே அந்தக் காலத்தில் அதைத்தான் அணிய வேண்டும். ஒரு புதுச் சணல் சட்டையைப் போட்டுக் கொள்வதற்கு ஒப்பான துன்பம் பல்லைப் பிடுங்குவதால் வரும் துன்பம் எனின் அச்சட்டையின் ''இனிமையை'' அறியலாம் நூறு குண்டூசிகள் உடலுடன் ஒட்டிக் கொண்டிருந்தால் எப்படியிருக்குமோ அப்படி அச்சணற்சட்டை இருந்தது'.

இவ்வாறெல்லாம் துன்புற்ற "அமெரிக்க நீக்ரோ அடிமைகட்கு, மாமனிதன் ஆப்ரகாம் லிங்கனால் விடுதலை கிட்டியது.

பின்னும் மகிழ்வோடு உழைத்த புக்கர் 2500 ஏக்கர் பரப்புடைய நிலத்தில் கல்வியும் தொழிலும் கற்பிக்கும் கலைக்கழகத்திற்குத் தலைவராகி, ஆட்சித் தலைவரே, அவர் கலவிச் சாலைக்கு வந்து தங்கிப் பார்வையிடும் நிலைக்கு உயர்ந்தார். உலக நாடுகள் தத்தம் நாட்டுக்கு வந்து சொற்பொழிவு ஆற்ற அழைத்தவண்ணமிருந்தது.

அவர் நிறுவிய டஸ்கிகி (Tuskegee) கல்வி நிறுவனத்தைப் பார்க்கும் எவருக்கும்,

*"இன்னாமை யின்பமெனக் கொளின் ஆகுந்தன்*
*ஒன்னார் விழையுஞ் சிறப்பு"*

என்ற குறளே நினைவிற்கு வரும் என்று அந்த சொற்சித்திரத்தை வரைந்து முடிக்கின்றார், சிதம்பரநாதர், இந்நாட்டு இளைஞர்கட்கு!

இன்னொரு எழுத்தோவியத்தையும் காண்போம். அதுதான் சர் தாமஸ் மன்றோ பற்றிய ஓவியம் நம்மை அடிமை கொண்ட ஆங்கிலேயர் தான் எனினும், அவரது பண்பு நலன்கள் மனித குலத்தால் பின்பற்றத்தக்கது என்பதால் அ சிதம்பரநாதர், அவரைப் பற்றி 'பெரியார் மன்றோ' என்று எழுதினார்.

கீழ்த்தரப் படைத்தலைவனாக இந்தியாவுக்கு அனுப்பப்பட்ட ஆங்கிலேயன் தாமஸ் மன்றோ பிறகு சேலம் ஜில்லா (பாரா மஹால்) கலெக்டர் ஆகி, கன்னட ஜில்லா கலெக்டராகி, ஒப்புவிக்கப்பட்ட ஜில்லாக்களின் கலெக்டராகி, நியாய இலாகா விசாரணைத் தலைவராகி, மராத்தியச் சண்டையில் ஈடுபட்டு வெற்றியீட்டிய மன்றோவாகி பிறகு சென்னை கவர்னர் ஆகிய அவர்தம் பண்பும் பாடும் அனைவருக்கும் வேண்டியதன்றோ?

மன்றோ, அவர் தன் தாய் தந்தைக்குச் செய்த நன்றியால், பெறின் இவரைப் போலன்றோ பிள்ளையைப் பெற வேண்டும் என்று சொல்லுண்டாகச் செய்தார். பேனிய மொழியிலிருந்து மொழிபெயர்த்த ஒரு கடிதத்திற்காகக் கிடைத்த காசுதான் மன்றோவின் முதல் வருமானம் அதை அப்படியே தாயாரிடம் கொடுத்து வாழ்த்துப் பெற்றார்

இந்தியா வந்த பின்னர் ஆண்டுதோறும் வேண்டிய பணத்தைத் தாய் தந்தையருக்கு அனுப்பி வைத்தார் ஆண்டிற்கு 200 பவுன் அனுப்பி வந்தவர் 1801லிருந்து 400 அனுப்பத் தொடங்கினார். தந்தையார் அடகு வைத்திருந்த வீட்டை மீட்கும் பொருட்டு ஆயிரம் பவுனுக்கு அதிகமாக அனுப்பினார். தாயாருக்குக் கிராம வாழ்க்கையில் விருப்பமுண்டா தலாலும், அவரது உடல்நலம் திருத்தமடையும் ஆதலாலும் தாயாருக்காக ஒரு வீடு கிராமத்தில் பார்த்து ஏற்பாடு செய்யும்படி மன்றோ தகப்பனாருக்கு எழுதினார்:

வீட்டின்மேல் வாங்கிய கடனைத்தவிர வேறென்னென்ன கடன்கள் இருக்கின்றன என்பதைத் தயைகூர்ந்து தெரிவியுங்கள். அக்கடன்களை யெல்லாம தீர்த்துவிட்டு தாங்கள் அடைந்திருக்கக் கூடிய கவலை யினின்றும் அவமானத்தினின்றும் உடனே விடுவிக்கச் சித்தமாயுள்ளேன்'' என்று மன்றோ தகப்பனார்க்கு எழுதினாரென்றால், வேறு என்ன சொல்லி அவரது நன்றியறிதலைக் காட்டக்கூடும்?

இது தாமஸ் மன்றோவைப் பற்றிய ஓவியம் என்றாலும் அதன்வழி இந்திய இளைஞர்களுக்குப் பண்பும் பொறுப்பும் உழைப்பும் உள்ள குடிமக்களாக ஆக்க அரிய பாடம் புகட்டியுள்ளார் சிதம்பரநாதர் என்றே கொள்ள வேண்டும். உழைப்பால் உயர்ந்த ஒருவர், பெரியார் மன்றோ ஆகிய நூல்களைப் போன்ற ஒன்றுதான் 'மன்னுயிர்க் கன்பர்' என்னும் பெயரிய ஆல்பர்ட் சுவைட்சர் வரலாறும் மக்கட் தொண்டே மகேசன் தொண்டு என்பதற்கிணங்கப் பணியாற்றியவர்கள் தாம் திருமூலர், தாயுமானவர், விவேகானந்தர், காந்தியடிகள், வினோபாபாவே ஆகியோராவர் இவர்கள் வழியில் வந்து தொண்டாற்றியவர் செர்மானியக் குடிமகனாய்த் தோன்றிய சுவைட்சர் என்பாரும்.

ஏழைகட்கும, பிணியாளர்கட்கும் தொண்டாற்றியதோடு ஆப்பிரிக்க மக்களின் துயர்துடைக்கச் செயற்கரிய செய்த சுவைட்சர் உலக அமைதிக்காகப் பெரும்பணியாற்றியவர் என அவரை மதித்து உலகப் பேரறிஞர்கள் 1952இல் நோபெல் பரிசினை (Nobel Peace Prize) அவருக்கு அளித்த வரலாற்றையும், திருக்குறளைப் படித்து அதன் பெருமையை உலகறியச் செய்தவர்களில் அவர் தலைசிறந்தவராக விளங்கினர் என்பதையும், இளைஞர் முன்னேற்றத்திற்காகவே எழுதியவர் அ சிதம்பரநாதர்

அடுத்து, சிறியோர் பெரியோரை வசப்படுத்துதற்கும், பெரியோர் சிறியோரை வசப்படுத்துதற்கும் கையாளும் முறைகளைக் 'காக்காய் பிடித்தலும் குருவிபிடித்தலும் ' என்ற தலைப்பில் பேசியும் (1933), எழுதியும் (1940) வந்திருக்கிறார் அ. சிதம்பரநாதர். இவையிரண்டுமே தகாதவை என மிக நயமாகச் சூத்திரங்களின் மூலம் துலக்கியுள்ளார்.

**காக்காய் பிடித்தல்**

*''காக்காய் பிடித்தல் என்பதன் வகையே*
*பெரியோரவரை வயப்படச் செயவே*
*இருக்கை தலைப்பெய்தல் இச்சகம் பேசுதல்*
*செல்லுழிச் சேரல் தாளம் போடல்*
*மிகைபடச் செய்தல் என்றவ்வைந்தே''*

இது சிறியோரால் பெரியாரை நோக்கிச் செய்வது ஆகும்.

அவர் இருக்குமிடம் செல்லுதல், இச்சகம் பேசுதல், அவர் சென்ற இடங்களுக்கெல்லாம் செல்லுதல், தாளம் போடுவது, அதிகப்படியாகப் பணிவிடைகள் செய்தல் ஆகியவை காக்காய் பிடித்தலில் அடங்கும். எனவே, ''பழியிந் தீமையும் பயக்கின்றமையின் அறிஞர்க்காக காக்காய் பிடித்தல்'' என்று அறிவுறுத்தியுள்ளார்.

**குருவி பிடித்தல்**

''சிறியோர் மேவிற் குருவி பிடித்தல்'' அதாவது, பெரியோரால் சிறியோர்பால் செல்லுவது 'குருவி பிடித்தல்' என்று பெயர்.

மேற்கூறிய இருநூற்பாக்களையும் இலக்கணமாக எழுதி, அதற்குத் தக்க எடுத்துக்காட்டுகளும் விளக்கங்களும் 'காண்டிகை' உரை போன்று உயர்ந்த இலக்கியங்களிலிருந்து எடுத்துக்காட்டுக்களுடன் அங்கதச் சுவை மிளிர எழுதியுள்ளார் அ. சிதம்பரநாதர்.

இனி, மொழியைக் கலையாகக் கற்று கலைபோலவே மாணாக்கர்க்குக் கற்பித்துள்ளார்.

கிராட்டிலெஸ் (Cratylus) என்னும் உரைநடை நூலில் பிளாட்டோ (கி மு. 427-347) கிரேக்க மொழியின் ஒலி இலக்கணம் பற்றிய செய்திகளை முற்காலத்தில் தெரிந்த அளவுக்கு வகைப்படுத்தி எழுதியுள்ளார் என்று தொடங்கி சர்வில்லியம் ஜோன்ஸ் (Sir. William Jones)- என்பார், ஒருமொழி மற்றமொழிக்குத் தாய் என்று கூறுவதைக் காட்டிலும் சில வேளைகளில் தொடர்புள்ள மொழிகள் பல உடன்பிறந்த நங்கைகள் என்றவாறு உருவகித்துச் சொல்லுதல் பொருந்தும் என்பது அவர் கருத்து எனக் கூறி, மொழி ஆராய்ச்சியைக் கீழ்க்காணுமாறு நான்கு வகைகளாகப் பிரிக்கலாம் என்கிறார்.

1 விரித்துரை முறை (Descriptive Method)

2. வரலாற்று முறை (Historical Method)

3 ஒப்பியல் முறை (Comparative Method)

4 பொது முறை (Typological Method)

மேற்கூறியவாறு முடிவாக மொழிக்கலை ஆய்வை நிகழ்த்த வேண்டும என்று குறிப்பிட்டுள்ளார்

அடுத்து, ஓர் இலக்கியத்திற்கு எவ்வாறு ஆராய்ச்சி முன்னுரை எழுத வேண்டும் என்பதை ரா. இராகவையங்கார் இயற்றிய 'குறுந்தொகை விளக்கம்' என்ற நூலுக்கு 1946இல் அ. சிதம்பரநாதர் வரைந்த இருபது பக்கங்களில் அமைந்த முன்னுரையே சாலுங்கரி

குறுந்தொகை இலக்கியத்தையும், இராகவையங்காரின் குறுந்தொகை விளக்கத்தையும் ஒருசேரப் படித்தபின்பு எழுதியதுதான் இந்த ஆராய்ச்சி முகவுரை

'...இவ்வாறு, திணை, கைகோள், கூற்று, கேட்போர் முதலிய சூழ்நிலைகளுக்கேற்ப திரு. ரா. இராகவையங்கார் அவர்கள் குறுந்தொகைப் பாடல்களுக்கு எழுதிய உரையும் விளக்கமும் அறிஞரனை வரும் படித்து இன்புறுதற்குரிய சிறப்புடையனவாம். குறுந்தொகையின் பொருட்செறி வினையும், மகாவித்துவான் ஐயங்கார் அவர்களது புலமை நலத்தையும் இப்பதிப்பினால் தமிழகம் உணர்ந்து மகிழும் என்னும் துணிபுடையேன் என்று குறிப்பிட்டிருத்தல் ஊன்றி முன்னத்தக்கது.

வயது வந்தோர் கல்வியைப் பற்றிய தெளிவு நிரம்பவும் உடையவராகத் திகழ்ந்தார் அ சிதம்பரநாதர்.

இன்னமும் நம் நாட்டில் கல்வியறிவற்ற வயது வந்தோர் உள்ளனர் ஆலைகளிலும் தொழிற்சாலை நிறுவனங்களிலும், சிறைச்சாலைகளிலும் அவர்கள் உள்ளனர். வயது வந்தோருக்குக் கற்பிக்க ஆசிரியர்களுக்குத் தனிப்பயிற்சி அளிக்க வேண்டும். கல்லூரி மாணவர்களுக்கும் தனிப்பயிற்சி அளித்துத் தன்னார்வத் தொண்டர்களாக மாற்றி வயது வந்தோருக்குக் கற்பிக்கச் செய்ய வேண்டும் என்று அன்றே கூறியுள்ளார்.

இவ்வளவு ஆற்றலும், அரும்பணிகளும் நிறைந்திருந்த இந்தச் சான்றோர்க்கு இப்பணிகள் எல்லாம் ஏனோ நிறைவு தரவில்லை. இயற்கையை - அண்டத்தை (The Universe) ஆழ்ந்து நோக்கி இன்பம் நுகராமல் வாழ்நாளைக் கொன்னே கழித்துவிட்டதாக வருந்தியுள்ளார். கீழ்க்காணும் பாடல் வழி:

காலைக் கதிரவனைக் காணாமே
மாலை மதியதனை நோக்காமே
வேலைத் திரையதனை வேண்டாமே
நாளை வீணே நலித்தேனே

சோலை மலர்களையும் நுகராமே
ஆலை அமுதினையும் அருந்தாமே
பாலைக் கறந்தபடி காணாமே
நாளை வீணே நலித்தேனே

பச்சைப் பயிர்களையும் பாராமே
மட்டை மரங்களையும் நாடாமே
தென்னங் குலைகளையும் தேடாமே
அன்னோ நேரங் கழித்தேனே

வானைப் பார்த்து வாழ்த்தாதே
மீனை நோக்கி மகிழாதே

கானைச் சென்று காணாதே
ஏனோ காலம் கழித்தேனே
விண்ணை நோக்கி விளியாதே
மண்ணைச் சுற்றிப் பாராதே
கண்ணாற் கண்டே நடக்காதே
என்னை யந்தோ இழித்தேனே.

ஞானிகளுக்கு இறுதியில் ஒரு பொருட்டாக எதுவும் இருக்காது என்பதும், இந்த உலகின் ஆகுலத்தன்மையிலிருந்து அமைதி தேடவே விரும்புவர் என்பதும் பொய்யாமொழி அன்று போலும்!

செய்த சாதனைகள் காலடியில் தேங்கிக் கிடக்க, செய்யவியலா சாதனைகளை நோக்கித்தான் உயர்ந்த உள்ளங்கள் பறந்து செல்லுமோ! ஆனால் அ. சிதம்பரநாதர் சாதனைகளையும், தியாக வாழ்வினையும் தொடக்கம் முதலே நோக்கிவந்த ஓர் அறிஞரின் கவிதை இதோ!

''பொருள் சேர்த்தல் மிகக் கடினம்; பெற்றதெல்லாம்
பூரணமாய்ச் சேமித்தல் முற்றும் தொல்லை;
அருளுடனே அதை வழங்கல் அத்தி பூத்தல்;
அறவாழ்வு வாழ்ந்திடுவார் அருமை நண்பர்.

மருள்நீக்கும் மனவளமும் மக்கள் வாழ்வை
வளம்படுத்தும் நிர்வாக ஆட்சியிக்கார்
உருள் ஆட்சி மேல் சபையில் உயர்ந்தாராக
உயிர்சிறக்கப் பயிர்சிறக்கக் கருத்துச் சொல்வார்.

# 10

# பொன்னுறு நறுமேனி நீரில் மிதந்ததோ!

டாக்டர் அ சிதம்பரநாதச் செட்டியார் அவர்கள் மனோன்மணியம் சுந்தரம் பிள்ளையின் மீது மிக்கப் பற்றும் மரியாதையும் வைத்திருந்தார். சுந்தரம் பிள்ளையவர்களின் தமிழ்ப் பற்றைப் போற்றவே ஒரு கட்டுரை எழுதியுள்ளார்.

திரு. சுந்தரம்பிள்ளையவர்கள் தமிழ்மொழியினிடத்திலே மிக்க பற்றும், அன்பும் வைத்திருந்தவர் என்பது மனோன்மணீயத்திற்குப் பாயிரமாக அமைந்த தமிழ்த்தாய் வணக்கத்தை அவர் இயற்றியுள்ள வகையான அறியப்படும்.

தமிழ்த்தாயின் அடியாகத் தோன்றியவை கன்னடமும், களிதெலுங்கும், கவின்மலையாளமும், துளுவும் போன்ற மொழிகள் என அவர் மொழிந்துள்ளார் தமிழின் கன்னித் தன்மையையும் சிறப்பினையும் பாராட்டியுள்ளார். ஆரியம், இந்திய தேசத்திற்கு வருவதற்கு முன் தமிழே முதல் மொழியாக இந்தியா யாங்கனும் பரவியிருந்தது என்பது அவரது கருத்து. திருவாசகத்திடத்திலும், திருக்குறளினிடத்திலும் அவர் வைத்த பெருமதிப்பு அவருடைய வாழ்த்துச் செய்யுட்களால் அறியப்படுகின்றது எல்லாக் குலத்தவர்க்கும் பொதுவாய் ஒரு நீதி வகுத்த நூல் திருக்குறளாகும் என்றும், அதனால் அது மது முதலிய வடமொழி நூல்களினின்று வேறுபட்டுச் சிறந்து மிளிர்கிறது என்றும் அவர் கூறியுள்ளார் என்பது,

வள்ளுவர் செய்திருக்குறளை
மறுவறநன் குணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மநுவாதி
யொருகுலத்துக் கொருநீதி

என்றமையால் பெறப்படும்.

நாமகளுக்குரிய இரு கண்களில் வலக்கண்தான் வடமொழியென விளம்பிய மக்கள் பலராக அவர் காலத்தில் காணப்பட்ட, அதனால் அக்கூற்று தவறுடைத்தாகும் என்று நிறுவ வேண்டும் என்ற எண்ணம் அவருக்குத் தோன்றிற்று நாமகள் கீழ்த்திசையை நோக்கி உட்கார்ந்திருப்பதாகப் பல கோயில்களிலும் நாமகளின் வடிவம் நிறுவப்பட்டிருத்தல் உண்டு என்பதை யாவரும் அறிவார்கள். கிழக்கு

நோக்கியிருக்கும் நாமகளின் வலப்பக்கத்திலன்றோ தென்திசை இருக்கிறது. இடப்பக்கத்திலன்றோ வடதிசை இருக்கின்றது? ஆதலால் தென்மொழியாகிய தமிழ்மொழி நாமகளின் வலக்கண் ஆகும் என்றும், வடமொழியாக சமக்கிருதம் இடக்கண் ஆகும் என்றும் அழகுபட நிறுவிய பெருமை பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்கட்குரியது.

சுந்தரம் பிள்ளையவர்கட்கு உள்ள தமிழ்ப்பற்று ஜீவகனுடைய படைகள் திரண்டதாகக் கூறுமிடத்து நன்றாக வெளிப்பட்டுள்ளது ஜீவகன் படை வீரர்களை நோக்கி,

'விந்தம் அடக்கினோன் தந்தநற்றமிழ் மொழி
தற்சுதந்திரமறும் அற்பர் வாய்ப்படுமோ?''

என்று கூறியபொழுது படைவீரர்கள் 'தமிழ்மொழிக்கு ஜே! ஜே! என உரக்கக் கூவினர் என்கிறார்

மேலும் முடிவாகச் சொல்லுகிறார்; 'திரு. சுந்தரம்பிள்ளையவர்கட்குத் தமிழ் இலக்கிய வரலாற்றிலும், தமிழ்மொழி வரலாற்றிலும் சிறந்த இடம் உண்டு என்பது உறுதி'.

இவ்வாறு, தமிழ் மீது பற்று வைத்த தமிழ் அறிஞர்களை ஏற்றிப் போற்றிய சிதம்பரனார் -

பழந்தமிழ் அரசன் செங்கோலினராக ஆண்டு வர, அமைச்சர் புரோகிதர்- சேனாபதியர், தூதுவர், சாரணர் என்பவர்கள் அவனுக்கு உற்றதுணைவராய் இருந்து உதவி வந்தனர். அவர்களை 'ஐம்பெருங்குழுவினர்' என்றனர்.

இவரையல்லாமல் 'எண்பேராயத்தார்' என்பாரும் அரசனுக்கு உறுதுணையாய் அமைந்திருந்தனர் அவர்கள், க்ரணத்தியலவர், கருமகாரர், கனகச் சுற்றம், கடை காப்பாளர், நகர மாந்தர், படைத்தலைவர், யானை வீரர், குதிரை வீரர் என்பவர்கள்.

சிலர் அறுத்த சங்கினை வளையல் முதலியனவாகக் கடைந்து தருவர்; சிலர் அழகிய மணிகளுககுத் துளையிடுவர், சிலர் பொன்னை உரைத்து மாற்றுக் காண்பர், சிலர் பொன் வேலை செய்வர், சிலர் புடவை விற்பர் சிலர் அருமையான ஓவியம் வரைவர்; சிலர் சிற்றாடையும் பெரும் புடவைகளும் கொண்டு வந்து தத்தம் சிறுவரொடும் நான்கு தெருக்கள் கூடும் இடங்களில் நின்று விறபர் பலாப்பழம், வாழைப்பழம், மாம்பழம், பாகற்காய், வழுதுணங்காய், வாழைக்காய், கிழங்குகள், கீரை முதலானவற்றை விற்கும் பல இரவுக் கடைகள் உண்டு.

இவ்வாறு, பழந்தமிழ் நாடும் நகரமும் தற்காலத் தமிழர்களுக்கு எடுத்துரைத்த சிதம்பரனார் -

திருவள்ளுவர் கூறிய பல்வேறு செல்வங்களை வகைப்படுத்தியுள்ளார் அ. சிதம்பரனார்.

திருவள்ளுவர் தாம் இயற்றிய திருக்குறளில் பல செல்வங்களைப் பற்றிக் கூறியுள்ளார். அன்பு, அறிவு, கேள்வி ஆகியவை அவரால் செல்வங்களாக மதிக்கப்பட்டுள்ளன.

செல்வங்களில் ஒன்றாகத் திருவள்ளுவர் அறிவினை மதித்தார்

*அறிவுடை யாரெல்லா முடையார்; அறிவிலார்*
*என்னுடை யரேனு மிலர்*

என்று கூறியவிடத்தில் திருவள்ளுவர் அறிவுடைமை, செல்வங்கள் பலவற்றுட் சிறந்தது என்பதைக் குறிப்பிட்டுள்ளார்

ஊக்கமுடைமை என்பது உடைமைகள் பலவற்றுள்ளும் தலையாயது எனத் திருவள்ளுவரால் மதிக்கப்பட்டுள்ளது. உடைமை என்றால் ஒருவர்க்கு உரியதாக உள்ள செல்வம் என்பது கருத்து. பொருளைப் பெற்றிருப்பவர்கள் அதனை எளிதில் இழந்து விடக் கூடும். ஆதலினால் பொருளுடைமை சிறந்த செல்வமாக அவரால் மதிக்கப்படவில்லை. பொருள் குறைவாக இருந்தாலும் ஒருவரிடத்தில் ஊக்கம் நிறைய இருக்குமானால், அவர் பொருட்செல்வத்தைப் படைத்துக் கொள்ளுதல் முடியுமாதலால் ஊக்கமுடைமையைச் சிறந்த உடைமை என்று அவர் நம்பினார்.

அதனால்,

*உள்ளம் உடைமை யுடைமை பொருளுடைமை*
*நில்லாது நீங்கி விடும்*

என்றார். ஒருவரிடம் உள்ள உள்ளம் எவ்வளவு அளவிற்குப் பெருகியுள்ளதோ அவ்வளவிற்கு அவருடைய செல்வம் பெருகும் என்பது திருவள்ளுவரின் அழுத்தமான நம்பிக்கை. அதனால் தான்,

*உரமொரு வற்குள்ள வெறுக்கைய :. தில்லார்*
*மரமக்க ளாதலே வேறு*

என்றார். அன்றியும் முயற்சி திருவினையாக்கும் என்று செப்பினார். மேலும், தளராத ஊக்கம் உடையவரை நாடி, வழிதேடி ஆக்கம் வரும் என்றார். ஆக்கம் என்பது செல்வம் ஒருவருடைய முயற்சியால் ஆக்கப்படுகின்றமையின் செல்வம் ஆக்கம் என்பது கருத்து.

அறம் என்பதும் ஒரு செல்வமாகவே மதிக்கப்பட்டுள்ளது.

*சிறப்பீனும் செல்வமு மீனும் அறத்தினூ உங்கு*
*ஆக்கம் எவனோ உயிர்க்கு*

என்ற திருக்குறளில் அறம் ஆக்கம் எனப்பட்டுள்ளது.

கல்வி என்பது மற்றொரு சிறந்த செல்வமாகத் திருவள்ளுவரால் மதிக்கப்பட்டுள்ளது. கல்வியினைக் கெடுதல் இல்லாத மேன்மையான செல்வம் என்றார் திருவள்ளுவர்.

**கேடில் விழுச்செல்வங் கல்வி ஒருவற்கு**
**மாடல்ல மற்றை யவை**

என்று அவர் கூறிய இடத்து மிக்க மேன்மையுள்ள செல்வம் கல்வி என்பது அவரால் கருதப்பட்டுள்ளது.

இனி, செல்வத்துட் செல்வம் என்னும் கேள்வியுடைமை கழிபெருஞ் செல்வமாக மதிக்கப்பட்டுள்ளது. அறிவு என்பது இயற்கை அறிவு, கல்வி என்பது ஒருவர் கற்பதனால் வரும் அறிவு. கேள்வி என்பது ஒருவர் வல்லாரிடத்தும் நல்லாரிடத்தும் கேட்பதால் உண்டாகும் அறிவு இவ்வுலகத்தில் உள்ள மக்கள் பெறலாகும் பெருஞ்செல்வங்களும் கேள்வி ஆகிய செல்வம் தலையாயது என்று திருவள்ளுவர் கருதியமையால்,

**செல்வத்துட் செல்வஞ் செவிச் செல்வம் அச்செல்வம்**
**செல்வத்துள் எல்லாம் தலை.**

என்று கூறினார்.

இவ்வாறு, திருவள்ளுவர் கூறிய செல்வங்களையெல்லாம் ஒருங்கே பெற்றிருந்த அ சிதம்பரனார் - பெண்களைக் கண்களுக்கு மேலாகப் போற்றிய சிதம்பரனார் மாணவியருக்கு அறிவுரை நவின்றபாங்கு அலாதியானது.

காலையில் எழுந்தவுடன் குளித்து முகத்தில் ஒரு பொட்டிட்டுத் தானும் கண்ணாடியில் பார்த்து மகிழ்ந்து, வீட்டில் உள்ள பிறரையும் மகிழ்விக்கின்ற பெண் மகளைத் தான் இல்லத்தில் உள்ள திருமகள் என விளம்பி வருகிற ஒரு மரபினைப் பார்க்கிறோம். படித்தவர்கள் வீட்டினைத் துப்புரவாக வைத்திருப்பார்கள் என்பது எதிர்பார்க்கப்படுகிறது.

நீங்கள் பெரியவர்களானவுடன், மணம் புரிந்து கொண்டவுடன் குடும்பத்தில் உங்கள் கணவனுடைய சட்டைகளிலோ, உடன்பிறந்தார் சட்டைகளிலோ, தகப்பனார் முதலியவர்களுடைய சட்டைகளிலோ பொத்தான்கள் போயிருந்தால் சரிபார்த்துக் கட்டாயம் தைத்துக் தருவீர்கள் என எதிர்பார்க்கிறேன் "ஒட்டடைக்கோலும் கையும் உள்ளமும் விழியும் சேர்த்து, கட்டிய சிலந்திக் கூடு கரையானின் கோட்டை" எல்லாம் தட்டியே பெருக்கித் தூய்மையைத் தனியரசாளச் செய்வீர்கள் என்று நம்புகிறேன். வீட்டிற்கு வரும் விருந்தினர்களை முகம் கோணாது உபசரிக்க வேண்டிய பொறுப்பு உங்களுடையதாக உள்ளது. வருகின்ற விருந்தினரை முகமலர்ச்சியோடு உபசரிக்கும் மகளிரை உடைய குடும்பங்கள் விண்ணுலகினை ஒக்கும் என்று சொல்வர்.

கணவன் என்பவன் தனக்கு மாத்திரமே எலலாவற்றையும் செய்யக் கடமைப்பட்டவன் என்று கருதித் தமக்கை, தங்கை, தாய் ஆகியோரைப் பற்றி ஒரு சிறிதுகூட எண்ணுவது தகாது என நினைக்கின்ற மகளிர் சில குடும்பங்களில் இருப்பதனால்தான் சில வேளைகளில் இன்னல்கள் எழுகின்றன. தன்னுடைய தாயையும் தந்தையையும் பிறந்த வீட்டையும் மறந்து கணவனையே உறுதுணையாக நம்பி அவனுடைய வீட்டிற்கு வந்து வாழ்ந்து வருகிறாள் மனைவி என்றாலும், அவள் கணவனுடைய நிலையில் சில வேளை தன்னை வைத்துத் தன்னுடைய தாய் தந்தையரைப் பற்றியும், உடன்பிறந்தாரைப் பற்றியும் எண்ணிப் பார்த்தல் வேண்டும் அவ்வகையில், நீங்கள் உஙகளுக்கு வயதான பிறகு எண்ணிப் பார்ப்பீர்கள் என நம்புகிறேன், வாழக்கையில சில நேரங்களிற பிடிவாதத்தினால தீமையே உண்டாவதையும், சிறிது விட்டுக் கொடுத்தலினால் நன்மை உண்டானதையும் காணலாம்.

உங்களுடைய கணவனுக்குப் பல நேரங்களில் அவனுடைய பொருத்தமான விருப்பங்களுக்கு நீங்கள் விட்டுக் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படலாம். கணவன் பார்க்கும் அலுவல்களில் அதிகம் தலையிடாமல் இருத்தல் நல்லது. அவன் பார்க்கும் அலுவல்களில் அவன நடக்க விரும்புகின்றவாறு பெரும்பாலும் விட்டுக் கொடுத்து விடுதல் நல்லதாகும்.

கற்பு என்ற சொல்லின் பொருள் கல்வி என்பதுதான் கற்கப்படுவது என்பதுதான். கணவன் மனைவியிடம் நடந்துகொள்ளும் விதத்தைத் திருமணத்திற்குப் பின் நாளடைவில் அறிந்துகொள்கிறான், மனைவியும் அவ்வாறே அறிந்துகொள்கிறாள் இவ்வகையில் இருவரும் ஒருவர் ஒருவரிடமிருந்து கற்றுக்கொள்வதுதான் பழகி அறிந்து கொள்வதுதான் இருவருக்கும் உரிய கற்பென மதிக்கப்பட்டது. நீங்கள் கூடிய வரையில் உங்களுடைய முகங்களை இனிமையுடையனவாகவும், மகிழ்ச்சியுடையன வாகவும் வைத்துக் கொள்ள முயற்சி செய்தல் வேண்டும்.

நீங்கள் குடும்பத்திற்குச் செய்ய வேண்டிய கடமைகளில் ஒனறு முகத்தை மகிழ்ச்சியோடு வைத்துக் கொளளுதல என்பது. இடும்பை நிரம்பிய குடும்பங்களில் மலர் போன்ற உங்கள் முகத்தைக் குடும்பத்தில் உள்ளவர்கள் காண விழைவார்கள் என்பதில் ஐயமில்லை ஆடவரைக் கண்டால் பேசக்கூடாது, சிரிக்கக்கூடாது எனப் பரம்பரையாகச சொல்லப்பட்டு வருவதைக் கேட்டு நீங்கள் உங்கள் வீட்டிற்கு எவரேனும் ஓர் ஆடவர் வந்தால் மனையின் கதவை அடைத்துவிட்டு ஓடிவிடுதலினால் உயர்ந்தவர்கள் ஆகிவிட மாட்டீர்கள் என்பதை அறிய வேண்டும்.

நீங்கள் பிறகு ஆண் பிறவி எய்தி அப்புறம் தான் மோட்சம் பெற வேண்டுமென்று கூறுதல் இந்நாட்டில் உண்டாயின், அது தகாது. பிழைபட்டது எனக் கருதுபவர்களில் நான் ஒருவன். பெண்ணாகப் பிறந்ததற்கு வருந்த வேண்டா; பெண்ணாகப் பிறந்தது இனியது, நல்லது என மதியுங்கள். மனைக்குரிய மாண்புடையர் ஆகுங்கள். குடும்பத்தின் நிலைக்கேற்ப வாழுங்கள், வாழக் கற்றுக் கொள்ளுங்கள். வீட்டுத் திருமகள் என உங்களில் ஒவ்வொருவரும் பெயர் பெறுமாறு உழையுங்கள். முன்வாருங்கள், என்றவாறு மகளிர் முன்னேற்றங் குறித்தும் மகளிரிடையே எழுச்சி யுரையாற்றிய அ.சிதம்பரனார், சிரிப்பதும், பேசுவதும், நாகரிகங் கருதிச் சிற்சில பொருள்களைக் கொடுப்பதும் பெறுவதும் காதல் அல்ல என்ற கருத்தமைந்த 'குற்றம் இல்லை' என்ற சிறுகதை ஒன்றையே தீட்டியுள்ள, அ.சிதம்பரனார் -

யாதும் ஊரே, யாவரும் கேளிர் என்றுரைத்த கணியன் பூங்குன்றனாரையும், கல்வி நன்கு கற்ற ஒருவனுக்கு எந்த நாடும் தன்னுடைய சொந்த நாடு போலாகும், எந்த ஊரும் அவனுக்குரிய ஊர் போலாகும் என்று திருவள்ளுவர் சொல்லிப் போந்த்தையும்,

பொன்னும் மணியும் பவளமும் முத்தும் எல்லாம் ஒரு சேர அமைக்கப்பட்டு ஓர் அணிகலன், அணிகலன் எனப் பெயர் பெறுகின்றன. அவ்வாறே வெவ்வேறு திசையிலிருந்து அறிஞர் பலர் ஒன்று கூடினும் அவர்கள் தத்தம் திசையைச் சற்று மறந்து மக்களென ஒரு கூட்டமாகக் கூடினதாக மதிக்க வேண்டும் என்ற சங்கப் புலவர் கண்ணகனார் உரைத்ததையும்;

'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்ற திருமூலரின் உயர்ந்த நோக்கத்தையும்,

பழந்தமிழ் அறிஞர் பலர் உலகு எப்படி இருந்தல் வேண்டும் எனக் கனாக் கண்டுள்ளனர். அவர்களில் கோவூர்கிழார் "அடுதீ அல்லது சுடுதீ அறியார்"(அடுக்களைத் தீயைத்தான் மக்கள் அறிய வேண்டுமே தவிர மக்களைச்சுடுகிற தீயை அறியக்கூடாது) என்றவாறு கூறியதையும்,

"எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவேயல்லாமல்
வேறொன்றறியேன் பராபரமே"

என்ற தாயுமானவர் விழைவையும்,

'உலகத்தில் துன்பமே இயற்கையெனும் சொல்லை மறந்திடுவோம், இன்பமே வேண்டி நிற்போம் யாவும் அவள் தருவாள்' என்று சக்தி உபாசகனாம் மகாகவி பாரதி கூறிய வழியும் ஆகியவற்றையெல்லாம் 'தமிழ்காட்டும் உலகாக நமக்குக் காட்டிய அ.சிதம்பரநாதர் -

'இளங்கோவின் இன்கவி' என்றதன் நூலின் வழியே,

சிரிக்க வேண்டிய இடங்களில் சிரிக்கக் கூடாது என அடக்கிக் கொண்டு தடைபோட்டுக் கொண்டு சிரிக்காமல் இருந்து விடுதல் பொருத்தமானது. சிரிக்க வேண்டிய இடங்களில, சிரிக்கக்கூடிய இடங்களில் சிரித்தல் என்பது தப்பாக மாட்டாது. நம நாட்டில் சிரித்தல் என்பது காமத்தால் அல்லது காதலால் விளைவதொன்றெனத் தப்பான கருதது இடைக்காலத்தில் வந்து பரவத் தலைப்பட்டுவிட்டது. காதல் இன்றியும் காமம் இன்றியும் - ஆணோ, பெண்ணோ சிரித்தல் இயலும்.

இவ்வாறே இயல்பாக எழக்கூடிய இந்த நிகழ்ச்சிக்கு நிறையத் தடை போடுதல் ஒவ்வாது சில வேளைகளில் நீங்கள் சிரிப்பதனால் எவரோ ஒருவரால் தவறு விளையப் போகிறது என்பது புலப்படுமானால் அவரிடத்தில் எச்சரிக்கையாய் இருந்து சிரிக்காமல் இருந்து விடுதல் நல்லதுதான். அதனால் எந்த இடத்தில் சிரிக்கலாம், எப்பொழுது சிரிக்கக்கூடாது என்பதை நீங்களே இடத்திற்கும் சூழ்நிலைக்கும் ஏற்ப ஒவ்வொரு முறையும் முடிவு செய்து கொள்ளுதல் வேண்டும் பிறவி எடுத்தலே தீமை, பிறரோடு பேசுதலே தீமை, பிறரைக் கண்டு புன்முறுவல் கூடக்காட்டி விடுவது தீமை என நம்பியிருக்கின்ற மக்கள் ஆடவருள்ளும் மகளிருள்ளும் பலர் உண்டு. அவ்வாறு கருதுபவர் தொகை குறைதல் வேண்டும்.

குடும்பத்தைத் தக்க வகையில் நடத்த வேண்டிய பொறுப்பு உங்களுடையது. கணவனுடைய வருவாய்க்குத் தக்கபடி செலவு செய்ய வேண்டியள் மனைவி.

நம் வீட்டில் உள்ள காசு மாலைகளும், மாங்காய், தேங்காய் மாலைகளும் அரசாங்கப் பொருள் சேமிப்பு நிலையங்களில் இருக்க வேண்டிய பொன்னுக்குப் பதிலாக மகளிர் உடம்புகளுக்குப் பாரமாகிக் கொண்டு இருப்பவை.. இந்த எண்ணம் உங்களுக்கு இந்தச் சிறு வயதிலேயே வருதல் வேண்டும்.

ஆண்கள் பெண்களோடு சில வகைகளிற் போட்டி போட முடியாது; பெண்கள் ஆண்களோடு சில வகைகளிற் போட்டி போட முடியாது தாலாட்டுவது என்பது மகளிர்க்கே உரிய சிறப்புரிமையும் கடமையுமாகு மென்று சொல்வேன் ஆடவர்கள் பாடினால் உறங்குகின்ற குழந்தை விழித்துக் கொண்டு விடும் மகளிர்க்கான இனிய குரலினால் தாலாட்டினாலன்றிக் குழந்தைகள் துயில்கின்றில. இதைப் போன்ற உரிமைகளை மகளிர்இயல்பிற் பெற்றிருத்தலால் அன்றோ கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை ''மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செயதிட வேண்டுமம்மா'' என்று பாடினார்

நீங்கள் மங்கையராகப் பிறந்திருக்கிறீர்கள். நல்ல மாதவம் செய்துள்ளீர்கள் அன்பினுக்காக வாழுங்கள் இன்ப உரைகள் தாருங்கள்.

நீங்குதல் பிறகு ஆண் பிறவி எய்தி அப்புறம் தான் மோட்சம் பெற வேண்டுமென்று கூறுதல் இந்நாட்டில் உண்டாயின், அது தகாது. பிழைபட்டது எனக் கருதுபவர்களில் நான் ஒருவன். பெண்ணாகப் பிறந்ததற்கு வருந்த வேண்டா; பெண்ணாகப் பிறந்தது இனியது, நல்லது என மதியுங்கள். மனைக்குரிய மாண்புடையர் ஆகுங்கள். குடும்பத்தின் நிலைக்கேற்ப வாழுங்கள், வாழக் கற்றுக் கொள்ளுங்கள். வீட்டுத் திருமகள் என உங்களில் ஒவ்வொருவரும் பெயர் பெறுமாறு உழையுங்கள். முன்வாருங்கள், என்றவாறு மகளிர் முன்னேற்றங் குறித்தும் மகளிரிடையே எழுச்சி யுரையாற்றிய அ.சிதம்பரனார். சிரிப்பதும், பேசுவதும், நாகரிகங் கருதிச் சிற்சில பொருள்களைக் கொடுப்பதும் பெறுவதும் காதல் அல்ல என்ற கருத்தமைந்த 'குற்றம் இல்லை' என்ற சிறுகதை ஒன்றையே தீட்டியுள்ள, அ.சிதம்பரனார் -

யாதும் ஊரே, யாவரும் கேளிர் என்றுரைத்த கணியன் பூங்குன்றனாரையும், கல்வி நன்கு கற்ற ஒருவனுக்கு எந்த நாடும் தன்னுடைய சொந்த நாடு போலாகும், எந்த ஊரும் அவனுக்குரிய ஊர் போலாகும் என்று திருவள்ளுவர் சொல்லிப் போந்தையும்,

பொன்னும் மணியும் பவளமும் முத்தும் எல்லாம் ஒரு சேர அமைக்கப்பட்டு ஓர் அணிகலன், அணிகலன் எனப் பெயர் பெறுகின்றன. அவ்வாறே வெவ்வேறு திசையிலிருந்து அறிஞர் பலர் ஒன்று கூடினும் அவர்கள் தத்தம் திசையைச் சற்று மறந்து மக்களென ஒரு கூட்டமாகக் கூடினதாக மதிக்க வேண்டும் என்ற சங்கப் புலவர் கண்ணகனார் உரைத்ததையும்;

'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்ற திருமூலரின் உயர்ந்த நோக்கத்தையும்,

பழந்தமிழ் அறிஞர் பலர் உலகு எப்படி இருந்தல் வேண்டும் எனக் கனாக் கண்டுள்ளனர். அவர்களில் கோவூர்கிழார் "அடுதீ அல்லது சுடுதீ அறியார்"(அடுக்களைத் தீயைத்தான் மக்கள் அறிய வேண்டுமே தவிர மக்களைச்சுடுகிற தீயை அறியக்கூடாது) என்றவாறு கூறியதையும்,

"எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவேயல்லாமல்
வேறொன்றறியேன் பராபரமே"

என்ற தாயுமானவர் விழைவையும்,

'உலகத்தில் துன்பமே இயற்கையெனும் சொல்லை மறந்திடுவோம், இன்பமே வேண்டி நிற்போம் யாவும் அவள் தருவாள்' என்று சக்தி உபாசகனாம் மகாகவி பாரதி கூறிய வழியும் ஆகியவற்றையெல்லாம் 'தமிழ்காட்டும் உலகாக நமக்குக் காட்டிய அ.சிதம்பரநாதர் -

'இளங்கோவின் இன்கவி' என்றதன் நூலின் வழியே,

*இளங்கோவின் இன்கவி,*
*பத்தினிக் கடவுள்,*
*கண்ணகி மதிநலன்,*
*சிலம்பின் வென்ற சேயிழை,*
*தென்னவன் மகள்,*
*மாதவியின் கானற் பாணி,*
*கோவலன் கலையார்வலன்,*
*சிலப்பதிகாரமும் கலையும்,*
*சிலம்பிற் பரதவர்,*
*சிலப்பதிகாரம் முன்னும் பின்னும்,*

ஆகிய பத்துக் கட்டுரைகள் என்னும் பத்து நன்முத்துக்களை சிலம்பு எனும் செங்கடலில் மூழ்கி முக்குளித்து எடுத்து இலக்கிய ஆர்வலர்க்கு இன்னமுது படைத்துச் சென்றுள்ளார், இவ்வுலக வாழ்வை முடித்துக் கொள்வதற்கு ஒரு சில நாட்களுக்கு முன்னர் மதுரை நாவலர் புத்தக நிலையத்தாரிடம் அச்சு வாகனம் ஏற்றுமாறு பணித்த அ. சிதம்பரனார் -

தான்பிறந்த நகராம் கும்பகோணத்தில், தான் சிறுவனாய்த் திரிந்த பேட்டை நாணயக்காரத் தெருவில் ' சிவகுருநாதன் செந்தமிழ் நூல் நிலையம்' அமையப் பெரிதும் பாடுபட்டு அந்த நூல் நிலையம் தொடங்கியது. கி.பி.1954(மன்மத ஆண்டு - வைகாசித் திங்களில்) அங்கு பதிக்கப்பெற்ற கற்களில் உள்ள வாசகம்;

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை தலைவரும், சென்னை மேல்சபை உறுப்பினருமாகிய 'செந்தமிழ்க் காவலர்' டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியார் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது.

நூல் நிலையக் கட்டடத்தைச் சென்னை மேல்சபை உறுப்பினர் உயர்திரு. பி.டி. இராஜன் பார் - அட் - லா அவர்களால் 21-5- 1958 இல் திறந்து வைக்கப்பட்டது.

இவ்வாறு, அந்த நூல் நிலையத்திற்குக் காரணகர்த்தராகிய அ. சிதம்பரநாதர் - வித்தகம் தொழிலில் வைத்து - விருப்பினைத் தொண்டில் வைத்த வள்ளல் கருமுத்து தியாகராசர் அவர்களால் 1949 இல் தொடங்கப் பெற்ற மதுரைத் தியாகராசர் கல்லூரியில் முதல்வராக 1965 முதல் 1967, நவம்பர்த் திங்கள் 21 ஆம் நாள் வரை அரும்பணியாற்றிய அ.சிதம்பரநாதர் -

அந்தோ! 3.4.1907 இல் தொடங்கிய புகழ்மிகு அத்தியாயம் 22-11-1967 இல் பெரும் புகழுடன் இறுதியெய்தியது.

ஆம். பணியில் இருந்தபோதே மதுரைத் திருநகரை அடுத்துள்ள தனக்கன் குளம் என்ற பகுதியில் உயிரற்ற உடலினராய் விட்டிருந்தார்.

எந்தச் சிலம்பைப் பெருவிருப்பினோடு தன் மாணவத் தலை முறையினருக்குக் கற்பித்தாரோ - அந்த முத்தமிழ்க் காப்பியத்தின் மதுரைக் காண்டம் பத்தொன்பதாம் காதையாம ஊா சூழ்வரியில் வரும்,

''பொன்னறு நறுமேனி பொடியாடிக் கிடப்பதோ
மன்னறு துயர்செய்த மறவினை யறியாதேற்கு
என்னுறு வினைகாணா இதுவென உரையாரோ
யாருமில் மருள்மாலை இடருறு தமியேன்முன்,
தார்மலி மணிமார்பம் தரை மூழ்கிக் கிடப்பதோ''

என்றவாறுள்ள கற்பரசி கண்ணகி புலம்பிய வரிகள் தமிழ் நெஞ்சங்களில் எல்லாம் புரண்டு புரண்டு வந்து அலைகளாக மோதின!

# கடைக்காப்பு

அண்ணாமலை, சென்னை, மதுரை ஆகிய பல்கலைக்கழகங்களில் தன் முத்திரை பதிவாகும் வண்ணம் நாடும் ஏடும் போற்றிய கல்வியாளராய் - தமிழறிஞராய்த் திகழ்ந்தார் அ. சிதம்பரநாதர்.

இலக்கண ஆய்வில், மொழிஇயல் ஆய்வில், வெளிநாடு சென்று வந்ததில், கல்வித்துறையில் கனிந்த பதவியாய் பொறுப்புத்துணை வேந்தர் பதவியைப் பெற்றதில் பேராசிரியராய் இருந்து கொண்டே தமிழகச் சட்ட மேலவை உறுப்பினருக்குப் போட்டியிட்டு, வென்றதில் அ சிதம்பரநாதர் அனைவருக்கும் முன்னோடியாகத் திகழ்ந்தார்

அ. சிதம்பரநாதரைத் தெரியாத தமிழ்மொழியறிவுடைய தமிழர் எவரும் இருக்க முடியாது. தமிழ்நாட்டின் தமிழ் உணர்ச்சிமிக்க பேராசிரியர்களில் இவரும் ஒருவர் என வியந்து நின்றனர் தமிழர்

மொழிஇயல் வல்லுநராகத் திகழ்ந்த அ சிதம்பரநாதர் அவர்கள், மொழிக்கு முந்திய எழுத்து ஆராய்ச்சியிலும் முன்னணி ஆய்வாளராகவே திகழ்ந்தார்

எழுத்தென்பது எழுதப்படுவது என்ற பொருளுடையது. எழுத்து என்றாலோ எழுதுதல் என்றாலோ நாம் அனைவரும் ஒரு வரி வடிவத்தை உடனே நினைக்கிறோம். ஆதிகாலத்தில் மக்கள் ஓவியத்தின் வழியாகக் கதை சொல்லக் கற்றுப் பிறகு ஒவ்வொரு வடிவத்தையும் ஒவ்வொரு தனித்தனிப் பொருளைக் குறிக்கப் பயன்படுத்தினர் நாளடைவில் அவ்வடிவு பொருளைக் குறிக்காமல் ஒலியைக் குறிக்கத்தலைப்பட்டது பின்னர் அவ்வடிவு அல்லது அவ்வடிவின் திரிபு முழு ஒலியையும் குறிப்பிடாமல், முதல் ஒலியை மட்டும் குறிப்பிடுவதாக நாளடைவில் முதலெழுத்தளவே நின்றுவிட்டது என்பது எழுத்தின் வரலாறு பற்றிய அ. சிதம்பரநாதர் அவர்களின் ஆய்வின் வழித்தெரிய வருகிறது

எனவே, எழுத்தாய்விலும் இவரே முன்னோடி என்பர்.

சால்பிற்கு ஓர் எடுத்துக்காட்டாய்த் திகழ்ந்த அ. சிதம்பரநாதருக்கும் அவ்வப்போது சில சோதனைகள் - அழுக்காறு கொண்டவர்களால் 1958-59இல் பணியின்றியும் கடலூரில் ஓராண்டு காலம் தள்ள வேண்டியிருந்ததும் வியப்பான உண்மையே. இருப்பினும் இதற்கெல்லாம் கலங்கவில்லை சிதம்பரநாதர் என்னும் அந்த அரிமா

மேலும், பெரியநாயகி அம்மையார் இறுதிக்காலத்தில் டாக்டர் கா மீனாட்சி சுந்தரனார் அவர்களின் பரிந்துரையின்பேரில் சேலம் சாரதா

கல்லூரியின் முதியோர் இல்லத்தில் தங்கினார். எவ்விதக் கவலையுமின்றி அம்மையார் அங்குத் தங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது. மேலும், அம்மையாரைப் புற்றுநோய் தாக்கியபோது, மருத்துவமனையில் சேர்த்து அவர் உடல்நிலையைக் காத்தவரும் டாக்டர் கா.மீ. அவர்களேயாவர்.

1966இல் அ. சிதம்பரநாதருக்கு குடல் இறக்க (Hirneya) நோய் வந்து அதற்கு அறுவைச் சிகிச்சையும் நடந்தது மன உளைச்சலின் காரணமாக 1967இல் பக்கவலிப்பு (Paralysis) வந்தது. அதன்பிறகு அவர் இயல்பு நிலையில் இல்லை. உடல் மெலிந்தது. மனம் நலிந்தது. அவரது இயக்கங்கள் முரணாக அமைந்தன.

7.9 1967இல் சிதம்பரநாதருக்கு மதுரையில் மணிவிழாக் கொண்டாடினர். இதன்பிறகு பின்னும் தளர்ச்சி அதிகமானது.

அ. சிதம்பரநாதர் தன் மறைவுக்குச் சிலநாள் முன்பு திடீரென்று பெரியநாயகி அம்மையார் அவர்களிடம், 'நானே உழைச்சேன்; பொருள் ஈட்டினேன். எல்லோருக்கும் செய்ய வேண்டியவைகளையெல்லாம் செய்துவிட்டேன். இனி ஒருவருக்கும் வேண்டியதில்லை நீ யாரிடத்தும் ஏமாந்துவிடாதே'' என்று கூறியுள்ளார்.

அ. சிதம்பரநாதர் அடிக்கடி பெரியநாயகி அம்மையாரிடம் கூறுவார்; 'என்னிடம் படித்த மாணவர்களே நம் குழந்தைகள்' இதில் அம்மையாருக்கும் உடன்பாடு இருந்தது.

மதுரையில் அவரது ஈமக்கிரியைகள் நிகழ்ந்தபோது மாணவர்கள் ஆயிரக்கணக்கில் கூடி 'ஐயா! ஐயா!' என்று கதறியவாறு கொள்ளியிட்ட காட்சி பார்ப்போரைப் பதறச் செய்வதாக இருந்தது இதுவே அவர் தேடிய சொத்துக்கள், பேர் சொல்லும் பிள்ளைகள்.

பெரியநாயகி அம்மையார் இறுதியாக வாழ்ந்த அந்த கும்பகோணம் வீட்டின் உட்கூட வாயில் முகப்பில் காஞ்சி சங்கராச்சாரியார், காமராசர் ஆகியோரின் வண்ண ஓவியங்களை வைத்திருந்தார். உள்ளே காந்தியடிகளின் நின்ற கோலமும், பெரியார், அண்ணா ஆகியோரின் மார்புருவப் படங்களும் அழகாகத் தீட்டப்பெற்றுத் திகழ்ந்தன.

ஒரு மரப்பெட்டியில் பாதி தீர்ந்திருந்த வண்ணங்கள் இருந்தன. இவை ஐயா (அ. சிதம்பரநாதர்) அயல்நாட்டுப் பயணத்தின்போது வாங்கி வந்து தந்த அன்பளிப்பு; 'ஐயா இருந்தும் காத்தார்; இறந்தும் காக்கிறார்'' என்பது அம்மையாரின் மன ஆழத்திலிருந்து வெளிப்பட்ட குரல்.

பெரியநாயகி அம்மையாரின் இறுதிக் காலத்தில் உதவியவர்களில் அ சிதம்பரநாதர் அவர்களின் அன்பிற்கும் நட்பிற்கும் பாத்திரமான சில பேராசிரியர் குறிப்பிடத்தக்கவர் ஆவர்.

அவருடைய மாணவர்களாகிய சென்னை ஸ்டெல்லாமேரீஸ் கல்வியியல் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் புளோரா முறையீஸ், சென்னை மாநிலக்கல்லூரியில் பணியாற்றிய பேராசிரியர் ம.செ. இரபிசிங் ஆகியோர் அ. சிதம்பரநாதரின் அச்சேறாமல் இருந்த 'செங்கோல்வேந்தர்' என்ற நூலையும், 'தமிழில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும்' என்ற நூலையும் பதிப்பித்து, அதன்மூலம் வந்த வருவாயை அம்மையாருக்கே கிடைக்குமாறு அவர்கள் செய்த மாண்பு போற்றத்தக்கதன்றோ!

அ. சிதம்பரநாதர் அவர்களுக்குப் பிறகு சுமார் பதினைந்து ஆண்டுகள் தனிமையும் கைம்மையுமாகத் துன்புற்ற பெரியநாயகி அம்மையார் அவர்கள் தன் ஒப்பாரும் மிக்காருமற்ற கணவரோடு வாழ்ந்த வாழ்க்கையின் நினைவுகளில் காலத்தைக் கடத்தி வந்த அவர்கள் 1983இல் மறைந்தார்கள்.

தமிழக வரலாற்றின் புகழ்மிக்க ஓர் அத்தியாத்தின் இறுதிப் பகுதியும் எழுதப்பட்டுவிட்டது.

'மனோவாக்குக் காயங்களால் பிறருக்கு உதவுதற்கே பிறப்பெடுத் துள்ளோம்' என்று வாழ்ந்த அ. சிதம்பரநாதர் - இறப்பிலும், மனக்குறையிருத்தலிலும் யாருக்கும் விதி விலக்கில்லை, என்னும் போது நமதருமைப் பேராசிரியர் டாக்டர் அ. சிதம்பரநாதருக்கு மட்டும் விதிவிலக்கு இருக்குமா?

இறப்பு! இது சாசுவதமான ஒன்று. எப்படி நிகழ்ந்தாலும் இறப்பு இறப்புத்தானே! இதை இயல்பென்று எண்ணி அவர் வாழுங்காலத்தில் மன்பதைக்குச் செய்தவையென்ன மனித சமுதாயத்திற்கு ஆற்றியவை என்ன என்று கணக்கிட்டுப் பார்த்தால், அம்மா! வியப்பு. ஒவ்வொருவரும் அவரது வாழ்நாள் முழுதும் அவரது படைப்புக்களைப் பயின்று அறிவு பெறலாம்; தெளிவு பெறலாம்; பொழுதைப் பயனுள்ள முறையில் போக்கலாம்.

இவற்றையெல்லாம் எண்ணித்தானோ,

'அறிஞரெல்லாம் போற்றுகின்ற தகவுடையான் என்றும்
ஆர்வமிகு புலவர்பால் அன்புடையான் குன்றாச்
செறிவு கொண்டு மாணவரைத் தன்னிடத்தே ஈர்க்கும்
சிறப்பார்ந்த ஆற்றலுமே நன்குடையான்'

என்று பேராசிரியர் டாக்டர் மு. வரதராசனார் 'ஆன்றபுகழ்வாழி' என்று வாழ்த்திப் பரவியுள்ளார் போலும்!

வாழிய செந்தமிழ்
வளர்க செந்தமிழ்க் காவலர் பல்புகழ்!

# பின்னிணைப்பு
# பண்டிதமணி கதிரேசன் செட்டியார்
## டாக்டர். அ.சிதம்பரநாதன்

பண்டிதமணி கதிரேசன் செட்டியாரொடு எனக்கு ஏறத்தாழ 23 ஆண்டுகள் பழக்கம் உண்டு. அவர் 1953-ஆம் ஆண்டு அக்டோபர் 24-ஆம் தேதி வயது முதிர்ந்த நிலையில் மறைந்தார். அவர் 1930-இல் சென்னையில் நடைபெற்ற சைவ சித்தாந்த மகா சமாச வெள்ளி விழாவின் போது தான் முதன் முதலில் எனக்கு அறிமுகம் ஆயினார். அப்பொழுது பச்சையப்பன் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற சமாச வெள்ளி விழாவின் கூட்டங்களுக்கு மூன்று நாட்களிலும் தலைமை தாங்கிப் பல அரும்பெறற் கருத்துக்களை அவர்கள் தெரிவித்தார்கள். நீளமான மஞ்கள் நிறக் கோட்டு அணிந்து, கழுத்தைச் சுற்றிலும் வெள்ளிய மேல் வேட்டி ஒன்றினைச் சுற்றிப் போட்டு கொண்டு, தலைப்பாகையுடன் அவர் உட்கார்ந்திருந்த காட்சி இன்னும் நினைவிற்கு வருகிறது. கும்பகோணம் அரசினர் கல்லூரியில் நான் படித்தபொழுது எனக்கு ஆங்கிலம் கற்பித்த ஆசிரியருள் ஒருவராகிய திரு.கே.எஸ். வைத்தியநாதஐயர் அவர்களுடைய நினைவு பண்டிதமணியைக் கண்டபொழுது எனக்கு ஏற்பட்டது. காரணம், இருவரும் தூய வெள்ளாடை உடுத்தி அழகிய வெள்ளைத் தலைப்பாகை அணிந்து இருந்தார்கள் என்பது மாத்திரம் அன்றி, ஆங்கிலக் கவிதைகளை இனிமையோடு சுவைத்துப் பிறர்க்கு எடுத்து இயம்பிடும் திறன் திரு. கே.எஸ். வைத்தியநாதஐயர் பெற்றிருந்தது போலப் பண்டிதமணி அவர்கள் தமிழ்ச்செய்யுட்களைச் சுவைத்து அவற்றை எளிய தெள்ளிய நல்ல நடையில் பலர்க்கும் எடுத்து வழங்கும் ஆற்றல் படைத்திருந்தார் என்பது பச்சையப்பன் மண்டபக் கூட்டத்திற் கலந்து கொண்டவர்கள் அவர் ஆங்கிலம் அறிந்திலர் என்பதை ஊகித்திருக்கவே முடியாதபடி, அவருடைய உடையும் நடையும் சொற்பொழிவுகளும் இருந்தன. பள்ளிக்கூட வாயிலாக அல்லது கல்லூரி வாயிலாகத் தமிழ் இலக்கியம் கற்கும் வாய்ப்புப் பெற்றாரில்லை யேனும், நல்லறிஞர்கள் துணைக்கொண்டு தாமே பல தமிழ் நூல்களையும், வடமொழி நூல்களையுமண, வடமொழி நூல்களையும் துருவித்துருவி ஆராய்ந்து கற்ற பெருமையுடையவர் திரு.கதிரேசன் செட்டியார். ஆதலினால், அவர் இயற்றிய சொற்பெருக்குகள் அறிஞர்களையும் ஏனையோரையும் மகிழ்வித்தமைவியப்பன்று. அவர் கற்றறிந்த செய்திகள்

பலவற்றையும் எழுதிக் குறிப்புப் புத்தகத்தில் வைத்துக்கொள்ளும் மரபுடையவராகக் காணப்பட்டார். மேடைகளுக்கு வரும்பொழுது அவர் கையில் இரண்டு அல்லது மூன்று குறிப்புப் புத்தகங்கள் இருக்கும். அக்குறிப்புக்களில் சிலப்பதிகாரம், திருக்குறள், கம்பராமாயணம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, காளிதாசர் போன்ற நூல்கள் இலக்கியங்களிலிருந்து எடுக்கப்பட்ட மேற்கோள்கள் உண்டு. வேளை வாய்க்கும் போதெல்லாம் அவ்வேடுகளைப் புரட்டிப் புரட்டித் தமது கருத்துக்களை அவர் அழகுற எடுத்தியம்பியது உண்டு. தமிழரேயன்றி ஆங்கிலம் அல்லது சமஸ்கிருதம் கற்றறிந்த பெரியவர்களும், மாணவர்களும் அவர்களுடைய செந்நைச் சொற்பொழிவுகளால் ஈர்க்கப்பட்டனர். அவர்களுள் ஒருவன் நான். அப்பொழுது சென்னை அரசாங்க முஸ்லிம்கள் கல்லூரியில் நான் தமிழாசிரியனாகப் பணியாற்றிக்கொண்டிருந்தேன். அவ்வாண்டினை ஒட்டிய ஆண்டுகளில் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்களுடைய தொடர்பு எனக்கு ஏற்பட்டது உண்டு. அவர் இராயப் பேட்டையில் அமைத்து நடத்தி வந்த ''பாலசுப்பிரமணிய பக்தசன சபை''யில் ஒரே ஒருகால் சென்று சொற்பொழிவு ஆற்றியது உண்டு. பண்டிதமணி அவர்கள் சமாச மாநாட்டிற்கு வந்திருந்தபொழுது அவர்களையும், திரு.மா.வே. நெல்லையப்பபிள்ளை அவர்களையும் பாரசுப்பிரமணிய பக்தசன சபை அழைத்துத் திரு.கலியாண சுந்தர முதலியார் அவர்கள் பெருமைப்படுத்திச் சொற்பொழிவு ஆற்றுமாறு செய்வித்தார்கள். எனவே, ஜார்ஜ் டவுனிலும் இராயப்பேட்டையிலும் உள்ள தமிழ் மக்கள் சிறப்பாகப் பண்டித மணியினுடைய அறிவுசான்ற சொற்பொழிவுகளைக் கேட்கும் வாய்ப்புப் பெற்றார்கள். திருவாசகத்தில் வரும் ''வெள்ளந்தாழ் விரிசடையாய்'' எனத்தொடங்கும் பாட்டினையும் திரு பண்டிதமணி அவர்கள் நெக்கு நெக்குருகி எடுத்து விளக்கிய திறமையைக் கண்டு வியந்தவர்கள் பலர்.

*''மையி லங்குநற் கண்ணி பங்கனே*
*வந்தெனைப்பணி கொண்ட பின்மழக்*
*கையி லங்கபொற் கிண்ண மென்றலால்*
*அரியை யென்றுனைக் கருது கின்றிலேன்''*

என்ற பகுதியை எடுத்து அவர் விளக்கியவிளக்கம் இன்னும் என் உள்ளத்தினுள் பதிந்து கிடக்கின்றது. ''கடவுளே நின்னை அரியவன் என்று நான் மதிக்கவில்லை. இங்கு என்னுடன் நீ எப்பொழுதும் இருக்கின்றாய் எனவே மதிக்கிறேன்'' என்ற கருத்தினைத் தெரிவிக்கக் கருதிய மாணிக்கவாசகர் நல்லதோர் உவமையை எடுத்தாண்டார் என்றும், ''மழக்கை இலங்கு பொற் கிண்ணம்'' என்ற அவ்வுவமை சிந்திக்க தக்கது என்றும் அவர் அடிக்கடி எடுத்துக்காட்டியதுண்டு. குழந்தையினுடைய

கையில் விளங்குகின்ற பொற்கிண்ணத்தைப் போலக் கடவுள் இருக்கின்றார் என்றால், அதன் கருத்து இன்னது என்று பெரும் பேராசிரியர் கதிரேசன் செட்டியார் விளக்கிய நயம் சிந்திக்கத் தக்கது. அழுகின்ற குழந்தை அழாமல் இருப்பதற்காக அதன் கையில் பொற்கிண்ணத்தைத் தாய் கொடுத்தவிடக், குழந்தை கிண்ணத்தைக் கையில் எடுத்துக்கொண்டு, இப்படியும் அப்படியும் அசைந்து நடமாடுகின்றபொழுது பொற்கிண்ணம் கீழே விழுந்து விட்டால் உடைந்துபோய் விடுமோ என்று அஞ்சித் தாயார் குழந்தையின் கூடவே நடந்து செல்லுகின்ற வழக்கத்தை எடுத்துக்காட்டி, அவர் பொருத்தியுள்ள விதம் சிந்திக்கத்தக்கது. குழந்தை கிண்ணத்தின் பெருமையை அறியாதது போல ஆன்மாக்கள் கடவுளின் பெருமையை அறியாது இருத்தல் உண்டு என்றும், கடவுள் ஆன்மாக்களைத் திரும்பவும் பாதுகாக்கும் பொருட்டு ஆன்மா செல்லும் இடமெல்லாம் உடன் வந்த பாதுகாக்கின்றார் என்றும் அவர் அன்று காட்டிய செய்தி இன்றும் என் உள்ளதினின்று நீங்காது அமைந்துகிடக்கிறது. இதற்கு மாறாக மாணிக்கவாசகர் தம்முடைய கையிலே உள்ள ஒரு கிண்ணத்தைப் போலத் தமது உடைமையாகக் கடவுளை மதிக்கிறார் என்று எவரேனும் அதற்குப் பொருள் செய்தால், அது பொருந்தாது என்பதைப் பண்டிதமணி அவர்கள் எடுத்துக்காட்டியதுண்டு. மழக்கை என்றபோது தம்முடைய இளைய மெல்லிய கையினை மாணிக்கவாசகர் குறித்தார் என்று கூறுவது பொருத்தமில்லை என்றும் அவர்கள் எடுத்துகாட்டியதுண்டு.

நீத்தல் விண்ணப்பத்தில் வரும் ''இருதலைக் கொள்ளியின் உள் எறும்பு ஒத்து நினைப்பிரிந்த விரிதலை யேனை விடுதி கண்டாய்'' என்ற இடத்தில் வரும் ''இருதலைக் கொள்ளி எறும்பு'' என்பதற்குப் பண்டிதமணி அவர்கள் தந்த விளக்கம் நினைவுகூர்ந்து பாராட்டத்தக்கது. இரண்டு பக்கத்திலும் நெருப்பு இருக்கின்ற கொள்ளிக்கட்டையில் தாவுகின்ற எறும்பு போல ஆன்மா இருக்கிறது என்று பொதுவாகக் கூறுவது பொருந்தாது என்றும், உள்ளே புழையினையுடைய ஒரு தீக்கோலின் இரண்டு பக்கங்களிலும் தீப்பற்றிக்கொண்டு இருக்கிற பொழுது, ஓர், எறும்பு உள்ளே அகப்பட்டால் எவ்வாறு வாடி வருத்தப்படுகிறது எனக் கூறுதல் வேண்டுமென்றும் அவர் கூறிவந்தவை நினைவிற்கு வருகின்றன. இரண்டு பக்கங்களிலும் நெருப்பு உள்ள குச்சி ஒன்றின் மீது எறும்பு இருந்தால், இரண்டு பக்கத்திலும் போக முடியாமல் தவிக்கும் என்றாலும், இரண்டு மூலைக்கும் போகாமல் நடுவிடத்தின் ஓரத்திலிருந்து எவ்வாறாவது குதித்துத் தப்பித்துக்கொள்ளுதல் முடியும். ஆனதால், இதனை விலக்கவே ''கெள்ளியின் உள் எறும்பு'' என மாணிக்கவாசகர் கூறினார் என அழகுபட அவர் எடுத்துக்காட்டியதை ஆராய்ச்சியாளர்கள் பலர் 1930-31 ஆம் ஆண்டுகளில் மகிழ்ந்து

பாராட்டிய-பாராட்டுகள் இன்றும் என் நினைவில் உள்ளது. பண்டித மணி கதிரேசன் செட்டியாரைப் பிறகு 1934-ஆம் ஆண்டில் என்னுடைய நேர்முக ஆசிரியராகப் பெறக்கூடிய வாய்ப்பு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் கிட்டிற்று. நாவலர் ச.சோமசுந்தரபாரதியார் அவர்கள் பேராசிரியராக இருந்த பொழுது, நான் 1933 முதல் 35 வரை அப்பல்கலைக்கழகத்தில் தமிழ் எம்.ஏ. பட்டப் படிப்பிற்காகப் படித்துக் கொண்டிருந்த அன்று பண்டிதமணி அவர்கள் எனக்குச் சிலப்பதிகாரத்தையும், அகநானூற்றையும் சிறப்பாகக் கற்பித்தார்கள். அப்பொழுது பாடமாக இருந்த சிலப்பதிகாரப் பகுதி அடியார்க்கு நல்லார் உரையில்லாத வஞ்சிக்காண்டமேயாகும். அதற்கு அரும்பத உரையாசிரியர் உரை மாத்திரம் உள்ளது. அரிய சொற்கள் சிலவற்றின் விளக்கம் மாத்திரம் அவ்வுரையில் உண்டு. ஆனால் புகார்க் காண்டத்திற்கும் மதுரைக் காண்டத்திற்கும் உள்ள உரைகள் இரண்டு. ஒன்று அடியார்க்கு நல்லாருடைய விளக்கமான உரை, மற்றொன்று பழைய உரையாசிரியராகிய அரும்பதவுரை ஆசிரியர் உரை. அடியார்க்கு நல்லார் உரை வஞ்சிக்காண்டத்திற்குக் கிடைக்கப் பெற்றிருந்தால், எத்துணை மகிழ்ச்சியுற்றிருப்போமோ அத்துணை மகிழ்ச்சி உண்டாகும்படி பண்டிதமணி அவர்கள் வஞ்சிக்காண்டத்திற்கு உரை தந்து படிப்பித்தார்கள்.

''கற்றீண்டி வந்த புதப்புனன் மற்றையார்
உற்றாடி னோந்தோழி நெஞ்சன்றே''

எனவுள்ள குன்றக்குரவை அடிகளுக்கு உரைகாண இடர்ப்பட்ட அறிஞர்கள் நிரம்பியகாலத்தில், திரு. கதிரேசன் செட்டியார் அவர்கள் தக்கதோர் உரை கண்டார்கள் தோழி ஒருத்தி ''தலைவனுடைய நாடு அல்லாத நாடு ஒன்றனுள் உள்ள மலையைத் தீண்டித் தண்ணீர் வந்தபோது, அதனுள் நம் உறவினர் அல்லாதார் பொருந்தி நீராடினால் நம் நெஞ்சம் நடுங்கும். அன்றோ தோழி'' என்றவாறு பொருத்திப் பொருள் கண்ட பெருமை பண்டிதமணியாரைச் சாரும். சிலர் மற்றையார் உற்றாடினோம் தோழி நெஞ்சன்றே என்றவாறு பிரித்தப் பொருள் கொள்ளமாட்டாது இடர்ப்பட்ட நிலையில், பண்டிதமணி அவர்கள் ''உற்றாடின் நோம் தோழி நெஞ்சு'' என்றவாறு பிரித்த அரும்பத உரைகாரர் உரையொடும் நூலாசிரியர் கருத்தொடும் பொருந்துமாறு பொருள் செய்தார்கள் என்பதை என்போன்ற மாணவர் சிலர் இன்றும் மீண்டும் மீண்டும் கூறி மகிழ்வது உண்டு.

செங்குட்டுவன் வடநாட்டு மன்னருடைய காவா நாவினை அடக்குவதற்காகப் போரொடு சென்ற பொழுது, அவன் முன்னரே சிவபிரானை வணங்கியுள்ள காரணத்தால் திருமால் கோயிற் சேடங்களைத்

தோளில் தாங்கிச் சென்றான் என்று வருகின்ற இடத்தில், சிவனுக்குப் பெருமை கொடுத்திருப்பது காரணமாக அப்பகுதியைச் சுவைத்துச் சுவைத்துக் கற்பிக்கின்ற மரபு உடையவராகப் பெரும் பேராசிரியர் இருந்தார். அவரால் இயன்ற இயன்ற பொழுதெல்லாம் தேர்வுகளில் அப்பகுதியில் வினா அமைத்து விடுவது அவருடைய மரபாக இருந்து வந்தது. வாழ்த்துக் காதையில் தேவந்தி சொல்வதாகவும், அடித்தோழி சொல்வதாகவும் வருகின்ற பகுதிகளை அவர்கள் உளம் உருகிப்படிப்பித்த நிலை என் போன்றவரால் இன்றும் உன்னத்தக்கதாக உள்ளது. இக்காதையில் ஈற்றில் வரும்.

''நீணில மன்னர் நெடுவிற் பொறையன்நற்
றாடொழார் வாழ்த்தல் தமக்கரிது-சூழொளிய
எங்கோ மடந்தையும் ஏத்தினாள் நீடூழி
செங்குட் டுவன்வாழ்க வென்று''

என்ற செய்யுட்கு மிகவும் பொருத்தமான உரை பண்டிதமணி அவர்கள் ஒருவராலேயே கூறப்பட்டது என்று சொல்வது புனைந்துரை யாகமாட்டாது. உலகில் உள்ள ஏனைய மன்னர்கள் செங்குட்டுவனுடைய நற்றாளைத் தொழாமல் அவனை வாழ்த்துதல் அரிதென்றும், கண்ணகி ஒருத்தி மட்டும் அவ்வாறு அவன் தாளைத் தொழாமல் 'வாழ்க', என்று அவனை வாழ்த்தினாள் என்றும் அவர்கள் எடுத்துக்காட்டினார்கள்.

பொதுவாக, அவர் பாடம் சொல்லும் மரபு ஆசிரியர் அனைவரும் அறிந்தகொள்ள வேண்டியதொன்றாகும். தாம் கற்பிக்க எடுத்துக் கொண்டிருக்கும் பாடப்பகுதியைக் கவனமாக வீட்டில் ஒருமுறைக்கு நான்கு முறை அவர் படித்து, ஐயம் திரிபுகள் அற அறிந்து கொண்டுதான் வகுப்பிற்கு வருவது வழக்கம். மாணவர்களுக்கு உண்டாகக் கூடிய ஐயங்கள் எவை என முன்கூட்டியே எதிர்பார்த்து, அவ்வையங்களைக் களைதற்குச் செம்மைப்படுத்திக் கொண்டு வருவது அவரது வழக்கம். அன்றியும், அவரால் எதிர்பார்க்கப்படாத பல ஐயங்களை மாணவர்கள் திடும் என எழுப்பினால் அவற்றிற்கு விடை கூறுவதில் அவர் தயங்கவே மாட்டார். எனினும் ஒரு செய்யுட்பகுதிக்குப் பொருள்கூறும் பொழுது, அதற்குரிய நேர்பொருளை உடனே தெரிவித்துவிடாமல், மற்றவர்கள் கருதக் கூடிய பொருள்களைச் சொல்லி அவை எவ்வாறு கொள்ளத் தக்கவை அல்ல என்று குறிப்பிட்டுத் தக்கவுரை காணவேண்டும் என்பதன் கண்ணே மாணவர்களுக்கு ஆர்வத்தை எழுப்பிவிட்டுப் பிறகு தக்க பொருளைத் தம் மதி நலத்தாற் கண்டு கூறும் பெற்றியுடையவர் என் ஆசிரியர் என்று கூறிக்கொள்வதில் நான் பெருமை கொள்கிறேன். அவருடைய மற்றோர் இயல்பு பல சங்கச் செய்யுட்களிலிருந்து ஒத்த மேற்கோள்கள் தருதல் என்பதும், இலக்கண நயம் எடுத்துரைத்தல்

என்பதும் இன்முகத்தோடு தாம் கூறக்கருதும் கருத்துக்களைக் கூறுதல் என்பதுமாம். ஒருமுறை, எங்கள் வகுப்பிற்கு வந்தபொழுது, "இவ்வகுப்பிற்கு வருதல் என்றால் எனக்கு மிக்க மகிழ்ச்சி உண்டாகிறது. அதற்கு முக்கிய காரணம் திரு.அ.சிதம்பரநாதன் போன்றவர்களுடைய நுண்மாண் நுழைபுலமும் உள்ளக் கிளர்ச்சியும், மனஎழுச்சியும் ஆகும்" என்று குறிப்பிட்டார்கள்.

தமிழ்ச் சிறப்பு வகுப்பு மாணவர்களாகிய நாங்கள் அனைவரும் பண்டிதமணி அவர்கள் அக்காலத்தில் பேராசிரியர் நிலையில் இல்லையெனினும், விரிவுரையாளராகத்தான் இருந்தார் எனினும், அவர்களிடத்து மிக்க பெருமதிப்பு வைத்திருந்தோம். அதற்குச் சிறந்த காரணம் ஆற்றின் ஊற்றலிலிருந்து நீர் சுரப்பது போல அவருடைய உள்ளத்திலிருந்த ஊறி ஊறி வந்த இன்னுரைகள். அவ்வமிழ்தத்தை மாந்துதற்குக் காத்திருந்த சிறப்பு வகுப்பு மாணவர்கள் பலர் இன்று ஒரோ ஒரு கல்லூரியில் அல்லது ஒரோ ஒரு பல்கலைக்கழகத்தில் தமிழ்ப்பேராசிரியர்களாக உள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

பண்டிதமணி கதிரேசன் செட்டியார் மாணவர்களோடு ஆசிரியர் என்ற முறையிலே மட்டும் பழகாமல், மாணவரகளுள் ஒருவரைப் போலத் தம்மைச் சிலவேளைகளில் அமைத்துக்கொண்டு அளவளாவுதல் உண்டு. இது மேல் நாட்டுமேலைமொழி ஆசிரியர்களின் கைவந்த திறம் என்பார்கள். அது அவ்வாசிரியர்மாட்டுக் காணப்பட்டமையின் மாணவருடைய உள்ளங்கள் எல்லாம் அவர்பால் வலிய இழுக்கப்பட்டன. அக்காரணத்தால் மாணவர்களுடைய பேரன்பிற்குப் பண்டிதமணியார் உரியவர் ஆகி, மாணவர்களிடத்திலும் பேரன்பு காட்டுவாராயினர். பல் இல்லாத வாயினால் அவர்கள் சிரித்தாலும்கூட, அச்சிரிப்பிலே ஓர் அழகும் பொலிவும் இருத்தல்கண்டு மாணவர்கள் மகிழ்வது உண்டு. அவரிடம் மாணவராய் இருந்த எவரும் வாழ்க்கையில் தாமாகப் பிறகு இலக்கியச் சுவை பெற முயலாமல் இருத்தல் அரியதொன்று என்றே கூறுதல் வேண்டும்

அவர் தண்டு ஊன்றிய கையினராய்த் தளர்ந்த நடையினராய் வகுப்பினுள் நுழைதற்குச் சிறிது நேரம் ஆகும் எனினும், மாணவர்கள் அனைவரும் அவர் வருதலைச் சாளரத்தின் வழியே அறிந்துகொண்டு முன்னரே தாமாக எழுந்த நின்று அவரை வகுப்புகளில் வரவேற்பது வழக்கம். இத்தகைய மதிப்பு மாணவரை மருட்டி உருட்டி அவரால் வாங்கிக்கொள்ளப்பட்டதொரு மதிப்பன்று; மாணவர்கள் தாமே விருப்பத்தோடு அவர் அறிவிற்கும் அன்பிற்கும் தந்த மதிப்பு என்று கூறாதிருத்தல் இயலாது. அவரிடம் பன்னிரண்டு மாதங்கள்தான் நான் படிக்கக் கூடிய வாய்ப்புபெற்றிருந்தேனாயினும் என்னுடைய வாழ்நாள்

முழுவதும் அவரை என் உள்ளம் கவர்ந்த ஆசிரியராக மதிப்பேன் என்பது உறுதி.

1935-இல் நான் எம்.ஏ. பட்டம் பெற்றுப் பிற்பாடு அப்பல்கலைக் கழகத்திலேயே பேராசிரியர்-நாவலர்-சோமசுந்தர பாரதியாரொடும், பண்டிதமணி கதிரேசன் செட்டியாரொடும் உடனுறைந்த தமிழ்த்துறையில் அவருக்கு உதவியாளனாக இருந்து பணியாற்றக்கூடிய பேறு எய்தினேன். 1946-இல் நான் அப்பல்கலைக் கழகத்துப் பேராசிரியனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பணியாற்றத் தொடங்கிய பிற்பாடு ஓரிரண்டு மாதங்கள் பண்டிதமணி அவர்கள் ஆராய்ச்சித் துறையில் பணியாற்றிக் கொண்டிருந்து, பிறகு உடல் நலக்குறைவு காரணமாக விலகிக்கொண்டார் விலகிக்கொள்ளுவதற்கு முன்னால் என் அறைக்கு வந்து என்னிடம் அரைமணி நேரம் உரையாடி உறவுகாட்டிப் பிரியா விடைகொண்டு சென்றார். அதனை நினைக்குந்தோறும் நினைக்குந்தோறும் இன்னும் என் உள்ளம் உருகுகின்றது. 1948-இல் நான் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துணைவேந்தராகச் சில மாதங்கள் பணியாற்றுமாறு ஆட்சியாளரால் தேர்ந்தெடுக்கப்பட்டபொழுது பண்டிதமணியவர்கள் என்னைப் பாராட்டி வாழ்த்தியருளினார்கள். ஒரு முறை, கொப்பானாப்பட்டி மகளிர் கல்லூரிப் பட்டமளிப்பு விழாவில் தலைமை தாங்குவதற்கு நான் சென்ற காலை, அவர்களுடைய ஊராகிய மகிபாலன்பட்டியில் பண்டிதமணி அவர்களை அவர்களுடைய இல்லத்தின்கண்ணே கண்டு என் வணக்கத்தைத் தெரிவித்து வருவதற்கு வாய்ப்புப் பெற்றேன். அன்றும் பண்டேபோல என்பால் அன்பு காட்டி உருகிய அவர்களுடைய உள்ளமும் என் உள்ளமும் ஒன்று கலந்தன. இவ்வாறு, ஆசிரியர் மாணவரிடத்துத் தொடர்பு உண்டாகுமேயானால், மாணவரும் ஆசிரியரும் உறையும் பல்கலைக் கழகங்களால் விளையவேண்டிய நற்பயன் விளைந்ததாகுமன்றோ என்று சில வேளைகளில் நான் எண்ணுவதுண்டு.

1941-இல் அண்ணாமலைப் பலகலைக்கழகத்திலிருந்த பண்டிதமணி அவர்கள் விலகிக்கொண்டு ஊருக்குப் போதற்குமுன்னால், ஆசிரியர்கள் கூட்டம் ஒன்றில் அவர்கள் சொல்லிய சொற்களின் நயம் இன்றும் தோற்றுகிறது. ''இப்பல்கலைக் கழகத்தில் நான் மூன்று துணை வேந்தர்களைப் பார்த்திருக்கிறேன். அவர்கள் முறையே சர்.எஸ்.ஈ.அரங்கநாதன், மகாகனம் சீனிவாச சாஸ்திரியார், சர்.கே.வி.ரெட்டி ஆகியவர். இம்மூவரும் என்னைப் பொறுத்தவரையில் மும்மூர்த்திகள். முதலாமவர் என்னை ஆக்கினார்; இரண்டாமவர் என்னை அளித்தார்; மூன்றாமவர் காலத்தில் இப்பல்கலைக் கழகத்திலிருந்து நீங்கிப் போகின்றேன்'' என்றார். அன்று தம்மைச் சங்கார மூர்த்தி ஆக்கிவிட்டாரே என்று சர்.கே.வி.ரெட்டியார் அவர்கள் நினைந்து நினைந்து உருகி, மீண்டும்

வேலைக்கு அவரை வரவழைத்துக்கொள்ளுதற்கு முயன்றார். அம்முயற்ச்சியின் பயனாகப் பண்டிதமணி பல்கலைக் கழக வேலைக்கு ஓராண்டு கழித்து அழைக்கப்பட்டார். அப்பொழுதுதான் அவர் ஆராய்ச்சிப் பகுதியின் தலைவராக இருந்தபோது கௌடிலியத்தைத் தமிழில் மொழி பெயர்த்தார்.

பண்டிதமணி அவர்கள் தமிழில் புலமையுற்றிருந்த அளவு வட மொழியிலும் சிறந்த புலமை எய்தி இருந்தமையால், அவரால் பற்பல வடமொழி நூல்கள் தமிழில் மொழிபெயர்த்துத் தரப்பட்டன. அவற்றுள் தலையாயதும், நல்ல தமிழ்மணம் உடையதும், மொழிபெயர்ப்பெனத் தோன்றாததும் ஆகிய ''மண்ணியல் சிறுதேர்'' என்னும் நாடகம் ஒன்று. மிருச்சகடிகா என்ற வடமொழி நாடகத்தைத் தமிழ்ப்படுத்தி, அரிய முகவுறையோடு அதனைத் தமிழகத்திற்கு அளித்த பெருமை பண்டித மணியாருக்கு உரியது. சிலப்பதிகாரத்திற்கும் மண்ணியல் சிறுதேருக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை அவர்கள் அடிக்கடி எடுத்துக்காட்டுவது உண்டு. அம்மொழிபெயர்ப்பினைப் பற்றி நான் 1936-இல் 'தமிழ்ப்பொழி'லில் வெளியிட்ட ஓர் ஆராய்ச்சி மதிப்புரையைப் படித்துச் சுவைத்து மகிழ்ந்து, என்னை அவர்கள் வீட்டிற்கு அழைத்துப் பாராட்டினார்கள்.

பண்டிதமணி நகைச்சுவை தோன்றப்பேசும் இயல்பினர். ஒரு நாள் ஒருவர் வீட்டில் அவர்க்குக் குடிப்பதற்குப் பால் கொடுத்தார்கள் என்றும், அதனுள் ஓர் எறும்பு விழுந்து கிடந்து என்றும், எறும்பு கிடக்கிறது என்று கூறுவதற்குப் பதிலாகத் தாம் 'பாற்கடலில் சீனிவாசன் பள்ளி கொள்ளுகிறான்' என்று கூறினதுண்டு என்றும் அவர் என்போன்றவரிடம் சொல்லியுள்ளார்கள். ஒருநாள், பொதுக்கூட்டம் ஒன்றில் அவர் தலைமை தாங்கிக்கொண்டு இருந்த நேரத்தில் மகளிர் தங்களுக்குள்ளே ஏதேதோ பேசி ஒலி எழுப்பிக்கொண்டு இருந்தார்கள். அதனைத் தாங்கமாட்டாத பண்டிதமணி, ''அவர்கள் பெண்மணிகள் அல்லவா! மணிகள் ஒலித்துக்கொண்டு தானே இருக்கும்!'' என்று குறும்பாகக் கூறினார் அதைக் கேட்டவுடன் மகளிர் பேசாமல் அடங்கிவிட்டனர்.

அவர் இன்னொரு செய்தி எங்களிடம் சொல்லுவதுண்டு. அதை ஒரு கதை போலவும், தாம் காண்பது கனவுபோலவும் கூறுவது வழக்கம். அஃதாவது, அவர் கடவுளை நோக்கி ஏதோ ஒரு வரம் வேண்டி உறங்கிக்கொண்டிருந்ததாகவும், அப்பொழுது கடவுள் அவருடைய கனவில் தோன்றி ''உமக்குத் தந்தம் போம்'' என்று கூறியதாகவும், மறுநாள் பார்த்தால் இருந்த பல்கூடப் போய்விட்டதாகவும் பலரும் நகைக்கும்படி கூறுவது உண்டு. தாம் பற்கள் இழந்தள்ள நிலையை வைத்து, அதை ஒரு பெருங்குறையாக மதிக்காமல், அது காரணகாகவே பிறரை மகிழ்விக்கும்

பெற்றியாளராயிருந்தார் பண்டிதமணி என்பதை உற்று நோக்கினால், எவ்வளவு சிறந்த உவகையர் அவர் என்பது புலப்படும். தொல்காப்பியர் ''உவகையெல்லாம் அல்லல் நீத்தனவாக இருக்க வேண்டும்'' என்றார். அவர் கூறியது பிறர்க்குத் துயரம் தருவதாக இருக்கும் உவகை தக்க உவகை என மதிக்கும் தன்மையதன்று என்பது. பண்டிதமணி பிறர்க்கு அல்லல் வாராமல், தமக்குச் சிறிது அல்லல் வந்தாலும் குற்றம் இல்லை என்று கருதி இவ்வாறு பன்முறை உடன் இருந்தவர்களுக்கு உவகை ஊட்டியது உண்டு.

திருவள்ளுவர் கூறிய ஓர் அருமையான திருக்குறளுக்கு முற்றிலும் எடுத்துக்காட்டாக விளங்கியவர் பண்டிதமணி கதிரேசன் செட்டியார் அவர்கள். ''நவில்தொறும் நூல் நயம் போலும் பயில்தொறும், பண்புடையாளர் தொடர்பு'' என்றார் திருவள்ளுவர். அவர் காலத்தில் நூல்களின் நயத்தை அறிந்து அறிந்து துயத்தவர்கள் பலர்போலும் அதனால் அதனை உவமையில் வைத்துப் பயில்தொறும் பண்புடையாளர் நட்புப் பெருகும் என்றார். நவிலுந்தொறும் நவலிலுந்தொறும் நூல், நயம் பல பயக்கும் என்பது பண்டிதமணி அவர்கள் எடுத்துக்காட்டிய நயங்களிலிருந்து விளங்கிற்று. பயிலுந்தொறும் பயிலுந்தொறும் பண்புடையாளர் தொடர்பு இனிக்கும் என்பது அவர்களுடைய தொடர்பினால் என்போன்றோர்க்கு நன்கு விளங்கிற்று. பிறர் உவக்கும்படி பிறரோடு கூடி, இவ்வறிஞர் நம்மிடமிருந்து பிரிந்து போகின்றாரே எனப் பிறர் கருதி உளம் நையும்படி பிரிந்து செல்லும் இயல்பினராகப் பண்டிதமணி அவர்கள் இருந்தார்கள். அதனால்,

''உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்''

என்ற திருக்குறளிற்கு இலக்கியமாக விளங்கியவர் அம் முதுபெரும் புலவர் என்பது விளங்கும்.

அப்பெரியாரொடு தொடர்புகொண்ட மாணவர்களும், அறிஞர்களும், பிறரும் களங்கமில் மகிழ்ச்சி கொள்ளுதற்கு உரியவராக வாழ்ந்த பெருமை பண்டிதமணி அவர்களுடையது. அவர்களது நினைவு நாட்டில் நெடுங்காலம் நிலைத்திருப்பதாகுக!

# வாழ்க்கைக் குறிப்புகள்

| | | |
|---|---|---|
| தோற்றம் | : | 03-04-1907 தஞ்சை மாவட்டம், கும்பகோணம் |
| பெயர் | : | அமிர்த. சிதம்பரநாதன் |
| பெற்றோர் | : | அமிர்தலிங்கம்-பார்வதி அம்மையார் |
| கல்வி | : | எம்.ஏ., பிஎச்.டி. |
| முதல் நூல் | : | இந்திய சரித்திரமாலை (1930) |
| மணநாள் | : | 30.06.1933 |
| மனைவியின் பெயர் | : | திருமதி பெரியநாயகி அம்மையார் |
| பணியாற்றிய நிறுவனங்கள் | : | அண்ணாமலைப் பல்கலைக்கழகம், மதுரை தியாகராசர் கல்லூரி, சென்னை முகமதியக் கல்லூரி, பாலக்காடு அரசு கல்லூரி மற்றும் தலைமைச் செயலகம், சென்னை, வணிகவரித்துறை அலுவலகம், சென்னை. |
| சிறப்பு | : | தமிழ்ச் செய்யுள் இலக்கணம் Advanced studies in Tamil Prosody) பற்றி ஆராய்ந்து தமிழ்த்துறையிலேயே முதன் முதலாக 'டாக்டர்' பட்டம் பெற்றமை. |
| சென்ற அயல்நாடுகள் | : | ஒன்பது |
| பிறபணிகள் | : | சென்னைப் பல்கலைக்கழக வெளியீடான 'ஆங்கிலம்-தமிழ்ச் சொற்களஞ்சியம்' என்ற நூலின் தலைமைப் பதிப்பாசிரியராக விளங்கிக் குறிப்பிட்ட காலத்தில் வெளியிட்டமை. |
| சிறப்புப் பணி | : | ஆசிரியர் தொகுதியில் சென்னைச் |

| | | |
|---|---|---|
| | | சட்ட மேலவை உறுப்பினராகப் போட்டியிட்டு 1958 ஏப்ரல் திங்கள் முதல் இரு தடவை வென்று உறுப்பினர் ஆனமை. |
| சிறப்புப் பட்டம் | : | தருமபுர ஆதீனம் 28.9 1955இல் செந்தமிழ்க் காவலர் என்ற பட்டம் அளித்தது. |
| குறிப்பிடத்தக்க பணி | : | மாநிலத் தமிழாசிரியர் கழகத் தலைவராகப் பல்லாண்டுகள் பணியாற்றியமை, தமிழகப் புலவர் குழுவின் செயல் தலைவராகச் செயல்பட்டமை |
| எழுதிய நூல்கள் | : | சுமார் இருபத்து மூன்றுக்கும் மேற்பட்டவை. |
| இதழாசிரியர் | : | சென்னையிலிருந்து வரும் திங்கள் இதழான 'செந்தமிழ்ச் செல்வி'க்கு மதிப்புறு ஆசிரியராகப் பணியாற்றியமை. |
| மறைவு | : | 22.11.1967 |

## எழுதிய நூல்கள்

1. இந்திய சரித்திரமாலை (தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கான வரலாற்று நூல் தெலுங்கிலும் மொழிபெயர்க்கப்பட்டு பதிப்பிக்கப் பெற்றது - 1930
2. இளங்கோவின் இன்கவி (சிலப்பதிகாரத் திறனாய்வுக் கட்டுரைகள்) -1972
3. கட்டுரைக் கொத்து (பெரும்பான்மையான கட்டுரைகள் 'செந்தமிழ்ச் செல்வி'யில் வெளியானவை) - 1933
4. காக்காய் பிடித்தலும் குருவி பிடித்தலும் ( சிற்றிலக்கண நூல்) - 1940
5. Advanced studies in Tamil Prosody ( Doctoral Thesis)-1942
6. உழைப்பால் உயர்ந்த ஒருவர் (புக்கர் தி வாஷிங்குடன் தமிழர்க்கு நலம் விளைக்கும் உலகச் சான்றோர் வரலாறு) - 1952
7. பெரியார் மன்றோ (தமிழர்க்கு நலம் விளைக்கும் உலகச் சான்றோர் வரலாறு) - 1941
8. முன்பனிக் காலம் முதலிய இலக்கியக் கட்டுரைகள் - 1951

9. சிறுகதையும் அதன் வளர்ச்சியும் - 1954
10 தமிழோசை (மொழிஇயல் நூல்) - 1956
11. Cilappadikaram the Earliest Tamil Epic - **1956**
12 தமிழ் காட்டும் உலகு (தமிழ் இலக்கியக் கட்டுரைகள்) - 1957
13. வீட்டுத் திருமகள் (மொழியியல் மற்றும் இலக்கியக் கட்டுரைகள்) 1958
14. மன்னுயிர்க் கன்பர் (ஆல்பர்ட் சுவைட்சர் பற்றிய சொற்சித்திரம்) - 1958
15. Introduction to Tamil Poetry - **1958**
16. சிறுகதைக் களஞ்சியம் - தொகுதி 1 (தொகுப்பாசிரியர்) - 1959
17. Indian Words in English Dictionary - **1964**
18. ஆங்கிலம் - தமிழ்ச் சொற்களஞ்சியம் (English - Tamil Dictionary) தலைமைப் பதிப்பாசிரியர்
19. மீனாட்சி சுந்தரேஸ்வரர் (ஆயிரந்திருநாம) அர்ச்சனை - 1967
20. செங்கோல்வேந்தர் (கட்டுரைத் தொகுப்பு) - 1977
21. தமிழில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும் (சிறுகதைத் திறனாய்வு) - 1977
22. ஒத்தெல்லோ (ஷேக்ஸ்பியர் நாடகத்தின் தமிழ்மொழிபெயர்ப்பு சாகித்ய அகாதெமிக்காக) (ஆண்டு அறியக்கூடவில்லை)
23. Ancient Tamil Kings - Their High Ideals (ஆண்டு அறியக்கூடவில்லை)

## திருமதி பெரியநாயகி சிதம்பரநாதர் அவர்கள் எழுதியவை

1. கலையுள்ளம் - 1954
2. வடபுலத்து வாழ்க்கை (பயணக்கட்டுரை) - (ஆண்டு அறியக்கூட வில்லை)

## துணை நூற் பட்டியல்: தமிழ் நூல்கள்

1. ஆங்கிலம்-தமிழ்ச் சொற்களஞ்சியம்-தலைமைப் பதிப்பாசிரியர் டாக்டர்அ. சிதம்பரநாதர் செட்டியார், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1992.
2. இளங்கோவின் இன்கவி - டாக்டர் அ. சிதம்பரநாதர் செட்டியார், M.A., Ph.D., நாவலர், புத்தக நிலையம், மதுரை, 1972

3. உழைப்பால் உயர்ந்த ஒருவர் (புக்கர் தி. வாஷிங்குடன்); Dr. A. சிதம்பரநாதச் செட்டியார்,M.A., Ph.D.,எம்.ஆர். அப்பாதுரை, B.A., 13, முத்தியாலு செட்டித்தெரு, புரசைப்பாக்கம், சென்னை 1952

4. கட்டுரைப்பூங்கா - புலவர் கோ. தனபாலன், புதுச்சேரி, 1999

5. கலைக்களஞ்சியம் - பத்தாம் தொகுதி - இணைப்புத் தொகுதி தமிழ் வளர்ச்சிக்கழகம், சென்னை 1968

6. காக்காய் பிடித்தலும் குருவி பிடித்தலும் - டாக்டர் ஏ.சி. செட்டியார், சிதம்பரம் 1940

7. குடந்தைப் பெருமக்கள் - இராம. குருநாதன், M.A., M.Litt., சேக்கிழார்தாசன், M.A., சிவகுருநாதன், செந்தமிழ் நூல் நிலையம் கும்பகோணம் 1977

8. குறுந்தொகை விளக்கம் - ரா ராகவையங்கார் டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார் எழுதிய ஆராய்ச்சி முன்னுரை அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1947

9. சிறுகதைக் களஞ்சியம், தொகுதி 1 - தொகுப்பு: ஏ.சி. செட்டியார், சாகித்ய அகாதெமி, புது தில்லி, 1959

10. செங்கோல்வேந்தர் - டாக்டர் ஏ. சி. செட்டியார், பதிப்பாசிரியர் பேராசிரியர் புளோரம்மாள், M.A., M.Ed., ம.செ. இரபிசிங், M.A., M.Phil., பிலோமினா பதிப்பகம், 1979

11. செந்தமிழ்க் காவலர் சிதம்பரநாதனார் சிந்தனைத்திறம் - டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியார் அறக்கட்டளைச் சொற்பொழிவு - செ. வைத்தியலிங்கன், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1989

12. தமிழ் இலக்கிய அகராதி - பேராசிரியர் வித்துவான் பாலூர் கண்ணப்ப முதலியார்

13. தமிழ்காட்டும் உலகு - டாக்டர் அ. சிதம்பரநாதர், எம்.ஏ , நேஷனல் பப்ளிஷிங் கம்பெனி, சென்னை, 1957

14. தமிழில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும் - டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியார், பதிப்பாசிரியர்; பேராசிரியர் புளோரம்மாள், எம்.ஏ., எம்.எட்., ம.செ. இரபிசிங், எம்.ஏ., பிலோமினா பதிப்பகம், 1977

15. பதிற்றுபத்து சொற்பொழிவுகள் - செந்தமிழ்க் காவலர் டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார் தலைமை உரை, கழகம், சென்னை

16. பெரியார் மன்றோ - டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார், எம்.ஏ., பழனியப்பா பிரதர்ஸ், திருச்சி, 1941

17. மன்னுயிர்க்கு அன்பர் - டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியார், 1958

18. முன்பணிக்காலம் முதலிய இலக்கியக் கட்டுரைகள் - டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, திருச்சி 1951
19. வீட்டுத் திருமகள் - செந்தமிழ்க் காவலர் டாக்டர் அ. சிதம்பரநாதன், M.A., Ph.D., புதுமைப் பிரசுரம், பெண்ணாடம், தென்னாற்காடு மாவட்டம், 1958
20. நன்னூல்-காண்டிகையுரை-ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் திருத்தியும் விளக்கியும் கூட்டியும் புதுக்கியது ஆறுமுக நாவலர் வி. அச்சகம், சென்னை 1968

## English Books

21. The Annamalai University 1929-79. A Short History K. Nagarajan, Annamalai University, Annamalai Nagar.
22. Ancient Tamil Kings - Their High Ideals- A. Chidambaranatha Chettiar, M.A., Ph.D.,
23. Advanced studies in Tamil Prosody - Dr.A. Chidambaranatha Chettiar, M.A., Ph.D., Annamalai University, Annamalai Nagar, S.India, 1942
24. A study of the Achievements of Bharathi as a Poet. Prof. Dr. K. Meenakshi Sundaram, M.A., M.Litt., Ph.D., Coimbatore 1982
25. Indian Words in English Dictrionary, Prof. A. Chidambaranatha Chettiar, M.A., Ph.D., New Delhi, 1964
26. Introduction of Tamil Poetry - A. Chidambarantha Chettiar 1958
27. The Little Lifco Dictionary English-English-Tamil, Chennai

## மலர்கள்

1. அண்ணாமலை அரசருக்கு அன்பு மலர்கள் (Floral Tributes) நூற்றாண்டு விழா 1880-1981
2. கழகத்தின் ஆயிரத்தெட்டாவது வெளியீட்டு விழா மலர், டாக்டர் அ சிதம்பரநாதச் செட்டியார், சென்னை 1961

3. நல்ல தமிழோசை - நிறைவு மலர் - 1.7.76 இயற்றமிழ்ப் பதிப்பகம், திருவாரூர்
4. பேராசிரியர், டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார் மணிவிழா மலர் -7.9.1967, மதுரை
5. நினைவு மலர் - முத்துசிவன் (பக். 61-64)
6. மதுரை தியாகராயர் கல்லூரி மலர் 1966
7. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 50 ஆண்டுகள் (1937-1987), சி கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்., சட்டமன்ற பேரவைச் செயலகம், 1989
8. செந்தமிழ்க் காவலர் டாக்டர் அ. சிதம்பரநாதனார், M.A., Ph.D., அவர்களின் 80ஆம் ஆண்டு நிறைவு விழா மலர் - டாக்டர் அ சிதம்பரநாதன் செட்டியார் 80ஆம் ஆண்டு நிறைவு விழாக் குழுவினர், கும்பகோணம் 6.3 1988
9. தமிழ்நாடு சட்டமன்றப் பவள விழா சட்டமன்றப் பேரவை வைரவிழா மலர் - 11.7.1997 மலர்க்குழு அமைப்பாளர் திரு.வி. இறையன்பு, செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர்.
10. தியாகராசர் கல்லூரி (தன்னாட்சி நிறுவனம்) ஆண்டு மலர் 2002-2003, மதுரை 625 009.
11. Prof. P. Sundarampillai Commemoration volume K.K. Pillai, Prof. of History, University of Madras, A.S.Narayana Pillai, Prof. of Philosophy University of Madras, V.I. Subramaniam, Prof. of Tamil University of Travancore, The South India Saiva Siddhanta Works Publishing Society, Trinnelvelli Ltd.,Madras, 1957 ,
12. ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் மணிவிழா மலர் 1991
13. The Annamalai University Golden Jubilee Souverin 1929-79
14. முத்தையவேள் மணிவிழா மலர் (1965 நவம்பர் 14இல் வெளியிடப்பட்டது)
15. அண்ணாமலைப் பல்கலைக்கழக வெள்ளிவிழா மலர்
16. ராணி மெய்யம்மை ஆச்சி நினைவு விழா மலர்
17. தினமலர் - 21.6.1997; பேராசிரியர் அ. காமாட்சிநாதன் கட்டுரை.
18. சென்னை மாகாண மேலவை உறுப்பினர்
Madras Legislative Council Debates: Volume XL(Nos 1to 10) Name of the Member: Dr.A.Chidambaranatha Chettiar M.A., Ph.D; M.L.C.(From April 1958 - 1966)

**செந்தமிழ் காவலர் டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார்** (1930-1967) நாடு போற்றும் நல்லாசிரியர். எழுத்தில் மட்டுமின்றி, சிறந்த சொற்பொழிவாளர். சிறந்த தமிழாசிரியராக மட்டுமின்றி, தமிழக சட்டமன்றத்திலும், பல்வேறு ஆட்சிக் குழு மற்றும் கல்விக் குழுத்தலைவராகப் பணியாற்றி தமிழுக்கும், தமிழாசிரியர்களுக்கும், தமிழ் நாட்டு மக்களுக்கும் தொண்டாற்றிய சிறந்த சமூக சீர்திருத்தவாதி.

**பேராசிரியர் டாக்டர் ந. வேலுசாமி.** இந்நூலாசிரியர். இதுவரை பதினைந்து நூல்களை எழுதியுள்ளார். பெரியார் பல்கலைக்கழகத்தின் முதல் பதிவாளராகவும், கல்லூரிப் பேராசிரியராகவும் பணியாற்றி வருபவர். தமிழக அரசின் பரிசும், தேசிய விருதும் பெற்றவர். இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றத்தால் 'ஆய்வியல் களஞ்சியம்' என்ற விருதையும், மனோன்மணீயம் சுந்தரனார் விருதையும், பெரியார் விருதையும் பெற்றவர். 'இந்தியாவில் அறிவொளி இயக்கம்' என்று ஆய்வு செய்திருப்பவர். சாகித்ய அகாதெமியின் மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை, ஜெகசிற்பியன் என்ற நூல்களை எழுதியவர். மொரீஷியஸ், சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளுக்குச் சென்று வந்துள்ள இவர், தற்போது ஈரோடு கலைக்கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார்.

A. Chidambaranatha Chettiar (Tamil) Rs. 25
ISBN - 81-260-1722-8